Arimaa Nokku

# அரிமா நோக்கு

17 : 2 சூலை 2023

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

# மரணம் மரணிக்கும்

மரணம் ஒரு நாள் மரணிக்கும்
மரணம் மரணிக்க ஒரு காலம் வரும்
அடுத்துவரும் அண்மைக் காலத்தில்
ஒரு சமயம் மரணம் மரணிக்கும்
விரைவில், மிக விரைவில்
மரணம் மரணிக்கும்
மரணத்தின் கதவை மரணம் தட்டுகிறது
மரணத்தை மரணம் அண்மிக்கிறது
மரணத்திற்கு மரணம் நெருங்குகிறது.
மரணத்தை மரணம் அழைக்கிறது.

மரணம் மரணிக்கும்
கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் நிலையான
அமைதியில் வாழ்வர்
ஆனால், மரணம் ஒருபோதும் அமைதியுறாது
மரணம் இருப்பின்றிப் போயொழியும்
மரணத்தால் மரணம் மடிந்துவிடும்
மரணமாக மரணம் உறைந்து விடும்
மிக உறுதியாக மரணம் எரிந்து மரணிக்கும்
மரணம் பசியால் இறந்துவிடும், ஏனெனில்
இனியும் அது கொல்ல அனுமதிக்கக்கூடாது.

மரணம் மரணிக்கும்
நெருப்பு ஏரியில் மரணம் எரியுண்டு போகும்
மரணத்திற்கு இனி அதிகாரம் இருக்காது
மரணத்திற்கு இனி அஞ்சக் கூடாது
மரணத்திற்கு இனிப் பதறக் கூடாது
மரணத்தை என்றென்றும் கண்டிக்க
வேண்டும்
மரணத்திற்கு என்றென்றும் தடை விதிக்க
வேண்டும்
மரணத்தின் மரணம் சாத்தானை
நம்பிக்கையும் ஆற்றலும் இழக்கச்செய்யும்
மரணத்தின் மரணம் சாத்தானை வெற்றனாய்
ஆக்கும்.



தமிழில்:
**வ. ஜெயதேவன்**



– கினிசோ மொகலே
(Qiniso Mogale)

ISSN 2320-4842

அரிமா நோக்கு

17:2 சூலை 2023

**மகிழ்ச்சியைத் தேடி...**
- வ. ஜெயதேவன் 03

**ஆறாம் இலக்கணம்—புலமை இலக்கணம்**
- த. முத்தமிழ் 05

**திருவாசகத்தில் பிறப்பறுப்பு**
- த. தனஞ்செயன் 10

**பேராசிரியர் வே. வேங்கட ராஜுலு ரெட்டியார்**
- வெ. இராம்ராஜ் 13

**தேவார மூவர் நிகழ்த்திய அற்புதங்கள்**
- வெ. கலைச்செல்வி 18

**சங்கத் தமிழ்ப் பெண்களின் ஆடைப் பயன்பாடு**
- மூ. சத்தியா 20

**'திருமணம்' என்ற நிறுவனமும் சுயமரியாதை இயக்கமும்**
- ச. ஜீவானந்தம் 26

**பழனி முருக வழிபாடும் நாட்டுப்புற மரபுகளும்**
- சீ. முத்துலட்சுமி 35

**தமிழர் வாழ்வியலில் அறுகால் பறவை**
- ச. சங்கீதா 38

**ஐம்பெருங்காப்பியங்களில் வழிபாட்டு முறைகள்**
- சூ. நளினி 41

**இயற்கை தந்த வரம்-இலுப்பை மரம்**
- கி. ரேவதி 46

**தொல்காப்பியர் சுட்டும் யாமரக்கிளவி மரப்பெயரா?**
- ம. தமிழரசன் 48

**பார்ப்பார்த் தப்பிய – குரவர்த் தப்பிய: பாட வரலாறு**
- ஆ. மணி 50

**தொல்காப்பியப் புறத்திணையியல் உணர்த்தும் உளவியல்**
- பா. மேகலா 58

**வில்லிபாரதத்தில் கண்ணனுக்குக் கர்ணன் செய்த வள்ளன்மை**
- வெ. பைரவன் 65

*தொடர்ச்சி: பக். 25*

# தலைவாயில்

**ஈரோடு தமிழன்பன்**

## தாய்மொழிச் சிந்தனைகள் சில

எண்ணிலா மொழிகள் பேசும் குடிமக்களைக் கொண்டுள்ள இந்தியப் பெருநாட்டில், புதிய திட்டங்கள், கொள்கை கோட்பாடுகள், அமைப்புகள், என ஒன்றிய அரசு அறிவுப்புகள், செயற்பாடுகள் யாவற்றிலும் இந்திமொழி மட்டுமே இடம்பெறுகிறது. திட்டமிட்டுச் சமற்கிருதமும் நுழைக்கப்படுகிறது.

இந்தியாவில் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை 22 மொழிகள். இந்தியாவில் அசாமி, வங்காளி, குசராத்தி, மராத்தி, ஒரியா, பஞ்சாபி, சமற்கிருதம், தமிழ், தெலுங்கு, உருது ஆகியவை தேசிய மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்ட மொழிகளாக 1950இல் வெளியிடப்பட்ட எட்டாவது அட்டவணை தெரிவிக்கிறது. இந்திய அரசின் பண்பாட்டுத்துறைச் சார்புடைய சாகித்திய அகாதெமி இந்தியமொழிகளில் 24 மொழிகளை ஒவ்வோராண்டும் கணக்கில் கொண்டு பரிசுக்கு உரிய படைப்புகளைத் தேர்ந்தெடுக்கிறது. பரிசு பெற்ற நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டும் சிறப்பிக்கிறது. பல மொழிகள் வளரவும் வாழவும் இம்முயற்சிகளுக்கு இடம் தரும் ஒன்றிய அரசு சுழற்சி முறையில் சட்டங்களுக்கும் திட்டங்களுக்கும் பெயர்சூட்ட ஏன் மறுக்கவேண்டும்? ஒவ்வொரு மொழிக்கும் உள்ள அறவழி உரிமைதானே அது?

இந்திய மொழிகள் சார்ந்த தக்க கருத்துகளை ஒன்றிய அரசுக்கு எடுத்துரைக்கச் சான்றாண்மை மிக்க அறிஞர்களைக் கொண்ட அறிவுரைக் குழு ஒன்றை உருவாக்க வேண்டும். பல மொழிகள் பேசும் மொழிப் பன்மை கொண்ட நாடுகள் எவ்வாறு இச்சிக்கலை எதிர்கொள்கின்றன என்பதை நடுநிலை மனப்பாங்கோடு ஆராயவேண்டும்

சற்று ஏமாறும் தருணம் கிடைத்தால் போதும், தெருப்பெயரை இந்தியாக்கி விடுவது, அலுவலக அறிக்கையை இந்தியில் அனுப்புவது, பட்டமளிப்பு விழா உறுதிமொழியை இந்தியாக்குவது, இப்படிப்பட்ட செயற்பாடுகள் ஒன்றிய அரசு அறிய நடக்கின்றனவா? இவற்றுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றனவா? ஒன்றிய அரசு மகிழும் என்ற மனப்பானமையில் நடைமுறையாகின்றனவா?

இதுபற்றிக் குரல் எழுப்பினால் இந்திய மாணவர்கள் தாய்மொழி வழியாகக் கற்க வாய்ப்பை ஏற்படுத்த மாநில அரசுகளுக்கு அக்கறை இல்லை. இன்னும் எதற்கு ஆங்கிலம்? என்று இந்த எதிர்ப்பை மறக்கடித்து ஆங்கில எதிர்ப்பை வலியுறுத்த முற்படு

ISSN 2320-4842

வது சரியா?

கொச்சியில் திவானாக இருந்த சி.பி. இராமசாமி ஐயர் ஆங்கிலத்தை இழக்க வேண்டாம் என்ற கோணத்தில் ஒருமுறை,, இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவனுக்கு ஆங்கிலமோ, பிரெஞ்சோ எப்படி அந்நிய மொழியோ அப்படி இந்தியும் அந்நிய மொழிதான் என்று கூறினார்.

இந்தியாவின் தலைநகர் புது தில்லியிலேயே கல்லூரி, பல்கலைக்கழகங்களில் நிரப்பப்படாத தமிழ்ப் பேராசிரியப் பதவி இடங்கள் இருப்பதை, தமிழ் கற்கும் மாணாக்கர் சேர்க்கை குறைந்துவருவதை இந்து தமிழ்திசை ஏடு (12–6–2023) எடுத்துக்காட்டியுள்ளது.

மீண்டும் சொல்கிறோம்: தமிழர்களுக்குத் தாய்மொழி தமிழ்; இந்திய அரசுக்குப் பெருமை தருகிற செம்மொழி தமிழ்; .அரசுச் சட்ட ஆவணப்படி இந்தியாவின் முதல் செம்மொழியே தமிழ்தான். ■

*ஆசிரியர்*
**ஈரோடு தமிழன்பன்**

*இணையாசிரியர்*
**வ. ஜெயதேவன்**

*ஆசிரியர் குழு*
**நா. கணேசன் (அமெரிக்கா)**
**நா. சுப்பிரமணியன் (கனடா)**
**பொன். செல்வகணபதி**
**ஒப்பிலா மதிவாணன்**
**சீதா லட்சுமி (சிங்கப்பூர்)**
**மு. பரமசிவம் (மலேசியா)**
**பத்மாவதி விவேகானந்தன்**
**இரா. பிரேமா**
**பா. இரவிக்குமார்**
**மருதூர் அரங்கராசன்**
**பெ. இலக்குமிநாராயணன்**

*அறிவுரைக் குழு*
**இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்**
**மற்றும்**
**படைப்பாளிகள்**

*அச்சீட்டாளர்*
**என். சிவகுமார்**
**கிருஷ்ணராஜ் பிரிண்டர்ஸ்**
**36 தேவராஜன் தெரு**
**சென்னை 600 014**

## உங்கள் கவனத்திற்கு

***அரிமா நோக்கு*** இதழ் அச்சு வடிவில் மட்டுமே வெளியிடப் படுகிறது; இணையம்வழி வெளியிடப்படவில்லை.
ஆனால், arimaanokku.com என்னும் பெயரில் இணையத் தளம் அமைத்து,
Arimaa Nokku UGC CARE Listed Journal
என்னும் பெயரில் அவ்விணையத் தளம் வாயிலாக வட இந்தியர்களால் வணிக நோக்கில் இதழ் ஒன்று நடத்தப்படுகிறது.
**இவ்விணைய இதழுக்கும் நமக்கும் எத்தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**
நம் இதழின் பெயரை மட்டுமன்றி,
நமது ISSN 2320–4842 எண்ணையும் அவர்கள் களவாடிப் பயன்படுத்திவருகின்றனர்.

**போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.**

அரிமா நோக்கு ஏப்பிரல் 2023 இதழில்
தலைவாயில் கட்டுரையின் தலைப்பு
***விலக்களிப்பது தேவையா?***
என இருந்திருக்க வேண்டும்.
***விளக்களிப்பது தேவையா?***
எனப் பிழையாக அச்சாகிவிட்டது.
*பிழைக்கு வருந்துகிறோம்*

ISSN 2320-4842

# மகிழ்ச்சியைத் தேடி...

சராசரியாக ஒருவர் தன் வாழ்நாளில் 90,000 மணிநேரம், அதாவது ஏறத்தாழ 3,500 நாட்கள் பணியில் செலவிடுகிறார். வேறு வகையில் சொல்வதானால் அவர் தன் வாழ்க்கையில் மூன்றில் ஒரு பகுதியைப் பணியில் செலவிடுகிறார் எனலாம். அவ்வாறு அவர் செலவிடும் காலம் அவர் வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாததாகும். உழைப்பைச் செலுத்திப் பணிபுரியும் காலம் அவருக்கு மகிழ்ச்சியானதாக இருக்க வேண்டும். உண்மையில் பணியில் மகிழ்ச்சி மலர்கிறதா?

கால்அப் (Gallup) என்னும் நிறுவனம் மேற்கொண்ட உலகளாவிய பணியிடக் கணக்கெடுப்பில் தெரியவருவன: 1. மிகப் பலர் பணியில் மகிழ்ச்சியற்றவர்களாகவே உள்ளனர்; 2. உலகின் 50%க்கும் மேற்பட்ட ஊழியர்கள் மன அழுத்தச் சுமையால் வருந்துகின்றனர்; 33% ஊழியர்கள் மட்டுமே மன அழுத்தமின்றி நலமாக உள்ளனர்; 3. 21% ஊழியர்கள் மட்டுமே தமது பணியில் மும்முரமாக ஈடுபடுகின்றனர். 1,800 நிறுவனங்களில் திரட்டிய தரவுகளைப் பகுப்பாய்வு செய்த ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், மூன்றிலொரு பங்குக்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியில் மகிழ்ச்சி காணவில்லை எனத் தெரிவித்துள்ளது.

எனவே, என்ன நடக்கிறது? நல்ல ஊதியம் பெறும், வெளிப்படையாக வெற்றி பெற்ற பலர் ஏன் மகிழ்ச்சியற்றவர்களாக உணர்கிறார்கள்? இதைப் புரிந்து கொள்ள, மகிழ்ச்சி என்றால் என்ன என்பதை நாம் கொஞ்சம் ஆழ்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

உளவியலாளர்கள் மகிழ்ச்சியை இருவகைப்படுத்துவர். அவை: 1. குறிப்பிட்ட ஒரு தருணத்தில் நேரும் இன்ப அனுபவங்களின் வாயிலாகப் பெறும் மகிழ்ச்சி (Hedonic happiness), 2. பொருளார்ந்ததும் குறிக்கோள் சார்ந்ததுமான அனுபவங்களின் வாயிலாகப் பெறும் மகிழ்ச்சி (Eudemonic happiness), இவ்விருவகை மகிழ்ச்சியுள் முதலாவது, ஒருவரின் உணர்ச்சியை முறைப்படுத்தி, எதிர்மறை உணர்ச்சிகளையும் மன அழுத்தத்தையும் குறைக்க உதவுகிறது. இரண்டாவது வகை மகிழ்ச்சி வாழ்க்கையின் பொருளை, பெறுமதியை ஒருவர் அறிந்து கொள்ள உதவுகிறது. எனவே, மனிதனுக்கு இவ்விருவகை மகிழ்ச்சியும் இன்றியமையாதவையே. இவை இரண்டும் ஒருவரின் ஒட்டுமொத்த மகிழ்ச்சிக்கு வெவ்வேறு வழிகளில் பங்களிக்கின்றன. மேலே குறிப்பிட்டவை, 100 பேரின் மகிழ்ச்சி அளவைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் டீக்கின் பல்கலைக்கழகம் (Deakin University) நிகழ்த்திய ஆய்வின் முடிவுகள் ஆகும்.

நம் ஒவ்வொருவருக்கும் அடிப்படை மகிழ்ச்சிக் கோடு (happiness baseline) என்ற ஒன்று உண்டு. இது ஆளுக்கு ஆள் வேறுபடும். 50% மகிழ்ச்சி கருவிலேயே உருக்கொள்கிறது. 10% மகிழ்ச்சி நம் சூழல்களால் உருவாகிறது. எஞ்சிய 40% மகிழ்ச்சியானது நம் கையில்தான், கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. இவை மகிழ்ச்சி குறித்த அறிவியல் நெறியிலான ஆராய்ச்சிவழி அறியப்பட்டவை ஆகும்.

இதனினின்றும், மகிழ்ச்சிக்கு மரபணுக் காரணிகள் அடிப்படை எனினும் நாம் முயன்றால் நம் மகிழ்ச்சியின் எல்லையை விரிவுபடுத்த இயலும் எனத் தெளியலாம். பணியிடச் செயற்பாடுகளோ பிறவோ, எவையாயினும் நம் செயற்பாடுகள், பிறர் நலம் (altruistic) சார்ந்ததாயும், குறிக்கோள் (purpose) சார்ந்ததாயும், பொருளுடையதாயும் (meaningful) அமையின் நம் மகிழ்ச்சியின் பரப்பு உறுதியாக விரியும் என உளவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பூடான் அரசு 1970களிலேயே ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது அந்நாட்டு மக்களின் மகிழ்ச்சியைப் பொறுத்தது என்று கண்டறிந்தது. தேசிய வருவாயைக்காட்டிலும் தேசிய மகிழ்ச்சியே மதிப்பு மிக்கது எனக் கொண்டு மக்களின் மகிழ்ச்சியை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொண்டன. அவை நல்ல பலன் தந்தது. மக்களின் மகிழ்ச்சி மிகுந்தது; அவர்கள்



பூந்துணர் வ. ஜெயதேவன்

ISSN 2320-4842

*உடல் நலம் மேம்பாடு அடைந்தது; உற்பத்தி பெருகியது. நாட்டின் வருவாயும் அதிகரித்தது. ஒட்டுமொத்த தேசிய மகிழ்ச்சி (Gross National Happiness) என்னும் பூடான் கருத்தியலின் செல்வாக்கும், பூடான் எடுத்த முயற்சியும், அமெரிக்காவிலுள்ள உலக மகிழ்ச்சித் தளம் (World Happiness Foundation) முன்வைத்த கோரிக்கையும் ஐ.நா.பொதுக்குழுவில் 2012 ஜூன் 28இல் இப்படியொரு தீர்மானம் நிறைவேறக் காரணமாய் அமைந்தன எனலாம்:*

The General Assembly, Conscious that the pursuit of happiness is a fundamental human goal, Recognizing also the need for a more inclusive, equitable and balanced approach to economic growth that promotes sustainable development, poverty eradication, happiness and the well-being of all peoples, Decides to proclaim 20 March the International Day of Happiness, Invites all Member States, organizations of the United Nations system and other international and regional organizations, as well as civil society, including non-governmental organizations and individuals, to observe the International Day of Happiness in an appropriate manner, including through education and public awareness-raising activities.

— United Nations General Assembly, Resolution adopted by the General Assembly on 28 June 2012.

*இத்தீர்மானம் நிறைவேறியதையடுத்து 2013முதல் ஆண்டுதோறும் மார்ச்சு 20ஆம் நாளை உலக மகிழ்ச்சி நாளாக (International Day of Happiness) உலகம் கொண்டாடிவருகிறது.*

*மார்ச்சு 2013இல் அமெரிக்கா இன்று என்னும் இதழ் உலக மகிழ்ச்சி நாள் கொண்டாட்டம் பற்றிப் பின்வருமாறு பதிவுசெய்தது:*

International Day of Happiness has struck a chord. There were celebrations all over the world: meditation in Bhutan, happy flash mobs in London, laughter yoga in Hong Kong and screenings of the film Happy in coffee shops all over the world. The day had a trending hashtag on twitter and its own website dayofhappiness.net — USA Today (March 2013)

*உலக மகிழ்ச்சிக் குறியீடு 2023 (World Happiness Index)—இன்படி மகிழ்ச்சி மிக்க நாடுகளின் பட்டியலில் பின்லாந்து தொடர்ந்து 5 ஆண்டுகளாக முதலிடம் வகித்துவருகிறது. 146 நாடுகள் அடங்கிய அப்பட்டியலில் இலங்கை 126ஆவது இடமும் இந்தியா 136ஆவது இடமும் வகிக்கின்றன. இந்தியாவில் மகிழ்ச்சி மேம்பாட்டுக்குப் பெருமுயற்சி மேற்கொள்வது இன்றியமையாதது.*

- In 1962 John F Kennedy visited the NASA Space Centre for the first time. During his tour, he met a janitor carrying a broom down the hallway. When Kennedy asked the man what he did for NASA he replied, “I’m helping put a man on the moon”. Most organizations exist to fill a need in the world, and all employees contribute in their own ways.
- While learning anything new is challenging in the beginning, studies have shown that people who work hard to develop their skills experience greater happiness in the long term**.**
- The things that make you happy (money, holidays, a new car) are not the same things that make your life meaningful.
- If you ask someone who is overwhelmed by work and family commitments (and writing on medium), sleep deprived and stressed out of their gourd if they are happy they will probably say no.
- But if you ask them to reflect on whether they are adding value to the world and living a meaningful, purpose led life I bet they will say yes. That’s because working towards your goals, taking on a challenge, and being part of something bigger than yourself all lead to a sense of purpose.
- Finding happiness in your career isn't magic. Is something you have to actively build for yourself over time. So focus on how you are adding value, and who you are helping, and master your craft. Those hedonic treats will come, but you’ll also be left with an enduring sense of happiness.

- Jack Turner, From Chasing Happiness to Embracing Purpose: A Guide to Finding Meaning in Your Career, *Illumination* dated 23.05.2023.

ISSN 2320-4842



# ஆறாம் இலக்கணம்–புலமை இலக்கணம்

**முனைவர் த. முத்தமிழ்**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை**

இலக்கணம் என்பது ஒரு மொழியினை ஒழுங்குபடுத்த முயலும் செயல் எனலாம். இலக்கணிகள் சமகாலத்திலும் அதற்கு முந்தைய காலகட்டத்தில் உள்ள மொழி எவ்வாறு இருந்தது என்பதையும் அறிந்து அதனை ஒரு ஒழுங்குவடிவத்தில் வகைப்படுத்திக்கொடுப்பதும் இலக்கணம் எனலாம். இலக்கியத்தினுடைய மொழியமைப்பிற்கு மட்டுமே இலக்கணம் எழுதவியலாது பேச்சுவழக்கு முறையையும் தெரிந்துகொண்ட பின்னரே இலக்கணம் எழுதவியலும். அதனால் இலக்கணிகள் இலக்கியம் பல்வேறு அறிந்திருப்பினும் பேச்சு வழக்கு முறையையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். அதன்பின்னரே இலக்கணம் எழுதுகின்றனர். அவ்வாறு எழுதப்பட்ட இலக்கணங்கள் ஒவ்வொரு மொழியிலும் அமைந்துள்ளன. தமிழ் மொழியில் பல இலக்கணங்கள் தோன்றியுள்ளன. கால அடிப்படையில் கூறுவதானால் கி.முவிலிருந்தே எழுதப்பட்டுள்ளது. தொல்காப்பியம் தொடங்கி இக்கால உரைநடையில் அமைந்த இலக்கணம்வரை கூறலாம். அவ்விலக்கணங்கள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று ஐம்பெரும் பிரிவுகளாக உள்ளன. **ஐந்திலக்கண நூல்கள்:** எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து இலக்கணங்களைக் கூறும் நூல்களாகத் தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சாமிநாதம் அமைகின்றன. **எழுத்து, சொல்:** எழுத்து, சொல் இவ்விரு இலக்கணங்களைக் கூறும் நூல்களாக நேமிநாதம், நன்னூல், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து, தமிழ் இலக்கணக் கும்மி, தமிழ் நூல் (தமினூல்) அமைகின்றன. **எழுத்து, சொல், பொருள்:** எழுத்து, சொல், பொருள் என மூன்று இலக்கணங்களைக் கூறும் நூலாக மாணவர் தமிழ் இலக்கணம் அமைகிறது. **பொருள் -அகம்:** பொருளிலக்கணத்தில் அகப்பொருளை மட்டும் கூறும் நூல்களாக இறையனார் களவியல், நம்பியகப்பொருள், திருக்கோவையாரில் அகப்பொருள் துறைகள் அமைந்த சூத்திரங்களும் துறைகளை விளக்கும் கொளுக்களும் காணப்படுகின்றன. பழனிக்கோவை, மாறனகப்பொருள், இரத்தினச்சுருக்கம் திருக்கோவைக் கிளவிக்கொத்து, திருக்கோவைக்கொளு ஆகியவை அமைகின்றன. **பொருள்- புறம்:** பொருளிலக்கணத்தில் புறப்பொருளை மட்டும் கூறும் நூல்களாக பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை அமைகின்றன. **யாப்பு:** யாப்பிலக்கணத்தைக் கூறும் நூல்களாக காக்கைப்பாடினியம், சிறுகாக்கைப்பாடினியம், பெருங்காக்கைப்பாடினியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, யாப்பு நூல் ஆகியவை அமைகின்றன. **பாவகை விளக்கம்:** பாவகை இலக்கணங்களைக் கூறும் நூல்களாக மாறன் பாப்பாவினம், சிதம்பரச்செய்யுட்கோவை, விருத்தப்பாவியல், பல்சந்த பரிமளம், திருவலங்கற்றிரட்டு, விருத்தப்பாவியல், வண்ணத்தியல்பு ஆகியவை அமைகின்றன. **அணி:** அணியிலக்கணத்தைக் கூறும் நூல்களாக தண்டியலங்கராம், அணியியல், மாறனலங்காரம், வடமொழி சந்திராலோகம், அதன் உரை, குவலயானந்தம், அப்பையதீட்சிதர் குவலயானந்தம் ஆகியவை அமைகின்றன. **பாட்டியல்:** பிரபந்த இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்களாக பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல், இலக்கணவிளக்கப் பாட்டியல் (இலக்கண விளக்கம்), பிரபந்த தீபிகை, வருணப்பாட்டியல், தாத்தாத்திரேயப்பாட்டியல், பண்டாரப் பாட்டியல், அகத்தியர் பாட்டியல், மாமூலர் பாட்டியல், பாட்டியல் மரபு, பிரபந்த தீபம், பிரபந்த திரட்டு, இந்திர காளியம் ஆகியவை அமைகின்றன. **உரைநடையிலமைந்த இலக்கண நூல்கள்:** கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம், அணியிலக்கணம், இலக்கணவிளக்கச் சுருக்க வினாவிடை, இலக்கணச் சந்திரிகை, செய்யுள் இலக்கணம், சித்திரகவி விளக்கம், பஞ்சலட்சணம், பெரும்பொருள் விளக்கம், தென்னூல் (புதிய தமிழ் இலக்கணம்), இனிய தமிழ் இலக்கணம், இக்காலத் தமிழ் இலக்கணம், அடிப்படைத் தமிழ் இலக்கணம், Tamil Grammar, தமிழ் இலக்கணம், இக்காலத் தமிழ் மரபு, தமிழ்மொழி அமைப்பியல். இலக்கண விளக்கத்திற்கு மறுப்பு நூலாக இலக்கணவிளக்க சூறாவளி என்ற இலக்கண நூல் எழுதப்பட்டுள்ளது.

பின்னர் அவற்றின் நீட்சியாக 19ஆம் நூற்றாண்டில் புலமையையும் தவத்தையும் முறையே பேசும் அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம் வந்துள்ளன. இவ்விலக்கணம் மரபிலிருந்து விரிந்தும் விலகியும் நிற்பதோடு எளிமையான சொற்களால் அமைகிறது. மரபிலக்கணக்கருத்து ஆங்காங்கு வெளிப்படுகின்றன.

**அறுவகை இலக்கணம்**

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இவ்வைந்திலும் மரபிலக்கணங்கள் நவிலும் கருத்து கூறப்படவில்லை.

பெரும்பான்மை மாறுபட்ட கருத்துக்களே கூறப்பட்டுள் ளன. மற்ற இலக்கணங்களுடன் ஒப்பிடும்போது புதிய கருத்துக்களே கூறப்பட்டுள்ளன. அதனால் இதனை முதனூல் எனவும் கூறலாம். இருப்பினும் மரபிலக் கணங்கள் கூறும் ஐந்து இலக்கணங்களிலிருந்து கூறும் புதிய கருத்துக்கள் இங்குக் கூறப்படவில்லை. முற்றி லும் புதிதாக உள்ள ஆறாவது இலக்கணம் எனப் படும் புலமை இலக்கணம் பற்றிக் கூறுவதே கட்டுரை யின் மையமாகும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, புலமை என ஆறு வகையாக இலக்கணத்தைத் தண்டபாணி சுவாமிகள் (1839-1890) எழுதியுள்ளார். செந்தில்நாயகம் பிள்ளைக்கும் பேச்சிமுத்து அம்மை யாருக்கும் நெல்லையில் பிறந்த இவருக்குச் சங்கர லிங்கம் என்ற இயற்பெயர் வைக்கப்பட்டது. முருகதாசர், ஓயாமாரி என்ற பெயர்களைக் கொண்டவர்.

***மன்னுபுகழ் நெல்லைநகர் வாழ்முருக தாசன்எனப்***
***பன்னுதண்ட பாணிப் பரதேசி-உன்னும்***
***குறுமுனிவன் தன்அருளால் கூறும்இந்த நூற்பேர்***
***அறுவகையி லக்கணம் ஆமே (அ.இ.சி.பா.7)***

இலக்கணம் ஐந்தையும் கற்பதால் விளையும் புலமை யின் இலக்கணத்தைச் சேர்த்து அறுவகை இலக்கணம் என நவிலப்பட்டுள்ளது.

13 வயதில் *வண்ணம்* என்ற சந்தப்பா பாடுவதில் வல்லமை பெற்றுத் திருப்புகழ் பாடியதனால் *திருப் புகழ் சுவாமிகள்* என்றும், உடல்முழுவதும் திருநீறு, இடுப்பில் கௌபீனம், கையில் தண்டாயுதம் கொண் டிருந்ததனால் தண்டபாணி சுவாமிகள் என்றும் அழைக் கப்பட்டார்.

இவர் எழுதிய நூல்கள் பல. இலக்கண நூல்கள் அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத் தியல்பு ஆகும். கட்டுரையின் மையப்பொருள் அறு வகை இலக்கணத்துள் புலமையிலக்கணம்.

ஐந்து இலக்கணங்களை நன்கு கற்றபின் அதனால் விளைவதே புலமை. அவ்வைந்து இலக்கணங்களை யும் வெளிப்படுத்துவதே புலமை என்கிறார். அப்புல மையைத் **தேற்ற இயல்பு** (31 நூற்பாக்கள்), **தவ றியல்பு** (34), **மரபியல்பு** (35), **செயல்வகை இயல்பு** (41)-தொழில்நிலை (9), நடுநிலை (10), எதிர்நிலை (10), அருள்நிலை (11) என்ற நான்கு இயல்புகளில் விளக்குகின்றார்.

## தேற்ற இயல்பு

அறிந்த பொருளின் தன்மையை ஐயமின்றித் துணி வுடன் கூறுதலே தேற்றம் என்கிறார். அத்தெளிவு பெறு தற்குரிய வழிமுறைகள், கவிஞனாக ஒருவன் பெற வேண்டிய நெறிமுறைகள், பனுவல் பற்றிக் கூறல் போன்றவற்றைக் கூறுதலே தேற்ற இயல்பு ஆகும். இம்மூன்று செய்திகளை மட்டும் தேற்ற இயல்பில் கூறுகின்றார்.

### தேற்றம் பெறுவதற்கான வழிமுறைகள்

***பணிந்தொழுகுதல்,***
***புலமையின் ஆசை பொலிந்தோன் ஒருவன்***
***அத்தொழிற் பெரியோர்க்கு ஆட்படல் நலமே (அ.இ. 647 புல.5)***

***இலக்கண அறிவுடன் கடவுள் அருள் வேண்டுமெனல்,***
***நூலின் துணையினும் நூறுபங்கு அதிகம்***
***தெய்வத் துணையாம் செழுந்தமிழ்க் கவிக்கே (அ.இ. 649 புல..7)***

மடி, பேருறக்கம், பெண்ணாசை, வறுமை இவ்விடர் கள் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது கல்வியில் கவனம் செலுத்துதல், ஐந்திலக்கணம் தெரி யாமல் இறைக்கவிகளை இயற்றினால் சிறப்புறாது. இவையே ஒரு கவிஞன் தெளிவு பெறுவதற்கான வழிமுறைகள் என நவில்கின்றார்.

### கவிஞன் கைக்கொள்ள வேண்டியவை

பதம், கீர்த்தனை, கொச்சகக்கலிப்பா இவற்றையே முதலில் எழுதப்பழக வேண்டும் அதுவே மரபு. ஆசிரிய விருத்தம் கற்ற பின்னரே கட்டளைக் கலித் துறை போன்ற பாவினம் பாட வேண்டும் என்கிறார்.

***விருத்தப் பாநிலை தேறுமுன் கட்டளைக்***
***கலித்துறை ஆதிய கழறுதல் பிழையே(அ.இ.659பல.17)***

வெண்பா கற்பதற்குமுன்ர் வண்ணக்கவிகளை இயற் றல் பிழை என்கிறார்.

### பனுவல் இயற்ற பின்பற்ற வேண்டியவை

சிற்றிலக்கிய வகைகளில் தேர்ச்சி பெற்ற பின்னரே காப்பியம் இயற்ற வேண்டும். காப்பியப் புலமை பெற்ற பின்னரே தத்துவம், சோதிடம், மருத்துவம் போன்ற அறிவு நூல்களை இயற்ற வேண்டும்.

***காவிய நிலைகளும் கண்டு தேறி***
***நூலினம் பகர்வது நுண்ணிமை யாமே (அ.இ.663, புல. 21)***

சொற்களுக்கு நிறம் வழங்குகிறார் எழுத்தறிவற்ற பாமரர்களும் எளிதில் புரிந்துகொள்ளும் சொற்களை **வெண்ணிறம்** படைத்தவை என்றும், கற்பவர்கள் தம் அறிவாற்றலுக்கு ஏற்ற அளவு பொருள் கொள்ளும் வகையில் அமைந்த சொற்களைப் **பளிங்கு நிறம்** என்றும், எளிதில் பொருள் விளங்காத தொன்மையான சொற்களைக் **கருமை நிறம்** என்றும் கூறியுள்ளார். இங்குக் கருமை நிறம் என்று கூறும் சொற்கள் இழி பொருள் உடையவை என்று பொருளல்ல. பொருள் காண அரியது என்பதே கருத்து. இலக்கிய வழக்குச் சொற்களைச் **செஞ்சொல் நிறமென்றும், பொன்னிறச் சொல்லை** உபசார வழக்குச் சொற்கள் அல்லது பண்பாடு சார்ந்த சொற்கள் என்று **ஐந்து** வகையான நிறத்தில் சொற்களை விளக்கியுள்ளார் (அ.இ சொல். 171-179). சொற்களுக்கென்று நிறம் உள்ளது அதனை அறிந்த பின்னர் புலமை பெற வேண்டுமென்ற வேட்கை தீராது என்கிறார். தாம் எழுதிய நூலில்

மீண்டும் ஒருமுறை பரிசீலித்துத் திருத்தம் செய்யா திருத்தலே புலவனின் இயல்பு. ஒருவர் தனது படைப்பை வரிவடிவில் தானே எழுதுவதை விடத் தடங்காமல் கூறக்கூற மற்றொருவர் எழுதுதலே சிறப்பு. அவ்வாறு செய்யின் அதுவரை அறிவுத் தன்மையில் இருந்தவர் தெய்வத்தன்மை அடைந்துவிடுவர். கடவுளின் திருவுருவத்தை மனக்கண்ணாலும் செவிப்புலனாலும் உரையாடி ஆட்கொண்டால்தான் முழு அறிவு கிட்டும் என்கிறார்.

இலக்கியச்சுவை இல்லாதவன் பேரரசன் ஆயினும் சாமானியனே. தமிழ்ச்சுவை அறியாத தெய்வம் உளதெனில் அது பேய் என்கிறார்.

*சொற்சுவை உணரான் தோள்வலிச் சுடர்வாள்*
*மன்னன் ஆயினும் அஃதுஉணர் மாந்தரில்*
*தாழ்வுஎன உணர்வான் தக்க புலவனே (அ.இ.671 புல. 29)*

*தமிழ்ச்சுவை அறியாத் தெய்வம் உளதுஎனில்*
*அஃதுஉணர் அலகையில் தாழ்வுஎனல் அறமே (அ.இ. 672 புல.30)*

வாக்கில் அருள் வலிமை வேண்டும் அஃது இல்லாமல் முழுவதும் வண்ணக்கவிகளால் இயலும் ஒலியலந்தாதியில் நூல்படைப்பின் வருந்துவர். அகத்தியரை வணங்கினால் கவிதை, அருள் இரண்டும் கிட்டும். செத்தாரை எழுப்பும் பாடல், பேயுடன் நடத்தும் அதிசயம் இவை செய்தால் இலக்கியச்சுவை இல்லாப் படைப்பும் சிறப்பாகும். அப்படி எண்ணக்கூடிய கவிஞர்களே அதிகம் இருக்கின்றனர் என்கிறார்.

**தவறியல்பு**

மாணவர் புலவர் இருவரிடமும் இருக்கக் கூடாத பண்புகளைக் கூறுதலே தவறியல்பு.

வாக்கு பலிதம் இல்லாவிடினும் கல்வி, மொழிப் புலமை இல்லாமல் புலவன் இருக்கக்கூடாது. செருக்கு இருத்தல் கூடாது. ஒரு புலவர் மற்றொரு புலவரை மதிப்பதில்லை அதற்குக் காரணம் கல்வியால் உண்டான பெருமிதமே என்கிறார்.

*காகப் புள்என இனத்தொடு கலவாது*
*ஞாளிபோற் பகைக்கும் நாவலர் பலரே (அ.இ.680 புல. 38)*

செல்வமே சிறப்பு என எண்ணும் தமிழ்ச்சுவை உடைய ஆசிரியர் இழிந்தவர் என்கிறார். கவிதைகளைத் திருடித் தம் கவியாகப் பாடுதல் தவறு என்கிறார்.

*சீரிய புலவர்தம் செஞ்சொல் திருடிப்*
*பாழ்த்த புன்கவி பகர்வோர் பலரே (அ.இ.683 புல.41)*

அகந்தையுடைய புலவனைச் சோழ, பாண்டிய அரசர் முன் நிறுத்தி வாதிட்டு அகந்தையைக் குறைக்க வேண்டும் என்கிறார். போட்டியில் தோற்றவரின் செவி அறுத்தல் வேண்டும் என்கிறார்.

*தோல்வி ஏற்றுத் தொழும் ஒரு புலவன்*
*காது கொய்தலும் காரியம் அன்றே (அ.இ685 புல.43)*

தேவையில்லாத இடத்தில் கோபம் கொள்ளுதலும், கோபம் கொள்ளவேண்டிய இடத்தில் கோபமின்மையும் தவறு. காமச்சுவையுடன் செய்யுள் படைத்தால் விரும்புவர் என்றெண்ணி பாடல் இயற்றினால் புண்ணியம் அன்று என்கிறார்.

*காமக் கடலே கதிஎனக் கருதிப்*
*போவார் புலமையிற் புண்ணியம் இன்றே (அ.இ. 687 புல.45)*

தமிழ்ப்புலமையால் வீட்டின்பம் கிட்டும் என அறியாதவர் இழிந்தவர்.

*தெய்வப்புகழும் சிறப்பும் செந்தமிழ்*
*பொருந்தும் என்று உணராப் புலவர்புல் லியரே (அ.இ 688 புல.46)*

பணத்திற்காகப் பாடக்கூடாது. உயிர்க்கொலை, மாமிசம் உண்ணல் இவற்றைக் கொண்டு கவி இயற்றுபவர் பேய்க்குணம் உடையவர்.

*கொல்லல், ஊன்சமைத்தல் ஆதிய விரித்துக்*
*கழறுந் துணிவுடைக் கவிப்புல வோரைப்*
*பேயர் என்று உலகம் பெரிதுஇகழ்ந் திடுமே (அ.இ 690 புல.48)*

நம் பெருமை அறியாதவர் முன் நம் பெருமை கூறல் தவறு.

*அருமை அறியான் அவையிடைப்புகுந்து*
*பெருமை பாராட்டலும் ஏனையும் பிழையே (அ.இ.692 புல.50)*

இன்றைய கால நடைமுறைக்கேற்றவாறு இருத்தல்.

*கால வேற்றுமை கருதாப் புலவன்*
*சீலனே எனினும் சிறுமை யின்னே (அ.இ693 புல.51)*

சமய தெய்வம், குரு பற்றி பாட வேண்டும். சிறந்த யாப்பு என்பது எண்வகை வண்ணக்குழிப்பிற்கமைய பாடப்படும் வண்ணக்கவியே என்பதை ஒப்புக்கொள்ளாதவன் அறிவுத் திறமை குறைவுடையவனாவான். பொறாமை, பெருமைக்காகப் படித்தல் பாடல், குறை கூற வேண்டுமென்றே குறை கூறல் இவையனைத்தும் தவறியல்பாக ஆசிரியர் கூறுகின்றார்.

**மரபியல்பு**

இலக்கிய வரலாறுபோன்று அமையும் பகுதி. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்கள் மற்றும் செவிவழியாகக் கூறிய புலவர்கள் பற்றியும் கூறுகின்றார். இதனை இவர் இயற்றிய புலவர் புராணம் நூலில் கூறியுள்ள புலவர்களைக் கூறுகின்றார். இவ்வியல்பை ஆசிரியர் கூறக் காரணம் என்னவென்று ஆசிரியரே இவ்வியில்பின் இறுதியில்,

*புலமையை இழிவுஎனப் புகல்வார் புந்தி*
*நாணுறும் பொருட்டும், நண்ணுவார் நெஞ்சம்*
*களித்துக் காரியம் கைக்கொள முயலும்*

*பொருட்டும் மரபியல் கைக்கொள முயலும்
செயல்வகை இயல்பினைச் செப்புதுந் தெளிந்தே (அ.இ 745 புல.103)*

அந்நூலுள் கூறிய புலவர்களை இங்கும் கூறுகிறார். இங்கு அவர் கூறும் புலவர்கள்: இறைவன், சிவன், உமாதேவி, முருகன், கலைமகள், தேவர், இலக்குமி, திருமால், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆழ்வார்கள், தலை, இடை, கடைச் சங்கப் புலவர்கள் முறையே 4900, 490, 49-5439, திருவள்ளுவர், ஔவையார், இடைக்காடர், நக்கீரர், இரட்டைப்புலவர்கள், கவிராஜ் பண்டிதர், அருணகிரிநாதர், பொய்யா மொழிப்புலவர், பகழிக்கூத்தர், காளமேகப்புலவர், சிவப்பிரகாசர்,தென்குருகையைச் சேர்ந்த வைணவர், கந்தசாமிப்புலவர், வீரபாண்டியப்புலவர், வசைகவியாண்டான் என்னும் பார்ப்பான், சீநிவாசப்புலவர், ஆறுமுகப் புலவர், நமசிவாயப்புலவர்.

### செயல்வகை இயல்பு

புலவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை விளம்புகிறார். புலவர்களின் செயல்பாடு நான்கு (தொழில்நிலை, நடுநிலை, எதிர்நிலை, அருள்நிலை) நிலைகளில் அமைகிறது.

### தொழில்நிலை

புலவர் புலமையைத் தொழிலாகக் கொண்டு பொருளீட்ட எண்ணுவோர்க்கு எழுதியது.

***பிறருக்குத் தீமை ஏற்படாதவாறு தொழில் புரிதல்.
தமிழ்க்கும், தனக்கும், சார்தரு நெறிக்கும்
தன்இனத்தினர்க்கும் தவறுஉறா வண்ணம்
முயல்வோன் புலமை முதன்மைத்து ஆமே (அ.இ. 747 புல.105)***

அட்டாவதானம், யமகண்டம், கண்டசுத்தி இவற்றில் திறமை வரும்வரை எழுதக்கூடாது. ஒரே சமயத்தில் எட்டு வெவ்வேறு செயல்களில் ஈடுபடுவது **அட்டாவதானம்**. 16 அடி நீள அகலம் உள்ள குழி ஒன்று வெட்டி அக்குழியின் நான்கு மூலைகளிலும் இரும்புக் கம்பங்கள் நட்டு அதன் மேல் நான்கு இரும்புச் சட்டங்கள் பரப்பி நடுவினும் சட்டமிட்டு நடுச்சட்டத்தில் உறிகட்டிக் குழியில் புளியந்தனவிட்டு இரும்புக் கொப்பரையில் அரக்கு, மெழுகு, குங்கிலியம், கந்தகம், சாம்பிராணி நிரப்பி அவை கொதித்திருக்கையில் யானையைப் பாகருடன் நான்கு முறையில் நிறுத்திப் பின்புறத்தில் வளையத்தில் சங்கிலி கோத்து எட்டுக்கத்திகளை இடுப்பில் நாலும் கழுத்தில் நாலும் கட்டிக்கொண்டு வளையத்தில் பொருத்திச் சங்கிலிகளை யானைத் துதிக்கையிற் கொடுத்து வைத்துக் கொப்பரைக்கு நடுவாகத் தொங்கும் உறியில் புலவன் இருந்து பல வித்வான்கள் கொடுத்த சமுசையைப் பாடுவது. அவ்வகைப் பாடானாயின் யானையைத் தூண்டயானை சங்கிலிகளை இழுக்கப் புலவன் உடல் அறுப்புண்டு கொதிக்கும் தீயில் வீழ்ந்திறப்பான். இதுவே **யமகண்டம்**. எதிரில் உள்ளவரின் கருத்தில் அச்சமயத்தில் இடம்பெற்றுள்ள செய்தியை அவர் கூறாமல் தானே அறிந்துகொண்டு அதனையோ (அ) அவ்வையத்தின் விடையையோ கூறுவது **கண்ட சுத்தி**.

***அட்டாவ தானம் எமகண்டம் மற்றோன்
கண்டதைப் பாடல், ஆதியில் கருதும்
தவம் முடிவதன்முன் சருவவொண் ணாதே (அ.இ749 புல.107)***

கல்வியறிவற்றவர் மட்டுமே பாராட்டும்படி கவிதை இயற்றுவதைவிட அறிஞர்கள் போற்றும்படி சாதாரண உரைநடை கொண்டு எழுதுதலே உயர்வு. வாக்கு பலிதம் உடையவன் ஆதிசேடனுக்கு இணையானவன். வாக்கு பலிதம், புலமைச் சிறப்பு- இவற்றை மற்றொரு புலவனால் மட்டுமே உணர முடியும். அவனே உணருவான்.

### நடுநிலை

போட்டியின் நடுவர், போட்டியாளர் எப்படி யிருக்க வேண்டும் என்பது பற்றிக் கூறப்படுகிறது. மறை புலவனால் உருவாக்கப்பட்டது. நன்மையில் தீமை தீமையில் நன்மை உண்டு. வாதத்தில் தன் கருத்து தவறெனில் தோல்வியை ஒப்புக்கொள்பவனே அறிஞன்.

***தன்வழக்கு எதிர்த்தோன்தன்னாற் சிதையினும்
ஆம்எனப் பகர்வான் அறிவுடைப் புலவனே (அ.இ757 புல.117)***

விருப்பு வெறுப்பில்லா நடுவராக இருக்க வேண்டும். இரு புலவர்களுக்கிடையே வாதம் நடைபெறுமிடத்துத் தோற்றவன் காது அறுக்கப்படும். அல்லது தோற்றவன் வெண்பா அல்லது வண்ணம் இவற்றில் யாப்பு இயற்ற வேண்டும் அல்லது அவரவர்க்குத் தெரிந்த பாவினை இயற்ற வேண்டும் அதில் வென்றவன் தோற்றவனை அடிக்க வேண்டும். தோற்றவன் தான் பெற்ற பட்டங்களை இழப்பது மற்றும் காதுகளை அறுப்பது மரபு.

***வாதுக்கு ஆதரம் ஆகிய வண்ணமும்
விருதுக்கு ஆதரம் ஆயவெண் பாவும்
அறியாப் புலவருக்கு அமர்விளைந் திடுங்கால்
அவ்விரு புலவரும் அறிந்த பாடல்
தொகையில்ஒன்று உயர்வது குறித்துக் காட்டிப்
பாடும் திறமையில் பழுதுபட் டோனை
மற்றவன் புடைக்கச் செய்து மகிழ்வது
தக்கபான்மை என்று உரைப்பது தரமே (அ.இ.762 புல.120)***

### எதிர்நிலை

எதிர் நின்ற புலவன், எதிர்காலம் பற்றி இவற்றைக் கூறுவதே எதிர்நிலைப் பகுதி.

ஒருவருடைய புலமையை அறிய அவர் இயற்றிய இரட்டை ஆசிரிய விருத்தம் கொண்டு அறியலாம். எதிர்காலத்தில் மறைந்த நூல்களை வெளிப்படுத்த

வேண்டும். தில்லையில் கரையானால் அரிப்பு ஏற் பட்டு அழிந்த நூல்களைச் சிவபெருமானைக் கேட் டுப் பெற முயல வேண்டும். இது முறையில்லை என்று கூறுபவர் சைவருள் இழிந்தவர் ஆவார். தகுதி யுடையவர்க்கே அழிந்துபோன நூல்கள் கிடைக்கப் பெறும். இந்நூலாசிரியரே தன்னுடைய பல படைப்பு களைநீர்,தீ இவற்றில் இட்டு அழித்துள்ளார். அதனைக் கண்டறிக என நூலாசிரியரே கூறுகின்றார்.

***புணரி ஆதிய புனலினும் கனலினும்***
***யான்ஓர் நிமித்தத்து இட்ட பாடல்***
***தரத்தகும் புலவன் யாவன் எனினும்***
***அவன்பா தலர்த்துணை அமரும் என் சிரத்தே (அ.இ 771 புல.129)***

உயிர்க்கொலை, புலால் உண்ணல் இதனைத் தனது படைப்புகளால் இல்லாது செய்யும் புலவன் கடவு ளுக்கு இணையாவான் என்கிறார். இறையருளொடு தீயவர்களை ஒழிக்கப் புலமைபெற வேண்டும்.

**அருள்நிலை**

திருவருள் நிலை, திருவருள் கிடைக்காநிலை இவற் றைப் பற்றிக் கூறல் அருள்நிலை என்ற பகுதி.

பல புலவர்களை வாதத்தில் வென்ற வில்லிபுத்தூராழ் வார் பலரின் காதுகளை அறுத்தார். பின் அருண கிரிநாதரிடம் தோல்வியுற்று மாற்றானுடைய உதவி யால் செவிகளை இழக்காமல் தப்பினார்.

***அருள் நிலை***

கம்பநாடன் சோழனுடைய மகவைக் கொன்றதனால் இறுதியில் அம்பு பாய்ந்து இறந்தான்.

குமரகுபரர் ஊமையாக இருப்பினும் செந்திலாண்ட வர் அருளால் தமிழ்மழை பொழிந்தார்.

இலங்கை புத்த பிக்குகளை வாதத்தில் வென்று ஊமைகளாக்கிய மாணிக்கவாசகரின் வெற்றி அவரது அருள்நிலையைப் பறைசாற்றுகிறது.

***அருளில்லா நிலை***

சிற்றன்பப் பாடல் பாடியதால் அம்பிகாபதி கழுவேற் றப்பட்டு இறந்தான்.

***மன்னவன் ஆணையை மறுத்துஓர் பாடல்***
***சொன்னவன் கழுவில் துடித்துஇறந் தானே (அ.இ.778 புல.136)***

கம்பநாடன் பாடிய வெண்பாவால் சோழ மன்னர் அனைவரும் மாய்ந்தனர்.

கம்பநாடன் கால்தேய நடந்து சென்று நெல்லைக் கூலியாகப் பெறுவதற்குச் சுவர் வைக்கும் பணியில் ஈடுபட்டான்.

***வாதிடத் தேடி வரும்எழு மூவரும்***
***பேசும்நா இன்றிப் பிணம்போல் இருக்கக்***
***கண்டது அருள்எனக் கழறுதல் முறையே (அ.இ 784 புல.142)***

புலமையிலக்கணம் கூறும் உட்பிரிவுகளான தேற்ற இயல்பு, தவறியல்பு, மரபியல்பு, செயல்வகை இயல்பு (தொழில் நிலை, நடுநிலை, எதிர்நிலை, அருள் நிலை) இந்நான்கனுள் தேற்ற இயல்பில் புலவனாக இருக்க வேண்டியவன் பெறக்கூடிய தெளிவு என்ன என்பது எடுத்தியம்பப்பட்டுள்ளது. மேலும் கவிஞ னாக வேண்டியவன் கைக்கொள்ள வேண்டிய நெறி முறைகள் என்னென்ன என்பதும் விளம்பப்பட்டுள் ளது. பனுவல் எவ்விதம் எழுத வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. இறைவனுடைய அருள் இல்லா விடில் எப்புலமையையும் பெற முடியாது என்பது ஒவ்வொரு இடத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தவறியல்பில் மாணவர், புலவர் இருவரிடமும் உள்ள தவறு கூறப்பட்டுள்ளது. ஊன் உண்ணாமையை வலி யுறுத்திக் (குற்றம்) கூறப்பட்டுள்ளது. சிறந்த யாப்பு என்பது வண்ணக்கவியே என்கிறார். இப்பகுதியில் எவையெவை ஆசிரியரும் (புலவரும்) மாணவரும் பின் பற்றக்கூடாது என்பது விளம்பப்பட்டுள்ளது.

மரபியல்பு முழுக்க முழுக்க ஆசிரியர் எழுதியுள்ள புலவர் புராணச் செய்திகளே இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கடவுளும் எப்படிப் புலவராகின்றனர் என்றும் தேவர், அகத்தியர், திருமழிசையாழ்வார், சைவ சமயக்குரவர் நால்வர், ஆழ்வார்கள், திருவள் ளுவர், ஔவையார், இடைக்காடர், இரட்டைப்புலவர், கவிராஜ் பண்டிதர், அருணகிரிநாதர், பொய்யா மொழிப் புலவர், பகழிக் கூத்தர், காளமேகப்புலவர், சிவப் பிரகாசர், தென்குருகையைச் சேர்ந்த வைண வர், கந்தசாமிப்புலவர், வீரபாண்டியப் புலவர், வசைகவியாண்டான், சீநிவாசப் புலவர், ஆறுமுகப் புலவர், நமசிவாயப் புலவர் போன்றோர் புலவர் ஆன விதம் கூறப்பட்டுள்ளது. மூலத்தில் இவர்கள் பெயர் எதுவுமில்லை. உரையாசிரியரே புலவர் புரா ணத்தை எடுத்துக்காட்டித் தருகிறார். உரையாசிரியர் ஒரு இடத்தில் வரலாறு எது என விளக்கவில்லை (96,139-புலமை) என்கிறார்.

செயல்வகை இயல்பில் புலமை என்பதனைத் தொழி லாகக் கருதினால் அவன் கைக்கொள்ளவேண்டிய முறைகள் தொழில்நிலையில் கூறப்பட்டுள்ளது. நடு நிலையில் நடுவராக இருப்பவர் எப்படி இருக்க வேண்டுமென்றும் போட்டியாளர்கள் எப்படி இருக்க வேண்டுமென்றும் கூறப்படுகிறது. இவ்விடத்து அமை யும் செய்திகளுக்கும் தலைப்பிற்கும் சற்று பொருத்த மில்லாது அமைகிறது. எதிர்நிலையில் தனக்கு எதிரே உள்ளவன் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியும் விளம் புகிறது. அழிந்து மறைந்து போன நூல்களைக் கண் டறிபவனே சிறந்த புலவன் என விளம்புகிறது. அருள்நிலையில் ஒரு புலவன் இறைவனின் திரு வருள் பெறும் நிலையையும் திருவருள் பெறாத நிலையையும் (அவரவர் செயல்களால்) எடுத்தியம் புகிறது.

ISSN 2320-4842



# திருவாசகத்தில் பிறப்பறுப்பு

**முனைவர் த. தனஞ்செயன்**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, பாட்ரிஷியன் கலை அறிவியல் கல்லூரி, சென்னை**

தமிழின் பக்தி இலக்கிய வரலாற்றில் சைவ மற்றும் வைணவ இலக்கியங்கள் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன. இவ்விரு சமயங்களும் பக்தியைப் பற்றுக்கோடாகக் கொண்டு, மனித மனங்கள் செயல்படும் முறையை விரிவாகப் பதிவுசெய்தன. இப்பின்னணியில் இறைவன் மீது கொண்ட பக்தியை வெளிப்படுத்தும் போது, இயற்கையின் அனைத்து வடிவங்களையும் இறை வடிவமாகக் காணும் வழக்கமும் ஏற்பட்டிருந்தது. மேலும், உலக இயக்கத்தின்படி இயல்பாக நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தையும் இறைவனின் திருவிளை யாடல்களாகப் பேசும் மரபும் தோன்றி வளர்ந்தது. குறிப்பாக, உயிர்களின் தோற்றம், வளர்ச்சி, ஒடுக்கம் என அனைத்தும் இறைவனின் திருவருளால் நிகழ்வதாகப் பேசப்பட்டது. குறிப்பாக, உயிர்களின் பிறப்பு மற்றும் அவற்றின் இயக்கத்தைப் பொதுநிலையில் வைத்துப் பேசிய தொல்காப்பியத்தைக் காட்டிலும் அதற்குப் பின்பு தோன்றிய இலக்கியங்களில் பிறப்பைப் பற்றிப் பேசும் இடங்களில் சமயங்களின் செல்வாக்கு மேலோங்கி யிருந்தது. இதன் காரணமாக, இறைவனாலேயே அனைத்தும் இயங்குகின்றது என்ற சிந்தனையும் அவ்விலக் கியங்களில் வெளிப்பட்டது. இப்பின்னணியில் பிற்காலச் சோழர்காலப் பேரிலக்கியங்களாகிய பன்னிருதிருமுறை களின் பல்வேறு இடங்களில் பிறப்புப் பற்றிய பதிவுகளைப் பரவலாகக் காணமுடிகின்றது. அவற்றுள் மாணிக்க வாசகரின் திருவாசகத்தைக் களமாகக் கொண்டு பிறப்புப் பற்றிய பதிவுகளை மட்டும் ஆராய்வதாக இக்கட் டுரை அமைகின்றது.

## திருவாசகமும் பிறப்பும்

சிவபெருமான் மீது மாணிக்கவாசகர் கொண்ட ஒப்பற்ற பேரன்பின் வெளிப்பாடாகத் திகழும் திருவாசகம், மானுட வாழ்வின் அடுக்குகளைப் பக்தி மொழியில் பேசுகின்றது. அவ்வாறு பேசுகையில் அறிவின் உச்ச மாகச் சுட்டப்படும் மனித இனம் எதிர்கொள்ளும் வாழ்வியல் சிக்கல்களைப் பல்வேறு இடங்களில் பதிவு செய்துள்ளது. குறிப்பாக, பிறப்பு இறப்புக்குமிடையே நிகழும் வாழ்வியல் சடங்குகள், இறப்பிற்கான போராட் டங்கள் முதலானவற்றைப் பேசி அவற்றிற்குப் பக்தி முகமும் காட்டப்பட்டுள்ளது. அவ்வகையில் திருவாசகம் முழுக்கக் காணப்படும் இத்தகைய பக்தி வெளிப்பாட்டிற்கான தொடக்கத்தைப் போற்றித் திருஅகவலில்,

*யானை முதலா எறும்புஈறாய*
*ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்*
*மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து*
*ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்தும்*
*ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்*
*இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்*
*மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்*
*ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும்*
*அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்*
*ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்*
*ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்*
*எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்*
*ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்*
*தக்க தசமதி தாயொடு தான்படும்*
*துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்*
*ஆண்டுகள் தோறும் அடைந்தஅக் காலை*
*ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும் - (போற்றித்திரு அகவல்.10-27)*

என யானை முதல் எறும்பு வரையில் கருவைச் சுமந்து பிறப்பைக் கொடுக்கும் உயிர்கள் எதிர்கொள்ளும் இடர்களைப் பட்டியலிடுகின்றார். அவ்வாறு பட்டியலிடும்போது கரு உருவான பின் மனிதக் கரு ஒவ்வொரு மாதமும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளையும் நுட்பமாகப் பதிவு செய்வதைக் காணமுடிகின்றது. மாறாக, இத்தகைய இடர்ப்பாடுகளைக் கடந்து பிறக்கும் மனிதப் பிறவியை மாணிக்கவாசகர் எவ்வாறு பார்த்தார்

என்பது கேள்விக்குரிய ஒன்றாக உள்ளது. அவ்வகையில் மனிதப் பிறவியின் பத்து மாதக் கரு வளர்ச்சியைப் பேசிய போற்றித் திருஅகவலை அடுத்து வரும் பகுதிகள் மேற்கூறிய வினாவிற்கு விடையளிப்பதாக உள்ளன.

### பிறப்பறுக்க வேண்டல்

சிவபுராணம் தொடங்கி அச்சோப்பதிகம் வரையிலான 51 பகுதிகளைக் கொண்ட திருவாசகத்தில் ஏறக்குறைய 67 இடங்களில் மானுடப் பிறப்புப் பற்றிய பதிவைக் காணமுடிகின்றது. அப்பதிவுகளுள் 30க்கும் மேற்பட்ட பதிவுகள், மானுடப் பிறப்பை அறுக்கும்படியான வேண்டுகோளை இறைவனிடம் வைப்பதாக அமைந்துள்ளது. குறிப்பாக, திருப்பொன்னூசல் (4:5, 6:4, 9:3), கண்ட பத்து (2:1, 2:3, 5:1 6:1), திருப்பாண்டிப் பதிகம் (2:4, 4:4, 7:2, 9:1), அற்புதப் பத்து (4:1, 6:1, 7:1, 9:1, 10:1), திருவேசறவு (2:3, 3:1, 7:1) ஆகிய பகுதிகளில் பிறப்பை அறுக்கும்படியான பதிவுகள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் அப்பதிவுகளுள் சிவபெருமானை, மாயப்பிறப்பு மற்றும் அல்லல் பிறவியை அறுப்பவனாகவும் (சிவபுராணம் 14, 91, திருத்தெள்ளேணம் 16, திருப்பூவல்லி 3). பாழ்த்த பிறப்பை அறுப்பவனாகவும் (திருச்சதகம் 16:4), எப்பிறவியிலும் தேருவதற்கு இப்பிறவியில் ஆட்கொண்டு இனிப் பிறவாமல் காப்பதாகவும் (திருஅம்மானை 12:23), மரணம், பிறப்பு ஆகிய இரண்டின் மயக்கத்தை அறுத்த கருணைக் கடல் எனவும் (திருக்கோத்தும்பி 9:3,4), பிறவிக் கருவேர் அறுப்பவனாகவும் (திருத்தெள்ளேணம் 2:1,2; அடைக்கலப் பத்து 2:3, 4), அடியவர்கள் நெஞ்சத்தில்நின்று அமுதமாக ஊழிக்கருணை செய்து பிறப்பை அறுப்பவனாகவும் (திருப்பொன்னூசல் 4:3-5), பிறவிப் பகையைக் கலங்கச் செய்து பேரின்பம் அளிப்பவனாகவும் (திருத்தசாங்கம் 8:3), மண்ணில் பிறந்து, இறந்து மண்ணாகப் போகின்றவனைத் தன் அடியார் கூட்டத்தில் சேர்த்துக் கொள்பவனாகவும் (அதிசயப் பத்து 6:3), வினைப் பிறவி என்கிற வேதனையில் அகப்பட்டுத் தளர்வடைந்து கிடப்பவனை ஆட்கொண்டு பிறப்பறுத்தவனாகவும் (கண்ட பத்து 2) எனப் பல்வேறு நிலைகளில் பிறப்பறுப்பவனாகச் செயல்படுவதை மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார். இவை மட்டுமின்றி மனிதப் பிறவியைப் புழுக்கூடு எனவும் இழிவெனவும் நோய் எனவும் துயரமெனவும் பாவமெனவும் பகையெனவும் வேதனையெனவும் சுட்டுவதைத் திருவாசகம் முழுவதும் காணமுடிகின்றது. மாறாக,

***பிணி எலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன் (அச்சப்பத்து 5:1)***

எனக் கூறும் மாணிக்கவாசகர், அப்பாடலின் இறுதியில் சிவபெருமானுக்கு மட்டுமே அஞ்சுவதாகவும் குறிப்பிடுகின்றார். அன்றியும், திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும்கூட பிறப்பைப் பற்றி விரிவாகப் பதிவுசெய்திருப்பதைக் காணமுடிகின்றது. அப்பதிவில் திருஞானசம்பந்தர்,

***பிறவியால் வருவன கேடுள ஆதலால் பெரிய இன்பத்***
***துறவியார்க்குஅல்லது துன்பநீங் காதுஎனத் தூங்கி னாயே***
***(திருவாரூர் 859:1,2)***

எனத் திருவாரூர்ப்பதிகத்தில் பதிவு செய்துள்ளார். இதேபோன்று திருநாவுக்கரசர்,

***பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி***
***இறப்பு நீங்கி இங்கு இன்பம்வந்து எய்திடும் (திருச்சேறை, திருக்குறுந்தொகை 771:1,2)***

எனப் பதிவுசெய்துள்ளார். இவ்விரு பதிவுகள் மட்டுமன்றி இவற்றையொத்த வேறுபல பதிவுகளும் பிறப்புக் குறித்துப் பேசியுள்ளன. அவற்றுள், ஆறாம் திருமுறையிலுள்ள பதிவுகள் பிறப்பும் இறப்புமற்றுச் சுயம்புவாகத் தோன்றியவன் சிவபெருமான் எனப் பேசுவதாக அமைந்துள்ளன. இதனைப் போன்றே சம்பந்தரின் முதல் திருமுறையும் *பிறப்பாதி யில்லான்...*(1440:1,2) எனச் சிவபெருமானைப் பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பின்னணியில் இவ்விருவரின் திருமுறைகளையும் அடுத்துள்ள திருவாசகமானது முழுக்க முழுக்க மானிடப் பிறப்பினால் ஏற்படும் அல்லல்களைப் பேசி, அதிலிருந்து விடுபடும் வண்ணம் பிறப்பறுக்க வேண்டுவதாய் அமைந்துள்ளது. அத்தகைய வேண்டுகோளில் ஒன்றாக,

***வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும்***
***பித்த உலகில் பிறப்போடு இறப்பு என்னும்***
***சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த***
***வித்தகத் தேவர்க்கே சென்று ஊதாய்; கோத்தும்பீ!***
***(திருக்கோத்தும்பி 6)***

என இவ்வுலக உயிர்கள் அனைத்தினுடைய கலக்கத்தையும் தீர்ப்பவனாகச் சிவபெருமான் இருப்பதாகச் சுட்டுகின்றது. மேலும்,

***சாதி குலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்***
***ஆதம்இலி நாயேனை அல்லல் அறுத்துஆண்டுகொண்டு***
***(கண்டபத்து 5:1,2)***

என மனிதனைப் பாகுபடுத்தித் துன்புறுத்தும் சாதி வடிவங்களில் தன்னையே அடையாக வைத்துப் பேசியிருப்பதையும் காணமுடிகின்றது. இப்பதிவு, மாணிக்கவாசகரின் பக்தியை வெளிப்படுத்துவது ஒருபுறமிருக்க, அவர்காலச் சமூக நிலையைச் சுட்டும் சான்றாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் மனிதச் சமூகத்தை நெறிப்படுத்தும் கருவியாகவும் சமயத்தைப் பயன்படுத்த முடியும் என்பதற்கும் இதனைச் சான்றாகக் கொள்ளமுடியும்.

### மானுடப் பிறப்பும் பிறவி மயக்கமும்

திருவாசகம் முழுவதும் மானிடப் பிறவியை மறுத்தும், வெறுத்தும் பேசும் மாணிக்கவாசகர், அப்பிறப்பினால் ஏற்படும் மயக்கங்களையும் அதிலிருந்து விடுபட

முயல்வதையும் காணமுடிகின்றது. மேலும், மானிடப் பிறப்பிலிருந்து விடுவித்துக்கொள்வதன் பொருட்டுத் தன்னைத்தானே கடுமையான ஏசலுக்கும் உள்ளாக் குகிறார். அதன் ஒரு பகுதியாக மானிடப் பிறப்பை இழித்துப் பேசுகையில் தன்னைத்தானே நாய் என வும் நாயினும் கீழானவன் எனவும் நாயினும் இழி வானவன் எனவும் நாயினும் கடையனாகவும் ஆதர வற்ற நாயைப் போன்றவன் எனவும் நாயாகப் பிறந் தவனைப் பாடச்செய்தவன் இறைவன் எனவும் தான் பெற்றது நாய் பெற்ற செல்வமெனவும் தம்மை நாயா கப் பாவித்து 50க்கும் மேற்பட்ட இடங்களில் பேசி யுள்ளார். இப்பதிவு திருவாசகத்தில் பிறப்புப் பற்றிய பதிவுகளுக்கு அடுத்ததாக அதிக அளவில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாணிக்கவாசகர் மட்டுமன்றிப் பல்வேறு சைவ சம யக் குரவர்களும் பிறப்புக் குறித்து மீண்டும் மீண்டும் பேசியிருப்பதன் காரணம் சிவத்தை அடைவதன் பொருட்டே ஆகும். இங்குச் சிவத்தை அடைவதென்பது என்றும் பிறவாத நிலையை அடைவது மட்டுமே ஆகும். இது குறித்துச் சைவ சமயக் கலைக்களஞ்சியம்,

***மாறிமாறி வரும் பிறப்பு இறப்பு இரண்டும் அற்ற இடமே சிவநிலையாகும். இதை அடைவதற்கான வழி மரணத்தை வெல்வதாகும். பிறப்பை அறுக்கும் வழியைக் காட்டுபவர் சிவபெருமானே. இதனால் அவர் இறவாதீசர் என்னும் பிறவாதீசர் என்றும் அழைக்கப்படுகின்றார். காஞ்சிபுரத் தில் இறவாதீசுவரம், பிறவாதீசுவரம் என்ற இரண்டு சிவாலயங்கள் எதிரெதிராக அமைந்துள்ளன.***[1]

எனப்பதிவுசெய்திருப்பதன்வழி, பிறவாமையை வேண் டுவதன் காரணத்தை அறியமுடிகின்றது. மேலும் இப் பின்னணியிலேயே காரைக்காலம்மையாரும் பிறப்புப் பற்றிய வேண்டுதலை முன்வைக்கின்றார். இதன்படி, பேய் வடிவுடன் திருக்கயிலாயம் சென்று இறைவ னைக் கண்டு வணங்கிய அவர், சிவபெருமானிடத்து,

***பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்***
***மறவாமை வேண்டும்...(காரை.அம்.புரா.61:23)*** எனப் பிறவாத நிலையையே முதல் வேண்டுகோளாக வைப்பதைக் காணமுடிகின்றது. மாறாக, மீண்டும் பிறப் பதாக இருந்தால் மட்டுமே இறைவனை என்றும் மறவாத நிலையை வேண்டுகின்றார். மேலும், இறை வனின் அருளைப் பெறும் பயணத்தில் அதனைப் பெற்றவர்கள் அனைவருக்கும் பிறப்பு என்பது தொடர்ந்துகொண்டே இருக்கும் என்பதால் அதனை மறுக்கவே செய்துள்ளனர். இப்பின்னணியில் அண்டசம் (முட்டையிலிருந்து தோன்றுவன), சுவேதசம் (வியர் வையிலிருந்து தோன்றுவன), உற்பிச்சம் (வித்திலி ருந்து தோன்றுவன), சராயுசம் (கருப்பையிலிருந்து தோன்றுவன)[2] எனும் நால்வகைப் பிறப்பு முறைகளில் நான்காவதான சராயுசம் வகைப் பிறப்பே மனிதப் பிறவியுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது. இவை மட்டுமன்றி யோனி பேதமானது எண்பத்து நான்கு நூறாயிரம் வகையான பிறப்புகளை உடையது எனவும் அவற்றுள் மக்கள் மட்டும் ஒன்பது நூறாயிரம் பிறப்பு களாகப் பிறப்பவர்கள் எனவும் சைவ சமயக் கலைக் களஞ்சியம் சுட்டுகிறது.[3] இப்பின்னணியில் காண்கை யில் சைவ சமயத்தைப் பொறுத்தவரையில் பிறப்பது என்பது ஒருபோதும் இடையறாமல் தொடர்ந்து நிக ழும் ஒன்றாக நிலைப்படுத்தப்பட்டு இருந்துள்ளது. மேலும் இதன் காரணமாகவே, பல்வேறு பிறப்பு களால் ஏற்படப்போகும் அல்லலைத் தவிர்க்கும் பொருட்டுப் பிறப்பற்ற நிலையை வேண்டியுள்ளமை யையும் அறியமுடிகின்றது.

**நிறைவாக**

பிறவித் துன்பங்களிலிருந்து விடுபட வேண்டிப் பிறப்பை அறுக்கும்படி மாணிக்கவாசகர் பலவாறு வேண்டியிருப்பினும் அவருடைய காலத்திற்குப் பின்பு அந்நிலை சற்று மாறியிருந்ததையும் காணமுடிகின்றது. இதனைப் பிறவிக்கடலைக் கடக்க முடியாமல் மானிட ராய்ப் பிறந்து உழன்ற எனக்குத் திருவாசகத் தேனா னது, அக்கடலைக் கடந்து கரைசேர ஒரு தெப்பமாகக் கிடைத்தது எனும் ஒரு பழம்பாடல்[4] தெளிவாகச் சுட்டு கின்றது. அவ்வகையில் பிறவா நிலை வேண்டிப் பாடிய மாணிக்கவாசகரின் பாடல்கள், பிறந்தோர் படும் இன்னல்களிலிருந்து காக்கும் அரணாகவும் அமைந் துள்ளமை குறிப்பிடத் தக்கது.

**அடிக்குறிப்புகள்**

1. சைவ சமயக் கலைக்களஞ்சியம், தொகுதி 1, ப.215
2. மேலது, தொகுதி 8, ப.552
3. மேலது, தொகுதி 8, ப.553
4. **கற்பாந்த காலங் கடவாக் கடல்கடக்கத்**
**தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே - அப்பன்**
**உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலைத்**
**திருவா சகம்என்னும் தேன்** - மேலது, தொகுதி 3, ப.304

**துணைநூற்பட்டியல்**

1. மாணிக்கவாசக சுவாமிகள், திருவாசகம், சிவ.ஆ. பக்தவத் சலம், நல்லூர்பேட்டை, குடியாத்தம், வேலூர், 2009.

2. சேக்கிழார் சுவாமிகள், பெரியபுராணம், சிவ. ஆ. பக்த வத்சலம், நல்லூர்பேட்டை, குடியாத்தம், வேலூர், 2009.

3. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், சிவனடியார் திருக்கூட்ட அறக்கட்டளை, காரைக்கால் 609 602, 2020

4. சைவ சமயக் கலைக்களஞ்சியம், தொகுதி 1, 3, 8, தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை, சென்னை, 2013.

6. வெள்ளைவாரணன், பன்னிரு திருமுறை வரலாறு, இரண் டாம் தொகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1997.

**If your ship doesn't come in, swim out to it!**

**- Jonathan Winters**


ISSN 2320-4842



# பேராசிரியர் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் (1893–1963)

**முனைவர் வெ. இராம்ராஜ்**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி சென்னை**

**முன்னுரை**



ஒரு மொழியில் தோன்றியுள்ள இலக்கணங்களையும் இலக்கியங்களையும் படித்து அறிந்துகொள்வது ஒருவகை. அதை ஆராய்ந்து அதன் பின்னணிகளைத் தகுந்த சான்றுகளுடன் விளக்குவது மற்றொருவகை.

தமிழ்ப் பேராசிரியர் **வே. வேங்கடராஜுலு ரெட்டியார் (**இனி வேங்கடராஜுலு எனக் குறிப்பிடப்பெறுவார்**)** ஆராய்ந்து அறிந்து விளக்கும் வகையினர். அவரது தமிழ்ப் பணி தமிழ் இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரது ஆய்வு அணுகுமுறை ஆய்வாளர்களுக்கு இலக்கண, இலக்கியங்களைப் புதிய கோணத்தில் காணும் முறையை அறிமுகப்படுத்தியது. அவரின் வாழ்வையும் அவர் ஆற்றிய பெருமைமிகு பணிகளையும் அறிந்துகொள்வது ஆராய்ச்சியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கக் கூடியதாகும். ஊக்கத்தோடு செயல்பட விரும்புவோர்க்கு வேங்கடராஜுலு வழிகாட்டியாக விளங்குகிறார் என்பதைக் காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**இளமையும் கல்வியும்**

வேங்கடராஜுலு திருநெல்வேலி மாவட்டம் வானமாமலையை அடுத்த சமூகரங்கபுரம் என்னும் சிற்றூரில் 1893 ஜுன் 25ஆம் நாள் இலட்சுமி அம்மாள், வேங்கடாசல ரெட்டியார் ஆகியோர்க்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். திருப்பதி பெருமாள் மீதுள்ள பக்தியின் காரணமாக இவருக்கு வேங்கடராஜுலு என்ற பெயர் சூட்டப்பெற்றது.

அவருடைய அம்மான் கிருஷ்ணசாமி ரெட்டியார் தமிழிலக்கியம், மருத்துவம், ஆன்மிகம் ஆகிய துறை களில் மிகுபுலமையுடன் திகழ்ந்தார். அவ்வூரில் தொடக்கப்பள்ளியை நிறுவி நடத்திவந்தார். வேங்கட ராஜுலு அவரிடம் தொடக்கக் கல்வி பயின்றார். பின் திருவரங்கத்தில் இருந்த 'இராமானுஜ தர்சந வித்தியா சாலை'யில் தமிழ் இலக்கண இலக்கியங்கள், சமய நூல்கள் ஆகியவற்றைக் கற்றார். மணியாச்சி நகரை அடுத்த ஒட்டநத்தம் என்னும் ஊரில் ஜெகவீரபாண்டியக் கவிராயரிடம் 'நன்னூல்' பாடம் கேட்டார். 1916ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய 'பண்டிதர்' தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

**ஆற்றிய பணிகள்**

வேங்கடராஜுலு தாம் பயின்ற தொடக்கப் பள்ளியில் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர்த் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் ஆறு ஆண்டுகள் தமிழாசிரியராய் இருந்தார். 1923-1924இல் சிவகாசி நாடார் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராய் விளங்கினார்.

1924ஆம் ஆண்டு சிதம்பரத்தில் இருந்த 'பண்டிதர் போதனாமுறைக் கல்லூரி'யில் ஆசிரியப் பயிற்சி பெற் றார். சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் தலைவராயிருந்த தமிழ்த் தாத்தா மகாமகோபாத்யாயா டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் வேங்கடராஜுலுவின் புலமைச் சிறப்பை உணர்ந்து, அக்கல்லூரி யின் தமிழ்ப் பேராசிரியருள் ஒருவராக அமர்த்திக்கொண்டார்.

1927இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேரகராதி வெளியீட்டுக் குழுவினருள் ஒருவராக நியமிக் கப்பெற்றார். தொடர்ந்து இருபது ஆண்டுகள் சென்னைப் பல்கலைக்கழகக் கீழை மொழிகள் ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும் ஆராய்ச்சியாளராகவும் சிறக்கப் பணியாற்றினார்.

**பன்மொழிப் புலமை**

வேங்கடராஜுலு தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, பிராகிருதம், ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். 'பலவற்றை ஒப்பிட்டுச் சரியானதை இனங்காணுவதே சிறந்த ஆய்வாகும்'. இவருடைய பன்மொழிப் புலமை இவரின் ஆய்வுகள் சிறப்பாக அமையத் துணைபுரிந்தது.

'தென்மொழிகள்' எனும் இவருடைய நூல் திராவிட மொழிகளில் இவருக்கிருந்த ஆழ்ந்த புலமையை விளக்குவதோடு பன்மொழிப் புலமையின் தேவையை யும் ஆய்வாளர்களுக்கு உணர்த்துகிறது.

***தமிழ் மொழியில் சொற்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதனைக் கண்டறிய விரும்புபவர்கள் அதனோடு தொடர்புமிக்க மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு முதலிய மொழிகளை வேண்டுமளவு நோக்குதல் இன்றி யமையாததாகும்***[1] என்று வேங்கடராஜூலு கூறியிருப் பது கருதத்தக்கது.

பன்மொழிப்புலமையால் ஆங்கிலேயர் ஆட்சியில் பச்சையப்ப முதலியார் துவிபாஷியாகப் பணியாற்றிப் பல இலட்சம் ரூபாய் ஈட்டினார்.[2] அவருக்குப்பிறகு அவருடையச் சொத்துக்கள் முழுவதும் ஸ்ரீநிவாசப் பிள்ளை முதலானவர்களால் **பச்சையப்பன் அறக் கட்டளை**யாக நிறுவப்பெற்று நிர்வகிக்கப்பெற்றுவருகி றது**…**பல்வேறு கல்வி நிறுவனங்கள் இவ்வறக்கட் டளையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. தமிழ்மொழி வளர்ச்சியில் இவ்வறக்கட்டளையின் பங்கு குறிப்பி டத்தக்கது. பன்மொழிப்புலமையின் முக்கியத்துவம் உணர்ந்து செயல்படவேண்டியதை இவ்வரலாறு உணர்த்துகிறது.

வேங்கடராஜூலு **சொற்பொருள்** என்ற கட்டுரையில் 'ஆகுபெயர்'[3] குறித்து கூறுமிடத்தில் பல்வேறு மொழி களில் ஆகுபெயர் குறித்துள்ள செய்திகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மேலும் **ஏவல் வினையமைப்பு**[4] என்ற கட்டுரையிலும் திராவிட மொழிகளை ஒப்பிட் டுள்ளார். இவை அவரின் பன்மொழிப் புலமைக்குச் சான்றுகளாகும்.

**இலக்கணப் புலமை**

பன்மொழிப் புலமைப் பெற விரும்புபவர்கள் இலக் கண அறிவு நிரம்பியவர்களாக இருக்க வேண்டும். மொழியியல் (Linguistics) அறிவு பெற விழைவோருக்கும் இலக்கணப் புலமை இன்றியமை யாததாகும். மொழிகளின் அமைப்பு முறைகளை அறிந்தால்தான் இத்துறையில் தொடர்ந்து சிறப்பான பங்களிப்பைச் செய்யமுடியும். **மயிலைத் தொல் காப்பியர்'**[5] என்று போற்றப்பெற்ற வேங்கடராஜூலு இவ்விலக்கண அறிவால் பன்மொழிப் புலமை பெற முடிந்திருக்கிறது.

தனக்கு இலக்கணத்தில் மிக்க ஆர்வம் உள்ளது[6] என்பதை அவரே பரணர் என்ற நூலின் முன்னுரை யில் தெரிவித்துள்ளார். அதற்குச் சான்றாகத் **தொல் காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி** என்ற நூல் திகழ் கிறது. 1944ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் இந்நூலை வெளியிட்டது. இந்நூலைப் பற்றி,

***சூத்திரங்கள் நேர்பொருளை அறிவதும், கன்னடம் முத லிய திராவிடமொழியின் இலக்கணங்கட்கும் தொல்காப் பிய விதிக்கும் உள்ள ஒற்றுமைகளை ஆராய்வதும், சில சொற்களின் தொன்னிலையையும் வரலாற்றையும் கண் டறிவதும் நோக்கமாகக் கொள்ளப்பெற்றுள்ளது'***[7]

என்று வேங்கடராஜூலு கூறியிருப்பது இலக்கணப் புலமைக்கும் பன்மொழிப்புலமைக்குமிடையே உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இதுவே இவர் **இக்காலத் தொல்காப்பியர், இலக்கணக்கடல்**[8] என்று பாராட்டப்பெற காரணமாயிருந்தது.

**இலக்கியப் புலமை**

இலக்கணம் அறிவோடு தொடர்புடையது. இலக்கியம் உணர்வோடு தொடர்புடையது. அறிவும் உணர்வும் இணைந்து செயல்படுவது அரிது. அது சிலருக்கு மட்டும் வாய்க்கப்பெறுவது. அவ்வரிசையில் வேங்கட ராஜூலு இடம்பெறுகிறார்.

சங்க இலக்கியத்தில் மிகுதியான பாடல்களைப் பாடிய கபிலர், வரலாற்றுச் செய்திகளை மிகுதியாகத் தம் படைப்புகளில் குறிப்பிட்டுள்ள பரணர் ஆகியோரின் வரலாறுகளை, ஆய்வு நெறிமுறைகளை வகுத்துக் கொடுக்கும் முதன்மையான வரலாற்று நூல்களாக ஆக்கிய பெருமை வேங்கடராஜூலுவுக்கு உண்டு.[9] தமிழ்ப் புலவர்களின் வரலாறுகளை எழுதுவதற்கான காரணத்தைக் கூறுமிடத்து,

***யான் தெலுங்குமொழியைப் பயின்ற காலத்தில், 'ஆந்திர கவுலசரித்திரமு'***(*ராவ்கஹதூர் கே. வீரேசலிங்கம் பந்துலு காரு எழுதியது*) ***என்னும் புலவர் வரலாற்று நூலைப் படித்தேன். அது, சதகம் என்னும் சிறுநூலொன்றனை மட்டுமே செய்த கவிகளொழிய, மற்றைப் புலவரனை வரது வரலாற்றையும் தெள்ளிதின் தெரிவிப்பது. அதனை யறிந்தபோது, 'இதுவேபோல், தமிழ் மொழியினும் பெரும் புலவர் வரலாறுகளை முறைப்பட எழுதி வெளி யிடுதல் நன்று' என்னும் எண்ணம் என் உள்ளத்தில் உண்டா யிற்று. பின்னர், கன்னட மொழியிலுள்ள 'கர்ணாடக கவிசரிதெ'*** (*ராவ்பஹதூர்ஆர். நரசிம்ம ஆசார்யா ரவர்கள், எம்.ஏ., எழுதியது*) ***என்னும் புத்தகத்தைப் படித்தபோது அவ்வெண்ணம் மிகுவதாயிற்று. அதன் பயனே, பரணர் என்னும் இவ்வாராய்ச்சி நூலாகும்'***[10]

என்று குறிப்பிடுகின்றார். புலவர்களின் வரலாறுகளை எழுத விரும்பிய வேங்கடராஜூலு வரலாற்றுக் குறிப்புகளைப் பாடலில் வைத்துப் பாடிய பரணரின் வரலாற்றை முதலில் எழுதியது குறிப்பிடத்தக்கது. இவ்விருவரின் வரலாறுகளையும் கூறும்போது, இவர் களுடைய ஊர், குலம், சமயம், காலம், வாழ்க்கை நிலை, அவர்கள் காலத்திய புலவர்கள், மன்னர்கள், அப்புலவர்களின் பிற படைப்புகள், அவை தொடர் பான தம் கருத்து, என்ற முறையில் நூலை அமைத்துள்ளார். இவையாவும் வேங்கடராஜூலுவின் இலக்கியப் புலமையைப் புலப்படுத்துவனவாகும்.

**சமய உணர்வு**

ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையைக் கொண்ட குழுக்கள் உலகம் முழுக்கக் காணப்பெறுகின்றன. கடவுள்கள் மாறினாலும் கடவுட் கொள்கைகள் இன்றுவரை

மாறவில்லை. இராமர், கிருஷ்ணர், புத்தர், இயேசு, முகம்மது நபி போன்றோர் பிறப்பதற்கு முன்னர் வேறு பெயர்களில் இருந்த கடவுளரை வழிபட்டு வந்தனர்.எனவே வழிபாட்டில் பொதுவான கொள்கை யும் எதை-யாரை வழிபடுவது என்பதில் வேறுபாடும் இருந்துவருவது தொடர்கதையாகும்.

அறிவும் உணர்வும் ஒருசேரப் பெற்ற பெரியோர்கள் உண்மைப்பொருள் என்பது ஒன்றுதான் என்பதை உணர்ந்து இவ்வேறுபாடுகளுக்கு இடந்தராமல் அனைத் தையும் இறைக் காட்சியாகவே கண்டனர். இலக்கண, இலக்கியங்களை அறிவாலும் உணர்வாலும் உய்த்து ணர்ந்த வேங்கடராஜுலுவும் இறைமையின் பொதுத் தன்மையை உணர்ந்து வாழ்ந்துள்ளார்.

1941ஆம் ஆண்டு சென்னையில் **ஸ்ரீவைஷ்ணவ மகா சங்க**த்தின் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் தலைமையேற்று நடத்தினார். **வீரசைவர் மாநாடு** ஒன்றில் கலந்துகொண்டு அனைவரும் வியக்கும் வண்ணம்உரையாற்றியுள்ளார்.[11] துறையூர் உயர்நிலைப் பள்ளி ஆண்டுவிழாவில் **'கம்பனில் புதுமை'** எனும் தலைப்பில் பேசியுள்ளார்.[12] சமண சமய நூல்களாகிய **ஸ்ரீபுராணம், மேருமந்தரர் புராணம் ஆகியவற்றைப்** பதிப்பித்துச் சில சமண நூல்களுக்கு உரை எழுதி யுள்ளார். துறையூர் உயர்நிலைப் பள்ளியில் **'சிந்தா மணி'** என்ற பொருள் பற்றிப் பேசியுள்ளார்.[13]

தமிழ்ப்பேரறிஞரான தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்,

*வேங்கடராஜுலு அவர்கள் சிறந்த வைணவரானாலும் பிற சமயங்களில் வெறுப்பின்றி 'உண்மையை அறிவதி லேயே நாட்டம்' உள்ளவர்*[14] எனக் கூறியிருப்பதி லிருந்து இவரின் சமயப் பொதுமை புலனாகும்.

## ஆய்வு நேர்மை

ஆய்வாளருக்கு வேண்டிய இன்றியமையாத தகுதி ஆய்வில் நேர்மை. ஆய்வாளர் தனக்குக் கிடைத் திருக்கும் சான்றுகளைக் கொண்டு உண்மையான வற்றை நிறுவ வேண்டும். ஆய்வு மற்றும் ஆய்வா ளரது நம்பகத்தன்மை இதை வைத்தே உறுதி செய் யப்பெறுகிறது. ஆய்வுக்குத் துணை செய்தவர்களை மறந்து/ மறைத்துவிட்டுத் தாம் கண்டுபிடித்ததுபோல் கூறுவது தவறாகும். ஒரு கருத்தை இரண்டாவது முறை கூறுவதற்கான காரணத்தைக் குறிப்பிடுவதும்[15] ஆய்வு நேர்மையின் பாற்பட்டதாகும். வேங்கட ராஜுலு தம்முடைய படைப்புகளின் முன்னுரையில் அப்படைப்பு உருவாவதற்குத் துணைபுரிந்த அத்தனை பேரையும் குறிப்பிட்டிருப்பது அவரின் பண்பைத் தெற்றென விளக்கக்கூடியதாகும்.[16]

## அறிஞர்களின் கருத்துகள்

**'கற்றாரை கற்றாரே காமுறுவர்'** என்பதற்கேற்ப வேங் கடராஜுலுவின் அறிவினையும், அருங்குணங்களை யும் அறிஞர் பலர் பாராட்டியுள்ளனர். அவை வருமாறு,

*திரு.வி.கலியாணசுந்தரம்:*

*'ரெட்டியாரைக் கடலகத்தில் அடிக்கடிப் பார்ப்பேன். பல துறை பற்றிப் பேசுவோம். தன்வினை-பிறவினை, செய் வினை-செயப்பாட்டுவினை பற்றி உரையாடுவோம். சிற் சிலபோது எங்கள் உரையாடல் சமயத்தில் திரும்பும், நாலாயிர வியாக்கியானங்களில் உள்ள சில மணிகளை ரெட்டியார் தூவுவர் அவை நிலவு பொழியும்'*[17]

*தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்,*

*'உண்மையை அறிவதிலேயே நாட்டம் உள்ளவர்'*[18]

*மு.வரதராசனார்,*

*'வேங்கடராஜுலு ரெட்டியார் வடமொழியும், திராவிட மொழிகள் நான்கும் கற்றறிந்தவர். அந்த மொழிகளின் இலக்கணங்களையும் சொல்லமைப்பையும் ஒப்பிடும் ஆராய்ச்சியில் தேர்ந்தவர். பழைய இலக்கண நடையில் பல கட்டுரைகளும் சில ஆராய்ச்சி நூல்களும் இயற் றினார். அவருடைய நூல்களில் புலமையின் ஆழம் புலப்படும்'*[19]

*சி. பாலசுப்பிரமணியம்,*

*'சிறந்த பல நூற்களைத் தமிழ் நல்லுலகிற்கு வழங்கிய செம்மல். சீரிய இலக்கணப் புலமைப் பெற்றிருந்த ரெட்டியார் அவர்கள் மொழியியற் கட்டுரைகள் பல எழுதிச் செந்தமிழ்த் தாய்க்கு அணி சேர்த்தார்கள். அவர்தம் நுண்மான் நுழைபுலம் அன்று வாழ்ந்திருந்த அறிஞர் பெருமக்களாற் பெரிதும் பாராட்டப்பெற்றது'*[20]

*தி.வே. கோபாலையர்,*

*'பழுத்த புலமையும் எதனையும் கூர்ந்து நோக்கும் நுண்ணறிவும், எடுத்த செயலை விருப்புவெறுப்பின்றிச் செய்து முடிக்கும் திறனும், தம்மை வேண்டி வந்தவர் எல்லோருக்கும் இன்முகத்தோடு ஐயங்களைப் போக்கி அவர்களை மகிழ்வோடு செல்லுமாறு விடுக்கும் அருள் திறனும் கொண்டவர்'*[21]

எனும் இக்குறிப்புகள் வேங்கடராஜுலுவின் சான்றாண் ன்மைக்கும் திறமைக்கும் எடுத்துகாட்டுகளாக விளங் குகின்றன.

## இதழதிபர்

வேங்கடராஜுலு வைணவப் பெரியோர்கள் பலரு டன் சேர்ந்து **வைணவ சங்கம்** ஒன்றினை நிறுவி **இராமானுஜம்** என்னும் ஏடு ஒன்றை வெளியிட்டுள் ளார்.

## மூலநூலாசிரியரின் கருத்தறியும் ஆவல்

வேங்கடராஜுலு மூலநூலாசிரியரின் கருத்தை அறி வதில்தான் ஆய்வின் வெற்றியுள்ளது என்பதை நன்கு உணர்திருந்தார். பரணர் என்ற நூலின் முன் னுரையில்,

*பழைய நூற்களிற் காணும் தவறான பாடங்களை நமது கருத்திற்கேற்பத் திருத்திவிடுதல் தகாது. அவற்றைப் பல பிரதிகளில் நோக்கி, பலமுறை யாராய்ந்து உண்மையான*

***பாடம் இஃது எனக் கண்டறிதலே அறிஞர் கடனாகும்***[22]

எனக் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார், **'இலக்கண ஆசிரியர்களின் உண்மைக் கருத்தை நன்கு அறிந்தவர்வே. வேங்கடராஜூலு ரெட்டியார்'**[23] என்று கூறுவதிலிருந்து மூலநூலாசிரின் கருத்தை அறிவதில் ஆர்வ மிக்கவராக இருந்ததோடல்லாமல் அதன்படிச் செயல்பட்டவர் என்பதும் தெரிகிறது.

### புரிந்துகொள்ளும் முறை

பழந்தமிழ் நூல்களை நாம் இப்போதுள்ள கோட்பாடுகளில் புகுத்திப் பார்ப்பதைப் புதிய ஆய்வு நோக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம். ஆனால் அவற்றைப் புரிந்துகொள்ளவேண்டிய முறை பற்றி வேங்கடராஜூலு கூறும்போது,

***ஒரு காலத்தில் உயர்வான வழக்கங்கள், மற்றொரு காலத்தில் இழிவானவையாகவும், ஒரு நாட்டில் சிறப்பான கொள்கைகள், மற்றொரு நாட்டில் இழிவான கொள்கைகளாகவும், ஒரு குலத்திற்குத் தகுதியான செயல்கள், மற்றொரு குலத்திற்கு இழிவான செயல்களாகவும் கொள்ளப்படுதல் இயல்பே. ஆகலின், பண்டைக் காலத்திற் சிறப்பான வழக்கங்களுட் சில, இக் காலத்தில் நமக்கு இழிவானவையாகத் தோன்றுதல் கூடும். ஆயினும் அக்காலத்து வழக்க ஒழுக்கங்கள் இவையென அறிந்துகொள்ளுதல் வேண்டற்பாலதேயாகும்***[24] என்கிறார். இம்முறைப்படிப் படித்து ஆய்வு செய்தோமானால் இப்போதுள்ள கோட்பாடுகளின்படி பழந்தமிழ் நூல்களைப் படித்து இடர்ப்படும் தன்மை மாற வாய்ப்புள்ளது.

### சொல்லகராதி-சொல்லடைவு-முன்னோடி

பரணர் **(1933)** நூலில் **'சொல்லகராதி'** ஒன்றை உருவாக்கி இணைத்துள்ளார். மேலும் பரணர் பாடல்களில் வருகின்ற சொற்களை **'அகராதி'** முறையில் தொகுத்துள்ளார். ஆனாலும் அப்பகுதியை நூலில் கொடுத்தால் பெரிதாகிவிடும் என்ற காரணத்தால் தவிர்த்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.[25] **'சங்க நூல்களில் சொல்லடைவு'** தோற்றத்திற்கு முன்னோடியாக வேங்கடராஜூலு விளங்கினார் என்பதற்கு இது சான்று.

### பேராசிரியர் வே. வேங்கடராஜூலு ரெட்டியாரின் நூல்கள்

பரணர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1933.

கபிலர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1936.

இலக்கணக் கட்டுரைகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1937.

ஸ்ரீபுராணம் (ப.ஆ), சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1943.

தொல்காப்பியம் எழுத்ததிகார ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1944.

தெலுங்கு மொழியும், ரெட்டி அரசர்களும், திருவிதாங்கூர் ரெட்டியார் ஐக்கிய சங்கம் (கொல்லம்) ஆறாவது ஆண்டு மலர், 1955.

தென்மொழிகள், எஸ். வாசன் கம்பெனி, சென்னை, 1960.

மேருமந்தரர் புராணம் (ப.ஆ), சென்னை மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ், 1933.

இளைஞர் தமிழ் இலக்கணம் 1, 2, 3 பாரங்களுக்கு உரியது, முதற் புத்தகம், சென்னை மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ், 1936.

இளைஞர் தமிழ் இலக்கணம் 4, 5, 6 பாரங்களுக்கு உரியது, இரண்டாம் புத்தகம், சென்னை மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ், 1937.

இளைஞர் தமிழ் இலக்கியம், எஸ்.வாசன் கம்பெனி, சென்னை, 1953.

நுண்பொருள் விளக்கம், புதுவை பி.என். இராஜமாணிக்கப் பிள்ளையவர்களின் பொருளுதவியுடன் வேங்கடராஜூலு ரெட்டியார் அவர்களே வெளியிட்ட கட்டுரைத் தொகுப்பு, 1962. இதில் **11 கட்டுரைகள்** அடங்கியுள்ளன. அவை:

1. இன்னான் ஏது ஈங்கு, சென்னைப் பல்கலைக்கழகப் பத்திரிகை.
2. சொற்பொருள், தெ.பொ. மீ. மணிவிழா மலர், 1961. பக்.339-354
3. பன்மை சுட்டிய பெயர், ஸ்ரீகோபாலகிருஷ்ணமாச்சாரியார் 60ஆம் ஆண்டுநிறைவுவிழா மலர்.
4. உயர்திணை உம்மைத் தொகை, ஞானசம்பந்தம்.
5. வியங்கோள் - சென்னைப் பல்கலைக்கழகப் பத்திரிகை, 4 -2, 1946-47.
6. ஏவல் வினையமைப்பு, டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா நினைவுமலர், 1961.பக்.123-128.
7. உந்தீற்றுச்சொல், பரணர், சென்னைப் பல்கலைக்கழகம்.
8. அசைச் சொல், பல தொகுப்பு.
9. 'தெவு' வா? 'தேவு' வா? - சென்னைப் பல்கலைக்கழகப் பத்திரிகை, 5-2.
10. நக்கீரரா? நற்கீரரா?, தமிழ்ப் பொழில்.
11. திராவிட மொழிகளில் இலக்கண நியதி, சென்னைப் பல்கலைக்கழகப் பத்திரிகை.

தென்மொழிக் கட்டுரை-வேங்கடராஜூலு ரெட்டியார் அவர்களே வெளியிட்ட கட்டுரைத் தொகுப்பு. இதில் **12 கட்டுரைகள்** உள்ளன.

1. பழந்தமிழ் மகளிரின் பண்பு, காவேரி மலர்.
2. பழைய நாகரிகம், மகளிர் செயல், பத்மஜோதி.
3. பண்டைத் தமிழர் வாணிகம், பத்மஜோதி.
4. வெண்ணெய் கள்ளன், காவேரி மலர், 1960.
5. கம்பர் புலமை மாட்சி, தமிழ்ப் பொழில்.
6. இன்பக் கலைகள்.
7. கும்பகருணன்.
8. காப்பிய வழிகாட்டி, சிந்தாமணியின் சொற்பொழிவு, நினைவுமலர்.
9. தேவர் உவமையும் வழக்காறும், நல்லறம்.
10. இயற்கைக் காட்சி.
11. புத்திரமித்திரன், மேருநத்தரர்.
12. குறிப்பும் சுவையும், பத்மஜோதி

(இந்நூற்பிரதி ஒன்று பூதூர் திரு.வேங்கடசாமி ரெட்டியார் அவர்களிடம் உள்ளது)

ISSN 2320-4842

**ஆராய்ச்சிக் கட்டுரைகள்**

தமிழ்ச் சொல்லமைவு

திராவிட மொழியின் மூவிடப் பெயர்

ஐகார ஔகாரம், The Journal of Oriental Research of the University of Madras, Vol.1, Parts 1&2.

நன்னூலுரையும் தொல்காப்பியரும், கோபாலகிருஷ்ணமாச் சாரியார் அறுபதாண்டுநிறைவுவிழாமாலை, **சுவையியல்** (ரஸ ஸ்வரூபம்)

(இலங்கையில் உள்ள ஒரு சங்க மலருக்கு எழுதியதாகவும் அதை வேங்கடராஜூலு சொல்ல தாமே கைப்பட எழுதியதாக வும்ந. சுப்புரெட்டியார் குறிப்பிட்டுள்ளார்- மலரும் நினைவு கள், ந. சுப்புரெட்டியார், ப.43.

இறைச்சிப் பொருள், கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளிவிழா மலர், மலரும் நினைவுகள், ந. சுப்புரெட்டியார், ப.43.

**நிறைவுரை**

ஆய்வுலகில் பல்வேறு அறிஞர்கள் இன்றுவரை பேசப்பெற்று வருகின்றனர். அவர்களில் வேங்கட ராஜூலுவைப் போன்றவர்கள் உண்மைப்பொருளைக் காண்பதில் மட்டுமே நிறைவெய்தி வந்துள்ளனர். தமது தனிப்பட்ட வாழ்க்கை தாம் மேற்கொள்ளும் ஆய்வைப் பாதிக்காதபடி வாழ்ந்துகாட்டியுள்ளனர்.

வேங்கடராஜூலு தம் பெற்றோரைச் சிறுவயதிலேயே இழந்ததுடன் தம் குடும்பத்தைக் காத்துவந்த அண்ண னையும் இழந்தார். திருமணம் செய்துகொள்ளாமல் தம் அண்ணன் குடும்பத்தின் வளர்ச்சிக்காகவே தாம் ஈட்டிய பொருளனைத்தையும் வழங்கி வாழ்ந்தார். தன் அண்ணன் மகனும் இறந்தால் பேரப்பிள்ளை களைப் பார்த்துக்கொள்ளும் கடமையும் இவருடைய தானது. தம் குடும்பத்தில் நிகழ்ந்த அடுத்தடுத்த இழப்புகளால் தளராமல், தனக்குள்ள ஆஸ்துமா (மலரும் நினைவுகள், ந. சுப்புரெட்டியார், ப.39) நோயையும் தாங்கிக்கொண்டு, தொடர்ந்து இவ்வளவு ஆய்வு நூல்களையும், ஆய்வுக்கட்டுரைகளையும் உருவாக்கியிருக்கும் திறம் வியப்பிற்குரியதாகும்.

**பேராசிரியர் வே. வேங்கடராஜூலு-சில சிந்தனைகள்**

பல மொழிகள் அறிந்துள்ளதால் சில கட்டுரைகளில் மிகுதியாகப் பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதி யுள்ளார். (கட்டுரை - சொற்பொருள்)

ஆய்வு முடிவுகள் சான்றுகளோடு உண்மைகளைக் கூறுவனவாய் உள. பன்மொழிப் புலமை ஆய்வை வளப்படுத்தும் என்பதற்கு அவர் சான்றாவார்.

ஆய்வுக்கட்டுரைகளிலும் முன்னோடி ஆய்வுகளை யும், மேலாய்வுக் களங்களையும் குறிப்பிடும் பண்பை அறிய முடிகிறது. 'பரணர்' நூல் முன்னுரை யில் மேலும் பல்வேறு புலவர்களின் வரலாறுகளை எழுத வேண்டும் என்கிறார் வேங்கடராஜூலு.

ஆய்வுக் கட்டுரைகளில் தேவையானதை மட்டும் விளக்கி அதனோடு தொடர்புடையதை ஒருவாறுகூறி அதை வேறொரு இடத்தில் விளக்குவதாகக் கூறும் பண்பு காணப்பெறுகிறது.

ந. சுப்புரெட்டியார் அறிவியல் பயின்ற மாணவர். வேங்கடராஜூலுவின் தொடர்பால் தமிழ் பயின் றுள்ளார். (மலரும் நினைவுகள், ந. சுப்புரெட்டியார், ப.35) அக்கால மாணவர்கள் பலர் ஆசிரியர்களின் தனித்துவத்தால் ஈர்க்கப்பெற்று துறைமாறி கல்வி கற் றுள்ளனர் என்பதை இது காட்டுகிறது. மு.வ. வின் மாணவர்களில் சிலரும் இத்தன்மையர்தாம்.

ஆசிரியர்கள் வீட்டில் மாணவர்கள் தங்கிப் படிக்கும் வழக்கம் இருந்துள்ளது. (மலரும் நினைவுகள், ந. சுப்புரெட்டியார், ப.37)

வயதான காலத்தில் தன் அண்ணன் பிள்ளைகளால் கவனிக்காமல் விடப்பட்டிருக்கிறார். செல்வமிருந்தால் என்னைக் கவனிப்பார்களோ என்னவோ? என மனம் வருந்தியுள்ளார். அவர் இறக்கும்போது வங்கிக் கணக் கில் ரூ. 26 இருந்தது. ஆகவே அறிஞர் பெருமக்கள் நல்லவர்களாக, ஆய்வாளர்களாக இருப்பது ஒருபுற மிருந்தாலும் வல்லவர்களாக விளங்க வேண்டும். பொருளாதார ரீதியாக நிறைவுடன் வாழ வேண்டும் என்பதற்கு வேங்கடராஜூலுவின் வாழ்வு ஒரு பாடம்.

மு.வரதராசனார் வேங்கடராஜூலுவின் இறுதிச் சடங் கில் கலந்துகொண்டு சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சார்பாக மலர்மாலை சூட்டினார். (மலரும் நினைவுகள், ந. சுப்புரெட்டியார், ப.48).

**அடிக்குறிப்புகள்**

1. வேங்கடராஜூலு, வே. தமிழ்ச் சொல்லமைவு, ப.8.
2. வரதராசனார், மு, பச்சையப்பர், ப. 96, 97.
3. சொற்பொருள், தெ.பொ.மீ. மணிவிழா மலர், 1961. ப.353.
4. டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா நினைவு மலர், 1961.ப. 325-327.
5. சுப்பு ரெட்டியார், ந., மலரும்நினைவுகள், ப.34.
6. வேங்கடராஜூலு, வே. பரணர், முன்னுரை ப. XIII.
7. வேங்கடராஜூலு, வே.தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி முன்னுரை ப. IV.
8. இராமர் இளங்கோ. ச.சு, பரணர், அணிந்துரை.
9. பட்டம்மாள், பா, வேங்கடராஜூலுரெட்டியாரின்தமிழ்ப்பணி ப.17.
10. வேங்கடராஜூலு, வே. பரணர், முன்னுரை ப. XII.
11. பட்டம்மாள். பா. வேங்கடராஜூலு ரெட்டியாரின் தமிழ்ப் பணி ப.8.
12. சுப்புரெட்டியார், ந. மலரும் நினைவுகள், ந. ப.41.
13. சுப்புரெட்டியார், ந. மலரும் நினைவுகள், ந. ப.42.
14. பட்டம்மாள். பா. வேங்கடராஜூலு ரெட்டியாரின் தமிழ்ப் பணி ப.17.
15. வேங்கடராஜூலு, வே. பரணர், முன்னுரை ப.XVI.
16. வேங்கடராஜூலு, வே. பரணர், முன்னுரை ப. XIX.
17. கலியாணசுந்தரம், திரு.வி. வாழ்க்கைக் குறிப்புகள் ப. 177.

**தொடர்ச்சி: பக். 25**

ISSN 2320-4842



# தேவார மூவர் நிகழ்த்திய அற்புதங்கள்

**வெ. கலைச்செல்வி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
(பதிவு எண்:29563/Ph.D.K8/Tamil/Part Time/April2018/Confirm/Dt:25.01.2021)
ஆய்வு நெறியாளர்: **முனைவர் இரா. அருள்மொழி**
இணைப் பேராசிரியர், தமிழ்த் துறை
ஸ்ரீ–ல–ஸ்ரீகாசிவாசி சுவாமிநாதசுவாமிகள் கலைக் கல்லூரி, திருப்பனைந்தாள்
(இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)

**முன்னுரை**

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். தமிழகத்தில் சைவமும் தமிழும் தாழ்ந்து சமணமும் பௌத்தமும் மேலோங்கியிருந்த காலகட்டம் அது. சுந்தரர் ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். சிறுதெய்வவழிபாட்டுச் சடங்குகளில் அடைய முடியாத முத்திப் பேற்றினை, சிவபெருமானைச் செந்தமிழ்ப் பாடல்கள் பாடி வழிபடுதல் மூலமே பெற முடியும் என்பதனைத் தத்தமது சொல்லாலும் செயலாலும் காட்டியவர்கள் இம்மூவர் பெருமக்கள். அவ்வகையில் அவர்களது வரலாற்றில் அமைந்துள்ள பண்பாட்டுக் கூறுகள் குறித்து ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**உயிரின் உண்மைத்தன்மை**

பல இடங்களில் ஓடிவருகின்ற நதியின் குறிக்கோளானது கடலைச் சென்றடைய வேண்டும் என்பதே ஆகும். அதுபோல, பல பிறவிகளைக் கடந்து வருகின்ற உயிரின் குறிக்கோளானது இறைவனைச் சரண்புக வேண்டும், அவனுடன் இரண்டறக் கலக்க வேண்டும் என்பதே ஆகும். இதனையே உபநிடதங்களும் தெளிவாக்குகின்றன.

**உயிர்களிடத்தில் கருணை காட்டிய செயல்கள்**

கருணை என்பது உலகிலுள்ள எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டுவதும் ,அவை துன்பப்படும்போது இரக்கம் கொள்வதுமே ஆகும். இவ்வகையில் மூவரால் நிகழ்த்திக் காட்டப்பட்ட அனைத்து அற்புதங்களுமே கருணையின் பொருட்டு நிகழ்த்தப்பட்டவையே ஆகும்.

**திருஞானசம்பந்தரின் அற்புதங்கள்**

**கொல்லி மழவனது மகளின் முயலகன் நோய் தீர்த்தல்**

மழ நாட்டை ஆண்டுவந்த கொல்லி மழவனது மகளை முயலகன் எனும் கொடிய நோய் பற்றியது. மருந்துகள் யாவும் பயனற்றுப் போயின. இதனால் மன்னன் மிகவும் வருந்தியிருந்த நேரத்தில் தளத்திற்கு வருகை தந்த திருஞானசம்பந்தர் செய்தியறிந்து,

***மணிவளர் கண்டரோ மங்கையை வாட***
***மயல்செய்வ தோஇவர் மாண்பே*** (திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம், முதல்பகுதி, பக். 535) எனும் திருப்பதிகம் பாடிப் பெண்ணின் பிணியைத் தீர்த்தார்.

**பனிநோய் தீர்த்தது**

திருஞானசம்பந்தர் கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு) வந்தபோது பனிக்காலம் வந்தது. இதனால் சிவக்கன்றுடன் வந்த அடியார்கள் அனைவரும் நலிவுற்றுக் குளிர்சுரம் கொண்டனர். இதனைக் கண்ட காழியார்,

***அவ்வினைக்கு இவ்வினை யாம்என்று சொல்லும் அஃதறிவீர்***
***உய்வினை நாடாதுஇருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே*** (திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம், முதல்பகுதி, பக்- 567) எனத் தொடங்கும் பிணி தீர்க்கும் பைந்தமிழ்ப் பதிகத்தைப் பாடினார். அடியார் பெருமக்கள் பிறரும் நலிவு நீங்கி நலம் பெற்றனர்.

**வணிகனின் விடத்தைத் தீர்த்தருளுதல்**

வணிகப்பெண்ணொருத்தி தன்னை மணக்க இருந்தவனுடன் திருமருகல் தலத்தில் தங்கியிருந்தபொழுது அவள் மணக்க இருந்த ஆடவன் பாம்பு தீண்டி இறந்தான். இதனால் அவ் அபலைப்பெண் கண்ணீர் சிந்தி அழுது

புலம்பிட, செய்தியறிந்த ஞானசம்பந்தர்,

***சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்***
***விடையா யெனுமால் வெருவா விழுமால்***
***மடையார் குவளை மலரும் மருகல்***
***உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே*** (திருஞான சம்பந்தர் சுவாமிகள் தேவாரம், இரண்டாம் பகுதி, பக். 236) எனும் திருப்பதிகம் பாடி வணிகனின் விடத் தைத் தீர்த்தருளினார்.

### திருமயிலையில் எலும்பைப் பெண்ணாக்கியது

சிவநேசர்என்றவணிகர்குலஅடியாரின்மகளாகியபூம்பா வைஎனும்பெண்அரவுதீண்டிஇறக்கஅடியார்தம்மகளை த்தகனம்செய்துஎலும்பினையும்சாம்பலையும்ஒருபா னையில்சேகரித்துவைத்துசம்பந்தப்பெருமான்திருமயி லைக்குஎழுந்தருளியபோதுஅவர்பால்தம்மகள்பற்றிய செய்தியைக்கூறினார் . உடனேதிருஞானசம்பந்தர்

***மட்டிட்ட புன்னை யங்கானல்ம டமயிலைக்***
***கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்***
***ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு***
***அட்டிட்டல் காணாதே போதியோப ூம்பாவாய்***
(திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம், மூன்றாம் பகுதி, பக். 372) எனும் திருப்பதிகம் பாடி அனை வரும் வியக்கும்படி மாண்ட பூம்பாவையை உயிரு டன் வரச்செய்தார்

### திருநாவுக்கரசர் பிள்ளையின் விடம் நீங்கச்செய்தது

நாவரசர் திருப்பழனம் இறைவனைப் பணிந்து திருப் பதிகம் பாடித் திருப்பழனம் அருகிலுள்ள திங்களூரை அடைந்தார். அங்கு அப்பூதியடிகளைக் கண்டு உரை யாடி மகிழ்ந்து உண்ண இசைந்திட இலை கொய்யச் சென்ற அப்பூதியாரின் மகன் மூத்த திருநாவுக்கரசை அரவு தீண்டியது. இதனை அறிந்த நாவுக்கரசர்,

***ஒன்று கொலாம் அவர்சிந்தை யுயர்வரை***
***ஒன்று கொலாம் உயரும் மதிசூடுவர்***
***ஒன்று கொலாம் இடுவெண்ட லைகையது***
***ஒன்று கொலாம் அவர்ஊர் வதுதானே*** (திருநாவுக் கரசர் தேவாரம், முதல்பகுதி, பக். 543) எனும் திருப் பதிகம் பாட நஞ்சு நீங்கிப் பிள்ளை பிழைத்து எழுந் தான்.

### சுந்தரர் முதலை யுண்ட பாலகனை மீட்டது

ஒத்த வயதுடைய ஏழைப் பாலகர் இருவர் நீராடச் சென்றபோதுஒருவனை ஏரியிலிருந்த முதலை விழுங் கியது. பிழைத்த சிறுவனுக்கு உபநயனம் நடைபெற் றது. முதலை விழுங்கிய சிறுவனின் பெற்றோர் தம் மகனின் நினைவால் அழுது துடித்தனர். இதனைக் கேட்டறிந்தவன் தொண்டர் சிறுவனை விழுங்கிய முதலை வாழும் ஏரிக்குச் சென்று ‘பண்டுபாலகனை விழுங்கிய முதலை இன்று உயிருடன் அவனைத் தந்தருள வேண்டும் என இறைவனிடம் முறையிட்டு

***எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே***
***உற்றாய் என்றுஉன்னையே உள்குகின்றேன் உணர்ந்து உள்ளத்தால்***
***புற்றாடு ஆடரவா புக்கொளியூர் அவிநாசியே***
***பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே***(சுந்தரர் தேவாரம், பக். 479) எனும் பதிகம் பாடத் தொடங் கினார்.

***உரைப்பார் உரைஉகுந்து உள்கவல்லார் தங்கள் உச்சியாய்***
------------ ------------ ------------ ------------- ---------
---------- -------- --------- --------
***கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே*** (சுந்தரர் தேவாரம், பக். 480) எனும் நான்காம் திருப்பாடல் பாடும்பொழுது கூற்றுவன் ஏரியி லிருந்த முதலையின் வயிற்றினுள் பாலகன் உடம்பைச் சென்ற ஆண்டுகளில் வளர்ச்சியுடையதாகச் செய்து புகுத்தினான். முதலையும் கரை வந்து தான் முன் விழுங்கிய பாலகனை இந்நாள் வளர்ச்சியில் உமிழ்ந் தது. மகனைக் கண்ட பெற்றோர் பெருமகிழ்வுற்றுக் கட்டித் தழுவினர்.

மேற்குறித்த பனுவல்களில் பெரும்பாலானவை சென்ற உயிரை மீட்டுக் கொடுத்த வகையிலேயே அமைந் துள்ளன. இவ்விடத்தில் நம் அனைவருக்குமே ஓர் ஐயம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இறப்பு என்பது இயற்கையின்பாற்பட்டது. ஆனால் கருணை என்னும் பெயரில் இறப்பினை வென்று, சென்ற உயிர்களை மீட்டுத் தந்த அற்புதங்கள் சரியானவையா? இவற்றுக் கான தீர்வினையும் இங்கு நாம் காண வேண்டியது அவசியம்.

அருளாளர்கள் அற்புதம் செய்து மீட்டுக் கொடுத்த அனைவருமே சிவனின் பொருட்டுத் தொண்டு செய்ய எண்ணியவர்கள். சிவபரம்பொருளின் பெருமை யினைப் பறைசாற்றி உலக மக்களை உய்வு பெற வைப்பதற்காக அவதாரம் செய்தவர்கள். அவ்வாறு இருக்கையில் சிவத்தொண்டு செய்ய எண்ணிய அவர் களை அவர்கள் விட்டுவிடுவார்களா என்ன, சிவபெரு மானின் அருளினை உலகிற்கு எடுத்துக் காட்டவும் தமிழ்மொழியின் ஆற்றலை அனைவரும் அறிந்து கொள்ளவும் அருளாளர்களால் செய்யப்பட்டவையே இவ் அற்புதங்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

### துணைநூற்பட்டியல்


1. திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம், புலவர் பி.ரா. நடராசன் (உ.ஆ.), பகுதிகள் 1, 2, 3, உமா பதிப்பகம், சென்னை, 2015.
2. திருநாவுக்கரசர் சுவாமிகள் தேவாரம், புலவர் பி.ரா. நடராசன் (உ.ஆ.), முதல் பகுதி, உமா பதிப்பகம், சென்னை, 2015.
3. சுந்தரர் தேவாரம், புலவர் பி.ரா. நடராசன் (உ.ஆ.), முதல் பகுதி, உமா பதிப்பகம், சென்னை, 2015.


**Life is what happens to us while we are making other plans.**
**— Allen Saunders**

ISSN 2320-4842



# சங்கத் தமிழ்ப் பெண்களின் ஆடைப் பயன்பாடு

**முனைவர் மூ. சத்தியா**
**கௌரவ விரிவுரையாளர், தமிழ்த் துறை, அறிஞர் அண்ணா அரசுக் கலைக்கல்லூரி செய்யாறு**

தொடக்கக் காலத்தில் மக்கள் நாகரிகமற்றவர்களாக ஆடையின்றித் திரிந்து பின்னர் நாகரிகம் பெற்ற நிலையில் மானவுணர்வுக்கு ஆட்பட்டும், தங்களை அழகுபடுத்திக்கொள்ள விரும்பியும் உடலை ஆடைகளால் மறைக்கத் தொடங்கினர். தழை, தோல், நார் முதலிய பொருள்களால் ஆடைகளைத் தயாரித்து உடுத்தி, பல்வேறு படிநிலை வளர்ச்சிக்குப் பின் பருத்தி, பட்டு ஆகியனவற்றால் உருவாக்கப்பட்ட ஆடைகளை அணிந்தமை அவர்களின் நாகரிக முன்னேற்ற நிலையைக் காட்டுகின்றன.

மக்கள் பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு ஆடைகளை அணிந்துள்ளனர். இதைப் பற்றிக் கு. பகவதி, ***1. மானவுணர்வுக்குத் துணையாதல் 2. அழகினை மிகுவித்தல் 3. தட்டவெப்ப நிலையினின்றும் பாதுகாத்தல் 4. தன் தகுதியியம்பல் 5. உடுத்தவர் தகுதியியம்பல் 6. கலையுணர்வு எடுத்துக்காட்டல் போன்ற பல்வேறு பயன்களைத் தன்னில் வெளிப்படுத்தி நிற்கும் உடை, நாட்டின் தட்பவெப்பம், நாட்டில் உற்பத்தியாகும் மூலப்பொருள், உளவியல், சமுதாயநிலை, உடலின் தன்மை, பொருளாதாரம் என்ற பல நிலைக்கிணங்க அமையும் (கு. பகவதி: 2003, ப. 4)*** என மக்கள் ஆடை அணியும் சூழ்நிலைகளைப் பகுத்துக் காட்டியுள்ளார்.

தமிழர் நாகரிகத்தின் நன்கு வளர்ச்சி அடைந்த நிலையைச் சங்க இலக்கியம் தொடங்கிக் காணமுடிந்தது. சங்க கால மக்கள் தழை, பருத்தி, பட்டு, தோல் ஆகியவற்றாலான பொருள்களைக் கொண்டு தயாரித்த ஆடைகளை உடுத்தியுள்ளனர். இவற்றுள் பெண்கள் பெரும்பான்மையும் தழையாலான ஆடைகளையே உடுத்தியுள்ளனர். சங்க காலத்தில் குழந்தைகள், ஆண்கள், பெண்கள் என அனைவரும் ஆடைகளை உடுத்தியுள்ளனர். இரவில் ஒருவகை ஆடையினையும் பகலில் ஒருவகை ஆடையினையும், நீராடுதலின் போதும், போருக்குச் செல்லும்போதும், விழாக்களின் போதும் எனக் காலச் சூழலுக்கு ஏற்றவாறு பல்வகை ஆடைகளை உடுத்தியுள்ளனர் என்பதை இலக்கியங்களின்வழி அறியமுடிகிறது. பெண்களின் ஆடைகளையும் அவை எப்பொருட்களால் உருவாக்கப்பட்டன என்பதையும் இக்கட்டுரை இலக்கியச் சான்றுகளையும் தொல்லியல் சான்றுகளையும் முன்வைத்து விளக்குகிறது. பெண்களை அரசியர், பணிப்பெண்கள், ஆடல் மகளிர், பரத்தையர், சாதாரண மக்கள் என்ற நிலையில் நோக்கியும், நூல், பட்டு, பருத்தி முதலிய பொருட்களாலான ஆடைகள் பயன்படுத்தியவர்கள் பற்றி முதலிலும், தழையாடைகள் உடுத்தியவர்களைப் பற்றிப் பின்னரும் இக்கட்டுரை விளக்குகிறது.

### அரசியர்

அரசியர் உடுத்தின ஆடைகள் துகில், கலிங்கம் எனும் சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. துகில் என்னும் ஆடை, பூத்தொழிலைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது; கலிங்கம் என்னும் ஆடை, நூலால் நெய்யப்பட்டுள்ளது. இதனை,

***பூந்துகில் மரீஇய ஏந்துகோட் டல்குல்***
***அம்மா சூர்ந்த அவிர்நூற் கலிங்கமொடு (நெடுநல். 145-146)*** எனும் பாடலடிகளின் மூலம் அறியமுடிகின்றது.

### பணிப்பெண்கள்

பாசறை, அரண்மனை முதலிய இடங்களில் பெண்கள் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இப்பெண்கள் கச்சு, வம்பு முதலிய ஆடைகளை உடுத்தியுள்ளனர். பாசறையில் விளக்குகளை அணையாமல் பாதுகாக்கும் பெண்கள் கச்சு என்னும் ஆடையினை உடுத்தியுள்ளனர். கச்சு என்னும் ஆடையோடு வாளையும் சேரக் கட்டியுள்ளனர் (முல்லைப். 46-47). மேலும், அரசியருக்குப் பணி செய்யும் பெண்கள், மார்புப்பகுதியில் இறுக்கக் கட்டின வம்பு என்னும் ஆடையை அணிந்துள்ளனர் (நெடுநல்.149-150). இவ்வாடை கச்சு எனும் சொல்லாலும் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாடைகள் மார்புப் பகுதியில் அணியப்பட்டது எனலாம்.

### ஆடல் மகளிர்

இசைக்கருவிகளை இசைத்துப் பாடல் பாடி, ஆடும் மகளிர், ஆடை, துகில் என்னும் ஆடைகளை உடுத்தியுள்ளனர். அரசனின் வீரத்தைப் புகழ்ந்து பாடும் விறலியர் துகில் எனும் ஆடையினை உடுத்தியுள்ளனர். இத்

ISSN 2320-4842

துகிலானது பூத்தொழிற்பாடுடையது என்பதனை,

***... வனைந்துவர விளமுலைப்***
***பூந்துகி லல்குற் றேம்பாய் கூந்தல்***
***மின்னிழை விறலியர் நின்மறம் பாட (பதிற்று.54: 4 -6)*** எனும் பாடலடிகளால் அறியமுடிகின்றது. மேலும், இறைவனைப் புகழ்ந்து, ஆடிப்பாடும் ஆடல் மகளிர் ஆடையை உடுத்தியுள்ளனர் (பரி. 21: 62).

**பரத்தையர்**

பரத்தையர், கலிங்கம், துகில் முதலிய ஆடைகளை உடுத்தியுள்ளனர். இவர்கள் தழையாடையும் உடுத்தி யுள்ளனர். கஞ்சியிட்டுப் புலர்த்திய சிறிய பூத்தொழி லையுடைய கலிங்கம் எனும் ஆடையினையும் (நற். 90:2-5), துகில் என்னும் ஆடையினையும் உடுத்தி யுள்ளனர் (பரி.16:22-23).

**நகரப்பெண்கள்**

நகரத்தில் வசிக்கக் கூடிய பெண்கள் துகில், உடை, பட்டு, கலிங்கம் முதலிய ஆடைகளை அணிந்துள் ளனர். இவர்கள் செல்வச் செழிப்புடன் விளங்கியுள் ளனர். பட்டு என்னும் ஆடையினைப் புணர்ச்சிக்கு முன்னும், துகில் என்னும் ஆடையினை இரவுநேரப் புணர்ச்சியில் ஈடுபடுகின்ற போதும் உடுத்தியுள்ளனர். இதனை,

***துணைப்புணர்ந்த மடமங்கையர்***
***பட்டுநீக்கித் துகிலுடுத்தும் (பட்டினப். 106-107)*** எனும் பாடலடிகள்மூலம் அறியமுடிகின்றது. மேலும், சாதா ரண நாட்களிலும் துகில் எனும் ஆடையினை உடுத் தியுள்ளனர் (பெரும்பாண். 329). கலிங்கம் என்னும் ஆடையினைப் பெண்கள், இரவு நேரத்தில் கணவனை எதிர்பார்த்துப் புணர்ச்சியை விரும்பி உடுத்தியுள்ளனர். இவ்வாடைக்கு அகிற் புகையையும் ஊட்டியுள்ளனர் (மதுரைக்.554). மேலும், உடை என்னும் சொல்லால் குறிப்பிடப்படுகின்ற ஆடையினையும் உடுத்தியுள்ள னர் (பட்டினப். 147-148).

**பிற மகளிர்**

நகரத்தைத்தவிர்த்துப் பிற இடங்களில் வசித்த மகளிர் உடுத்திய துகில், கலிங்கம், போர்வை, உடை, நூல், வார், பட்டு, பூங்கரைநீலம், ஆடை, காழகம், வால் முதலிய பெயர்களால் அழைக்கப்படுகின்ற ஆடை கள் திகழ்கின்றன. இவர்கள் அணிந்த ஆடைகளின் மூலம் இவர்கள் செல்வச் செழிப்புடையவர்களாகவே வாழ்ந்திருக்கலாம் எனக் கருதமுடிகிறது.

துகில் என்னும் ஆடையினை நீராடும்போது உடுத்தி யுள்ளனர் (பரி.22:17-19). இவ்வாடை, பூத்தொழில் வேலைப்பாடு செய்யப்பட்டு (பரி.10:79-80), நடக்கும் போது காலில்பட்டு ஒதுங்குகின்ற நிலையில் அல்குல் பகுதியில் உடுத்தப்பட்டுள்ளது (நற்.336: 2-3).

கலிங்கம் என்னும் ஆடையில் பூத்தொழில் வேலைப் பாடு செய்து (கலித்.56:10-11), பாதம்வரை நீண்டும் (கலித். 92: 42-43), திருமணத்தின் போதும் (கலித். 69:3), திருமணம் முடிந்தபின் முதலிரவின் போதும் (அகம். 86: 21-23) உடுத்தப்பட்டுள்ளது.

உடை என்பது தூயதாய் உருவாக்கப்பட்டுள்ளது. மண மேடையில் அமரும்போது இவ்வாடையை அணிந் துள்ளனர் (அகம்.136:14-18). நூல் என்பதும் ஒரு வகை ஆடை. இவ்வாடை உடம்பின் பொருந்திய நிலையில் உடுத்தப்பட்டுள்ளது (அகம்.198:6-7).

வார் என்னும் ஆடையினைக் கச்சு என்று உரையா சிரியர்கள் குறிப்பர். இவ்வாடையை மார்பகத்தின் மேல் உடுத்தியுள்ளனர் (அகம்.361:4-5). பட்டு என்னும் ஆடையினை இரவில் உடுத்தியுள்ளனர். இதனை,

***..............................யல்கல்***
***அணிகிளர் சாந்தின் அம்பட் டிமைப்பக்***
***கொடுங்குழை மகளிரின் ஒடுங்கிய இருக்கை (அகம். 236: 10-12)*** எனும் பாடலடிகள்மூலம் அறியலாம். போர்வை எனும் ஆடையினைத் திருமணம் முடிந்த பின், முதலிரவின்போது முக்காடாகப் போர்த்தியுள் ளனர். இதனை,

***ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்***
***ஊறைகழி வாளின் உருபுபெயர்ந் திமைப்ப (அகம். 136: 23-24)*** என்பதால் அறியமுடிகின்றது.

காழகம் என்னும் ஆடையினை அல்குல் பகுதியில் உடுத்தியுள்ளனர்(கலி.92:37). மேலும், பூங்கரை நீலம் என்னும் ஆடை பூத்தொழில் வேலைப்பாடு செய்யப் பட்டுக் கரையினை உடையதாகவும், நீலநிறம் கொண் டதாகவும்,இடுப்புப் பகுதியில் நிலத்தளவு தாழ உடுத் தப்பட்டுள்ள நிலையில் காணப்பட்டுள்ளது. இதனை,

***பூங்கரை நீலம் புடைதாழ மெய்அசைஇ பாங்கரும்***
***முல்லையும் தாய பாட்டங்கால் (கலி.111: 3-4)*** எனும் பாடலடிகளின் மூலம் அறியமுடிகின்றது. மேலும், வால் என்னும் ஆடை தூய தன்மை உடையதாகக் காணப்படுகிறது (அகம். 262: 7).

எனவே, சங்க கால மக்கள், இரவு, பகல், நீராடுதல், புணர்ச்சி நிலை, திருமணம் எனக் காலச் சூழலுக்கு ஏற்றவாறு பல்வேறு தன்மைகளை உடைய ஆடை களை உடுத்தியுள்ளனர் என்பதனைக் கொண்டு பெண் களின் ஆடைப் பண்பாட்டை அறியமுடிகிறது

**தழையுடை**

‘தழையுடை, பகைத்தழை, மடிவை, குழை எனப் பல பெயர் பெறும். இவை பெரும்பான்மையான காட்டுகளில் தழை என்றே சுட்டப்பட்டுள்ளன. தழை என்று குறிப்பிட்ட மக்கள் தழையுடை என்று புரிந்து கொள்ளுமளவிற்குச் செல்வாக்குடன் திகழ்ந்திருப்பதே இதற்குரிய காரணமாகும். இதனை மிகுதிபற்றி வந்த பெயர் என்பார் உ. வே. சாமிநாதையர் (குறுந். 125). மடிவை என்பது இதனை மடித்து, தொடுத்து அணிந்தமையின் பெற்ற பெயராகும் (பத்.27). தழை யின் குழைந்த தன்மை காரணமாக அல்லது குளிர்ச்சி

காரணமாகப் பெற்ற பெயராக இருக்கலாம். (அகம். 69). இன்றும் தழையினைக் குழை என்று சுட்டும் வழக்கம் உள்ளது. பலதழைகள், பூக்கள், தளிர்கள் இவற்றை விரவித் தொடுத்து அமைந்த தழையுடைகளைப் பகைத்தழை என்றனர்' (பகவதி:2003: 28).

தழையுடையினை அமைக்க நெய்தல் (கலி.130: 11), ஆம்பல் (புறம். 280: 13), நொச்சி (புறம்.271:2), வயலைக்கொடி(அகம்.189:8), குவளை (குறுந்.342: 5), ஞாழல் (ஐங்.147:1), செயலை எனும் அசோகம் (அகம்.188:12), தழை, மலர், கொடி முதலியவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். இத்தழையாலான உடைகளை மகளிர் மட்டுமே உடுத்தியுள்ளனர். பரதவ மகளிர், ஆய மகளிர், எயின மகளிர், பரத்தைகுல மகளிர், உப்புவாணிக மகளிர், கொடிச்சி முதலிய மக்கள் தழையாடைகளை உடுத்தியுள்ளனர்.

இத்தழையாடைகளைப் பல்வேறு கால நேரத்திற்கு ஏற்றவாறும், ஒரு சில விழாக்களின்போதும் உடுத்தியுள்ளனர். அருவி, ஆறு, கடல் போன்ற நீர்நிலைகளில் நீராடுதல், விழா, வழிபாடு, விளையாட்டு உள்ளிட்ட பல பொழுதுபோக்குகளிலும், உப்பு, மீன், பூ முதலிய பொருட்களை விற்பனை செய்யும்போதும், தினைப்புனம் காக்கும்போதும் உடுத்தியுள்ளனர்.

### அருவி நீராடுதல்

தலைவி, அல்குலிடத்தே தழையுடையை அணிந்துகொண்டு அருவி நீராடிய நிலையை,

***கோடேந்து அல்குல் தழையணிந்து உம்மொடு***
***ஆடினம் வருதலின் இனியதும் உண்டோ(நற்.368:3-4)***
எனும் பாடல்வழி அறியமுடிகின்றது.

### ஆற்றினில் நீராடுதல்

அதிகமான நீர்ப்பெருக்கத்தினைக் கொண்ட யமுனை ஆற்றினது நெடிய மணற்பரப்பின் அகன்ற துறைக்கண் ஆயமகளிர் தழையாடையை உடுத்திக்கொண்டு நீராடுதலைச் செய்துள்ளனர் (அகம்.59:4-5).

### கடல் நீராடுதல்

கடற்கரைத் துறையிலே, குரவைக் கூத்தாடுதலை வெறுத்த தலைவி, அழகிய மலர் விரவிய பசிய தழையாடையை உடுத்திக் கடல் நீராடியுள்ள செய்தியை,

***ஞாழ லோங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்***
***தாழை வீழ்கயிற் றூச றூங்கிக்***
***கொண்ட லிடுமணற் குரவை முனையின்***
***வெண்டலைப் புணரி யாயமொ டாடி***
***மணிப்பூம் பைந்தழை தைஇ யணித்தகப்***
***பல்பூங் கான லல்கினம் வருதல் (அகம். 20: 5 -10)***
எனும் பாடலால் அறியமுடிகின்றது.

### விழா

பரதவ மகளிர், விழாவிற்குச் செல்வதற்காகத் தம்மை அலங்கரித்துக்கொகொள்ளுகையில் தழையோடு நெய்தற் பூவையும் அழகுற இணைத்துத் தழையாடையை உடுத்திச் சென்றுள்ளனர் (அகம்.70:10-14).

### வழிபாடு

கள் விற்கும் பழையர் மகளிர், தழையாடையை உடுத்திக்கொண்டு கொற்கைக் கடல்துறையிலே விளங்கும் தெய்வத்திற்கு முத்துகளையும் வலம்புரிச்சங்கையும்பூசைப் பொருளாகக்கொண்டு வழிபாடு செய்துள்ளனர் (அகம்.201:4-7).

### மீன் விற்றல்

மீன் விற்கும் செல்வச் செழிப்புடைய மகளிர், தன் தமையன் கடலிலிருந்து கொண்டு வந்த மீன்களை, விழா நடக்கும் தெருக்களில் தழையாடையை உடுத்திக்கொண்டு மீன் விற்கச் சென்றுள்ளனர் (அகம். 320:1-5).

### உப்பு விற்றல்

உப்பு விற்கும் மகளிர், அழகுபெறத் தரித்த பல தளிருடன் கூடிய தழையாடை உடுத்திக்கொண்டு நெல்லுக்கு விலையாக உப்புக் கொள்ளுமாறு சேரிதோறும் உப்பு விற்கச் சென்றுள்ளனர் (அகம்.390:6-9).

### பூ விற்றல்

எயினர் மகளாகிய பழையர் மகளிர், பசிய தளிர்களால் அமைந்த தழையாடையை உடுத்தி மூங்கிற் குழாயிலே பூக்களை எடுத்துக்கொண்டு சிற்றூர்கள் தோறும் சென்று விற்றுள்ளனர் (அகம்.331:1-7).

### விளையாட்டு

பெண்கள், விளையாட்டின்போதும் கழுநீர் ஆம்பலின் பூக்களோடு கூடிய தழையாடையை உடுத்திக்கொண்டு விளையாடியுள்ளனர். இதனை,

***கழுநீர் ஆம்பல் முழுநெறிப் பைந்தழை***
***காயா ஞாயிற் றாகத் தலைப்பப்***
***பொய்தல் ஆடிப் பொலிகென வந்து (அகம்.156:8-10)***
என்ற பாடலடிகளின் மூலம் அறிய முடிகின்றது.

### தினைப்புனம் காத்தல்

குறமகளிர், பொன்போல மலர்ந்த வேங்கைப் பூக்களின் மாலையைத் தரித்துக்கொண்டு, அசோக மரத்தினது தழையை ஆடையாக உடுத்தித் தினைப்புனம் காத்துள்ளனர் என்பதை,

***அழலேர் செயலை அந்தழை அசைஇயும்***
***குறமகள் காக்கும் ஏனல்***
***புறமும் தருதியோ வாழிய மழையே (அகம்.188:12--14)***
எனும் பாடல்வழி அறியமுடிகின்றது. மேற்கூறப்பட்ட செய்திகளின் மூலம் சங்க கால மகளிர் தம் வாழ்வியலின் எல்லா நிகழ்வுகளிலும், சாதாரண நாட்களிலும் தழையாடையை உடுத்தியுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. அவையல்லாது, தழையாடை உடுத்தும்போது தழை, தழையுடன் மலர்கள் (பகைத்

தழை), இளந்தளிராலான தழை (குழை) ஆகியவற்றைச் சேர்த்தும் உடுத்தியுள்ளனர். அப்படி உடுத்துகையில் தழையாடை உடுத்துபவர்கள் பகைத்தழையை உடுத்த முற்படவில்லை. காரணம், தலைவன் தலைவிக்குப் பகைத்தழையைக் கொடுக்கிறான். அதனைத் தலைவி,

***எம்மொடு வந்து கடலாடுகின்ற ஆயமகளிர் விளையாட்டுப் பாவைக்கு நெய்தற் றழையே புனைவதன்றி அதற்கு மாறாகப் பல்வேறு வகைப்பட்ட இத்தழைகளைப் புனைய மாட்டார் காண். மற்று இவற்றை நீயிரே உடுத்திக் கொண்மின் எனின், யாங்களும் நெய்தற் றழையே உடுப்பமே யன்றி அதன் பகைத்தழை யுடுத்தலிலேம் (பகவதி: 2003:28)*** எனக் கூறி மறுக்கிறாள் (ஐங்.187:2-4).

மேலும், மகளிர்தம் இளமைக் காலத்தில்தான் தழையாடையை (புறம்.248,280) அணிந்துள்ளனர். முதியோர்கள் தழையாடையை உடுத்தியதாகச் சான்று இல்லை. அவையல்லாது, நிலத்திற்கு ஏற்பத் தழைகள் மாறுபட்டு அமைகின்றன. அந்தந்த நிலங்களில் கிடைத்த தழைகளையே ஆடைகளாக உடுத்தியுள்ளனர். வேறு நிலத்தின் தழைகளை உடுத்தவில்லை. ஒரு நிலத்தினர் உடுத்தும் தழையை வேறொரு நிலத்தினர் உடுத்தினால் அது சந்தேகத்திற்குரிய செயலாகக் கூறப்பட்டுள்ளது. காரணம், தலைவன், தலைவிக்குக் கையுறைப் பொருளாகத் தழையாடையைக் கொடுத்தல் இயல்பு. ஆனால், தலைவன் கொடுத்த தழையாடையை உடுக்க முடியாத நிலை காணப்பட்டுள்ளது.

தலைவி, தலைவன் கொடுத்த தழையாடையை உடுத்திச் சென்றால், அவளது தாய் அந்தத் தழையாடை எப்படிக் கிடைத்ததென விசாரணை செய்வாள். இன்னும் தலைவன் கொண்டுவந்து கொடுத்த தழையாடையை ஏற்காவிடின் அவனும் மனம் வருந்துவான். அத்தழை தெய்வம் உறைகின்ற மலைப்பக்கத்திலேயுள்ள கொய்தற்கு அரிய தழையாகும். அதனை அணியாது வாடச் செய்துவிடின் தெய்வக் குற்றத்திற்கும் ஆளாக நேரிடும் (நற்.359:1-10).

இவ்வாறு தழையாடை சமூகத்தின் பல்வேறு நிலைகளிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. பெண்களைப் பொறுத்தவரை தழையாடை அவர்களது தினசரி வாழ்க்கையிலும் ஒழுக்க நெறியிலும் முக்கியமானதாக விளங்கியுள்ளது. இதன் மூலம் சங்க கால மகளிரிடையே தழையாடைமூலம் ஒழுக்க நெறி பேணப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

**தொல்லியல் சான்றுகள்**

சங்ககால மக்கள் பயன்படுத்திய ஆடைகள் தற்போது கிடைப்பது அரிது. காரணம், பட்டு, பருத்தி, தழை முதலியன அழியும் தன்மையின. ஆனாலும் தொல்லியல் இடங்களுள் ஒன்றான திருக்காம்புலியூரில் பட்டு நூல் ஒன்று கிடைத்துள்ளது (வசந்தி,1999:83). ***இவ்வாடைகள் பற்றியான தரவுகள் அதிகமாகக் கிடைக்கவில்லையாயினும் நெசவு செய்ததையும் சாயம் ஏற்றியதையும் ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு, கொடுமணல் போன்ற இடங்களில் சான்றுகள் காணக்கிடக்கின்றன. ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட நூற்புக்கதிர்கள் (ஸ்பிண்டில்), அரிக்கமேட்டில் அகழப்பட்ட சுடுமண்ணால் செய்யப்பட்ட நூற்பு உருளைகள் முதலியவற்றின்மூலம் தமிழர்களின் நெசவுத் தன்மையினையும், சாயத் தொழிலும் நடைப்பெற்றிருக்கிறது என்பதற்கு அரிக்கமேட்டில் அகழப்பட்ட கருநீலம் செய்யப் பயன்படுத்தப்பட்ட கொப்பரைகளும் (ப.148, நிவேதிரா லுயிஸ், ஆதிச்சநல்லூர் முதல் கீழடிவரை)*** நெசவுச் தொழில் நடைபெற்றதையும் ஆடைகளுக்குச் சாயம் ஏற்றியதைப் பற்றியும் அறிந்து கொள்ள ஏதுவாகின்றன.

***தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் நெசவுத் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல் நூற்கும் தக்களி, நூலைச் சுற்றி வைக்கும் சிறிது தடித்த இருமுனைகளுடன் கூடிய செப்புக் கம்பி போன்றவை கிடைத்துள்ளன. அரிக்கமேடு, அழகன்குளம், திருக்காம்புலியூர், அழகரை, உறையூர், கரூர், காஞ்சிபுரம், வசவசமுத்திரம் ஆகிய இடங்களில் சுடுமண்ணால் ஆன தக்களிகள் கிடைத்துள்ளன (வசந்தி: 1999: 83).***

மேலும், கொடுமணலில், ***சுடுமண்ணாலான பம்பரம் போன்ற அடிப்பாகத்தையும் அதன் நடுவில் செருகப்பட்ட நீண்ட இரும்புக் கம்பியையும் கொண்ட தக்களிகள் காணக்கிடைக்கின்றன. களி மண்ணுடன் ஒட்டிய நிலையில் தீய்ந்துபோன துணியின் ஒரு பகுதி கொடுமணலில் கிடைத்தது மற்றொரு அரிய கண்டுபிடிப்பாகும். நூல் நூற்கப் பயன்படுத்தப்பட்ட தக்களிகளோடு இத்துணியையும் இணைத்துக் கருதினால் இங்கு நூல் நூற்கும் தொழிலும், நெசவும் ஒருசேர நடந்தன என்பது புலனாகும். இங்குப் பருத்தி அல்லது அதற்கு இணையான மூலப் பொருள்கள் விளைந்திருக்க வேண்டும் என்பதும் கருதப்படும் (1994: 38)*** எனக் கா. ராஜன் நெசவுத் தொழில் கொடுமணலில் நடைபெற்றதை விளக்கி கூறியுள்ளார்.

அதோடு ***ஆண்டிப்பட்டி அகழாய்வில் அதிக அளவில் கிடைத்துள்ளவை சுடுமண்ணால் செய்யப்பட்ட தக்களிகள் ஆகும். மொத்தம் 50 தக்களிகள் கிடைத்துள்ளன. அகழாய்வு செய்ய அனைத்துக் குழிகளிலும் (அகழாய்வுக் குழி 8 தவிர) தக்களிகள் கிடைத்துள்ளன'. மேலும், 'இத்தக்களிகள் மூலம் அகழாய்வு செய்யப்பட்ட இடத்தில் வாழ்ந்த மக்களிடம் நெசவுத்தொழில் சிறிய அளவில் நடைபெற்று வந்ததையும் அவர்கள் தங்களின் ஆடைகளின் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொண்டதுடன் நூல் நூற்பதும் அவர்கள் நன்கு அறிந்த தொழிலாக நிலவி வந்திருக்கின்றது என்பதையும் நன்கு அறிய முடிகின்றது' (ஸ்ரீதர்: 2005: 18).***

மேலும், கீழடியில் அண்மையில் செய்யப்பட்ட ***இவ்வகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள நூல்களை நூற்கப் பயன்படும் 180க்கும் மேற்பட்ட தக்களிகள், துணிகளில் உருவ வடிவமைப்புகளை வரைவதற்கு உபயோகப்படுத்தப்படும் எலும்பினாலான கூரிய முனைகள்***

ISSN 2320-4842

***கொண்ட தூரிகை (20), தறியில் தொங்கவிடும் கருங் கல் மற்றும் சுடுமண்ணால் செய்யப்பட்ட குண்டு, செம் பினாலான ஊசி, சுடுமண்பாத்திரம் போன்ற தொல் பொருட்கள் மூலம் இப்பகுதியில் நிலவியிருந்த நெசவுத் தொழிலின் நூல் நூற்றல், பாவு அமைத்தல், தறியி லமைத்தல், நெசவு அதன்பின் சாயமிடல் நிலைகளை உறுதி செய்கின்றன. இந்தியத் தொல்லியல் துறை மேற் கொண்ட அகழாய்வுகளில் வெளிப்படுத்தப்பட்ட கட்டுமா னங்கள், சாயத்தொழிற்சாலை இருந்ததற்கான சான்றுகள் என்று கூறியுள்ளது. தற்போதைய அகழாய்வுகளிலும் கிடைத் துள்ள நெசவு தொடர்பான தொல்பொருட்கள் இப்பகுதி யில் நெசவுத் தொழில் சிறந்து விளங்கியதற்குச் சான்று பகர்கின்றன (கீழடி, வைகை நதிக்கரையில் சங்க கால நாகரிகம், ப.16).*** மேலும், அகரம் எனும் பகுதியிலும் நெசவு செய்ததற்கான பொருட்களும் கிடைத்துள.

### தொகுப்புரை

சங்க காலப் பெண்களில் அரசியர், பணிப்பெண்கள், ஆடல் மகளிர், பரத்தையர், நகரப்பெண்கள், பிற பெண்கள் என அனைத்துச் சமூகத்தைச் சார்ந்த பெண் களும் ஆடைகள் அணிந்ததற்கான சான்றுகள் காணப் படுகின்றன.

பட்டு, கலிங்கம், துகில், ஆடை, உடை, காழகம், அறுவை எனும் பெயர்களால் அழைக்கப்பட்ட ஆடை களைப் பெண்கள் அணிந்துள்ளனர். எனினும் இப் பெயர்களால் அழைக்கப்பட்ட ஆடைகளை ஆண் களும் அணிந்துள்ளதாக இலக்கியங்களில் சான்றுகள் காணப்படுகின்றன.

பெண்களுக்கே உரிய சிறப்பு ஆடைகளாகத் தழை யாடை, வார், வம்பு, பூங்கரை நீலம் போன்ற ஆடைகள் இருந்துள்ளன.

செல்வச் செழிப்புள்ள பெண்களே கலிங்கம், துகில், பட்டு முதலிய ஆடைகளை உடுத்தியுள்ளனர். பாணர் முதலியோர் அணிந்ததாகச் சொல்லப்பட்டாலும் அவை மன்னர்கள் அவர்களுக்குக் கொடுத்ததாகச் சான்று கள் உள்ளன.

பெண்கள் மேலாடையை அணிந்தமைக்கு ஒருசில சான்றுகள் மட்டுமே காணப்படுகின்றன. குறிப்பாக, அரசியின் பணிப்பெண்கள் மார்புப்பகுதியில் இறுக் கிக் கட்டிய கச்சு, வம்பு எனும் பெயரால் அழைக் கப்பட்டஆடைகளை அணிந்ததாகக் குறிப்புகள் உள. மற்றபடி இடுப்புப் (அல்குல்) பகுதியிலிருந்து தரை வரையுள்ள ஆடையை அணிந்தவர்களாகவே பெண் கள் இருந்துள்ளனர்.

மேலும், சங்ககால ஆடைகள் பற்றிய தரவுகள் உண்மை யென மெய்ப்பிக்கத் தொல்லியல் சான்றுகள் ஆதார மாக உள்ளன. அவ்வாடைகளில் பருத்தி, பட்டு முதலிய பொருளால் நெய்ப்பட்ட சங்ககால ஆடைகள் திருக் காம்புலியூர், கொடுமணல் ஆகிய பகுதிகளில் கிடைத் துள்ளன. மேலும், ஆடைகள் நெய்வதற்கான தக்களி கள், ஆடைகளின் உருவ அமைப்பை உருவாக்கும் எலும்பாலான ஊசிகள், நூற்புருளைகள் உள்ளிட் டவை கொடுமணல், கீழடி, திருக்காம்புலியூர், அகரம், அரிக்கமேடு, அழகன் குளம், அழகரை, உறையூர், கரூர், காஞ்சிபுரம், வசவசமுத்திரம் முதலிய இடங் களில் கிடைத்துள்ளன.

### துணையன்கள்


எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு நூல்கள், 2007, நியுசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

கீழடி வைகை நதிக்கரையில் சங்க கால நாகரிகம், 2020, தொல்லியல் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை.

நிவேதிதா லூயில், ஆதிச்சநல்லூர் முதல் கீழடி வரை, கிழக்குப் பதிப்பகம்.


பகவதி, கு., 2003, தமிழர் ஆடைகள், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.


ராஜன், கா., 1994, கொடுமணல் அகழாய்வு ஓர் அறிமுகம், தஞ்சாவூர், மனோ பதிப்பம்.

வசந்தி, சீ, 1999, தமிழக அகழாய்வில் சாதனைகள், சென்னை, பூவழகி பதிப்பகம்.

ஸ்ரீதர், தி. ஸ்ரீ., (ப — ர்), 2005, தமிழக அகழாய்வுகள், ஆண்டிப்பட்டி (2004 — 2005), சென்னை, தமிழ்நாடு அரசு, தொல்லியல் கழகம்.


■ ■ ■






கோயம்புத்தூர் அகழ்வைப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள தக்களிகள்



ISSN 2320-4842



துணி மற்றும் நூற்பு உருளை, கொடுமணல்

17ஆம் பக்கத் தொடர்ச்சி

17. கலியாணசுந்தரம், திரு.வி. வாழ்க்கைக் குறிப்புகள் ப. 177.

18. பட்டம்மாள். பா. வேங்கடராஜுலு ரெட்டியாரின் தமிழ்ப் பணி ப.8

19. வரதராசனார் .மு, தமிழ் இலக்கிய வரலாறு, ப. 324.

20. வேங்கடராஜுலு ரெட்டியார் நினைவுமலர், வாழ்த்துச் செய்தி.

21. வேங்கடராஜுலு ரெட்டியார் நினைவுமலர், ப.14.

22. வேங்கடராஜுலு, வே. பரணர், முன்னுரை ப.VX.

23. சுப்பு ரெட்டியார் .ந., மலரும்நினைவுகள், ப.34.

24. வேங்கடராஜுலு, வே. பரணர், முன்னுரை ப.XVI.

25. வேங்கடராஜுலு, வே. பரணர் முன்னுரை ப.XIX.

**பயன்கொண்ட நூல்கள்**


1. கலியாண சுந்தரம், வி, திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள், கழகம், நான்காம் பதிப்பு, 1969.

2. ரா.பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா மலர், 1961.

3. சுப்புரெட்டியார், ந., மலரும் நினைவுகள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1989.

4. பட்டம்மமாள், பா., வேங்கடராஜுலு ரெட்டியாரின் தமிழ்ப் பணி, அமுதன் பதிப்பகம், புதுச்சேரி. முதல் பதிப்பு, 2003. (ஆய்வியல் நிறைஞர் ஆய்வேடு)

5. தெ.பொ.மீனாட்சிசுந்தரம் மணிவிழா மலர், கலைக்கதிர் வெளியீடு, கோவை, 1961.

6. வரதராசன், மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, ஐந்தாம் பதிப்பு, 1983.

7. வேங்கடராஜுலு ரெட்டியார், வே., பரணர், சென்னைப் பல்கலைக்கழகம், முதல் பதிப்பு, 1933.

8. வேங்கடராஜுலு ரெட்டியார், வே., தமிழ்ச் சொல்லமைவு.

9. வேங்கடராஜுலு ரெட்டியார், வே., தொல்காப்பிய எழுத் ததிகார ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1944.

10. வித்வான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் நினைவு மலர், திருவனந்தபுரம் ரெட்டிச் சங்கம், திருவனந்தபுரம், 1986.


**பொருளடக்கம்—தொடர்ச்சி**


**The Role of African American Women of Colorin Culture and Society**
- R. Suresh & V. Govindarajan 68

**இந்திய இலக்கியங்களின் தகவல் தொடர்பு: தந்தி விடுதூது**
- அ. கோமதி ஜெயம் 70

**Opinion of Student-Teachers towards Value Education in Colleges of Education**
- R. Selvendiran 72

**தலைவனும் கையுறையும்**
- ஏ. இராஜலட்சுமி 76

**சமயபுரம் மாரியம்மன்**
- அ. ஸ்ரீதேவி 78

**Humour as Deceptive Gambit Involved in Cyber Stalking**
- N. Vijayan, N. Dhanalakshmi & Praveenkumar Sri 80

**மூவர் முதலிகளின் அகத்திணைக் கூறுகள்**
- த. உமாசெல்வி 86

**திருக்குறளில் அறிவியல் செய்திகள்**
- க. கண்ணகி 91

**தொல்காப்பிய அசைச் சொற்களும் குறுந்தொகை அசைச் சொற்களும்- ஓர் ஒப்பீட்டுப் பார்வை**
- தி. சுமதி 95


# RISE

**I will rise**
**After every fall.**
**I will rise**
**And stand tall.**

**I will rise**
**Over the wall.**
**I will rise**
**Above them all.**

**Like the sun,**
**Which never dies.**
**Though sets every night,**
**Every day it does rise.**

**Like the ocean**
**Whose tides**
**Many times they are down,**
**But invariably they rise.**

**Like the trees,**
**From seeds they arise,**
**And heights great**
**They rise and rise.**

**After falling once,**
**Twice and thrice,**
**Again and again**
**I will rise and rise.**

**I will rise**
**After every fall.**
**After every fall**
**I will rise.**

**- Sagar Yadav**

ISSN 2320-4842



# 'திருமணம்' என்ற நிறுவனமும் சுயமரியாதை இயக்கமும்
## Marriage Institution and the Self–Respect Movement

**முனைவர் ச. ஜீவானந்தம்**
உதவிப்பேராசிரியர், பெண்ணிய ஆய்வு மையம், சமூக அறிவியல் புலம்
ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புது டில்லி

### 1.0. முன்னுரை

திருமணம் என்ற நிறுவனமானது மானிடச் சமூகத்தின் ஓர் இன்றியமையாத வாழ்வியல் கூறாகக் கருதப் பட்டுவருகிறது. ஒவ்வொரு சமூகமும் அதனதன் தேவைக்கேற்பத் திருமண முறையினையும், அதன் சடங்கியல் முறைகளையும் வடிவமைத்துக் கொண்டுள்ளன. பொதுவாகவே திருமணம் என்ற நிறுவனத்தின் அடிப் படை என்பது ஆண்-பெண் என்ற பாலினப் பகுப்பின் அதிகாரத்தின் வரையறையை நேரடியாகவும் மறைமுக மாகவும்தீர்மானிக்கும் ஒரு கட்டமைப்பாகவே உலகெங்கிலும் இருந்துவருகின்றது. இதன் அடிப்படையில் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிச் சமூக விடுதலைக்காகப் பாடுபட்ட சுயமரியாதைக்காரர்கள் திருமணம் என்ற நிறுவனத்தின்மீது ஆக்கபூர்வான விமர்சனங்களைக் கொண்டிருந்தனர். இந்தச் சூழலில் இக்கட்டுரை திரு மணம் என்ற நிறுவனத்தின்மீது சுயமரியாதை இயக்கத்தினர் முன்வைத்த பல்வேறு விதமான வாதங்கள் பற்றி வரலாற்றுத் தரவுகளுடன் விளக்க முற்படுகின்றது.

### 1.2.‘ திருமணமுறை’ தோன்றிய பின்னனி

சனாதன/‘இந்து’ மதத்தின் ஆதார நூல்கள் குறிப்பிடுவதுபோல் திருமணம் என்ற நிறுவனத்தின்மூலம் மட்டுமே பெண்களைப் பாதுகாக்க முடியும் என்ற சமூகக் கட்டமைப்பினைச் சுயமரியாதை இயக்கத்தினர் ஒருபோதும் நம்பவில்லை. திருமணமுறைகளிலுள்ள பல்வேறுபட்ட உட்கூறுகளும், அவற்றின்மூலம் கட்டியெழுப்பப்படும் உணர்வுக்கூறுகளும் எவ்வாறு ஆணாதிக்கக் கருத்துகளை நுண்மையாகத் தன்னகத்தே கொண்டு பல்வேறு வழிமுறைகளில் அதனை இந்தச் சமூகத்தில் நிலைநிறுத்திப் பெண்களை அடிமைகொள்ளச்செய்கின்றன என்ப தைச் சுயமரியாதைக்காரர்கள் தக்க தர்க்க நியாங்களுடன் பொதுமக்களிடம் முன்வைத்து அவற்றினைக் களைய அயராது உழைத்தனர்.

பெண்ணடிமைத்தனமானது எவ்வாறு தனியுடமைத் தத்துவத்துடனும், திருமணம் என்ற நிறுவனத்துடனும் பின்னிப் பிணைந்துள்ளது என்பதனைச் சுயமரியாதைக்காரர்கள் தக்க தர்க்கவியல் புரிதலுடன் அறிந்துகொண் டிருந்தனர். மனிதர்களுக்கும், பிற விலங்கினங்களுக்கும் உள்ள வேறுபாடு என்பது பகுத்தறிவே என்ற சுய மரியாதைக்காரர்கள், திருமணம் எனும் முறையின் தோற்றத்தினைக் குறித்துக் கீழ்கண்டவாறு விளக்கினர்.

***பொதுவாகவே மனிதர்களைத் தவிர்த்த ஏனைய உயிரினங்கள் பெரும்பாலும் கூட்டுவாழ்க்கை முறையின் படியே சந்தர்ப்பம் வாய்க்கும்போதும், அவசியம் ஏற்படும்போதும், ஒன்றுகூடித் தம் இனத்தைப் பெருக்குகின்றன. மனிதர் களும் பெரும்பாலும் கூட்டுவாழ்க்கை முறையின்மூலமே தன் இனத்தைப் பெருக்க வேண்டுபவர்களாக இருந்த பொழுதும், மற்ற உயிரினங்களுக்கு இல்லாத ஒன்றான பகுத்தறிவு என்பது மனிதர்களுக்கு இருக்கின்றது. எனவே, அவ்வறிவின்மூலம் மனிதர்கள் தங்களுக்கென்று சில கருத்துக்களையும், சில கொள்கைகளையும், சில திட்டங்களையும், சில முறைகளையும் வகுத்துக்கொண்டு அவற்றின்படியே சமூகத்தில் வாழப் பழக்கப்படுகின்றனர் (ஆனைமுத்து, 2009, ப. 346).***

அவ்வகையில், மனிதர்கள் தங்களுக்கென்று சில பிரத்தியேகமான வசதிவாய்ப்புகளைச் செய்துகொள்கின்ற னர். உதாரணமாக, மனிதர்கள்தாம் உணவினைச் சமைத்துச் சாப்பிடுகின்றனர், மற்ற உயிரினங்கள் எல்லாம் இயற்கையாகக் கிடைப்பனவற்றையே உண்டு வாழ்கின்றன. மனிதர்கள்தாம் நகைகள், ஆடைகள் போட்டுக் கொள்கிறனர், மற்ற உயிரினங்கள் அணிகலன்களோ, ஆடைகளோ அணிந்துகொள்வதன்மூலம் அழகு, பெருமை போன்றவைகளை ஒருபோதும் ஏற்படுத்திக்கொள்வது இல்லை; அவற்றை உண்டாக்கிக்கொள்ளவும் அவை களால் முடியாது. அத்தகைய பகுத்தறிவு உள்ள காரணத்தினால்தான், மனிதர்கள் தங்களுக்கென வீடு கட்டிக் கொண்டுவாழ்கின்றனர். அவ்வறிவுள்ள காரணத்தினால்தான் கூட்டுவாழ்க்கைமுறையையும் ஏற்படுத்திக்கொண்டு, சமுதாயக் கூட்டுவாழ்க்கைக்கு என்று பல திட்டங்களை வகுத்துக்கொண்டு வாழ்கிறார்கள். அத்திட்டங்களை நிறைவேற்றத் தனிமனிதர்களால் ஒருபோதும் முடியாது; அதற்கு மற்றவர் உதவி இருந்தே தீர வேண்டியுள்ளது. இத்தகைய காரணங்களினால் கூட்டுவாழ்க்கையோடுகூடிய சமுதாயவாழ்க்கைமுறை என்பது இன்றியமையாத

தாகின்றது. இனப் பெருக்கத்தை உத்தேசித்தும், சமுதாய வாழ்க்கை நலத்தை உத்தேசித்தும், கூட்டு வாழ்க்கை முறை என்பது அவர்களுக்கு அவசியமாகிறது என்று பெரியார் குறிப்பிடுகின்றார் (ஆனைமுத்து, 2009, ப. 347).

அதன்படி, இந்த உலகினில் தனிச்சொத்துடைமையும், 'மேலுலகம்', 'மோட்சம்' போன்ற கருத்துக்களின் அடிப்படையிலேயே 'திருமணம்' என்பதும், 'வாழ்க்கை ஒப்பந்தம்' என்பதும் ஏற்படுத்தப்படுகின்றன (*விடுதலை* 1944, டிசம்பர் 16). வரலாற்றில் முதலில் மற்ற உயிரினங்களைப்போல் எதையோ உண்டு வாழ்ந்த மனிதர்கள், அதன் போக்கினில் திரிந்துகொண்டிருந்தனர். அத்தகைய சமூகத்தில் சொத்து என்ற கருத்திற்கே இடமில்லாமல் இருந்தது (*விடுதலை* 1959, ஏப்ரல் 20). பெண்களும் அடிமைகளாக ஆக்கப்படுவதற்கு உண்டான எந்தத் தேவையும் ஏற்பட்டிருக்கவில்லை. பயிர் செய்யக் கற்றுக்கொண்டு, இது இன்னாருக்குச் சொந்தமான நிலம், இது இன்னாருடைய சொத்து என்ற தனியுடைமைச் சமூகத்திலேயே பெண்ணென்பவர் ஒரு குறிப்பிட்ட ஆணின் சொத்தாகக் கருதப்படலானதுடன் (ஆனைமுத்து, 2009, பக். 283-292), கணவன்-மனைவி என்பதற்கும் இடம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்ற பெரியார் (*விடுதலை* 1959, ஏப்ரல் 20), என்றைக்குத் தனக்கென்று பொருள் சேமித்து வைத்துக்கொள்ள ஆணிற்கு உரிமை ஏற்பட்டதோ (ஆனைமுத்து, 2009, பக். 283-292), உடமைகள் எல்லாம் ஆணிற்கு மட்டும்தான் என்கிற நிலைமை ஏற்பட்டதோ, அதற்குப் பிறகுதான் 'திருமணமுறை' என்பதும் ஏற்பட்டிருக்க வேண்டும் என்றார் (மேற்குறிப்பிட்ட நூல்).

ஆண்களுக்கு மட்டும்தான் சுதந்திரம், சொத்து; ஆண்களுக்கு மட்டும்தான் வீடும், வாழ்க்கையும் என்ற தனியுடைமை ஏற்பட்ட பிறகு, மனிதர்கள் தனக்கான தனிச் சொத்தினைச் சேர்க்கின்றார்கள். தான் உயிருடன் இருக்கின்றவரையினில் தான் சேர்த்த சொத்தானது அவருடையதாகவும், அவர் இறந்த பிறகு யாருக்குப் பயன்படப்போகிறது என்ற எண்ணம் ஏற்பட்டு; யாருக்கோ அந்தச் சொத்தானது பயன்படுவதைவிட, தனக்குப் பிறந்த குழந்தைக்கே பயன்பட வேண்டும என்று மனிதர்கள் சிந்தித்து, அவ்வாறு வாரிசு தேட ஆரம்பித்த காலங்களில், அதற்கேற்றவாறு சமுதாயத்தினையும் அமைக்க வேண்டியதாயிற்று (ஆனைமுத்து, 2009, பக். 283-292). அதனையொட்டி, சந்தேகத்திற்கிடமில்லாமல் தனக்கே பிறந்த குழந்தை என நிச்சயம் செய்யக்கூடிய ஒரு ஏற்பாடாகத்தான், கணவன்-மனைவி என்ற ஏற்பாடு செய்திருக்க வேண்டும் என்ற மார்க்ஸியப் பார்வையினையே பெரியார் உறுதியாக நம்பியதுடன், பொதுமக்களிடம் அதனைக் கொண்டுசேர்க்கவும் செய்தார் (Engles, 1909 மற்றும் *விடுதலை* 1959, ஏப்ரல் 20).

அதாவது, தன்வழிப் பிறந்த குழந்தை வாரிசாக இருக்க வேண்டும் என்பதே திருமணத்தின் முக்கிய நோக்கமாக அமைகின்றது என்ற பெரியார், ஒவ்வொரு சமூகத்தின் பழக்கவழக்கங்களின்படி அத்தகைய பூர்வீகச் சொத்துக்களை அனுபவிக்கச் சிலருக்கு ஆண்குழந்தையும், சிலருக்குப் பெண்குழந்தையும் தேவைப்படுகிறது என்றார் (*விடுதலை* 1944, டிசம்பர் 16).

உதாரணமாக, பொதுவாக ஆணாதிக்கச் சமூகத்தில் ஆண்வாரிசுகளுக்கே சொத்தும், உரிமைகளும் உரித்ததாக இருந்தபொழுது, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை தேவதாசி சமூகத்தினில் சொத்து மற்றும் இதர சமுதாய உரிமைகள் அனைத்தும் தேவதாசிகளுக்குப் பிறந்த ஆண்குழந்தையினைத் தவிர்த்துப் பெண்குழந்தைகளையே சாரும் என்பது சமூகப் பழக்கமாக இருந்துவந்தது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும் (Jeevanandam & Rekha, 2017).

தன் சொத்துக்கு வரும் வாரிசு என்பவர் தனக்கே பிறந்ததாக இருக்கவேண்டும் என்கிற காரணத்தினால், பெண்ணைத் தனக்கே உரிமையாக்கிக்கொண்டு, அவர்களைத் தன்னையன்றி வேறு ஆணினை நாடாமல் இருக்கும்படிச் செய்யக்கூடிய நிர்பந்தமானது சமூகத்தில் ஏற்பட்டது என்ற பெரியார் (ஆனைமுத்து, 2009, பக். 283-292), தான் தேடிய செல்வங்கள் அனைத்தும் தனது இறப்புக்குப் பிறகு அனுபவிக்கப்போகும் வாரிசு என்பவர் தனக்கே பிறந்தாக, தன் இரத்தத்திலிருந்து தோன்றியதாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்களே, பெண்மக்களை அடிமையாக்கவும், பெண்களின் இயற்கையான உரிமைகளைப் பறிமுதல் செய்யவும், ஆணுக்கு மட்டுமே சொத்துரிமை எனக் கொடுக்கப்பட்டதன் காரணம் என்றதுடன், ஆணிற்கு மட்டும் சமூகத்தினில் நிபந்தனைகள் பல தளர்த்தப்பட்டிருப்பது என்பதற்கும் இதுவே காரணமாகும் என்கிறார் (ஆனைமுத்து, 2009, பக்கம். 283-292).

அதன்பொருட்டே, ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண்தான் கணவனாக இருக்க வேண்டும், அதனுடன் அப்பெண் மற்ற யாருடனும் கலவி செய்யக்கூடாது என்று கருதி வருவதன் அடிப்படை நோக்கமானது (மேற்குறிப்பிட்ட நூல்), தனிச்சொத்துடைமையே ஆகும் (*விடுதலை* 1944, டிசம்பர் 16). தனியுடைமைச சுதந்திரம் இல்லாதிருந்தபொழுது ஆணிற்குத் தனக்கே குழந்தை பிறக்க வேண்டும் என்கின்ற நிர்பந்தம் என்பது உதித்திருக்க இடமே இல்லை என்ற பெரியார் (ஆனைமுத்து, 2009, பக். 283-292), சொத்தில் இருந்துதான் இந்தத் திருமணமுறை பிறந்திருக்க வேண்டும் என்றார் (*விடுதலை* 1959, ஏப்ரல் 20).

பணக்காரர்களாகவும் உயர்சாதிக்காரர்களாகவும் தம்மைக் கருதிக்கொண்டு இருப்பவர்களிடம்தாம் பெண்கள் கட்டுப்பாடுகள் என்பது மிகவும் இறுக்கமாகவும்,

சாதாரண பாட்டாளி மக்கள், ஏழைகள், அன்றாடக் கூலிகளாக வாழ்பவர்களிடத்தில் இத்தகைய கடுமையான கட்டுப்பாடுகளைக் காணமுடியாததையும் இதற்கு உதரணமாகப் பெரியார் சுட்டுகின்றார் (*விடுதலை* 1959, ஏப்ரல் 20). இவ்வாறாக, தனியுடமைச் சமூகத்தின்பால் ஏற்படுத்தப்படும் இத்தகைய அடக்குமுறைகளை ஒழிப்பது என்பது எளிதில் ஏற்படக்கூடிய காரியமாக இல்லை என்று பெரியார் உணர்ந்திருந்தார் (ஆனைமுத்து, 2009, பக். 223-224). எனவே, பெண்களுக்குள்ளான அனைத்துவிதத் தீங்குகளுக்கும் ஆதாரமான தனியுடைமை என்பது ஒழியும்வரை பெண்ணடிமைத்தனமும் நீங்காது என்று ஆணித்தரமாகப் பெரியார் கூறினார் (ஆனைமுத்து, 2009, பக். 283 -292).

## 1.3. பார்ப்பனிய ஆணாதிக்கம்

இந்தியாவினைப்பொருத்தமட்டில் சேமித்துவைத்துள்ள பொருளினைப் பாதுகாப்பதற்கு மட்டுமல்லாமல், திருமணம் என்ற நிறுவனமானது சாதியக் கட்டமைப்பின் ஆணிவேரைப் பாதுகாக்கச் செய்யப்படும் ஒரு பண்பாட்டு-கலாச்சார ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றது.

பார்ப்பனியக் கருத்தியல் இந்தியாவைப் பொறுத்தவரை பல்வேறு இனக் குழுக்களின் பண்பாட்டு, கலாச்சாரத் தளங்களில் ஆழமாக வேரூன்றி அவற்றின் மீது அளப்பரிய தாக்கத்தினைச் செலுத்தி வந்துள்ளது/வருகின்றது. மேலும் அது இந்தியச் சமூகத்தினைச் சாதியச் சமூகமாக கட்டமைக்கச்செய்ததுடன் பார்ப்பனிய மேலாதிக்கத்தினை நிலைநிறுத்தியும் வருகின்றது. அத்தகைய சாதியக் கட்டமைப்பானது பெண்ணுடலினைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவே நிலைநிறுத்தப்பட்டுவருகின்றது என்பது வரலாற்றுக் கண்கூடாகும்.

***ஆரிய வர்ணம் என்று தங்களை என்றுமே தனித்து பிரதானப்படுத்திக் கொண்டு வாழ்ந்துவரும் பிராமணர்கள் தங்களது தனித்த அடையாளத்தைக் காத்துக் கொள்ள யக்ஞத்தையும் அது சார்ந்த வேதம், சடங்குகள் முதலியவற்றை பயன்படுத்திக் காத்ததுபோன்று அகமண முறையின் மூலம் சாதித் தூய்மைக்கு வழிவகுத்தனர் (முத்துமோகன், 2016, பக்கம். 87-112).*** அதன் வழியாகவே சாதியமானது இன்றுவரையும் காப்பாற்றப் பட்டுவருகிறன்து. பொதுவாகவே அந்தச்சாதியத்தின் தூய்மை என்பது பெண்களை கட்டுப்படுத்துவதன் மூலமே இங்கே பாதுகாக்கப்படுகின்றது. இதனைப் பார்ப்பனியக் கருத்தியலின் ஆதார நூல்களில் ஒன்றான மனுதர்ம சாஸ்திரத்தின் ஒன்பதாவது அத்தியாயமானது நன்கு உணர்த்துகின்றது. (Buhler, 1886, பக். 196-198, 315-320. மற்றும் *அசல் மனுதரும சாஸ்திரம்*, 2011, பக்கம். 236-283).

மேலும், தனது மரணத்திற்குப் பின்னான சிரமபரிகாரம்/கருமகாரியங்கள் முதலியவற்றைச் செய்ய ஒரு ஆண்மகன் தேவை என்று சனாதன/ 'இந்து' மதம் வலியுறுத்திவந்துள்ளது (மேற்குறிப்பிட்ட நூல்). சொத்துக்காகக் குழந்தைகள் இல்லாவிட்டாலும் திதி, திவசம், போன்றவற்றைச் செய் வதற்காகவே ஆண்குழந்தைகள் என்பது தேவைப் படுகிறது (ஆனைமுத்து, 2009, பக். 224-225). வசதி படைத்தவர்களின் பொருளினில் ஒருபங்கினைப் பெற வேண்டிப் பார்ப்பனர்கள், கடவுள், நரகம் போன்றவற்றைக் கட்டமைத்தனர். ஒருவர், தான இறந்த பின் தன் பேரைச் சொல்லித் தனக்காகக் கருமம் செய்யக் குழந்தைகளைப் பெற்றுவிட்டுச் செல்வது அவசியமென்றும், குழந்தைப் பேறில்லாதவர்களால் சொர்கத்திற்குச் செல்ல இயலாது என்று கூறிச் சனாதன/'இந்து' மதம் குழந்தைப் பேற்றினைக் கட்டாயமாக்கியது (ஆனைமுத்து, 2009, பக். 283-292).

இதன்மூலம் அறிவது என்னவெனில், இந்த உலக வாழ்விற்காக, சொத்துரிமைக்காக ஒரு குழந்தை பெறுவது அவசியாமாக்கப்பட்டதைவிட, வைதீகத்திற்காக ஒரு குழந்தையைப் பெறவேண்டிய அவசியம் என்பது இந்தியச் சமூகத்தில் அதிகமாக வற்புறுத்தப்பட்டுவந்துள்ளது. அவ்வகையில் ஒருவருக்குக் குழந்தை இல்லாமல் இருக்கும் பட்சத்தில், அந்த ஆணின் ஒப்புதலின் அடிப்படையில், அவர் மனைவியினை வேறு யாருடன்கூடியாவது ஒரு குழந்தையைப் பெற வேண்டும் என்று பார்ப்பனியக் கருத்தியல்கள் நிர்பந்திக்கின்றன (மேற்குறிப்பிட்ட நூல்). இம்முறையினைப் பற்றி அண்ணல் அம்பேத்காரும் பின்னர்ச் சமூக ஆய்வாளர்களான ஷர்மிளாரெகே (Sharmila, 2013) மற்றும் உமாசக்கரவர்த்தி அவர்களும் 'பார்ப்பனிய ஆணாதிக்கம்' (Brahmanical Patriarchy) என்ற கருத்தியலாகச் சான்றோர் அவையில் முன்மொழிந்தார்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது (Uma, 1993, பக். 579-585).

## 1.4. 'திருமணம்' என்ற நிறுவனத்தின் மீதான விமர்சனம்

பெண்விடுதலையினை மட்டுமே முதன்மைபடுத்திய பெரியார் 'திருமணம்' என்ற நிறுவனம் பெண்ணடிமைத்தனம் என்பதனையே ஆதாரமாகக் கொண்டு இருப்பதால் அதன்மீது அவநம்பிக்கைகளைக் கொண்டிருந்தார். மணமக்களின் சம்மதமின்றிப் பெற்றோர்களால் நிச்சயிக்கப்படும் கட்டாயத் திருமணங்களை மிகக் கடுமையாக விமர்சித்த பெரியார், பெண்களை என்றென்றும் அடிமைகளாக வைத்திருக்கச் செய்யப் பட்ட சூழ்ச்சி முறைதான் திருமணம் என்றார் (ஆனைமுத்து,2009,பக். 283-292). பாமர மக்களை எப்படிச் சூத்திரானாக்க, உடலுழைப்புக்காரனாக்க, பார்ப்பனியச் சாத்திரங்கள் உருவாக்கப்பட்டனவோ அப்படிப் பெண்களை அடிமையாக்கத் 'திருமணம்' என்ற முறையும் ஏற்படுத்தப்பட்டது என்றார் பெரியார் (*விடுதலை* 1973, ஜூன் 28). அத்தகைய திருமணம் எனும் நிறுவனமே

பெண்ணடிமைத்தனங்களுக்கான ஆணிவேர் என்றும் பெண்ணினத்திற்குச் சொல்லொணாத் துன்பங்களைத் தரக்கூடியதும் அடிமையாக்குவதும் என்றும் பெரியார் கருதினார் (பெரியார், 2004, பக். 32-35).

இந்தியச் சமூகமானது பொதுவாகவே பெண்களைத் 'திருமணம்' என்ற நிறுவனத்திற்காகவே தயார் செய்து வந்ததுடன், திருமணம் என்பதனையே அவர்களின் வாழ்வின் பிரதானமான இலக்காக ஆணாதிக்கச் சமூகம் நிர்ணயித்து, பெண்களை அப்பிடியிலிருந்து தப்பிப்பதற்கு வழியேதும் இன்றிச் செய்கின்றது என்று குஞ்சிதம் அம்மையார் குறிப்பிடுகின்றார் (*Revolt* 19, அக்டோபர் 06). திருமண வாழ்க்கை என்பது பல வகையிலும் பெண்மக்களுக்குப் பாதகமான முறையிலேயே இருந்துவருகின்றது என்ற சுயமரியாதைக் காரர்கள் (*குடிஅரசு* 1929, டிசம்பர் 29), திருமணம் எனும் நிறுவனமானது பொதுவாகவே பெண்களை ஆண்கள் அடிமையாக்கிக்கொள்வதுடன், அவர்களை மீளா அடிமைத்தனத்தில் ஆழ்த்தச்செய்வதாக உள்ளது என்றனர் (*விடுதலை* 1959, ஏப்ரல் 20). புராண மரபின் அடிப்படையில் செய்யபடும் திருமணங்களின் அடிப்படைத் தத்துவம் என்பதே பெண்கள் ஆண்களுக்கு அடிமைகள், சுதந்திரமற்றவர்கள், மனிதத் தன்மைக்கு அருகதையற்றவர்கள் என்பவற்றை நிலை நிறுத்தச் செய்யப்படும் சடங்கியல் நிகழ்வுகளே என்று பெரியார் குறிப்பிடுகின்றார் (*பகுத்தறிவு* 1934, அக்டோபர் 07).

இந்தியச் சமூகத்தினைப் பொறுத்தமட்டில், திருமணம் என்ற அமைப்புமுறையே கணவன்-மனைவி என்ற உறவும் பெண் அடிமைத்தன்மையும் நிலை பெறக் காரணங்களாக அமைகின்றன. ஒருவர் மனைவி என்று ஆகிவிட்டால், அவர்கள் 'சரியான அடிமை' என்ற இயல்பான தோற்றமானது சமுதாய நடைமுறையில் உருவாக்கம் பெறுகின்றது என்று குறிப்பிடுகின்றார் பெரியார் (*விடுதலை* 1973, ஜூன் 28). திருமணச் சடங்கு பெண்ணினை ஒரு குறிப்பிட்ட ஆணிற்கான அடிமை என்று அடையாளப்படுத்துகிறது (பெரியார், 2004,ப. 12). 'கன்னிகாதானம்', 'பெண்கொடுத்தல்', 'பெண்வாங்குதல்', 'தாலிகட்டுதல்' போன்ற சடங்குகளும், கணவனைக் குறிக்கும் வார்த்தைகளான 'கொண்டவன்', 'கொண்டான்', என்ற சொற்களும் பெண்கள் அடிமையாகப் பாவிக்கப்படக்கூடியவர்கள் என்ற பார்ப்பனியக் கருத்துக்களையே பிரதிபலிக்கின்றன (*பகுத்தறிவு* 1934, அக்டோபர் 07).

'திருமணம்' என்பது இயற்கைக்கு மாறானதுடன், பெரும்பாலும் பெண்களின் பாலியல் சுதந்திரத்தை மட்டுமே கட்டுப்படுத்தக்கூடியதாக உள்ளது என்ற சுயமரியாதைக்காரர்கள், 'திருமணம்' 'புனிதமாக்கப் படுதலை'க் கேள்விக்குட்படுத்தினர். 'திருமணம்' என்பது புனிதமெனில் இல்லற வாழ்வினில் கொலைக் குற்றங்கள் (conjugal murders) ஏற்படுவது ஏன் என்ற கேள்வியினையும் எழுப்பினர் (பெரியார், 2004, பக். 32-35). மேலும், திருமணத்திற்குத் *தெய்வீகத் தன்மை* என்பதாக அர்த்தமற்ற ஒரு போலிப் பெயரைக் கொடுத்துப் பெண்கள் வஞ்சிக்கப்பட்டே வருகிறார்கள் என்ற பெரியார் (ஆனைமுத்து, 2009, ப. 243), 'திருமணம்' என்ற தத்துவமானது போய் விட்டால் ஒழுக்கம் என்பது சமூகத்தில் இல்லாமல் ஆகிவிடும் என்று ஆணாதிக்கச் சமுதாயமானது பூச்சாண்டி காட்டுகின்றது என்றார் (ஆனைமுத்து, 2009, பக். 283-292).

ஓர் ஆண் ஒரே பெண்ணுடன்தான் வாழ்ந்துவர வேண்டும் என்ற நிர்பந்தத்தினைப் பற்றிக் கூற இதுவரை யாரும் இங்கு எந்தவொரு சாத்திரத்தையும் சுட்டிக் காட்டவில்லை. மாறாக, பெண் ஓர் ஆணுடன்தான் வாழவேண்டும் என்பதற்கு மட்டும் பல ஆதாரங்கள் இங்கே உருவாக்கப்பட்டுள்ளன. அன்றியும், ஓர் ஆண் பல பெண்களை மணந்துகொள்வது என்பது கடவுளர்க்கோ, சட்டத்திற்கோ விரோதமாகக் கருதப்பட்டதும் இல்லை. ஆனால், ஒரு பெண் பல ஆண்களை மணப்பது என்பது மட்டும் சட்ட விரோதமாகவும், சாத்திர விரோதமாகவும், சம்பிரதாய விரோதமாகவும் கட்டமைக்கப்படுகின்றன (*விடுதலை* 1948, அக்டோபர் 24). பார்ப்பனிய ஆண் கடவுள்களான சுப்பிரமணியனுக்கும், கிருஷ்ணனுக்கும் இரு புறங்களிலும் இரு மனைவியர்கள் இருக்கிறார்கள், அதைப் போலவே பெண் கடவுளான அம்மனுக்கு இரு புறங்களிலும் ஆண்களை வைக்க இந்தச் சமூகம் அனுமதிக்குமா என்ற அடிப்படைக் கேள்வியைப் பெரியார் எழுப்பினார் (ஆனைமுத்து, 2009, ப. 366).

அதேபோல்தான், பெண்களுக்குக் கடவுளைத் தொழும் உரிமைகூட மறுக்கப்பட்டு, அவரவர் கணவனே அவரவருக்குக் கடவுள் என்ற கருத்துருவாக்கம் கட்டியெழுப்படுகிறது (*விடுதலை* 1959, ஏப்ரல் 20). அறிவிருந்தும் பெண்கள் இப்படி ஆண்களுக்கு அடிமைகளாயிருக்க வேண்டியதன் அவசியத்தின் தேவை என்ன இருக்கிறது என்றனர் சுயமரியாதைக்காரர்கள்(ஆனைமுத்து, 2009, பக். 283-292). பெண்கள் இந்தத் திருமண முறையிலிருந்து விடுதலை பெறும் வரைக்கும், பெண்கள் ஆண்களிடமிருந்து விடுதலை பெறும் வரைக்கும், இந்த நாடு சுதந்திரம் பெற்ற நாடாக ஆகவே முடியாது என்ற பெரியார் (மேற்குறிப்பிட்ட நூல்), பெண்விடுதலையினைக் கருதித் 'திருமணம்' என்ற சடங்கியல் முறையினையே சட்டவிரோதமாக ஆக்க வேண்டும் என்றார் (*விடுதலை* 1973, ஜூன் 28).

### 1.5.0. திருமணச் சடங்குகள்

இந்த உலகில் மனிதர்களும் ஓர் உயிரின வகையைச் சார்ந்தவர்கள்தாம். அப்படியிருக்க, மற்ற எந்த உயிரினங்களிலும் காணப்படாத திருமணம் எனும் முறை மனித இனத்திற்கு மட்டுமே உடையதாகக் காணப்

படுகின்றது (ஆனைமுத்து, 2009, பக். 283-292). அப்படியிருப்பினும், கலவிக்கும், துக்கத்துக்கும் விபச் சாரத்திற்கும், சொத்துக்கும், திருமணத்துக்கும் என முழுமைக்கும் பொருந்தும்படியான நடைமுறைகளோ, வரையறைகளோ, காரணகாரியங்களோ இவ்வுலகம் முழுமைக்குமுள்ள மனிதச் சமூகத்திற்கு எனப் பொது வானதாக எதுவும் இருக்கவில்லை என்று பெரியார் குறிப்பிடுகின்றார் (*குடிஅரசு* 1945, ஜூன் 02).

‘கலவிமுறை’,‘சொத்துமுறை’ என்பன பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட தேசம், மதம், சாதி, பழக்கவழக்கங் கள் சார்ந்ததாக இருந்துவருகின்றனவே தவிர, அவற் றிற்கான வேறு நியாயமான, நிர்பந்தமான, உலகம் எங்குமிற்கான ஒரே வழிமுறைகள் என்பது கிடை யாது. அதேபோல், இந்த விடயங்களில் இதுதான் சரி,இதுதான் தப்பு என்று குறிப்பிடுதற்கு வரைமுறை ஏதுமில்லாமல் இருந்துவருகிறது என்று குறிப்பிடு கின்றார் பெரியார் (மேற்குறிப்பிட்ட நூல்).

சனாதன/‘இந்து’ மத வைதிக முறைப்படிச் செய்யும் திருமண முறைகள் எல்லாம் இந்திய மக்களுடைய நாகரிகத்துக்கும் பண்புக்கும் பொருத்தமற்றவைகளா கவே உள்ளன (ஆனைமுத்து, 2009, ப. 350). திரு மணச் சடங்குகள் என்பவை எதற்காகச் செய்யப்படு கின்றன, அவற்றின் அர்த்தங்கள் என்ன, அவற்றின் அவசியங்களோ, ஆதாரங்களோ, தொடக்கங்களோ, பொருத்தப்பாடுகளோ என்னவென மணமக்களுக்கோ, பெற்றோர்களுக்கோ, உறவினர்களுக்கோ, வேறு யாருக்குமோ தெரிய வாய்ப்பில்லை என்று பெரியார் சுட்டுகின்றார் (*புரட்சி*1934, ஜூன் 17). அதே வேளை யில், பெண்பிள்ளைகளுக்கு மட்டும் ருது/பூப்புனித நீராட்டுவிழா என்ற சடங்கு செய்வது எதற்கு என்ற கேள்வியினை எழுப்பிய சுயமரியாதைக்காரர்கள், தமது வீட்டில் பெண் பக்குவமடைந்திருக்கிறார், ‘வேண் டுவோர் கேட்கலாம்’ என எவ்வாறு ஒரு பொருளை வியாபாரத்திற்காக விளம்பரம் செய்கிறார்களோ அது போவே,பருவமடைந்த பெண்குழந்தைகளைப் பொரு ளெனக் கருதியே இந்திய நாட்டினில் இத்தகைய சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று சிவகாமி அம்மையார் குறிப்பிடுகின்றார் (*குடிஅரசு* 1932, ஜூன் 05).

திருமணம் என்ற நிறுவனத்தினையும், இன்னும் பிற சடங்குகளையும் அவற்றின் மீதான வெறுப்பினால் மட்டுமே பெரியார் கேளிவிக்குட்படுத்தவில்லை என் பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும். அவரின் கூற்று: ***சடங்குகளில் ஒரு குறிப்பிட்ட இடத்திலே சட்டிப்பானையை அடுக்கவில்லை என்றால், அதற்கும் நமக்கும் சண் டையா? இந்த மாதிரிக் காரியம் எல்லாம் தேவை யில்லை.அவசியமானதைத் தவிர வேறு ஒன்றும் வேண் டியதும் இல்லை. எதற்காக நெருப்பைக் கொளுத்து வது?... திருமணத்திலே என்ன பெரிய காரியம் இருக் கிறது? சாப்பிடுகிற நெய்யை நெருப்பிலே ஊற்றுவத னால் யாருக்கு என்ன பலன்? இவைகளை எல்லாம் நாம் கூடாது என்று சொன்னால் நமக்கு நெருப்போடு என்ன சண்டையா? இல்லை. நெய்யோடுதான் சண் டையா? இல்லை. அவைகள் எல்லாம் இருக்க வேண் டிய இடத்தில் இருக்கவேண்டும்*** என்கிறார் (*விடுதலை* 1951, பிப்ரவரி 17).

அதுமட்டுமல்லாமல், இந்திய மரபில் ஒருவரின் மதம் மற்றும் சாதிய உட்பிரிவுகளைப் பிரதானமாகக் காட் டிக்கொள்வதற்காகத்தான் திருமணம் என்ற சடங்கு முறைகள் புகுத்தப்பட்டுள்ளன. சடங்குகள் உண்டாக் கிய நோக்கங்கள் எல்லாம் சாதியை நிலைநாட்டவே. சடங்குகளைச் செய்யவேண்டிய அவசியமும், அதனால் ஏற்படப்போகிற பயனும், அதன் அவசியமும் என்ன வென்பதைப் பற்றி யாரைக் கேட்டாலும் கூற முடி யாது. ‘இது அவரவர்களின் சாதிய வழக்கம்’ என்று தான் கூறிவருவார்கள். ஒவ்வொருவரின் சாதியினைப் பாதுகாக்கவே ஒவ்வொரு விதமான சடங்குகளையும் உருவாக்கி, நிரந்தரமாக மக்களைப் பிரித்துவைக்கவே இந்தச் சடங்கு முறைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன என்ற பெரியார் (ஆனைமுத்து, 2009, பக். 357-358), இத்தகைய மடமை, மூடப்பழக்கங்கள் ஒழிந்து சீர்திருத்த முறையில் திருமணம் செய்துகொள்ள ஏராளமானஇளைஞர்கள் முன்வரவேண்டும் என்றார் (*விடுதலை* 1951, பிப்ரவரி 17).

### 1.5.1. சுயமரியாதைத் திருமணம்

திருமண முறைகளில் அடிப்படையான மாற்றங்கள் வேண்டும் என்று உணர்ந்த சுயமரியாதைக்காரர்கள் அத்தகைய மாற்றங்களுக்கான முன்னெடுப்புகளைச் சமூகத்தில் ஆக்கபூர்வமாகச் செய்துவந்தனர். சமூகத் தில் நிகழும் மாற்றங்கள் எல்லாம் அறிவு மற்றும் அவரவர் வசதிகளை அடிப்படையாகக் கொண்டதா கவே இருக்கவேண்டும் என்றார் பெரியார் (ஆனை முத்து, 2009, ப. 354). ஆனால், இந்தியத் திருமண முறைகளோ அறிவு, வசதி ஆகியவைகளை மட்டும் சார்ந்ததாக இல்லாமல், சமுதாய அமைப்பு, அரசியல் சட்டம், பொருளாதாரம், சொத்துரிமை ஆகியவை களையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கின் றன. இவைகளை உணர்ந்திருந்த சுயமரியாதைக்கா ரர்கள் அத்தகைய நடவடிக்கைகளில் உரிய மாறுத லினைக் கொண்டுவர வேண்டும் என்று விரும்பி, அதற்கான முன்னெடுப்புகளைச் செய்தனர் (ஆனை முத்து, 2009, ப. 354).

திருமண முறைகளில் செய்யக் கூடிய மாறுதல்கள் எல்லாம் அவரவர் பகுத்தறிவினையும் அனுபவ அறிவி னையும் அனுசரித்துப் பார்த்தே நடக்க வேண்டும் என்கின்ற அடிப்படைகளிலேதான், சுயமரியாதைத் திருமணங்கள் சமூதாயத்தில் முன்னெடுக்கப்பட்டனவே தவிர வெறும் மாறுதல் என்பதற்காகவோ (*பகுத்தறிவு* 1934,அக்டோபர் 07), நாத்திகக் கொள்கை என்பதற் காகவோ இல்லை என்ற பெரியார், நாத்திகம் என்ப தனை அவரவர்களின் மன உணர்ச்சி, ஆராய்ச்சித்

திறன் ஆகியவைகளைச் சார்ந்ததே தவிர, அது ஒரு குறிப்பிட்ட குணமோ, கட்சியோ, மதமோ அல்ல என்றார் (ஆனைமுத்து, 2009, ப. 367). எனவே திருமண முறைகளில் ஏற்படும் மாற்றங்களை வெறும் ஆத்திகம், நாத்திகம் என்ற வாதங்களின் அடிப்படையாகக் கொண்டு சுயமரியாதைக்காரர்கள் அணுகவில்லை என்பது இதன்மூலம் புலனாகிறது.

அறிவு, அனுபவம், ஆராய்ச்சி ஆகியவற்றின் அடிப்படையிலான திருமண முறைகளுக்கே சமூகத்தில் இடம் இருக்கவேண்டும் என்ற சுயமரியாதை இயக்கத்தினர் (ஆனைமுத்து, 2009, ப. 349), அத்தகைய அறிவினைச் சார்ந்த திருமண முறைகள் வாழ்நாள் முழுமைக்கும் பொருந்தும்படியாகவும், மனித வாழ்வையும், பிறவிக் குணங்களையும் மேன்மைப்படுத்துவதாகவுமே இருக்க வேண்டும் என்று விரும்பினர் (ஆனைமுத்து, 2009, ப. 348).மேலும், 'தெய்வீகம்','பழக்கம்', 'வழக்கம்', 'சாத்திரம்', என்கிற வார்த்தைகள் எல்லாம் முன்னேற்றத்துக்கும், பகுத்தறிவுக்கும், சுதந்திரத்திற்கும் பிராதான எதிர்வாதங்களாக இருக்கின்றபோது சுயமரியாதைத் திருமணம் என்பதில் மேற்படி முன்னேற்றத்திற்கும் சுதந்திரத்திற்கும் எதிரான எந்தவொரு வாதங்களையும் சுயமரியாதைக்காரர்கள் அவற்றினுள் அனுமதிக்கவில்லை (*பகுத்தறிவு* 1934, அக்டோபர் 07).

பெண்களின் சுயதேர்வுகளுக்கு மதிப்பு தரும் வகையிலும், சாதியக் கட்டுமானம் பெண்ணுடல் சார்ந்தே கட்டமைக்கப்படுகின்றது என்ற சமூக அறிவியலின் அடிப்படையிலும், சுயமரியாதைக்காரர்கள் காதல் திருமணம், தேர்வுத் (choice marriages) திருமணங்கள் மற்றும் சாதியக் கலப்புத் திருமணங்களை ஊக்குவித்தனர் (*குடிஅரசு* 1929, டிசம்பர் 01). இத்திருமணங்கள்மூலம் சாதியத்தை, சமூகத்திலிருந்து ஒழித்துவிட முடியும் என்ற சமூக அறிவியல் புரிதலின்பால் சுயமரியாதைக்காரர்கள்நின்றனர் என்று பகுத்தறிவுவாதியான இராகவன் தனது *ஜீவகாருண்யச் சமயம் மகளிர் உரிமையை மறுக்குமா?* என்ற கட்டுரையில் குறிப்பிடுகின்றார் (*குடிஅரசு*1931, நவம்பர் 08). சாதிவேற்றுமையை விலக்கவேண்டுமானால், ஒரு பெண்ணுக்கு ஏற்ற இளைஞன் எந்த மரபிற் பிறந்தவனாயிருந்தாலும், அவன் அவளை விரும்புவானாயின் அவனுக்கே அவளை வாழ்க்கைப்படுத்துதல் வேண்டும் என்று ஆண்டாள் அம்மையார் குறிப்பிடுகின்றார் (*குடிஅரசு* 1932, மே 22 மற்றும் ஜூன் 05). சுயமரியாதைத் திருமணத்தில் சாதி, வகுப்பு, குலம், கோத்திரம் என்பவை கவனிக்கப்படாமல் மணமக்களுடைய தகுதிகளே பிரதானமாகக் கவனித்துப் பார்க்கப்பட்டது/பார்க்கப்படுகின்றது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும் (*பகுத்தறிவு* 1934, அக்டோபர் 07).

சுயமரியாதைத் திருமணத்தின் முக்கிய தத்துவம் என்பது கூட்டுவாழ்க்கையில் ஆணுக்கும், பெண்ணுக்கும் எந்தவிதவித்தியாசமோ, உயர்வுதாழ்வோ இல்லை என்பதும், சகல துறைகளிலும் சமசுதந்திரம் அளிக்கப்படவேண்டும் என்பதுமே என்றார் பெரியார் (*பகுத்தறிவு* 1934, அக்டோபர் 07). சுயமரியாதைத் திருமணத்தில் ஆணுக்கும்பெண்ணுக்கும் சமஉரிமை இருக்கின்றது. ஆனால், ஆரியரின்/பார்ப்பனியத்தின் எண்வகைத் திருமண முறைகளில் ஒன்றில் கூடப் பெண் ஓர் உயிருள்ள பொருளாகக்கூட மதிக்கப்பட்டதே இல்லை என்பதனை அறிய முடிகிறது என்று குறிப்பிட்ட பெரியார் (ஆனைமுத்து, 2009, ப. 376), திராவிடர் திருமண முறைகளில்கூடச் சடங்குமுறை சார்ந்த திருமணங்கள் நடைபெற்றதற்கான ஆதாரங்களினை எந்தவொரு பண்டைய திராவிட நூல்களிலிருந்தும் பெறமுடிவதில்லை என்ற வரலாற்றுப் புரிதலுடனேயே சுயமரியாதைத் திருமணங்களை முன்னெடுத்தார்(*விடுதலை* 1948, அக்டோபர் 24 மற்றும் ஆனைமுத்து, 2009, ப. 354).

சுயமரியாதைத் திருமணங்களின் மூலம் பார்ப்பனியம் சமூகத்தில் கட்டிவைத்திருந்த ஒவ்வொரு கட்டினையும் சுயமரியாதைக்காரர்கள் உடைத்தனர். குறிப்பாக, இராகு காலம், ஜாதகம், முகூர்த்தம் என்பவை எல்லாம் பெருந்தொல்லை என்று கருதி, சுயமரியாதைத் திருமணங்களின் மூலம் அவை ஒவ்வொன்றினையும் அறிவுபூர்வமாகத் தகர்த்தனர் (ஆனைமுத்து, 2009, ப. 358). ஒழுக்க விதிகளின் அடிப்படையிலும், மனித சமுதாயத்தை உயர்நிலைக்கு மேம்படுத்தும் உந்துதலுடனும், மூடநம்பிக்கைக்கு ஆதரமானதும், பார்ப்பனியத்திற்கு அடிபணியச்செய்வதுமான எல்லாவிதச் சடங்குகளையும்தவிர்த்து(*விடுதலை*1948, அக்டோபர் 24), மூடப் பழக்கவழக்கங்களை அடிப்படையாகக்கொண்டு செய்யப்படும் பார்ப்பனியச் சடங்குகளையோ, காலவிரயங்களையோ தவிர்த்து (*குடிஅரசு* 1930, அக்டோபர் 12 மற்றும் ஆனைமுத்து, 2009, ப. 355), சாதியக் கலப்பு, எளிமை அடிப்படையிலான திருமணங்களையே சுயமரியாதைக்காரர்கள் முன்னெடுத்தனர் (*குடிஅரசு* 1930, செப்டம்பர் 21).

அதுமட்டுமல்லாமல், பாரம்பரியத் திருமண முறைகளில் ஏற்படும் திருமணம் சம்பந்தமான செலவு, மெனக்கெடல் மற்றும் பிற தேவையற்ற கஷ்டநஷ்டங்கள் முதலியவற்றினைப் பற்றி யாரும் இலட்சியம் செய்வதே இல்லை. அத்திருமணங்கள் பெரும்பாலும், ஆடம்பரத்தினை மையமாகக் கொண்டு, வீண்செலவீனங்களுக்காக, ஒருவரின் பணத்தகுதியினை மீறிக் கடன் பெற்றாவது செய்யப்படுகின்றன (*புரட்சி* 1934, *ஜூன் 17*). இத்தகைய திருமணக் கடன்களால் மணமக்களின் பெற்றோர் வெகுநாளைக்கு அவதியுறவேண்டியிருப்பதுடன், சில குடும்பங்களெல்லாம் இத்தகைய திருமணச் செலவுகளாலேயே ஏழ்மை நிலைக்குத் தள்ளவும் படுகின்றனர் (மேற்குறிப்பிட்ட நூல்). இப்படிப்பட்ட கொடுமைகளும், முட்டாள்தனமற்ற அம்சங்

ISSN 2320-4842

களைக் கொண்டதாகவே சுயமரியாதைத் திருமணங்கள் இருந்துவருகின்றன (மேற்குறிப்பிட்ட நூல்).

திருமணம் என்பதைச் சடங்குகள் என்று எண்ணாமல் வாழ்க்கை ஒப்பந்தமாகவே சுயமரியாதைக்காரர்கள் கருதினர் (மேற்குறிப்பிட்ட நூல்). வாழ்க்கைச் சுதந்திரத்தில் மணமக்கள் இருவருக்கும் சமசுதந்திரம் வேண்டும்.அதுவே சுயமரியாதை இயக்கத்தின் முதல் இலட்சியமாகவும் இருந்துவந்துள்ளது (ஆனைமுத்து, 2009, ப.368). திருமணம் என்பது சுதந்திர வாழ்க்கையாகவும், சமத்துவ வாழ்க்கையாகவுமே இருக்க வேண்டுமே ஒழிய, அடிமை வாழ்க்கையாகவும், உயர்வு-தாழ்விற்கான வாழ்க்கையாகவும் இருக்கக்கூடாது என்பதே பெரியாரின் தீர்க்கமான எண்ணமாக இருந்தது (*குடி அரசு*1935,ஜூன் 16). வாழ்க்கை நடத்துவது என்பது வியாபாரம் நடத்துவதுபோன்ற ஒரு செயல்தான் என்ற பெரியார், வியாபாரத்திற்கு முதலும் உழைப்பும் எப்படித் தேவையாய் இருக்கின்றதோ, அதுபோன்று வாழ்க்கைக்கு ஓர் ஆணும் பெண்ணும் அவர்களது இரண்டறக் கலந்த ஒப்புரவும் தேவையாய் இருக்கிறது என்றார் (ஆனைமுத்து, 2009, ப. 345).

### 1.5.2. திருமணம் என்பதற்கு மணமக்களின் சம்மதம் என்பது இன்றியமையாததாகும்

சுருங்க்ககூறின், சுயமரியாதைத் திருமணம் என்பது பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழ்க்கையை நடத்த ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தம் என்றும், அந்த ஒப்பந்த விடயம் பெண்ணையும் ஆணையும் மட்டுமே சார்ந்ததே ஒழிய வேறு எவ்விதத் தெய்வீகத் தன்மைகளுக்கோ எவ்விதக் கட்டுப்பாட்டிற்கோ சம்பந்தப்பட்டதில்லை யென்பதுமே ஆகும் (*புரட்சி* 1934, ஜூன் 17). திருமணம் செய்துகொள்வதில் தாய்தந்தையரைக் காட்டிலும், மணமக்களுக்கே அதிக உரிமை உண்டு என்று ஆண்டாள் அம்மையாரும் குறிப்பிடுகின்றார் (*குடிஅரசு* 1932, மே 22 மற்றும் ஜூன் 05). பொதுவாகவே, சுயமரியாதைத் திருமணம் என்பதில் மணமக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து, தங்களுக்குள்ளாகவே ஒருவரை ஒருவர் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும், அர்த்தமும் பொருத்தமும் அவசியமும் இல்லாமல் வெறும் சடங்கு, பழக்கவழக்கம் என்பதற்காக மட்டும் ஒன்றையும் செய்துவிடக் கூடாது என்பதுமே ஆகும் (*புரட்சி* 1934, ஜூன் 17).

ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் அன்பு கொண்டபின்னரே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற பெரியார் (மேற்குறிப்பிட்ட நூல்), இயற்கை உணர்வுகளுக்காகவும், மன நிறைவுகளுக்காகவுமே ஒருவருக்கு வாழ்க்கைத்துணை என்பவர் இருக்க வேண்டுமே தவிர (*விடுதலை* 1951, பிப்ரவரி 17), திருமணம் ஆகிவிட்டதே என்கிற காரணத்திற்காக ஒருவர் கொடியவராக இருந்தாலும் அவருடன் அன்பு கொண்டுதான் வாழவேண்டும் என்று நிர்பந்திப்பதைக் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றார் (*புரட்சி* 1934, ஜூன் 17). மேலும், மணமக்கள் நண்பர்கள்போலவும், ஒருவரிடத்திலே ஒருவர் காதல் உடையவர்களாகவும் இருக்க வேண்டுமே தவிர, எந்தவொரு ஆணும், பெண்ணும் எந்தவொரு நிர்ப்பந்த்ததிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அடங்கி நடக்கவேண்டும்என்பது அவசியமில்லை என்கிறார் பெரியார் (*விடுதலை* 1951, பிப்ரவரி 17).

ஓர் ஆணும், ஒரு பெண்ணும் விருப்பப்பட்டு, இருவரும் இன்றிலிருந்து நண்பர்களாகிவிட்டோம் என்று சொல்லி, அதற்கான ஓர் ஒப்பந்தத்தினை நிறைவேற்றிக்கொண்டு,அதை மற்றவர்களுக்கு அறிவிக்கச்செய்தாலே போதுமானதாகும் (ஆனைமுத்து, 2009, ப. 345). அதேபோல், பெற்றோர்களும் தங்களது குழந்தைகளுக்குத் தன்னிச்சையாகத் 'திருமணம்' ஏற்பாடு செய்யாமல், தங்களின் பெண்களுக்குத் தகுந்த வயதும் தொழிலும் ஏற்பட்ட பிறகு, ஒருவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளக்கூடிய வகையினில் பெற்றோர்கள் அவர்களை முன்னேற்றமடையச் செய்யவேண்டும் என்பதே பெரியாரின் வாதமாகும். 'கன்னிகாதானம்', 'கல்யாணம்','தாராமுகூர்த்தம்'என்கிற வார்த்தைகள் அனைத்தும் மறைந்து, அகராதியில்கூட இல்லாமல் ஒழிய வேண்டும் என்பதே பெரியாரின் ஆவலாக இருந்தது (*விடுதலை*1951, பிப்ரவரி 17).

இதுபோன்ற அறிவுசார் சுயமரியாதைத் திருமணங்களைப் பொதுமக்கள் மத்தியில் சுயமரியாதை இயக்க இதழ்கள் தொடர்ந்து உற்சாகப்படுத்தியும் ஊக்கப்படுத்தியும் வந்தன (*குடிஅரசு* 1930, ஜூன் 29). ஆண்டுதோறும் சராசரியாக 2500 முதல் 3000 வரையிலான சுயமரியாதைத் திருமணங்கள் தமிழகத்தில் நடைபெற்றன என்பதனைக் குஞ்சிதம் அம்மையார் *குடி அரசு* இதழிலில் பதிவுசெய்துள்ளார் (*குடிஅரசு* 1932, ஜூன் 26). சேலம் மாவட்டம் தாதம்பட்டி கிராமத்தினைச் சார்ந்த பலிஜவார் நாயுடு சமூகத்தைச் சார்ந்த ஒருவர் 1926ஆம் ஆண்டும் (*குடிஅரசு* 1926, நவம்பர் 21); முதலியார் சமூகத்தைச் சார்ந்த குருசாமி அவர்களுக்கும், இசைவெள்ளாளர் சமூகத்தைச் சார்ந்த குஞ்சிதம் அம்மையார் அவர்களுக்கும் 1929ஆம் ஆண்டும் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது என்பதனைக் *குடிஅரசு* இதழ்வழி அறிய முடிகிறது. அதேபோல், சிவகாமி-சிதம்பரனார், நீலாவதி-இராமசுப்பிரமணியம், இரங்கம்மாள்-சிதம்பரம், மரகதவல்லி-முருகப்பா, அன்னபூரணி-இரத்தினசபாபதி, மஞ்சுளாபாய்-சண்முகம், விசாலாட்சி-இராமசுப்பய்யா போன்றவை சில குறிப்பிடத் தக்க சுயமரியாதைத் திருமணங்களாக இன்றும் போற்றப்படுகின்றன.

### 1.5.3. திருமணத்தினைப் பதிவுசெய்வதன் அவசியம்

சுயமரியாதைத் திருமணத்தில் எல்லோருக்கும் வசதியான நேரத்தினைப் பார்த்து, மிகச் சுருக்கமான செலவினைச் செய்து, அனாவசியமான, அதேசமயம் அர்த்தமற்ற சடங்குகளை யெல்லாம் தவிர்த்து (*பகுத்*

*தறிவு* 1934, அக்டோபர் 07), மணமக்கள் தங்கள் ஒப்பந்தங்களை ஒருவருக்கொருவர் சொல்லி மணசம் பந்தத்திற்கு அறிகுறியாக மாலையிட்டுக்கொள்வது என் பதுடன் சுயமரியாதைத் திருமணம் முடிவு பெற்றுவிடு கிறது(*புரட்சி* 1934, ஜூன் 17 மற்றும் ஆனைமுத்து, 2009, ப. 358). அவ்வாறு, திருமணம் செய்துகொள் கிறவர்கள் கட்டாயம் தங்களது திருமணத்தினை அர சாங்கத்தில் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்று பெரியார் வலியுறுத்தினர் (*விடுதலை* 1946, செப்டம்பர் 04). அப்படிப் பதிவு செய்துகொள்ள ஆரம்பித்து விட் டால் நாட்பட மற்ற சடங்கு எல்லாம் தானாக மறைந்து விடும் என்று சுயமரியாதைக்காரர்கள் நம்பினர் (*புரட்சி* 1934, ஜூன் 17).

திருமணத்தினைப் பதிவு செய்துகொள்வதன் மூலம் கண வனுக்குச் சரிசமமான தகுதி மனைவிக்கும் கிடைக் கின்றது என்ற பெரியார், இருவரும் சமம் என்று சொல்லியே திருமணப் பதிவேட்டில் இருவரும் கை யொப்பம் இடுகின்றனர் என்றதுடன், அரசாணைக்கால் வைத்து, நெருப்பினைச் சுற்றி, அம்மி மிதித்துச் செய் யப்படும் திருமணங்களிலுள்ள அடிமைத்தனம் இதில் இல்லை என்றார் (*விடுதலை* 1948, அக்டோபர் 24). அதேபோல், இந்தவகையான திருமணம் நடந்த அன்றே கணவனுடைய சொத்தில் மனைவிக்கும் சம உரிமை கிடைத்துவிடுகிறது. ஆனால், பழைமை முறைத் திருமணங்களில் பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப் படுவதுடன், வாழ்க்கையில் சரிபங்கு உரிமையினை யும் இழக்கின்றனர். சுயமரியாதைத் திருமணத்தில் சொத்திலும், வாழ்க்கை உரிமையிலும் பெண்ணுக்கு ஆணைப்போலவே சரிபங்கு உரிமை இருக்கிறது என்ற னர் சுயமரியாதைக்காரர்கள் (*புரட்சி* 1934, ஜூன் 17).

### 1.6. விவாகரத்து மற்றும் விதவைத் திருமணம்

சமூக மாற்றத்தின் வேர் என்பது பெண் விடுதலையி லேயே துளிர்விடும் என்ற நம்பிக்கை கொண்ட சுயமரியாதைக்காரர்கள், திருமணம் என்ற நடைமுறை களைத் தொடர்ந்து, விவாகரத்து பெறும் உரிமையும், மறுமணம் செய்துகொள்ளும் உரிமையும் மணமக்க ளுக்கு இருக்கவேண்டும் என்று போராடினர்.

இன்றைய நவீன உலகினில் வேண்டுமானால் விவாக ரத்து பெறும் உரிமை என்பதும், மறுமணம் செய்து கொள்வது என்பதும் சமூகத்தின் சில தளங்களில் ஒருவாறாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வேளையில், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை அது அவ் வாறாக இருக்கவில்லை என்பது இங்கே குறிப்பிடத் தக்கது ஆகும். பெண்களுக்குமட்டுமே 'பொறுமை', 'கற்பு' போன்றவைகள் இருக்க வேண்டும் என்ற கற் பிதங்களைக் கட்டமைக்கும் மதங்களையும், புராதன சட்டங்களையும் அழித்தொழிப்பதுடன் பெண்களுக்கு விவாகரத்து செய்யும் உரிமையும், வாழ்க்கைத் துணை யினைத் தேர்வு செய்யும் உரிமையும் இருக்க வேண் டும் என்றார் பெரியார் (*குடிஅரசு* 1931, ஜனவரி 18). விவாகரத்து என்பது கணவன்-மனைவி ஆகிய வர்களுக்கு இருக்க வேண்டிய ஒரு தற்காப்பு ஆயு தம் என்ற பெரியார், இதைக் கொண்டு இருவருமே அடிக்கடி குத்திக்கொள்வார்கள் என்று கூறுவது அபத் தம் என்று வாதிட்டார் (*விடுதலை* 1946, செப்டம் பர் 04).

மேலும், விவாகரத்து என்பது சட்டமானால் உடனே எல்லாப் பெண்களும் தங்கள் கணவர்களை விட்டு ஓடிப்போவார்கள் என்றும், கற்புநிலை அடியோடு கெட் டுப்போகும் என்றும் பலர் எண்ணிக்கொண்டிருக்கி றார்கள். ஆனால் பாதுகாப்பிற்கும் அவசியத்திற்கும் ஒரு சட்டம் செய்தால், பொதுமக்கள் எல்லோரும் அதே வேலையாய் இருப்பார்கள் என்பது நியதியல்ல. தேவைப்படும் சந்தர்ப்பங்களில்மட்டும்தான் மக்கள் அத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்துவர் என்ற தெளிவுடனே பெரியார் இத்தகைய சமூக முன்னெ டுப்புகளைச் செய்துவந்தார் (*குடிஅரசு* 1929, டிசம் பர் 29). அதேபோல், பெண்களுக்கான சம உரிமை என்பது எந்தெந்தக் காரணங்களுக்காக ஒரு கணவ னுக்குப் பெண்ணைப் பிடிக்க வில்லையோ, அதே காரணங்களால் ஒரு மனைவிக்குக் கணவனைப் பிடிக் காதபொழுது, கணவனுக்கு இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்ற, சுதந்திரமும், வாய்ப்புகளும், பெண்களும் பெற்றிருக்க வேண்டும் என்பதே ஆகும் என்று வலியுறுத்தினார் பெரியார் (*குடிஅரசு* 1930, அக்டோபர் 12).

பெண்விடுதலை என்பதில் விதவைத் திருமணத்தின் முக்கியத்துவம் என்ன என்பது பற்றிய புரிதலினைச் சுயமரியாதைக்காரர்கள் கொண்டிருந்தனர். சதி (உடன் கட்டையேறுதல்) எனும் பெயரால் உயிருடன் எறிக் கப்படும் பெண்ணிற்கான துயரம் என்பது சில மணி நேரம் மட்டும்தான் இருந்திருக்கக்கூடும், ஆனால் விதவைப் பெண்ணிற்கோ அவர்களின் வாழ்நாள் முழு வதும், அங்குலம் அங்குலமாகச் சித்திரவதை செய்வது போன்ற துன்பத்தை வினாடிதோறும் அனுபவிக் கக் கூடியதாக இருக்கின்றது என்று வேதனை கொண்ட பெரியார் (*குடிஅரசு* 1929, அக்டோபர் 27), ஒரு உயிரினைப் பட்டினி போட்டுக் கொல்வதிலும், ஒரு பெண்ணை விதவையாக வைத்துச் சாகாமல் காப் பாற்றுவதும், ஒரேவகையான கொடுமையேயாகும் என்றார் (மேற்குறிப்பிட்ட நூல்).

மறுமணத்தினை விரும்பாத பெண்களைத் தவிர்த்து, ஏனைய கைம்பெண்களுக்கு மறுமணம் செய்வித்தல் என்பது சிறந்தது என்று கருதி அதற்கான முன் னெடுப்புகளைச் சுயமரியாதைக்காரர்கள் சமூகத்தில் செய்துவந்தனர் (ஆனைமுத்து, 2009, பக். 191-197).

பெரியார் தன்னுடைய இளம்வயது சகோதரி மகள் விதவையானபொழுது, அவரின் நிலையினைக் கருதிக் குடும்ப-சாதி எதிர்ப்புகளைக் கடந்து மறுமணம் செய் வித்து அப்பெண்பிள்ளைக்கு நல்வாழ்வினை ஏற்படுத்

திக்கொடுத்தார். அதேபோல், திருவாதங்கூரில் நடைபெற்றமுதல்சுயமரியாதை விதவைத் திருமணத்தினை அண்ணாமலையம்மாள், சிவதானு அம்மையார் ஆகியோர் நடத்திவைத்தனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும் (வளர்மதி, 2017, ப. 14).

## 1.7. முடிவுரை

மானிடச் சமூகத்தின் விடுதலைக்காகப் பிற்போக்குத்தனங்களைப் பகுத்தறிவின் அடிப்படையிலான வாதத்தினை மட்டுமே முன்வைத்துக் கேள்வி எழுப்பிய சுயமரியாதை இயக்கத்தினர் திருமணம் என்ற நிறுவனத்தின்மீது ஆக்கப் பூர்வமான பார்வையினைக் கொண்டிருந்தனர். திருமணம் என்ற நிறுவனமானது பெண்ணடிமைத்தனத்தின் தோற்றுவாய் என்ற மார்க்சிய வாதத்தினையே சுயமரியாதை இயக்கத்தினரும் ஏற்றிருந்தனர். அதேவேளையில், இந்திய சமூகக் கட்டமைப்பினில் உள்ள உள்முரண்களை நன்கறிந்த சுயமரியாதை இயக்கத்தினர் பார்ப்பனியக் கருத்தியல்கள் எவ்வாறு இந்தியத் திருமணங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதனைத் தோலுரித்துக் காட்டினர். சடங்கியல் நிகழ்வுகள் ஆணாதிக்கச் சிந்தனை மரபுகளை நிலைநிறுத்துவதால், ஆண்-பெண் சமம் என்ற பொருள்படும்படி சடங்குகள் தவிர்த்த சுயமரியாதை திருமணத்தினைச் சமூகத்தினில் முன்னெடுத்தனர். அதேவேளையினில், கைம்பெண் திருமணத்தையும், சாதியக் கலப்பு மணத்தையும் தொடர்ந்து ஊக்குவித்தனர் என்பதனை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளோம்.

### குறிப்புதவி நூல்கள்


#### இதழ்கள்

*உண்மை*

*குடிஅரசு*

*திராவிடன்*

*பகுத்தறிவு*

*புரட்சி*

*விடுதலை*

*Revolt*

#### *தமிழ்நூல்கள்*

*அசல் மனுதரும சாஸ்திரம்*. சென்னை: திராவிடர் கழகம், 2011.

ஆனைமுத்து,வே. *பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்*. தொகுதி. 1-6. சென்னை: பெரியார் ஈ.வெ. இராமசாமி- நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளை, 2009.

பெரியார், தந்தை. *பெண் ஏன் அடிமையானாள்?*. சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, 2004.

……, *அழியட்டும் 'ஆண்மை'*. சென்னை: பெரியார் திராவிடர் கழகம், 2010.

முத்துமோகன், ந. *இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும்*. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2016.

ராஜதுரை, எஸ்.வி. மற்றும் வ. கீதா. *பெரியார்: சுயமரியாதை சமதர்மம்*. கோயம்புத்தூர்: விடியல்பதிப்பகம், 1999.

வளர்மதி, மு. தொகுப்பு. *சுயமரியாதை இயக்க வீராங்கனைகள்-II*. சென்னை: கருப்பு பிரதிகள், 2017.

வீரமணி, கி. தொகுப்பு. *பெரியார் களஞ்சியம்*. சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, 2010.

#### *ஆங்கிலநூல்கள்*

Buhler, G. *The Laws of Manu*. Oxford: The Clarendon Press, 1886.

Chakravarti, Uma. "Conceptualising Brahmanical Patriarchy in Early India: Gender, Caste and State." *Economic and Political Weekly* 28, 14. (April 3, 1993): 579-585.

Engles, Frederick. *The Origin of the Family Private Property and the State*. Chicago: Charles H. Kerr and Company, 1909.

Geetha, V and S.V. Rajadurai. *Towards a Non-Brahmin Millennim: From Iyothee Thass to Periyar*. Calcutta: Samya, 1998.

……, *Revolt: A Radical Weekly from Colonial Madras*. Chennai: Periyar Dravidar Kazhagam, (n.d.).

Jeevanandam, S and Rekha Pande. *Devadasis in South India: A Journey from Sacred to Profane Spaces*. Delhi: Kalpaz Publications, 2017.

Morgan, Sue. Ed. *The Feminist History Reader*. London: Routledge, 2006.

Ramasami, Periyar E.V. *Women Enslaved*. New Delhi: Critical Quest, 2009.

Rege, Sharmila. *Against the Madness of Manu: B.R. Ambedkar's Writings on Brahmanical Patriarchy*. New Delhi: Navayana, 2013.


**There are two basic motivating forces: fear and love. When we are afraid, we pull back from life. When we are in love, we open to all that life has to offer with passion, excitement, and acceptance. We need to learn to love ourselves first, in all our glory and our imperfections. If we cannot love ourselves, we cannot fully open to our ability to love others or our potential to create. Evolution and all hopes for a better world rest in the fearlessness and open-hearted vision of people who embrace life.**

**— John Lennon**

ISSN 2320-4842



# பழனி முருக வழிபாடும் நாட்டுப்புற மரபுகளும்

**சீ. முத்துலட்சுமி**
**முனைவர் பட்ட ஆய்வாளர்** (Ref. No. 24107/Ph.D K6/Tamil/Part time/April 2017)
**தமிழாய்வுத் துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி** (**இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்**), **திருச்சி**
**ஆய்வு நெறியாளர்: முனைவர் இ. ஆர். இரவிச்சந்திரன்**
**முதல்வர், உருமு தனலெட்சுமி கல்லூரி** (**இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்**)
**திருச்சி**

**ஆய்வுச் சுருக்கம்**

இயற்கையோடு இணைந்து வாழத் தொடங்கிய மனித வாழ்வின் அடிப்படையே நம்பிக்கைதான். மனிதன் தனக்கு மீறிய சக்தி ஒன்று இருப்பதை அறிந்தான். அதன் அடிப்படையில் இயற்கையை வழிபடத் தொடங்கினான். இயற்கையை வழிபட்டவன் இறை வழிபாட்டை மேற்கொள்ள ஆரம்பித்தான். அவ்வழிபாடே முருக வழிபாட்டின் தொடக்கமாக அமைந்தது. இவ்வழிபாட்டு முறையானது நாட்டுப்புற வழிபாட்டு முறையை அடியொற்றியே இருந்துவந்துள்ளது. நாட்டார் வழிபாட்டு முறையான உயிர்ப்பலியிட்டு சடங்குகள் நிகழ்த்திய காட்சிகளைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. இவ்வழிபாட்டு முறை அவனுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தின. நாட்டார் வழிபாடாக இருந்த முருக வழிபாடு தற்பொழுது பெரு வழிபாட்டு மரபாக மாறியிருந்தாலும் இன்றளவும் முருக வழிபாட்டில் நாட்டுப்புற மக்களின் வழிபாட்டு முறையே மேலோங்கி இருப்பதைக் காணமுடிகிறது. இதனை உணர்த்தும் வகையில் பழனி முருக வழிபாட்டைக் கள ஆய்வுக்குட்படுத்தி ஆராயப்படுகிறது. இவ்வாய்வின் மூலம் கிடைத்துள்ள பல தகவல்கள் நாட்டுப்புற ஆய்வாளர்களுக்கும், மக்களுக்கும் சிறந்த பயனுள்ள ஆவணமாகப் பயன்படும்.

**முன்னுரை**

முருக வழிபாடு பண்டைத் தமிழர்களின் தலைமுறை வழிபாடு ஆகும். அது சிறுநெறி வழிபாட்டு மரபு, பெருநெறி வழிபாட்டு மரபு என இருநிலைகளில் காணப்படுகிறது. தொன்மைக்காலந்தொட்டே தனக்கெனத் தனிப்பெரும் பண்பாட்டினையும், நீண்டநெடிய வரலாற்றினையும் கொண்டவையாகவே விளங்குகிறது. டி.எம்.பி. மகாதேவன், *மனிதனை அவனுடைய புலன்களைச் சரிவரப் பயன்படுத்தி புலனுணர்வுத் தன்மையினின்று இறைத்தன்மைக்கு உயரச் செய்வதே இறை வழிபாட்டின் நோக்கம்*[1] என்று குறிப்பிடுகின்றார்.

தொன்மைக் காலத்தில் முருக வழிபாடானது பொது வெளியில், ஆற்றங் கரையோரங்களில், கடம்ப மரத்தின் அடியில் என மக்கள் தம் விருப்பத்திற்கிணங்க முருக வழிபாட்டை நிகழ்த்தினர்.

***வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப***[2] ***(தொல்.நூற்.1367)*** என்பதற்கேற்ப நம்மையும் நம் சுற்றத்தையும் முருகன் காப்பார் என்ற நம்பிக்கை நாட்டுப்புற மக்களிடம் காலங்காலமாய் நிலவிவருகின்றது.

**சங்க காலத்தில் முருக வழிபாடு:**

கடம்பமரத்தை வழிபடுவதும், வேலை வழிபடுவதும், வேலனாட்டமும் பண்டைத் தமிழர்தமம் வழிபாட்டு முறைகளாகும். ஆட்டுக் குட்டியையும், சேவலையும் பலியிட்டு அக்குருதியைத் தினைமாவுடன் பிசைந்து முருகனுக்குப் பலியுணவாகப் படையலிடுவர். வேலன் என்ற பூசாரி உருவில் முருகன் வந்து குறி சொல்லுவான். இங்குக் கடவுளோடு நேரடியாகப் பேசும் 'சாமியாடல்' என்னும் நிகழ்வே இடம்பெறும். இதனையே 'வேலன் வெறியாட்டு' என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இதனையே

***வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்***
***வெறியாட் டயர்ந்த காந்தளும் (தொல்.பொருள்.1006)*** என்று தொல்காப்பியமும்,
***குறமகள்***
***முருக இயம் நிறுத்து முரணினர் உட்க***
***முருக ஆற்றுப் படுத்த உருகெழு வியன் நகர்***[4] ***(திரு.முருகு.பா.வரி.242-244)*** என்று திருமுருகாற்றுப்படையும் விவரிக்கின்றன.

**நாட்டுப்புற வழிபாட்டு மரபு**

தமிழர் சமய வரலாற்றில் முருக வழிபாடு இரண்டு நிலைகளில் நிகழ்ந்துள்ளது. ஒன்று தமிழ் மரபிற்குட்பட்ட முருக வழிபாடு, இரண்டாவது தமிழ் மரபும், வைதீக மரபும் இணைந்து காணப்படும் முருக வழிபாடு. ஆனால்

நாட்டுப்புறச் சமய வழிபாட்டிலிருந்தே முருக வழிபாடு தோன்றியுள்ளது. முருக வழிபாடு தொடக்கத்தில் வேல் வடிவாக இருந்து பின்னர்ச் சிலைவடிவாக மாறியது.

பழனி முருகன் வழிபாட்டு மரபில் நாட்டுப்புறக் கூறுகளில் முதலாவதாக இடம்பெறுவது வேல் வழிபாடாகும். வாய்மொழிப் பாடல்கள், காவடிப் பாடல்களைப் பாடுதல், காவடி ஆட்டம் ஆடுதல், உயிரினங்களைக் காணிக்கை கொடுத்தல், நவதானியங்களைச் சூறை விடுதல், பூக்கேட்டல், சத்தியம் செய்தல், மொட்டை அடித்தல், காது குத்துதல், அலகு குத்தி வருதல், காவடி எடுத்தல், பாதயாத்திரை மேற்கொள்ளுதல் போன்ற நாட்டுப்புற வழிபாட்டு முறையைப் பழனி முருக வழிபாட்டு முறையில் காணமுடிகின்றது.

**வேண்டுதல்கள்**

நாட்டுப்புற மக்கள் முருகன் வழிபாட்டைத் தம் வாழ்வியல் நெறிமுறைகளிலிருந்து பிரிக்க முடியாத வகையில் முருகனை வழிபட்டுவருகின்றனர். பழனி முருகனை வேண்டினால் கண்டிப்பாக அவ்வேண்டுதல் நிறைவேறும் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் பல்வேறு வேண்டுதல்களை நேர்ந்துகொள்கின்றனர்.

இவ்வேண்டுதலை *நேர்த்திக் கடன்* என்றும் *நேர்ச்சை* என்றும் *நேமிசம்*[5] என்றும் கூறுவர் (ந. கல்யாணசுந்தரம், திருச்செந்தூர் முருகன் கோவில் வரலாறு, ப. 158). மக்கள் தம் வாழ்வியல் விருப்பங்களுக்காக இறைவனிடம் நேர்த்திக் கடன் செய்வதாக வேண்டிக்கொள்வதும், அதனைத் தவறாது நிறைவேற்றுவதும் சடங்காகக் கருதப்படுகின்றது.

**பாதயாத்திரை மேற்கொள்ளுதல்**

முருக பக்தர்கள் தம் வேண்டுதலின் தொடக்கமாக முதலாவதாக மேற்கொள்வது பழனிக்குப் பாதயாத்திரை செல்வது. தைப்பூச, பங்குனி உத்திரத் திருவிழாக்களின் பொழுது அவரவர் ஊர்களில் கையில் காப்புக்கட்டுடன், விரதமிருந்து காவடியெடுத்துப் பாதயாத்திரையைத் தொடங்குவர். பாதயாத்திரையாக நடந்து வரும் பொழுது நடந்து வரும் களைப்புத் தெரியாமல் இருக்க முருகன் குறித்த வாய்மொழிப் பாடல்களைப் பாடியும், காவடியைத் தோளில் வைத்துக்கொண்டு நடனம் ஆடி மகிழ்வதையும் கள ஆய்வில் காண முடிகிறது.

**காவடிப் பாடல்கள் பாடுதல்**

முருகன் குறித்துப் பாடப்படும் காவடிப்பாடல்கள் 'காவடிச் சிந்து' அமைப்பு முறையிலே பாடப்படுகிறது. இதனை 'வழிநடைச் சிந்து' என்றும் கூறுவர். பழனி முருகன் குழந்தை வடிவினன் என்பதால் பெரும்பாலான காவடிப் பாடல்கள் தாலாட்டுப் பாடல்களாகவே பக்தர்களால் பாடப்பட்டு வருகிறது.

***ராரி ராரி ராராரோ***
***கந்தையா ராரி ராரி***
***ராராரோ***
***மலையாம் மலையழகாம்***
***கந்தையா***
***பழனி மலையோரம்***
***மயில் உறங்கும் மடி மேலே***
***பழநி மலை ஆண்டவரே***
***பக்கத் துணை வருவாரோ*[6] *(பாடியவர்: சங்கரன், வயது 50, பழனி முருகன் காவடிக்குழு)***

இவ்வழி நடைப் பாடல்களைக் காவடி எடுத்து வரும் கூட்டத்தில் ஒருவர் பாடி வர அவரைத் தொடர்ந்து மற்றவர் ராரி ராரி ராராரோ என்று பின்பாட்டுப் பாடி வருவர்.

**காவடி ஆட்டம் ஆடுதல்**

காவடி எடுத்து வரும் முருக பக்தர்கள் தங்கள் காவடிக் கூட்டத்துடன் கொட்டு, டிரம், நாதஸ்வரம் வாசிப்பவர்களையும் உடன் அழைத்து வருவர். அம்மேளக் கலைஞர்கள் மேளம் வாசிக்க அவ்வாசிப்பிற்கேற்பக் காவடி வைத்துள்ளவர்கள் நடனம் ஆடி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர். மேலும் அக்காவடிக் கூட்டத்தில் 'கோமாளி' போன்று வேடம் புனைந்த ஒருவர் கோமாளி ஆட்டம் ஆடி அங்குள்ள மக்களை மகிழச் செய்வார்.

இக்காவடியாட்டமம் ஆடும்பொழுது பல்வேறு விதமான அசைவுகளை வெளிப்படுத்துவர். பெரும்பாலும் காவடியைப் பின்கழுத்தில் வைத்துச் சுழன்றாடியும், தோளில் வைத்துக்கொண்டு கெந்தியாடும் அசைவுகளையும், மெல்லசைவுகளையும், அபிநயங்களையும் வெளிப்படுத்துவர்.

**உருவேறிய நடனம்**

வேலன் வெறியாட்டு நிகழ்வின் தொடர்ச்சியே உருவேறிய நடனம், பழனியாண்டவனை வழிபட வரும் முருக பக்தர்கள் அருள்வந்து ஆடுவர். இதனைச் 'சாமியாடுதல்' என்பர். *இதனையே தெய்வமேறிய நடனம், உருவாட்டல், அனுபூதியாட்டம், உட்புகுந்த நடனம் போன்ற பல பெயர்களால் இந்நடனம் அழைக்கப்படுகிறது. பொங்கல், மடை, வேள்வி, குளிரித்தி, திருவிழா முதலிய நிகழ்ச்சிகளில் ஒருவர் உருக் கொண்டு ஆடுதல் என்பதைக் குறிக்கும். தெய்வீகப் பாங்கும், கலைப்பாங்கும் கலந்த நடனங்களாக இவை அமையும். ஆடும் ஆற்றல், ஆழ்ந்த தெய்வ ஈடுபாடு பக்தியை ஆடலால் வெளிப்படுத்தும் உந்தல் முதலியவை உருவேறிய நடனம் ஆடுவதற்குரிய விசைகளாகும்*.[7]

***வேலனுக்குள்ளே வேலன் வாறான்***[8]

**கூத்து:** நாட்டார் மரபில் கூத்தின் இடம் மிக முக்கியமானது. இக்கூத்தானது முருக வழிபாட்டில் இரண்டறக் கலந்து விட்டதெனக் கூறலாம்.

**வள்ளிக் கூத்து**

முருகப் பெருமான் வள்ளியைத் திருமணம் புரிந்த நிகழ்வை நினைவுகூர்வதாக, தைப்பூசத் திருவிழா வின்பொழுது, பல்லடம் பகுதியிலிருந்து காவடியெ டுத்துக்கொண்டு ஆண்களும், பெண்களும் பழனியை நோக்கி நடைப்பயணமாக வருகைபுரிவர். பழனியில் உள்ள சண்முகநதியில் நீராடி ஊர்க்கோவிலான பெரிய நாயகியம்மன் கோவிலில் நடைப்பயணமாக வந்த மகளிர், குழுவாகக் கூடித் தம் தோள்களில் காவடியை வைத்துக் கொட்டு மேள வாசிப்பிற்கேற்ப வள்ளிக் கூத்தினைக் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக ஆடித் தம் பக்தியைப் புலப்படுத்துவர். இவ் வள்ளிக் கூத்தைப் பார்ப்பதற்கெனவே இக்கோவி லுக்கு மிகுதியான மக்கள் வருகைபுரிகின்றனர்.

**துடிக்கூத்து**

அசுரகுலத் தலைவனான சூரபதுமன் கடல் நடுவில் மாமரமாக மாறி நின்றான். அப்பொழுது முருகன் அம் மரத்தின்மீது வேல் எறிந்து மரத்தை இரு கூறாகப் பிளந்தான். அவ்வெற்றியைக் கொண்டாடும் விதமாக முருகன் ஆடியக் கூத்தே 'துடிக்கூத்து' எனப்படும். இப்புராணக் கதையை நினைவுகூரும் விதமாக முரு கன் கோவில்களில் கந்த சஷ்டி திருவிழாவின்போது சூரவதம் நிகழ்த்தப்படுகிறது.

**சூரவதத்தில் போலச் செய்தல்**

முருகப் பெருமான் சூரர்களை அழிக்கும் விதமாக பழனி மலையடிவாரம், கிரிவீதியின் நான்கு திசை களிலும் நான்கு சூர பொம்மைகளை வைத்துச் சூர வத விழாவைத் தொடங்குவர். முருகனும் கோவில் பூசாரியின் மீது உருவேறி ஒவ்வொரு சூரனையும் வரிசையாக வதம் செய்து ஒரு போர்க்கள நிகழ்வை முழுமையடைச் செய்வர். இதனை கிராமிய நிலை யில் 'போலச் செய்தல்' என்னும் அமைப்பில் ஒரு சடங்கியல் நிகழ்வாக வருடந்தோறும் நிகழ்த்தப்படும். இவ்விழா நாட்டுப்புற நாடக அமைப்பில் சடங்கும், நடிப்பும் கலந்தனதாக அமைகின்றது.

**உயிர் இனங்களைக் காணிக்கையாகத் தருதல்**

முருகனை வழிபடும் மக்கள் தங்கள் வேண்டுதல் நிறைவேறினால் முருகனுக்கு இன்ன பொருள்களைக் காணிக்கையாகத் தருவதாக வேண்டிக் கொள்வர். அதன்படி பழனி முருகன் காணிக்கைகளில் முதலா வதாக உயிர்க் காணிக்கைகள் வகைப்படுத்தப்படுகின் றன.

**உயிர்க் காணிக்கைகளாவன,**

1. குழந்தையைக் காணிக்கையாகச் செலுத்துதல்.
2. கால்நடைகளைக் காணிக்கை அளித்தல்
3. பறவைக் காணிக்கைகள் முதலானவை காணிக் கைகளாகச் செலுத்தப்படுகின்றன.

**குழந்தைக் காணிக்கை**

***அக்காலத்தில் திருமணமாகி நீண்ட காலமாகியும் குழந்தையில்லாத தம்பதியினர் தங்களுக்குக் குழந்தை வரம் கேட்டு அவ்வாறு தங்களுக்குக் குழந்தை பிறந் தால் முருகனுக்கே காணிக்கையாகத் தந்து விடுவதாக வேண்டிக் கொள்வர். அதேபோல் குழந்தை பிறந்த வுடன், பழனி மலைக் கோவிலுக்கு வந்து முருகன் முன் குழந்தையைக் கிடத்தி, கோவிலேயே விட்டுவிட்டுச் சென்று விடுவர். அக்குழந்தையைக் கோவில் நிர்வாகம் பராமரித்து வந்ததாக*** முருகன் அடியாரான சாது சண்முக அடிகளார் கள ஆய்வின்பொழுது தெரி வித்தார். ஆனால் தற்பொழுது நடைமுறையில் முருகப் பெருமான் முன் குழந்தையைக் கிடத்தி முருகனிடம் வேண்டிக்கொண்டு குழந்தையின் பெற்றோர் தம் முடன் கொண்டு சென்றுவிடுகின்றனர். இவ்வாறே திருவிழாக்களின்பொழுது, ஆடு மாடுகள், கன்றுகள், சேவல், மயில் முதலான உயிரினங்களையும் நாட் டுப்புற மக்கள் கோவிலில் காணிக்கையாகச் செலுத்தி வருவதையும் கள ஆய்வில் அறிய முடிகிறது.

**நவதானியங்களைச் சூறைவிடுதல்**

தைப்பூச, பங்குனி உத்திரத்திருவிழாக்களின் போது பழனிமலை அடிவாரத்திலும், மலைக்கோவில் படிக் கட்டுகளிலும் நாட்டுப்புற மக்கள் நவதானியங்களை யும், வாழைப் பழங்களையும் சூறை விட்டு பழனி யாண்டவனை வழிபட்டு வருவதைக் கள ஆய்வில் காண முடிகிறது. நவதானியங்களைச் சூறைவிடுவோர் தம் வயல்களில் விளைச்சல் மிகுந்திருப்பதால், முருக னுக்கு நன்றி தெரிவிக்குமுகத்தான் அதன் முதல் அறுவடைத் தானியங்களைச் சூறைவிடுவதாகக் கூறு கின்றனர். சூறைவிடப்படும் தானியங்களைப் பெறும் பக்தர்கள் அத்தானியங்களைத் தத்தம் இல்லங்களிலும் வயல்களிலும் வைத்துப் பழனியாண்டவனை நினைத்து வழிபடுகின்றனர்.

**முடிவுரை**

தமிழகத்தில் முருக வழிபாடு முதன்மைத் தெய்வ வழிபாடாக விளங்குகின்றது. இவ்வழிபாட்டில் சங்க காலம்முதல் இன்றுவரை நாட்டுப்புற மரபுகள் மிகுந்து வருவதைக் காணமுடிகிறது. நாட்டுப்புற மக்கள் முரு கப்பெருமானைத் தம் குல முதல்வனாகக் கருது கின்றனர். சில இன மக்கள் வள்ளியைத் தம் குலப் பெண்ணெனவும், அப்பெண்ணை மணந்த முருகனைத் தம் மருமகனாகவும் எண்ணி வழிபடுகின்றனர். முருக னைத் தம் வாழ்வோடு கலந்தவனாகக் கருதுகின் றனர். எனவே முருக வழிபாடு நாட்டுப்புற மரபில் தொடர்ந்துவருவதை இக்கட்டுரைவழி அறியலாம்.

**குறிப்புகள்**

1. டி.எம்.பி.மகாதேவன்,இந்து சமயத்தத்துவம், ப. எண்.164.
2. தமிழண்ணல்,தொல்காப்பியம், ப.எண்.470.

***தொடர்ச்சி: பக். 85***

ISSN 2320-4842



# தமிழர் வாழ்வியலில் அறுகால் பறவை

**ச. சங்கீதா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஆய்வு நெறியாளர்: **முனைவர் பா. திருஞானசம்பந்தம்**
**இணைப் பேராசிரியர், தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**

**முன்னுரை**

தமிழ்மொழியின் அழியாத் தன்மைக்குச் சான்றாவது அது கொண்டுள்ள இலக்கிய இலக்கணங்களின் கருத் தாக்கமும் எக்காலத்திற்கும் தன்னை உருமாற்றிக்கொண்டு வாழும் சிறப்புமே எனலாம். பழந்தமிழாக வாழ்ந்து கன்னித் தமிழாக, அறிவியல் தமிழாக, இணையத் தமிழாக வாழ்ந்துவருவதே நவீனத்தமிழ். அத்தகைய வளர்நிலையைப் பெற்றுள்ள தமிழ்மொழியின் பழந்தமிழர் வாழ்வென்பது காலங்கள் பல கடந்தும் காலத்திற் கேற்ற ஆய்வுப்பொருளைக் கொண்டு மாந்தர் வாழ்வியலுக்குத் தேவையான சிந்தனைகளை வழங்கி வருவது. அச்சிந்தனைகளுள் ஒன்றே இயற்கையோடு இயைந்து வாழ்ந்த சூழலில் உயிரிகளை உறவுகளாக நேசித் தவையே என்பர். அத்தகைய பதிவுகளைக் கொண்டுள்ள சங்க இலக்கியங்களில் ஐந்நிலம் சார்ந்து வாழ்ந்த மக்கள் தம் வாழ்வியல் இயக்கங்களில் சிற்றுயிர்களின் வாழ்வினையும் பதிவிட்டுச் சென்றுள்ளனர். அவ் வகையில் ஐந்து நிலத்தோடும் தொடர்புடைய ‘அறுகால் பறவை’ பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பொருள் வாழ்வும், புள்ளினமும்**

தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த வாழ்வினில் அவர்களின் இயற்கை சார்ந்த வாழ்வியலுக்கு இயற்கை சார்ந்த நெறியே அடிப்படையாகும். அந்நெறியை முப்பொருள்களாகப் பகுத்தளித்துள்ளதைப் பார்க்க முடிகிறது. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்றமைந்த முப்பொருள் வாழ்வில் முதற்பொருளும், கருப்பொருளும் இயற்கைக்கு இடமளித்து, உரிப்பொருள் உயிர்களின் வாழ்வினில் நிகழக்கூடிய பிரிவு, புணர்வு, காத்திருத்தல், ஊடல், இரங்குதல் என்பனவற்றை எடுத்தியம்புகின்றது. முப்பொருளின் அடிப்படையை எடுத்துக்கொண்டால் உயிர்கள் வாழ்வதற்கான, வளர்ச்சிக்கான, பரிணாமத்திற்கான சூழலை அமைத்துக் கொடுக் கின்றது. அவை இயற்கையாகவே இயற்கையோடே நடைபெறுகின்றது. அவை குறித்து,

> ***ஆதிகாலம் தொட்டு இன்றுவரை மனித வாழ்வோடு இயற்கை என்னும் பொருள் தவிர்க்கவியலாத இணக்க மான உறவைக்கொண்டு திகழ்கிறது. மனிதகுல வரலாறு என்பது இயற்கையை வியப்பது, புரிந்துகொள்வது, அடக்கியாள் வது என்ற பல்வேறு நிலைகளிலும் இயற்கையை மையமாகக்கொண்டே இயங்கி வருகிறது எனலாம். மனிதர்களுடைய வரலாறு என்பதே இயற்கை வரலாற்றின் உண்மயான பதிவாகும் (முனைவர் சோமு. குமார், இலக்கியங்களில் இயற்கை, ப. 1.)***

என்னும் கருத்தின்வழித் தமிழரின் வாழ்வியலோடு இயற்கை எனும் முப்பொருளும் இரண்டறக் கலந்தே வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகும். இயற்கையோடே வாழ்ந்த தமிழர் வரலாறே உண்மையான வரலாறு என்பதும் இதன்வழி எடுத்துரைக்கலாம். முதலில் நிலத்தையும் பொழுதையும் குறிப்பிடும் தமிழர்கள் கருப் பொருளில் மனித வாழ்க்கைக்கு உறுதுணையாகும் பொருள்களை குறித்துச் செல்கின்றனர். தொல்காப்பியர்,

> *தெய்வம் உணாவே மாமரம் புட்பறை*
> *செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ*
> *அவ்வகை பிறவும் கருவென மொழிப (தொல்.பொருள். 20)*

என ஒன்பதாகக் கூறுகின்றார். அவரே அவ்வகைப் பிறவும் என்று சுட்டுவதன்வழி இவைபோன்ற பிறவும் உள எனக் கருப்பொருளைப் பதினான்காக வகுக்கின்றார் பிற்கால இலக்கண ஆசிரியர்கள். இத்தனைப் பொருள் களும் மக்கள் தம் வாழ்வினை செம்மையாக வழிப்படுத்தவே இயைபுப்படுத்துவதையும் அதனை இறைச்சி, உள்ளுறை என்ற இலக்கியக் கூறுகளில் சுட்டிக்காட்டுவதையம் பார்க்கலாம். அறிவினில் குறைந்த உயிரினங் களைக் கொண்டு பாடல் புனைந்ததற்கு அடிப்படைக் காரணம் படிப்பினைகளை அதன்வழி மாந்தர்கள் அறியவே என்பது தெரியவருகிறது. அவைமட்டுமல்லாது இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மக்களுக்கு இயற்கைப் பொருள்கள் அனைத்தும் தம்முடிவுபோல் நினைத்து அன்பெனும் அறத்தோடு வாழ்ந்துள்ளதை வெளிப்படுத்துகின்றன இலக்கியங்கள்.

***இறைச்சி என்பது பாலியல் உளவியல் சார்ந்ததாய், குறிப்புப்பொருள் தரும் இலக்கியக் கோட்பாடாக வளர்ந்தமைந்ததைச்***

ISSN 2320-4842

***சங்கப் பாடலில் வரும் இக்கோட்பாட்டுச் சான்றுகளால் ஆராய்ந்தால் இதன் முழுச் சிறப்பும் அருமையும் புலப் படும். இதனை ஒரு தொனிப் பொருள் என்றே கூறலாம். தலைவர் சென்ற சுர வழி பிடியின் பசியை நீக்க வேழம் யாமரக் கிளையை உடைத்து தரும் அன்பு தவழ் காட்சி களையுடையதாகும். அவரும் பாசம்மிக்கவர், 'அருள் செய் வார்' எனத் தோழி தலைவி பிரிவால் வாடும்போது வற் புறுத்தக் காண்கிறோம் (குறு. 37) இக்காட்சிகள், அவர் விரைந்து மீள்பரென்பதை ஒருவாறு உறுதிப்படுத்துமிது (தொல். தமிழண்ணல், ப. 92)***

என்பதன்வழிப் பொருள் வாழ்வென்பது (முதல், கரு, உரி) மாந்த வாழ்வை நெறிப்படுத்தவே என்பதும், அதனை உறவாக நன்மை, தீமை, சார்ந்த நம்பிக்கை களாகக்கொண்டு வாழ்ந்துள்ளனர் என்பதைப் பார்க்க முடிகிறது. அவ்வாறு அமைந்த கருப்பொருள்களுள் ஒன்றே புள்ளினம் (புள்-பறவை). சிறகை உடையன அனைத்தும் புள்ளினத்துள் இடம்பெறும் உயிரினங்க ளாகும். கேட்கும் திறனை உடையதாகக் கருதப்படும் புள்ளினங்கள் அறிவின் நிலையில் ஐந்தறிவினைப் பெறும் என்று பொதுநிலை உயிர்களின் படிநிலையும் அவற்றுள் சில ஆறறிவு நிலையைப் பெற்று விளங் கும் என்றும் கூறுவதைப் பார்க்க முடிகிறது. தும்பி சிறகை உடையனவாக காணப்பட்டாலும் அவை நான் கறிவுஉயிர்களிலே வைத்துப் பார்க்கப்படுகிறது. பறவை கள் ஐந்தறிவைப்பெறும் என்பதை,

***மாவும் புள்ளும் ஐயறி வினவே***
***பிறவும் உளவே வுக்கிளைப் பிறப்பே (தொல். பொருள். 576)*** எனும் நூற்பா எடுத்துரைக்கும். புள்ளினமாக, விலங்காக இருந்தாலும் அவற்றுள் சில ஆறறிவு நிலையைப் பெறும் என்றும் சுடடியுள்ளதையும் அவற் றுள் கிளி, குரங்கு, யானை ஆறறிவு பெற்று விளங் கும் என்பதை,

***மக்கள் தாமே ஆறறி வுயிரே***
***பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (தொல். பொருள். 577)*** எனும் நூற்பாவழி குறிப்பிடும் தொல்காப்பியர் அக்கிளைப் பிறப்பும் பிறவும் உள என்பதன்வழி 'தேவர், அசுரர், இயக்கர் முதலாயினோர் பிறப்புக் கள்' என்னும் ***ஒருசார் விளங்கும் உறவென மொழிப*** என்பதன்வழி ஆறறிவு நிலையைப் பெறக்கூடிய புள்ளினங்கள் பற்றி அறியமுடிகிறது. உளவியல்வழிக் கற்றலை மேற்கொள்ளக்கூடிய உயிரினங்கள் அறிவு நிலையை எட்டி மாந்தச் செயல்பாடுகளைச் செய்யக் கூடிய நிலையைப் பார்க்கமுடிகிறது. இவை சூழலி யலை அடிப்படையாகக் கொண்ட கற்றல் சொல்பாட் டின் மூலமாக நடைபெறும் என்பர்.

**புள்ளினமும் அறுகாற் பறவையும்**

'புள்ளினம்' எனும் சொல்லால் மரபின்வழி பறவை யைக் குறிக்கக்கூடியதாகவே இலக்கண, இலக்கியங் கள் எடுத்துரைக்கின்றன. அவற்றுள் ஆறுகால்களை உடைய'வண்டுகளும்' புள்ளினத்தில் வைத்துப் பார்க் கலாமா என்னும்போது அவைகுறித்துச் சங்க இலக் கியங்களான நற்றிணையில் களவியலில் தலைவ னோடு கூடி இருந்து இல்லம் சேர்ந்த தலைவியின் தோள்களை வண்டுகள் மொய்ப்பதையும் அதனைக் கண்ட அன்னை கண்ணால் கொல்பவள்போல் நோக்கி முன்பு நீ இவ்வாறு வண்டுகள் மொய்க்கும் தோள் களைப் பெற்றிருந்தாய்? என்று ஐயப்பட வினவும் இடத்து 'அறுகாற்பறவை' எனும் சொல்லைப் புலவர் பெருவழுதி குறிஞ்சிநிலப் பாடல்களில் பயன்படுத்தி யுள்ளதை,

***உறுபகை பேணாது, இரவின் வந்து, இவள்***
***பொறிகிளர் ஆகம் புல்ல, தோள் சேர்பு***
***அறுகாற் பறவை அல்ல இல மொய்த்தலின் (நற். குறிஞ்சி. 55)*** எனும் பாடல்வழி அறியலாம். இவ்வாறு வண்டினை ஆறுகால் பறவை எனவும், மற்றொரு பாடலில் வண்டினைப் பறவை என்றே அழைப்பதை யும்,

***பறவை இழைத்த பல்கண் இறாஅல்***
***தேனுடை நெடு வரை....(குறிஞ்சி. பா. 185)*** எனச் சுட்டுவதன்வழிப் பொறையனின் கொல்லி மலையில் உயர்ந்த இடத்தில் அகன்ற இலைகளையடைய காந் தளின்அசையும் பூங்கொத்துகளில் வண்டுகள் பாய்ந்து தேனை நுகரும். பின் பலவாகிய கண்ணேயுடைய தேனடையில் அத்தேனைச் சேர்க்கும் என்றுரைப்ப தன்வழித் தேனீக்களையும் பறவை என்றே குறிப் பிட்டுள்ளதைப் பார்க்க முடிகிறது. வண்டுகள் உண் ணுமாறு மலர்ந்த கரிய அடிப்பகுதியைக் கொண்ட வேங்கை மரத்தின் பெரிய கிளையிலே தொடுத்த கொழுவிய கண்கணை உடைய தேனடையில் தேனீக் கள் மொய்த்தலால் தேன் கசிந்து கல்லின் குழிகளிலே வடியும் என்று கூறுமிடத்துச் சுரும்பு என்பதை வண்டு கள் என்றும், புள் என்பதை பறவை எனவும் அவை தேனீக்களையே குறித்துக் கூறியுள்ளதையம் பார்க்க முடிகிறது. அதனை,

***சுரும்பு உண விரிந்த கருங்கால் வேங்கைப்***
***பெருஞ் சினைத் தொடுத்த கொழுங் கண் இறாஅல்***
***புள்ளுற்றுக் கசிந்த தீம் தேன் கல் அலைக (குறிஞ்சி. பா. 168)*** எனும் பாடலடிகள் எடுத்துரைக்கும். சுரும்பு என்பதை வண்டினைக் குறிப்பதாகவும், புள் என்பது பறவையாகிய தேனீக்களைக் குறிப்பதகாவும் உரை கூறியுள்ளார் உரையாசிரியர் கு.வெ. பாலசுப்பிரமணி யன். நற்றிணையின் மற்றொரு பாடலில் தேனீக் களை வண்டு என்றே கூறியுள்ளதை அழிசி என்பா னின் தேன்மணம் கமழும் பூக்களையுடைய தேரினை உடையவள் என்றும், நெற்கதிர்களுக்கு இடையே வண்டுகள் மொய்க்க மலரும் நெய்தல் பூக்களி லிருந்து தேன்வடிவதை மொய்க்க வரும் வண்டுகள் எனக் குறிப்பதை,

***தேம் கமழ் விரிதார் இயல் தேர் அழிசி***
***வண்டு மூசு நெய்தல் நெல்லிடை மலரும்***
***அரியல் அம் கழனி ஆர்க்காடு அன்ன (குறிஞ்சி. பா. 190, ப. 348)*** எனும் பாடலடிகள் உணர்த்தும். வண்டுகள் மொய்த்தலின் காரணம் தேனெடுக்க என்ப

ISSN 2320-4842

தும், கூதளம் எனும் மலரில் தேனுண்டு வண்டானது இசை எழுப்புவதாகவும், அவை யாழோசையை ஒத் திருந்ததாகவும், அசுணம் பறவை செவி கொடுத்து கேட்பதாகவும் பாடல் புனைந்துள்ளதை,

***கூதிர்க் கூதளத்து அலரி நாறும்***
***மாதர் வண்டின் நயவரும் தீம்குரல்***
***மணம் நாறு சிலம்பின் அசுணம் ஓர்க்கும் (குறிஞ்சி. பா. 244)***என்பதன்வழிவண்டு என்றுரைக்குமிடத்துஅதனைத் தேன் உண்டு வாழும் வண்டினையும் குறிப்பிடுகின் றார். இங்குப் புனையப்பட்டுள்ள பாடல்களையும் உரை யாசிரியர்கள் கூறம் விளக்கங்கள்வழி அணுகும்போது அறுகாற் பறவை என்று குறிப்பிடப்படும் சொல்லால் தேனீ அல்லாது தேன் உண்டு வாழும் வண்டினைக் குறிப்பதாகவும், பறவை எனும் சொல்லாடல் தேனீக் களைக் குறிப்பதாகவும், தேனீக்களை தேன் வண்டு என்று இன்றளவும் மக்கள் தம் வழக்கில் பயன்படுத்தி வருவதையம் பார்க்க முடிகிறது. பறவை, தேனீயைப் புள்ளினம் என்று குறிப்பிடுவதையும், மொய்த்தல் தொழிலைச் செய்பவை வண்டு என்பதும் மொய்த்தல் பணி தேனெடுக்கவே என்பதாகவும் விளங்கிக்கொள் ளலாம். மொய்க்கும் வண்டுகளை சுரும்பு எனவும் சுட்டுவதை அறிய முடிகிறது. எனவே வண்டென்பது பூக்களில் தேனை உண்டு வாழும், இசை எழுப்பும் குணம் உடையதாகவும், புள், பறவை என்பவை தேனீயாகவே சுட்டுவதையும் இவை தேனை எடுத்துத் தேன்கூடுகளில் சேமிக்கச் செய்பவை என்பதும் புலப படுகிறது. எனினும் இரண்டிற்கும் பறவை எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதையும் காணலாகிறது.

**முடிவுரை**

இயற்கைப் பொருள் சார்ந்து வாழ்ந்த தமிழர்கள் அதனையே வாழ்வின் நடத்தைக் கூறுகளுக்குப் படிப் பினையாகவும் வளம் நிறைந்ததாகவும் படைத்துள்ள னர். அவ்வகையில் குறிஞ்சி நிலத்தின் தவிர்க்கவிய லாத உயிரிகள் வண்டுகள் ஆகும். வண்டுகளே தேனெடுக்கும், அத்தேனே அந்நிலத்தின் உணவுப் பொருளுள் முதன்மை இடத்தைப் பெறும். அத் தேனுணவைச் சேமிப்பவையே தேனீக்களாகும் எனும் ஒன்றற்கொன்று இயைபுடைய தன்மை யினாலேயே வண்டும், தேனிக்களும் 'அறுகாற் பறவை' எனும் பெயரினைப் பெறும். பறவை என்ற தனாற் புள்ளின வகைகளுள் இடம்பெறும், ஐந்தறிவினைப் பெறும் என்பது இவ்வாய்வின்வழி புலப் படுகிறது.

**துணைநூற்பட்டியல்**

முனைவர் சோமு. குமார், இலக்கியங்களில் இயற்கை.

தொல்காப்பியம் பொருள் இளம்பூரணார் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.

தொல்காப்பியம் பொருள், தமிழண்ணல் சாகித்திய அகடாமி, முதல்பதிப்பு-1998.

கு.வெ. பாலசுப்பிரமணியன், நற்றிணை மூலமும் உரையும். குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

## Just Wait For The Sun

**When everything's darkness**
**And you feel so alone,**
**When the rain doesn't stop**
**And you can't make it home,**
**When it feels all is lost**
**And you just want to run,**
**It can't rain forever.**
**Just wait for the sun.**

**When family is pain,**
**When friends can't be found,**
**When you just want to scream**
**But you can't find the sound,**
**When it's all your fault,**
**And you feel like you're done,**
**Just wait for the sun.**
**The sunshine will come.**

**The storm always passes.**
**It won't last forever.**
**The rain always stops and gives way to good weather.**
**The brightest and warmest of days still to come.**
**Please wait for the sun.**
**The sunshine will come.**

**People who need you,**
**People who still love you**
**Can warm up your soul like the sunshine above you.**
**You're never alone,**
**No matter what's done.**
**Wait for the sun.**
**Just wait for the sun.**

**Dark clouds always pass.**
**I promise you, hun.**
**We're all waiting with you.**
**Just wait for the sun.**

**- Lisa Marks**

ISSN 2320-4842



# ஐம்பெருங்காப்பியங்களில் வழிபாட்டு முறைகள்

**சூ. நளினி**
**முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)**
**தமிழ்த் துறை, மொழிகள் புலம்,**
**வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி மையம், சென்னை 117**

**முன்னுரை**

தமிழர் மரபினைப் பறைசாற்றும் கூறுகளுள் வழிபாடு முதன்மை அங்கமாகிறது. வழிபாடு பழங்காலந் தொட்டே இருந்துவருகிறது. தமிழிலக்கிய அடிப்படை ஆதாரங்களாகத் திகழும் கல்வெட்டுகள், செப்பேடுகள், நடுகல், சங்க இலக்கியங்கள் தொடங்கி அனைத்து வடிவிலான இலக்கியங்களும் வழிபாட்டு முறைகள் பற்றிப் பேசு கின்றன. அவற்றுள் ஐம்பெருங்காப்பியங்களில் வழிபாட்டு முறை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**ஐம்பெருங்காப்பியங்கள்-அறிமுகம்**

*அறம், பொருள், இன்பம், வீடுபேறடைதல் நூற்பயன்* எனும் கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் நாற் பொருளும் குறைவுபடாமல் எழுதப்பட்டுள்ள இலக்கிய வடிவமே ஐம்பெருங்கப்பியங்கள்.

***காதொளிரும் குண்டலமும் கைக்கு வளயுயாபதியும்***
***கருணை மார்பின் மீதொளிர் சிந்தாமணியும்***
***மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்***
***போதொளிர் பூந்தாமரையும்... (கவியோகி. சுத்தானந்த பாரதி)*** எனும் பாடல் மூலம் கவியோகி. சுத்தானந்த பாரதி தமிழன்னைக்கு ஐம்பெருங்காப்பியங்களால் அலங்காரம் செய்கிறார். முறைப்படுத்திக் கூறப்படும் சிலப் பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண் டலகேசி முதலிய நூல்களைப் பாதாதி கேச மாக அணிவித்து அழகுப்பா பாடியுள்ளார் கவியோகி. சுத்தானந்த பாரதி.

**வழிபாடு-வரையறை**

‘வழிபடு’ என்பதிலிருந்து பிறந்தது ‘வழிபாடு’ எனும் சொல். வழிபடு என்பதற்கு வணங்குதல், வழியில் செல்லுதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், பூசனைமுறை என அகராதிகள் பொருள் தருகின்றன. *இறைவ னுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு* என்றும், *தெய்வங்களை மகிழ்விப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல் களும், பூசனை முறைகளுமே வழிபாடு* என்றும் (தெய்வங்களும் சமூக மரபுகளும் ப. 21, தொ. பரம சிவன்), *உள்ளக்கதவை இறைப்பற்றின் காரணமாகத் திறந்து வைப்பதே வழிபாடு* என்றும் பல்வேறு விளக் கங்கள் முன்வைக்கப்படுகின்றன. இதன்மூலம் உயர்நிலையான ஒன்றை உள்ளத்தால் நெருங்கவும், உணர முற்பட வும் மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே வழிபாடு எனும் தெளிவைப்பெறலாம்.

**வழிபாடும் வளர்ச்சியும்**

மனித வாழ்வு பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வந்திருப்பதைப் போல், நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றிய வழிபாடும் வளர்ந்தே வந்துள்ளது. இயற்கை வழிபாடு தொடங்கி மரவழிபாடு, சிலைவழிபாடு, கோவில்வழிபாடு, தனிமனித வழிபாடு எனப் பல்கிப் பெருகி வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு கூறாக வழிபாடு நிலைத்துள்ளது. இயற்கையை வணங்க முற்பட்ட மனிதன் அச்சுறுத்தும் விதத்திலான தெய்வங்க ளையும் வணங்கினான். இயற்கைச் சக்திகள் பசுமையான மரங்களில் குடிகொண்டிருப்பதாக மனிதன் நம்பி னான். இதுவே மரவழிபாடு தோன்றக் காரணமாயிற்று. ஒவ்வொரு கோவிலுக்கும் ஒரு தலவிருட்சம் என்று சொல்லக்கூடிய மரம் இருப்பதைக் காணலாம். இதுவே தலவிருட்சம், தலமரம் எனக் கூறப்படுகிறது. (சிவன் -ஆலமரம்; மீனாட்சி-கடம்பமரம்; விநாயகர்-அரசமரம்; கண்ணகி-வேங்கைமரம்; மாரியம்மன்-வேப்பமரம்) நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, போரில் மாண்ட வீரர்களுக்கான நடுகல் வழிபாடு, பத்தினிக்கல் வழிபாடு எனப் பல்வேறு நிலைகளில் வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. சீனா, எகிப்து, ரோம் முதலிய நாடுகளில்கூட முன்னோரை வழிபடும் வழக்கம் இருந்துவருகிறது. இத்தகு வழிபாட்டின் சிறப்பை உணர்ந்த காப்பியச் சான்றோர்கள் தாம் படைத்த காப்பியங்களிலும் வழிபாட்டின் சிறப்பைக் கூறியுள்ளனர்.

**சிலப்பதிகாரத்தில் வழிபாடு**

குடிமக்களுள் ஒருவராய்த் திகழ்ந்த கோவலன்-கண்ணகி வாழ்வின்மூலம் மூவேந்தர்களையும் ஒருங்கிணைத்து, மூன்று உண்மைகளின் மூலம் ஒற்றுமைக் காப்பியமாய்த் திகழ்ந்தது சிலப்பதிகாரம். இக்காப்பியத்தில் வழிபாட்

டிற்கு அதிமுக்கியத்துவம் தந்துள்ளார் இளங்கோ வடிகள். மங்கல வாழ்த்துக் காதை தொடங்கி, வரந் தரு காதைவரை வழிபாட்டின் மூலம் மக்களுக்கான மனநிறைவை, மகிழ்ச்சியை, உளச் சந்தேகங்களை, எதிர்பார்ப்பை முன்வைத்துத் தீர்வு காண்கிறார் இளங் கோவடிகள். வழிபாடு எனும்போதே உருவ வழிபாட் டைத் தவிர்த்து இயற்கையை வணங்குதல் சிறப்பு என்பதை வலியுறுத்தும் விதமாக இளங்கோவடிகள்,

***திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்...***
***ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்...***
***மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்.. (சிலம்பு-மங்கல வாழ்த்துக் காதை)*** என இயற்கையின் துணை வேண்டி வணங்குகிறார். இயற்கையை வணங்கியதோடு நில்லாமல் அக்காலக்கட்டத்தில் மேலோங்கி இருந்த சமயங்களின் பெருமையையும் பதிவிடத் தவறவில்லை. சைவ, வைணவ, சமண, கௌமார வழிபாட்டு முறை களையும் குறிப்பிட்டுள்ளார்.

***செஞ்சடை வானவன் அருளினால் விளங்க***
***வஞ்சித் தோன்றிய வானவ (சிலம்பு-24:98-99)*** எனும் அடிகளில் சேரன் செங்குட்டுவன் சிவனை வழிபட்ட குறிப்பு இடம்பெறுகிறது. குன்றக் குரவையில் *மலை மகன், கயிலைநன்மலை இறைமகன்* (சிலம்பு-24: 16,17) எனுமிடங்களில் முருகனை (கௌமார) வழி பட்ட குறிப்பும் இடம்பெறுகிறது. ஆய்ச்சியர்க் குரவை யில் *நீலமேனி நெடியோன் கோட்டம்* (சிலம்பு, 5: 172), நாடுகாண் காதையில்,
***செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்***
***தரும முதல்வன் தலைவன் தருமன் (சிலம்பு, நாடுகாண் காதை 176-179)*** எனும் அடிகளின் மூலம் வினைக் கோட்பாட்டையும், ஊர்காண் காதையின்,
***காமஞ் சார்பாகக் காதலின் உழந்தாங்கு***
***ஏமஞ் சாரா இடும்பை எய்தினர் (சிலம்பு, ஊர்காண் காதை 42-44)*** எனும் அடிகளின் மூலம் காம நீக் கத்தையும்அடிப்படையாகக் கொண்டு சமண வழிபாடு இருந்துள்ளது என்பதை இளங்கோவடிகள் நிறுவியுள் ளார். அன்றியும், தமிழக நில அமைப்பின் அடிப் படையிலான நால்வகைக் கடவுள் வழிபாட்டையும் இளங்கோவடிகள் கூறுகிறார். குற்றம் புரிந்தவனென்று கொலை செய்யப்பட்ட கோவலன், குற்றமற்றவன் எனக் காட்டிய அவன் மனைவி கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் நடுகல் நாட்டி வணங்கியதை இளங் கோவடிகள் குறிப்பிடுகிறார். போரில் சிறந்து விளங் கும் ஆண்களுக்கு மட்டுமே நடுகல் நாட்டி வழிபடும் வழக்கத்தைத் தொல்காப்பியர் காட்டியுள்ளதைப்போல் கற்பில் சிறந்து விளங்கிய பத்தினிக்கு நடுகல் நாட்டி வழிபடும் வழக்கத்தை இளங்கோவடிகள் சிலப்பதி காரத்தில் எடுத்துரைக்கிறார். காமன் வழிபாடு, பாவை வழிபாடு, பத்தினித் தெய்வ வழிபாடு ஆகியவையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்சுறுத்தும் சதுக்க பூதம், காவல் பூதம், வருணப் பூதங்களையும் மக்கள் வழிபட்டுத் தமது அச்சங்களைப் போக்கிக்கொண்டனர். உலகில் மானிடராகப் பிறந்து சிறப்பாக வாழ்ந்து, தெய்வநிலையை அடைந்து, மேலான சக்தி பெற்றவர்களாக நம்பப்பட்டு வணங் கப்படும் சிறுதெய்வ வழிபாட்டையும் (வித்தியாதரன், பாசண்டசாத்தன்,பூங்கண் இயக்கி, அழற்கடவுள், வன சாரினி, பூங்கொடி) இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் சிவன், விஷ்ணு, முருகன், அருக தேவன், காமன், பாவை வழிபாடு, நடுகல் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு எனப் பலவிதமான வழிபாடு களைக் கூறியிருப்பதன்மூலம் சிலப்பதிகார காலத்தி லேயே மக்களின் வழிபாடு பற்றிய நம்பிக்கையை உணர முடிகிறது.

**மணிமேகலையில் வழிபாடு**

நற்குடியில் பிறந்தவர் மட்டுமே நற்பண்புடையவராய் இருப்பர் எனும் சொலவடையைப் பொய்யாக்கி அவர வர் குணநலன்களே நற்பண்பை வளர்க்கும் என்பதை நிரூபிக்கவே, கணிகையர்குலப் பெண்ணான மணிமேக லையைக் காவியத் தலைவியாக்கி, புரட்சி செய்துள் ளார் சீத்தலைச் சாத்தனார். நிரந்தரமற்ற உலகில் நிலை யான புகழைத் தருவது *நாம் செய்யும் அறமே* என்ப தையே மணிமேகலை வலியுத்துகிறது. அறக்கருத்தை வற்புறுத்தும் மணிமேகலை பௌத்த சமய வழிபாட் டைக் கூறுகிறது.

புத்த மதத்தைத் தோற்றுவித்த புத்தபிரானை மக்கள் வணங்குகின்றனர். பண்டைய இலக்கியங்கள் கூறும் வழிபாடுகளுள் மரவழிபாடும் ஒன்று. மர வழிபாட்டை புத்தமதம் பின்பற்றுவதை, *புத்தகயாவில் புத்தர் போதி ஞானம் பெற்ற அரசமரம் இன்றும் வணங்கப்படு கிறது* என்று மயிலை.சீனிவேங்கடசாமி கூறுகிறார். பகவான் புத்தர் காலமான பிறகு சில நூற்றாண்டு வரையில் அவருக்கு உருவம் அமைக்கப்படவில்லை. ஆனால் தருமபீடிகை, பாதபீடிகை ஆகிய உருவங் கள்மட்டும்பௌத்தர்களால் வணங்கப்படுவதாகச் சீனி. வேங்கடசாமி கூறுகிறார். பிறகு பௌத்தர்கள் புத்த ரின் உருவங்களை வணங்கிவந்தனர். மணிமேகலா தெய்வம் புத்தர் ஆசனத்தைத் தலையால் சுமந்து வணங்கியதை,

***மன்பெரும் பீடிகை வணங்கினை யேத்தி***
***நின்பதிப் புகுவாய்......***
***ஆங்கத் தீவகத் தறவோ னாசனம்***
***நீங்கிய பிறப்பு நேரிழைக் கழித்தும்...(மணிமேகலை-சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை: 36-37)*** எனும் அடிகள் மெய்ப்பிக்கின்றன. சம்பாதி எனும் தெய் வத்தைக் கோதமை என்ற பெண் வணங்கியதை,
***துறையும் மன்றமும் தொல்வலி மரனும்***
***உறையுளும் கோட்டமும் காப்பாய் காவல் (மணி மேகலை-சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை: 138-139)*** எனும் அடிகள் உணர்த்துகின்றன. சம்பாதி எனும் தெய்வம் நாவலந்தீவு முழுக்க வணங்கப்பட்டு வந்த தாகச் சொல்லப்படுகிறது. இமயமலையினின்று இத்

தெய்வம் தமிழ்நாட்டிற்கு வந்ததாகவும், நாவல் மரத்தின்கீழ் தங்கி, அரக்கர்களால் மக்களுக்கு நேரும் துன்பங்களைப் போக்க இத்தெய்வம் தவமிருந்ததாகவும் கூறப்படுவதை,

***பொன்திகழ் நெடுவரை யுச்சித் தோன்றித்***
***தென்றிசைப் பெயர்ந்த இத்தீவத் தெய்வதம்***
***சாகைச் சம்பு தன்கீழ் நின்று***
***மாநில மடந்தைக்கு வருந்துயர் கேட்டு***
***சம்பு என்பவள் சம்பாபதி யினள் (மணிமேகலை-பதிகம்)*** எனும் பாடலடிகள்மூலம் மணிமேகலை உணர்த்துகிறது. சாயாவனம் என்னும் ஊரில் உள்ள சிவன்கோயிலின் தென்பக்கத்தில் சம்பாபதி கோயில் ஒன்று இப்போதும் இருப்பதாகவும், இக்கோயில் 'சம்பாபதியம்மன் கோயில்' என்றும், 'பிடாரி கோயில்' என்றும் வணங்கப்படுவதாகவும் டாக்டர் சுவாமிநாத ஐயர் குறிப்பிட்டுள்ளதைச் சீனி. வேங்கடசாமி கூறுகிறார்.புத்தர்களால் போற்றி வழிபடப்பட்ட துவதிகன், ஓவியச்சேனன் (சித்திரசேனன்) ஆகிய சிறுதெய்வங்கள் பௌத்தர்களால் வணங்கப்பட்டுவருவதையும் மணிமேகலை குறிப்பிடுகிறது. மேலும் உலகநாதர், போதிசத்துவர் எனும் பெயரில் வணங்கப்பட்ட அவலோகிதர் வழிபாடு பற்றியும் மணிமேகலை குறிப்பிடுகிறது.

நிலையாமைக் கருத்தை வலியுறுத்திய மணிமேகலை புத்தபிரானின் பெருமையையும், பல்வேறு வழிபாட்டு முறைகளுள் ஒன்றான மரவழிபாட்டையும் (புத்தர் ஞானம்பெற்ற போதிமரம் வணங்கப்பட்டது), பாத பீடிகை வழிபாட்டையும் (பாதத்தை வழிபட்டதை) வலியுறுத்துகிறது.

**சீவகச் சிந்தாமணி அறிமுகம்**

ஐம்பெருங்காப்பியங்களில் மூன்றாவதாகச் சொல்லப்படுவது சீவக சிந்தாமணி. மூன்றவதாகக் குறிப்பிட்டிருப்பினும் காப்பியப் பண்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்று முழுமையான நூல் இது என்பர். இதைத் திருத்தக்கதேவர் விருத்தப்பாவால் இயற்றியுள்ளார். 13 இலம்பகங்களையும் 3145 பாடல்களையும் இது கொண்டுள்ளது. இதனை நச்சினார்க்கினியர் உரையோடு பதிப்பித்த உ.வே.சா., *சீவக சிந்தாமணியின் அருமை வரவர எனக்கு நன்கு புலப்படலாயிற்று. செந்தமிழ்க் காப்பியங்களுக்கெல்லாம் அதுவே 'உரையாணி' என்பதைத் தெரிந்துகொண்டேன்* என்பதை என் சரிதம் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்காப்பியத்தை இயற்றிய திருத்தக்க தேவரையும் பல்வேறு சான்றோர்கள் புகழ்ந்துள்ளனர். உவமைக் கவிஞர் சுரதா அவர்கள்,

***முதலடியைத் தேனாக்கி அடுத்தடுத்து முளைக்கின்ற***
***தொடரடியை அமுதாக்கி***
***விதவிதமாய்ச் சந்தநய நட்புண்டாக்கி ........***
***.... இன்பச் சிந்தாமணி நூல் இயற்றலானான் (தேன்மழை -சுரதா)***

எனத் தன்னுடைய 'தேன்மழை' நூலில் சிந்தாமணியைப் புகழ்ந்துள்ளார்.

**சீவகச் சிந்தாமணியில் வழிபாடு**

சமணரான திருத்தக்கதேவரால் எழுதப்பட்டிருப்பினும் அக்காலத்துச் சிறந்து விளங்கிய சமயங்களான சைவம், வைணவம், பௌத்தம், சமணம் போன்ற சமயக் கடவுளர்களின் கொள்கைகளும், வழிபாடுகளும் பேசப்பட்டுள்ளன.சைவக் கடவுளர்களான சிவன், முருகன், பார்வதி ஆகிய தெய்வங்களின் வழிபாடு பற்றிக் கூறுகிறார். சிவன் பொன்னிறமான சடைமுடியைக் கொண்டவன் (சிந்.பா.208); திங்களைச் சூடியவன் (சிந்.பா.598); நெற்றிக்கண்ணால் காமனை எரித்தவன் (சிந்.பா.695); நீலநிற மிடற்றில் சாமவேதம் இருந்தது (சிந்.பா.2038) எனப் பல இடங்களில் சிவனின் பெருமையைக் கூறி, இறுதியில் தன் உடலில் பாதியை உமையம்மைக்குத் தந்ததைக்கூறி சைவ சமயத்தை இழிவுபடுத்தியபோதும் சைவ வழிபாட்டு முறை பேசப்பட்டுள்ளது. முருகப்பெருமானின் தொன்மைச் செய்திகளும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. முருகன் அழகு நிரம்பியவன் (சிந்.பா. 1692); சூரபத்மனோடு நடந்த போரில் தன்கை வேலால் கிரவுஞ்சத்தை இரண்டாகப் பிளந்தவன் (சிந்.பா.1691); தன் வாகனமாக மயிலைக் கொண்டிருப்பவன் (சிந்.பா.482)என முருகனின் பெருமைகளும் சிந்தாமணியில் பேசப்பட்டுள்ளன.

சீவகசிந்தாமணியில் திருமால், திருமகள் பற்றிய வைணவச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. திருமால், ராகுவின் வாயிலிருந்து நிலவை விடுவித்தவன் (சிந்.பா.454), திருமாலின் மகன் காமன் (சிந்.பா. 681,1339), கருடனை வாகனமாகக் கொண்டவன் (சிந்.பா.449), கையில் சங்கையும் சக்கரத்தையும் கொண்டவன் (சிந்.பா.1559) எனத் திருமாலின் அவதாரங்கள் கூறப்பட்டுள்ளன. திருமாலின் மனைவியான திருமகள், செல்வத்தின் அடையாளமாகக் குறிக்கப்படுகிறாள் (சிந்.பா.383). இவள் செந்தாமரை மலரைத் தன் இருப்பிடமாகக் கொண்டவர் (சிந்.பா. 523, 639, 1326) முதலிய பெருமைகளைக் கூறி வைணவக் கடவுளர்களை வழிபட்டதை அறியமுடிகிறது

படைப்பக் கடவுளான பிரமனைப் பற்றிய செய்தியும் சீவகச் சிந்தாமணியில் இல்லாமலில்லை. பிரம்மன் முனிவர்களைவிட உயர்ந்தவர் (சிந்.பா.7[illegible]7); இவர் திலோத்தமையின்மீது காதல்கொண்டு தன்னுடைய முகத்தை நான்கு முகமாகப் படைத்துக்கொண்டவர் (சிந்.பா.383);இந்திரன் ஆயிரம் கண்களைக் கொண்டவர் (சிந்.பா.473); கற்பக மாலையைச் சூடியவன் (சிந்.பா.754); அருகனைத் தலைதாழ்த்தி வணங்குபவன் (சிந்.பா.3[illegible]85) என்ற இந்திரன் பற்றிய குறிப்புகளும் இடம் பெறுகின்றன. பிற சமயக் கருத்துகளை எதிர்த்தபோதும் சமண சமயக் கருத்துகளுக்கே முக்கி

ISSN 2320-4842

யத்துவம் தருகிறார் திருத்தக்கதேவர். நிலையாமைக் கருத்தை வலியுறுத்த, சமண சமயக் கோட்பாடுகளு ஒன்றான பஞ்ச நமஸ்காரக் கோட்பாட்டை குண மாலையார் இலம்பகத்தில் சீவகன், அடிபட்டு அவதிப் பட்டுக் கிடந்த நாயின் காதில் பஞ்ச நமஸ்காரத்தை (ஐந்தாகிய அமிர்தத்தை) சீவகன் ஓதி நாயின் பெருந்துன்பத்தை நீக்கியதை,

***இருகல் நீ இறைவன் சொன்ன ஐம்பத அமிர்த முண்டால் பெறுதி நற்கதியை என்று பெருநவை அகற்றினானே (சிந்.பா.946)*** எனும் பாடல் உணர்த்துகிறது. மேலும் சித்திரக் கூடம் என்னும் இடத்தில் வாழும் துறவி களுக்குச் சீவகன் அருகப்பெருமானின் மறைமொழி யான மும்மணிக் கோட்பாட்டை (நல்ஞானம், நற் காட்சி, நல்லொழுக்கம்) போதிக்கின்றான். காந்தருவ தத்தையார் இலம்பகத்தில் பிறப்பதும், இறப்பதும் வினை பற்றியே நிகழ்கின்றன எனும் சமணக் கருத்து சொல்லப்பட்டு இருக்கிறது.

***ஆம்பொருள்கள்ஆகும் அது யார்க்கும் அழிக்கொண்ணா போம்பொருள்கள்போகும்அவை பொறியின் கைவண்ணம் (சிந்.பா.356)*** எனும் அடிகளின் மூலம் வினைக்கோட் பாட்டைவலியுறுத்தியுள்ளார் திருத்தக்கதேவர். சமணக் கடவுளான அருகதேவன் வழிபாட்டிற்குச் சாந்து, மலர்மாலை, சுண்ணப்பொடி, அகிற்புகை பயன்படுத் தப்பட்டதைச்சிந்தாமணியின் 1604வது பாடல் உணர்த் துகிறது. சிந்தாமணியில் புத்தபெருமானின் பெருமை யும் பேசப்பட்டுள்ளது. ஒரு பெண்கழுதையின் உடல் துயரைப்போக்க புத்தரே ஆண்கழுதையாக மாறிய தால் புத்தரை நகைக்கிறது சீவகசிந்தாமணி.

இவ்வாறாகச் சீவக சிந்தாமணியில் சைவ, வைணவ, பௌத்த கடவுளர்களையும், அவற்றின் கொள்கை களையும் கூறியபோதும் அவற்றிலிருந்தும் சமணம் மேம்பட்டதே எனும் கருத்தைத் திருத்தக்கதேவர் முன்வைக்கிறார்.சீவகசிந்தாமணியிலும் அக்காலத்திய வழிபாட்டு முறையைப் பதிவு செய்து, மக்கள் தமது விருப்பமான கடவுளர்களை வணங்கி மனப்பக்குவத் தோடு வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

ஐம்பெருங்காப்பியத்தின் நான்கு, ஐந்தாவதாக வைத் துப் பாடப்படும் காப்பியங்களான வளையாபதி, குண்டலகேசி இரண்டும் முழுமைபெற்ற செய்யுள் வடிவ நூல்களாகத் தெரியவில்லை. இருப்பினும் கூறப்படும் கதைகளின்வழி, அவற்றிலும் வழிபாட்டு முறைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் விரவிக் கிடக்கின்றன.

### வளையாபதியில் வழிபாடு

ஐம்பெருங்காப்பியத்துள் ஒன்றான வளையாபதி சமண சமயத்தை வலியுறுத்தும் காப்பியமாகும். இதில் 66 பாடல்கள் கிடைத்துள்ளன என்றும், 72பாடல்கள் கிடைத்துள்ளன என்றும் ஆய்வாளர்கள் முரண்படு கின்றனர். வளையாபதியில் குறள், குறுந்தொகை, திருமந்திரக் கருத்துகள் எடுத்தாளப்பட்டுள்ளன. தக்க யாகப் பரணியின் நூலாசிரியர் கவியழகு வேண்டி வளையாபதியைப் படித்ததாகச் சொல்கிறார்.

வளையாபதியின் நாயகன் 'நவகோடி நாராயணன்' மூலம் சமணக் கடவுள் அருகதேவனின் பெருமை கூறப்பட்டுள்ளது. *தொழுவல் தொல்வினை நீங்குக* (வளையாபதி) எனும் கடவுள் வாழ்த்துப் பாடல் சமணக் கடவுள் அருகதேவனின் துதியாக உள்ளது. வளையாபதிக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் காட்டும் மேற்கோள் பாடலில், *நிக்கந்த வேடத்து இருமுடி கணங்கள்* (வளையாபதி) எனும் தொடர் உள்ளது. நிக்கந்தன்-அருகன், நிக்கந்தன்-நிர்க்கந்தன், ('பற்றுகளிலிருந்து விடுபட்டவன் அருகன்'), வளையா பதியில் சமண சமயம் வலியுறுத்தும் வினைக்கோட் பாடும், துறவியர் வழிபாடும் சொல்லப்பட்டுள்ளது.

### குண்டலகேசியில் வழிபாடு

ஐம்பெருங்காப்பியத்தின் இறுதியாகச் சொல்லப்படுவது குண்டலகேசி. இது நாதகுத்தனாரல் இயற்றப்பட்ட பௌத்த சமயக் காப்பியமாகும். கி.பி.ஏழாம் நூற் றாண்டைச் சார்ந்தது என்பர். சமணத்திற்கு எதிராக எழுந்த காப்பியம் குண்டலகேசி. இது முழுக்க முழுக்க தருக்க இலக்கியமானபோதும், துறவினை வலியுறுத் தியபோதும்,புத்தவழிபாட்டை வழிமொழிகிறது. சமண, வைதிக சமயங்களைப் புறங்கண்ட இலக்கியமாகக் குண்டலகேசி திகழ்கிறது.

எப்பொழுதும் தனக்கு நன்மை தரக்கூடிய செயல் எதுவும் செய்திடாது, மற்றவர்களின் நன்மைக்காகவே செயல்பட்டவர் புத்தபிரான் என்பதை,

***முன்தான் பெருமைக்கண் நின்றான் முடிவு எய்துகாறும் நன்றே நினைந்தான் குணமே மொழிந்தான் தனக்கென்று ஒன்றானும் உள்ளான் பிறர்க்கே உறுதிக்கு உழந்தான்..... (குண்.கட.வா..பாடல்)*** எனும் அடிகளின்மூலம் குண்டல கேசி பௌத்தக் கொள்கையைச் சுமந்து பெருமை சேர்க்கிறது.

### தொகுப்புரை

மனிதப் பரிணாமத்தின் தொடக்கம் முதற்கொண்டு மனிதன் ஏதோ ஒரு பொருள் பற்றிய நம்பிக்கை உடையவனாக வாழ்ந்திருக்கின்றான். அதை வரலாற்று ஆதாரங்கள் முதற்கொண்டு அறிவியல் முன்னேற்ற மடைந்த நவீன காலம்வரை காணமுடிகிறது. அச்சம் காரணமாகவோ எதிர்பார்ப்பின் பொருட்டோ உயி ருள்ள, உயிரற்ற பொருட்களை வழிபடத் தொடங் கிய நாள்முதலே வழிபாடு தொடங்கிற்று. பல்வேறு இலக்கிய வடிவங்களுள் ஒன்றான ஐம்பெருங்காப் பியங்களிலும் வழிபாடு முதன்மையாகிறது.

சைவம், வைணவம், பௌத்தம் சமணம், கௌமாரம் ஆகிய இந்தியச் சமயங்களுள், பௌத்தமும் சமண மும் வடநாட்டிலிருந்து வந்து தமிழக மக்களிடம் வேரூன்றியதாக வரலாறு கூறினும், அனைத்து மதமும்

உள்ளம் பண்பட வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது.

காப்பியத்தில் முதன்மையான சிலப்பதிகாரத்தில் சிவன், விஷ்ணு, முருகன், அருகதேவன், காமன், பாவை வழிபாடு, நடுகல் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, எனப் பலவிதமான வழிபாடுகளைக் கூறியிருப்பதன் மூலம் சிலப்பதிகாரக் காலத்திலேயே மக்களின் வழிபாடு பற்றிய நம்பிக்கையை உணர முடிகிறது.

நிலையாமைக் கருத்தை வலியுறுத்திய மணிமேகலை புத்தபிரானின் பெருமையையும், பல்வேறு வழிபாட்டு முறைகளுள் ஒன்றான மரவழிபாட்டையும் (புத்தர் ஞானம்பெற்ற போதிமரம் வணங்கப்பட்டது), பாத பீடிகை வழிபாட்டையும் (பாதத்தை வழிபட்டதை) வலியுறுத்துகிறது.

சீவக சிந்தாமணியில் சைவ, வைணவ, பௌத்த கடவுளர்களையும், அவற்றின் கொள்கைகளையும் கூறியபோதும் அவற்றிலிருந்தும் சமணம் மேம்பட்டதே எனும் கருத்தை திருத்தக்கதேவர் முன்வைக்கிறார். சீவகசிந்தாமணியிலும் அக்காலத்திய வழிபாட்டு முறையைப் பதிவு செய்து, மக்கள் தங்கள் விருப்பமான கடவுளர்களை வணங்கி மனப்பக்குவத்தோடு வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

வளையாபதியில் சமண சமயம் வலியுறுத்தும் வினைக் கோட்பாடும், துறவியர் வழிபாடும் சொல்லப்பட்டுள்ளது. குண்டலகேசியில் சமணக் கருத்துடைய தலைவி மூலம் புத்தபிரானின் வழிபாட்டிற்குப் பிறகு, பற்றொழிந்த புத்தனின் பாதம்பணிந்து வாழ்தலே வீடுபேறு என்பதை வலியுறுத்தப்படுகிறது.

**முடிவுரை**

மனிதப் பரிமாணத்தின் வளர்ச்சியோடு இரண்டறக் கலந்தது வழிபாடு. சிந்தனை, நாகரிகம், கலாச்சாரம் வளர்ச்சியடையாத பண்டைய காலந்தொட்டே இயற்கையையோ, அச்சுறுத்தும் பிறவற்றையோ வணங்குதல் மரபாயிற்று. மனம் பண்பட்டு, அனைத்து உயிரினமும் துன்பமின்றி வாழவேண்டும் எனும் ஒற்றைக் குறிக்கோளோடு, பல்வேறு புனைவுகளுடனோ, எதார்த்தத்துடனோ, இலக்கியங்கள் படைக்கப்பட்டு, வழிபாட்டின் பெருமையையும், சிறப்பையும் எடுத்தியம்புகின்றன.

**துணைநூற்பட்டியல்**


1. **சிலப்பதிகாரம்-ந.மு.வேங்கடசாமி நாட்டார்உரை,** இராமையா பதிப்பகம், சென்னை.
2. **சிலப்பதிகாரம் - பொ.வே.சோமசுந்தரனார்** (உ.ஆ.), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
3. **சிலப்பதிகாரம் - ஞா.மாணிக்கவாசகன்,** உமா பதிப்பகம், சென்னை.
4. **மணிமேகலை - (உரையாசிரியர்) துரை.தண்டபாணி,** உமா பதிப்பகம், சென்னை.
5. **சீவக சிந்தாமணி** (உரைநடை) - **தி.வே.கோபாலய்யர்,** கங்கை புத்தக நிலையம், சென்னை.
6. **வளையாபதி-குண்டலகேசி** (மூலமும் உரையும்)- **(உரையாசிரியர்) புலவர் ப. ராஜேந்திரன்,** கங்கை புத்தக நிலையம், சென்னை.
7. **சமணமும் தமிழும்-மயிலை.சீனி.வேங்கடசாமி,** நாம் தமிழர் பதிப்பகம், சென்னை.
8. **பௌத்தமும் தமிழும்-மயிலை.சீனி.வேங்கடசாமி,** நாம் தமிழர் பதிப்பகம், சென்னை.

**தெய்வங்களும் சமூக மரபுகளும்-தொ.பரமசிவன்** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை..


**When I was 5 years old, my mother always told me that happiness was the key to life. When I went to school, they asked me what I wanted to be when I grew up. I wrote down 'happy'. They told me I didn't understand the assignment, and I told them they didn't understand life.**

**– John Lennon**

**Don't limit yourself. Many people limit themselves to what they think they can do. You can go as far as your mind lets you. What you believe, remember, you can achieve.**

**—Mary Kay Ash**

**It is our choices that show what we truly are, far more than our abilities.**

**—J. K. Rowling**

ISSN 2320-4842



# இயற்கை தந்த வரம்–இலுப்பை மரம்

**கி. ரேவதி**
**முனைவர் பட்ட ஆய்வாளர், இராணிமேரிக் கல்லூரி, சென்னை**

**முன்னுரை**

'ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை'. சர்க்கரையை ஒத்த இனிப்புச் சுவையுடைய இலுப்பைப் பூக்களைச் சங்ககால மக்கள் இனிப்புகள் செய்யப் பயன்படுத்தினர் தற்போது கரும்பைப் பிழிந்து சாறெடுத்து அதை வடிகட்டி வெப்பப்படுத்திப் படிகமாக்கல் (crystalisation) என்ற முறைப்படி சர்க்கரை பெறப்படுகிறது. Madhuca longifolia என்ற தாவரவியல் பெயர் கொண்ட இம்மரம் இந்தியாவைத் தாயகமாகக் கொண்டது. இம்மரம் பற்றிய குறிப்புகள் புத்த இலக்கியங்களில் காணப்படுகின்றன.

**வாழிடம் (Habitat)**

இம்மரம் வெப்ப மண்டல மரவகையைச் சார்ந்தது. சப்போட்டா தாவரத்தின் குடும்பத்தைச் சேர்ந்தது. வண்டல் மண், மணற்பாங்கான மண்ணில் இம்மரம் நன்கு வளரும். இதன் இலைகள் கரும்பச்சை நிறத்தில் பளபளப் பாக இருக்கும். பிப்ரவரிமுதல் ஏப்ரல்வரை பூக்கள் பூக்கும். இதன் பூ முத்தின் வடிவத்தில் காணப்படும். பழம் தின்னி வெளவால்கள் மூலம் இதன் பூக்களில் மகந்தச்சேர்க்கை (pollination) நடைபெறும். இம் மலர்கள் இரவில் மலர்ந்து மணம் வீசும். மதுகா, மட்கம், மஹுவா, பட்டர் மரம், தேன் மரம், குலிகம், மோஹா எனப் பல பெயர்களில் இம்மரம் அழைக்கப்படுகிறது.

**அகநானூற்றில் இலுப்பை**

*அப்புநுனை ஏய்ப்பஅரும்பிய இருப்பை*
*,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,அம்குடிச் சீரூர் (அக. 9: 4)*

வீரர்களின் அம்பறாத்தூணியில் காணப்படும் அம்புகளைப்போன்று இருப்பை மரத்தில் மொட்டுக்கள் நிறைந்து காணப்பட்டது. செப்புத் தகடுபோன்ற நிறமுடைய அதன் தளிர்களுக்கு இடையில் நெய்போன்ற நிறமுடைய அதன் பூக்கள் மலர்ந்துள்ளன. வானில் பெய்யும் மழையைப்போலக் காம்புகள் நீக்கிய அம்மலர்கள் காற்றி னால் சிதறுண்டு எல்லா இடங்களிலும் பரவி விழுந்து கிடந்தன. சிவந்த மேட்டுப் புறத்தில் விழுந்த அப்பூக்கள் பார்ப்பதற்குச் சிவப்பு நிணத்தின் மேல் வெண்மையான கொழுப்புப் படர்ந்திருப்பதைப் போன்று தோன்றுகின்றன. இப்பாடலில் இருப்பைப்பூக்களின் புறத்தோற்றம் (morphological structure) கூறப்பட் டுள்ளது.

*அத்த இருப்பை ஆர்க்கழல் புதுப்பூ (அக 15: 13)*

இலுப்பைப் பூ சுவைமிகுந்தது. அதனால் அவற்றைக் கரடிகள் விரும்பி உண்ணும்.

*கருங்கோட்டு இருப்பை ஊரும் (அக 171: 14)*

இருப்பை மரங்களின் பூக்கள் இனிப்புச் சுவை மிகுந்ததாக இருக்கும். எனவே, கரடிகள் அவற்றை உண்ண அம்மரத்தின் மேலேறி அமர்ந்துகொள்ளும். இலுப்பபை மரங்கள் மழையை வருவிக்கும் தன்மை உடையன என்பது இதன் கூடுதல் சிறப்பு.

*நீடுநிலை அரைய செங்குழை இருப்பை (அக 331:1)*

நீண்ட தண்டினையும், சிவந்த தளிர்களையும் கொண்ட இருப்பை மரத்தில் வெண்மையான மலர்கள் எங்கும் பரவிக் காணப்பட்டன.

**தலவிருட்சம்**

திருஇரும்பைமாகாளம், திருப்பழமண்ணிப்படிக்கரை, திருச்செங்கோடுபோன்ற இடங்களில் தலவிருட்சமாக உள்ளது. இதில் திருப்பழமண்ணிப்படிக்கரை என்னும் தலம் தற்போது இலப்பைப்பட்டு என்று அழைக்கப்படு கிறது. திருவள்ளுவர் மைலாப்பூரில் உள்ள ஏகாம்ரேஸ்வர் கோவிலில் காணப்படும் தலவிருட்சமான இந்த

ISSN 2320-4842

இலுப்பை மரத்தின் அடியில் பிறந்ததாகக் கருதப்படுகிறது. அவரின் உருவச் சிலை இவ்வாலயத்தில் இன்றும் காணப்படுவது இதற்குச் சான்று.

**இலுப்பெண்ணெய்**

இலப்பை விதையிலிருந்து எடுக்கப்படும் இலுப்பெண்ணெய் பெரும்பாலான சிவாலயங்களில் தீபமேற்றப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வெண்ணையை ஆலயங்களில் தீபமேற்ற வழங்குவதன் மூலம் காரியங்கள் வெற்றிபெறும் என்பது இந்துக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

**அரப்பு**

எண்ணெய் பிரித்தெடுத்த பின் கிடைக்கும் இலுப்பைப் பிண்ணாக்கு அரப்பு என்று அழைக்கப்படுகிறது. வாரத்தில் ஒருநாள் அரப்பு வைத்துத் தலையில் முழுகும் மரபு தமிழர்களிடையே உண்டு.

**உணவுப் பொருட்கள்**

இலுப்பைப் பூவிலிருந்து எடுக்கப்படும் சாறு பதப்படுத்தப்பட்டு பீகார் மக்களால் விருந்து, கேளிக்கைகளில் அருந்தப்படுகிறது. இப்பூக்கள் நன்கு உலர்த்தப்பட்டு, பின் அரைத்து மாவு எடுக்கப்படுகிறது. இது ரொட்டி தயாரிக்கப் பயன்படுகிறது.

**முடிவுரை**

ஏராளமானமருத்துவகுணங்கள் நிறைந்த இம்மரத்தின் பூ, இலை,காய், வேர் என அனைத்து பாகங்களும் மக்களுக்குப் பயன்படுகிறது. கண்மாய், ஏரி, குளங்கள் இவற்றின் கரையில் காணப்படும் இந்த மரம் இயற்கை நமக்குத் தந்த வரம். 2015ஆம் ஆண்டுக் கணக்குப்படி இம்மரங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டேவருகிறது. இதனால் வௌவாலின் அழிவு அதிகமாகியுள்ளது. வௌவாலின் எண்ணிக்கைக் குறைவால் கொசுக்களின் வளர்ச்சி அதிகமானது. இதனால் மனித வியாதிகளும் அதிகமாகி யுள்ளன. எனவே இம்மரத்தைப் பேணிக் காப்பது இன்றியமையாதது.

**சான்றுநூல் பட்டியல்**

1.www.shaivam.org
2.tamilvu.org\library

*71ஆம் பக்கத் தொடர்ச்சி*

***திக்கில் நிகழ் செய்து தெளித்து அவரவர் உரைக்கும்***
***தக்க தபாலுக்குத் தமையனே*** என்ற பாடலில் தபாலுக்குத் தமையனே, டெலிபோனுக்குத் தந்தையே கூர்ந்து அன்பின் எய்திய மாந்தர்க்கு இனி தாய்ச் செவிவாய்க்குச் செய்தி அமுதூட்டும் திருத் தாயே டெலிகிராம் என்னும் சீராளா என்று பாராட்டியுள்ளார் தந்தி என்பது உலகுக்கு உதவுவதால் உலகில் அரசாட்சி, வர்த் தகம், பத்திரிக்கைத் தொழில், ரயில் போக்குவரத்து முதலியவை நடப்பது பற்றிப் பாடியுள்ளார். பின்பு காங்கேயன் தன் மனைவிக்கு இப்பாடல் மூலம் தந்தியைத் தூது அனுப்பினார்.

***மனையானை கண்டு என வரலாறு அனைத்தும்***
***நினைவாய் உரைத்து அவள் தன் நெஞ்சின் சினம் ஆற்றி என்***
***வருகை கூறில் நினையான் மறவேன்***
***ஆதலால் மன்னவனே தூது போய் வா*** என்று கூறியுள்ளார்.

**முடிவுரை**

19ஆம் நூற்றாண்டில் உருவான தந்திதான் தற்போது பல வகையிலும் விரிவடைந்து உலகையே தன் கைக்குள் அடக்கிய கணினி, மடிக்கண்ணி, செல்பேசி,இணையம், மின்னஞ்சல் ஆகிய அனைத்திற்கும் ஆதாரமாகும். இவை மட்டுமன்றி அக்காலத்தில் வழக்கத்திலிருந்து நாடகம், நாட்டியம், நாட்டிய நாடகம், இசை நாடகம் ஆகியவை தற்போதுள்ள நவீன உலகத்திற்குத் தகுந்தாற்போல் வளர்ச்சி பெற்றுள்ளது என்றால் மிகையாகாது.

**Success seems to be connected with action. Successful people keep moving. They make mistakes but they don't quit.**

**- Conrad Hilton**

**வாழ்நாள் உறுப்பினர்கள்**

442 செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை
442 சு. சாந்தலட்சுமி
443 ர. லட்சுமி
444 கே. எம். சுப்பிரமணியன்
445 இரா. ஜானகி



ISSN 2320-4842



# தொல்காப்பியர் சுட்டும் யாமரக்கிளவி மரப்பெயரா? (சங்கச் சான்றுகளை முன்வைத்து)

**முனைவர் ம. தமிழரசன்**
**உதவிப் பயிற்றுநர் (தமிழ்), நுண்கலைத் துறை, அழகப்பா பல்கலைக்கழகம்**

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின் என்பதற்கு இணங்க, சங்க காலத்திற்கு முற்பட்ட இலக்கியங்களைக் கொண்டு வகுக்கப்பட்ட இலக்கணம் தொல்காப்பியம். கிடைத்துள்ள இலக்கணங்களில் மிகத் தொன்மையானதாக, தமிழின் முதல் நூலாக விளங்கும் தொல்காப்பிய இலக்கணத்தில் சில மரப்பெயர்களின் புணர்ச்சி குறித்துக் கூறவந்த தொல்காப்பியர்,

***யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்***
***ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே (தொல். எழுத். 229)*** என்பர். இங்கு, புணர்ச்சியில் மெல்லெழுத்து மிக்கு முடியும் பிடவம், தளவம் முதலிய மரங்களோடு 'யா' என்னும் மரப்பெயரையும் சேர்த்துக் கூறியுள்ளமையின் யாமரம் என்பது பிடவமரம், தளவமரம் போன்ற மர வகைமையில் ஒன்று எனக்கருத இடமுள்ளது. எனவே சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள பதிவுகளைக் கொண்டு யாமரம் என்பது மர வகைகளில் ஒன்றா? அல்லது காரணம் கருதி, தன்மை அடிப்படையாற் பெற்ற பெயரா? என்னும் பெயர்க் காரணத்தை ஆராயும் முகமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**யா - ஓரெழுத்துச் சொல்**

யா என்னும் ஓரெழுத்துச் சொல் தமிழில் பல்வேறு பொருளில் பயின்று வந்துள்ளது. தொல்காப்பியர் இதனை, யா என்னும் வினாப்பெயர் (தொல்.176) என்றும் மரப்பெயர் (தொல்.229) என்றும் கூறியுள்ளார். நிகண்டு நூல்களுள் ஒன்றான நாமதீப நிகண்டு இதனை அசைச்சொல் (நாம.ப.201) என்றும் அகலத்தின் பெயர் (778) என்றும் கூறுகிறது. கதிரைவேற்பிள்ளயின் தமிழ் மொழி அகராதி, *அஃறினைப் பன்மைப் படர்க்கை வினா, ஓரசைச்சொல், ஒருவகை மரம்* (பவானந். ப.402) என்றும் நர்மதாவின் தமிழ் அகராதி, *யாவை, மரவகை* (நர்ம.ப.769) என்றும் விளக்கம் கூறியுள்ளன.

யா எனும் ஓரெழுத்துச் சொல் சிந்துவெளி மக்களின் கடவுளைக் குறித்துச் சொல்லப்பட்டது என்பர் ம.சோ. விக்டர். மேலும் அவர், ***யா-என்ற தமிழ்ச் சொல் கடவுளைக் குறித்தே சொல்லப்பட்டது என்பதற்கான விளக்கம் தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆனால் தமிழர் குடியேற்ற மேலைநாட்டு இலக்கியங்களில் யா என்ற தமிழ்ச் சொல்லால் கடவுள் அழைக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன (தமிழர் சமயம், ப. 28)*** என்பர். மேலும், மூத்தவள், மூதாட்டி, நீண்ட அகவையைக் கொண்டவள் எனப் பொருள்படும் ஆயா என்னும் சொல் குறித்து, ***ஆயா என்பது ஒற்றைச் சொல் அல்ல (ஆ = தொடக்கம் யா = நீண்ட நெடிய) தொடக்கத்திலிருந்து நீண்ட நாள் வாழ்ந்திருந்த பெண் அல்லது மூதாட்டி (தமிழர் சமயம், ப. 28)*** என்றும் பொருள் தருகிறார்.

மேற்கண்ட சான்றுகளின்வழி, யா என்னும் ஓரெழுத்துச் சொல் 1. வினாப் பெயர், 2. மரப்பெயர், 3. அசைச் சொல், 4. அகலத்தின் பெயர், 5. சிந்துவெளி மக்களின் கடவுள், 6. நீண்ட நெடிய காலத்தால் முற்பட்ட எனப் பல்வேறு பொருள்களைத் தருகிறது.

**சங்க இலக்கியத்தில் யாமரக் கிளவி**

யா என்னும் மரப்பெயர் குறித்த பதிவுகள் சங்க இலக்கியத்தில் பெரும்பான்மை (குறுந்.198, மலைபடு. 429 தவிர) பாலைத்திணைப் பாடல்களாகவே உள்ளன. இதில் யாமரங்கள் என்பவை நெடிய அடிப்பகுதியையும் கருமையான காலையும் உடைய பெரிய மரங்களாகவும், நெடிது உயர்ந்து ஓங்கிய மரங்களாகவும், மென்மையான கிளைகளை உடைய யானை உண்ணத்தக்க மரங்களாகவும் உள்ளன.

**பெரிய மரங்கள்**

யா மரங்கள், யானைகள் உராயத் தக்க அளவிலும், இடைச்சுரத்தில் செல்லும் வணிகருக்கு இல்லத் தில் இருப்பது போன்ற அகன்ற பெரிய நிழல் தரத் தக்கதாயும் அளவில் பெரியதாயும் இருந்துள்ளன. இதனை,

***பெருங் களிறு உறிஞ்சிய மன்னரை யாஅத்த (அகநா. 17:16)***
***நனந்தலை யாஅத்து அம்தளிர்ப் பெருஞ்சினை***
***போல் நீழல் செல்வெயில் ஒழிமார் (அகநா.348:10-11)***

என்பன போன்ற அகநானூற்று அடிகள் விளக்கும். மேலும் இவை நெடிய அடிப்பாகத்தை உடைய மரங்கள் என்பதை, ***நீள்எரி பரந்த நெடுந்தாள் யாத்து (அகநா.51:2), குறும்பொறை எழுந்த நெடுந்தாள் யாஅத்து (அகநா. 193:7)*** என்னும் அடிகள் விளக்கும். சில நேரங்களில் கருமையான கால் பகுதியுடன் (ஐங்.388:2, அகநா.397:13) பிளவுபட்ட தளிர்களை (அகநா.187: 15) உடையனவாகவும் இவை காணப்பட்டுள்ளன.

**உயர்ந்து ஓங்கிய மரங்கள்**

சங்க இலக்கியத்தில் சில யாமரங்கள் நெடிதுயர்ந்து ஓங்கிய மரங்களாகவும், சில இலைகள் இல்லாது ஓங்கிய மரங்களாகவும், சிலவோ பக்கக் கிளைகள் இல்லாது நெடிதுயர்ந்து ஓங்கிய மரங்களாகவும் காணப்பட்டுள்ளமையைச் சங்கப் புலவர்கள்,

***நெடுநிலை யாஅம்...(நற்186:7), ... யா உயர்ந்து (நற்.196:1), நிலைஉயர் யாஅம்... (குறுந்.307:6), யாஉயர் நனந்தலை...(அகநா. 19:3, 65:13), நீடுநிலை யாஅத்து...(அகநா.263:8), ஒல்குநிலை யாஅத்து ஓங்குசினை (அகநா.31:5), கவைமுறி இழந்த செந்நிலை யாஅத்து (அகநா.33:3)*** எனப் பலவாறுரைப்பர்.

**யானைகள் உண்ணத்தக்க மரம்**

சில யாமரங்கள் யானைகள் ஒடித்து உண்ணத்தக்கனவாக (குறுந்.232:4) விளங்கியுள்ளன. உட்புரை இல்லாத (வயிரம் பாய்ந்த) யாமரத்தைக் களிறு தன் கோடு சீதையக் குத்தியும் ஓங்கி வளர்ந்த மரங்களின் தளிர்களை வளைத்துத் தன் பிடிக்கு உண்ணக் கொடுத்துள்ளமையை,

***பொத்துஇல் காழ அத்த யாஅத்துப்***
***பொரிஅரை முழுமுதல் உருவக் குத்தி***
***மறம்கெழு தடக்கையின் வாங்கி உயங்குநடைச்***
***சிறுகட் பெறுநிரை உறுபசி தீர்க்கும் (குறுந்.255:1-4)***
***புன்தலை மடப்பிடி உணீஇயர் அம்குழை***
***நெடுநிலை யாஅம் ஒற்றி...***
***... களிறே (அகநா.59:7-9)*** என்பன போன்ற சங்கச் சான்றுகள் விளக்கும். மேலும் பாலைநிலக் காட்டில் நீர் வேட்கையுடைய களிறு யாமரத்தின் அடிப்பகுதியைக் குத்தி, அதன் பட்டையை உரித்து அதில் ஊறும் சிறிதளவு நீரை உறிஞ்சியும் (அகநா.257:14-16), கோடு சிதையக் குத்திப் பெயர்த்த யாமரப் பட்டையைப் பிடிக்கு ஊட்டியும் (அகநா.335:7), யாமரத்தைக் குத்தி அதன் உட்பக்கமுள்ள வெண்பட்டையை உரித்து அதிலும் நீர்ப்பசை இன்மையால் வெறும் கையைச் சுவைத்துத் தன் பிடியின் நீர் வேட்கையைப் போக்க இயலாமலும் (குறுந்.307:4-8) நின்றுள்ளது. எனவே பாலை நிலத்தில் தாவரத்தின் தளிர்கள் யானைகளுக்கு உணவாகவும் அவற்றின் பட்டைகளிலுள்ள ஈரம் கோடையில் அவற்றின் நீர் வேட்கையைத் தீர்க்கவும் பயன்பட்டுள்ளன. (இங்கு யாமரம் என்பது தனி மரவகை அல்ல. யானை ஒடித்து உண்ணத்தக்க பல்வேறு மரங்களும், களிறு தன் கோடுசிறியக் குத்திப் பெயர்க்கத் தக்கபட்டையை உடைய பெருமரங்களுமே ஆகும்).

**மென்தளிர் மரங்கள்**

சில யாமரங்கள் மென்மையான தளிர்களை உடையனவாக இருந்துள்ளன என்பதை *மென்சினை யாஅம்* (குறுந்.37:3)எனும் அடி விளக்கும். மேலும், தலைவியின் பசலை படர்ந்த மேனிக்கு இவ்யாமரத்தின் தளிர்கள் ஒப்புமையாகவும் (அகநா.333:1-2, 337:1-2) கூறப்பட்டுள்ளன.

சங்க காலத்தில் வேட்டுவர் சுட்டெரித்துப் பண்படுத்திய நிலத்தில் தினை விதைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர் (அகநா 368:1-3, புறநா.159:15-16). அவ்வகையில் பெரிய மரங்களை வெட்டி அழித்து அவற்றை எரித்த இடத்தில் தினை விதைத்தமையை,


***யாஅம் கொன்ற மரம் சுட்ட இயவின்***
***கரும்பு மருள்முதல் பைந்தாட் செந்தினை (குறுந்.198: 1-2)*** என்னும் குறுந்தொகை அடிகள் விளக்கும்.

மேற்கண்ட பல்வேறு பதிவுகள்வழி யாமரங்கள் என்பவை பரந்த அடிப்பாகத்தை உடையனவாயும், கருமையான அடிப்பாகத்தை உடையனவாயும், சில நெடிது ஓங்கி வளர்ந்தவையாயும் காணப்பட்டுள்ளன. மேலும், தலைவியின் மேனிக்கு ஒப்புமை கூறும் அளவுக்கு மென்மையுடைய யாமரத்தின் தளிர்கள் யானைகளுக்கு உணவாகவும் கோடையில் அவற்றின் பட்டை நீர் வேட்கையைத் தீர்க்கவும் பயன்பட்டுள்ளன என அறியலாம்.

**முடிவுரை**

பரந்த அடிப்பாகமும் பக்கக் கிளைகளும் உடைய பெரிய மரமும், கிளைகளற்று நெடிதுயர்ந்து வளர்ந்ததும் ஆகிய இவ்விரு தன்மைகளையும் கொண்டதாக ஒரே மரவகை இருக்க முடியாது. மேலும் தொல்காப்பியர் கூறும் கருப்பொருளுக்கு உரை பகரும் உரையாசிரியர்கள் யாரும் பாலைக்குரிய மரமாக யா மரத்தைக் கூறவில்லை. தொல்காப்பியத்திற்குப் பின் வந்த தமிழ்நெறிவிளக்கம், நம்பியகப்பொருள், மாறன் அகப்பொருள்,இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய அனைத்து இலக்கண நூல்களிலும் குரா, மரா, பாதிரி, பாலை, உழிஞை, ஓமை, ஞெமை, இருப்பை, புன்கு முதலிய வையே பாலைக்குரிய மரங்களாகச் சுட்டப் பெற்றுள்ளன. யா என்றொரு மரவகை இருப்பதாகவோ அதனைப் பாலை நிலத்துக்கு உரியதாகவோ கூறவில்லை. எனவே பழமையானதாயும், பரந்த அடிப்பாகத்தை உடைய, கரிய (வயிரம் பாய்ந்த) அடிப்பாகத்தை உடையனவாயும், நெடிதுயர்ந்து ஓங்கி வளர்ந்தவையாயும் விளங்கிய பல்வேறு மரங்களும் யா மரம் எனும் பொதுப் பெயரால் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல, யானைகள் உண்ணத்தக்க மென் தளிரையும் பட்டையையும் உடையனவாய் விளங்கியுள்ளன என்பதை இதன்வழி அறிய முடிகிறது.

ISSN 2320-4842



# பார்ப்பார்த் தப்பிய – குரவர்த் தப்பிய: பாட வரலாறு

**முனைவர் ஆ. மணி**
**துணைப்பேராசிரியர்–தமிழ், பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி**
**புதுச்சேரி 605 003**

**உரைக்களம்**

புறநானூற்றின் 34ஆம் பாடல் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆலத்தூர்கிழார் பாடிய தாகும். அப்பாடலின் மூன்றாம் அடியைப் ***பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்*** (புறநா. 34:3) எனப் பதிப்பித்தார் புறநானூற்றின் முதற்பதிப்பாசிரியராகிய உ.வே.சா. (1894: 45-46). அவ்வடியில் முதற்சொல் லுக்குக் குரவர்த் என்ற பாடமும் உண்டு எனக் கொண்டார் ஔவை துரைசாமிப்பிள்ளை (1947: 98,101). இவ்விரு பாடங்களின் வரலாற்றைத் தொகுத்துரைக்க இவ்ஆய்வுரை முற்படுகின்றது. இம்முயற்சிக்குப் புற நானூற்று உரைகளும் பதிப்புக்களும், திருக்குறள் உரைகளும், பதிப்புக்களும், அவை பற்றிய ஆய்வுகளும் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**புறநானூற்றுப் பதிப்புக்களின் பாடம்: உ.வே.சா. பதிப்புப் பாடம்**

புறநானூறு முதன்முறையாக 1894இல் உ.வே. சாமிநாதையரால் பழையவுரையுடன் பதிப்பிக்கப்பட்டது. அப் பதிப்பில் புறநா. 34ஆம் பாடலின் முதல் 7 அடிகள் வருமாறு:

> ***ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்***
> ***மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்***
> ***பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும***
> ***வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென***
> ***நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்***
> ***செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென***
> ***அறம்பா டிற்றே யாயிழை கணவ (புறநா. 34: 1-7).***

இப்பதிப்பில் ***பார்ப்பார்த் தப்பிய*** என்பதற்குப் பாடவேறுபாடுகள் எவையும் உ.வே.சா.வால் தரப்பட வில்லை. எனினும், 7ஆம் அடியில் உள்ள ***அறம்பா டிற்றே*** என்பதற்கு ***அறம் பாடின்றே யெனவும் பாடம்*** (உ.வே.சா. 1894: 45*) என இப்பாடல் முழுமைக்குமே ஒரே ஒரு பாடவேறுபாட்டை மட்டும் உ.வே.சா. சுட்டியுள்ளார். இப்பாடவேறுபாடு திருக்குறள் பதிப்பாசிரியர்களால் பாடமாகக் கொள்ளப்பட்ட ஒன்றே என்பதனைப் பின்னர்க் காண்போம். மேலும், இப்பாடலின் மூலம், உரை ஆகியவற்றுக்கு எவ்வித அடிக்குறிப்பும்/குறிப்புரையும் இம்முதற்பதிப்பில் உ.வே.சா.வால் தரப்படவில்லை என்பது அறியத்தக்கது.

புறநானூற்று முதற்பதிப்பில் 34: 1-7ஆம் பாடலடிகளுக்குப் பழையவுரையாசிரியர் தரும் பொருள் வருமாறு: ***ஆனினது முலையாற் பெறும் பயனைக் கெடுத்த தீவினையாளர்க்கும் மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடைய பெண்டிரது கருப்பத்தை அழித்தோர்க்கும் பார்ப்பாரைப் பிழைத்த கொடுந்தொழிலையுடையோர்க்கும் அவர் செய்த பாதகத்தினை ஆராயுமிடத்து அவற்றைப் போக்கும் வழியுமுளவெனவும், நிலம் கீழ் மேலாம் காலமாயினும் ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தோர்க்கு நரகம் நீங்குதலில்லை யெனவும் அறநூல் கூறிற்று*** (உ.வே.சா. 1894: 46*). மேலும், விளக்கவுரையில் ***கோவதை முதலாயின வாக்காற் சொல்லவும்படாமையின், ஆன்முலையறுத்த வெனவும், மகளிர்க் கரு சிதைத்தவெனவும், பார்ப்பார்த் தப்பியவெனவும் மறைத்துக் கூறப்பட்டன*** (உ.வே.சா. 1894: 46) என்றும் பழையவுரையாசிரியர் விளக்கம் தருவர். இவற்றின்மூலம், புறநானூற்றுப் பழையவுரை யாசிரியர் பாடம் **'பார்ப்பார்த் தப்பிய'** என்றே உள்ளது அறியத்தக்கது. இவ்வுரையாசிரியர் இன்னாரென்று தெரியவில்லை என்றும், இவ்வுரையாசிரியர் அடியார்க்குநல்லார்க்கு முற்பட்டவர் என்றும் உ.வே.சா. (1935: XII) மூன்றாம் பதிப்பின் முகவுரையில் கூறுவர். உரையாசிரியர்கள் என்னும் பெருநூலைச் செய்த மு.வை. அரவிந்தன் (2008[#]: 325-328, 454, 381) புறநானூற்றுப் பழையவுரையாசிரியரின் காலம் எதுவெனக் கூற வில்லை. எனினும், அடியார்க்கு நல்லார் பொப்பண்ண காங்கேயனின் காலமாகிய 12ஆம் நூற்றாண்டினர் என்னும் முன்னோர் கருத்தை உரைக்கின்றார். பரிமேலழகர் 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி செய்த விசய கண்ட சோழன் என்ற தெலுங்கச் சோழனின் கல்வெட்டில் குறிக்கப்படும் பரிமேலழகிய பெரு மாள் தாதன் என்பவராக இருக்கலாம் என்ற மு. இராகவையங்காரின் கருத்தைச் சுட்டுகின்றார். எனவே, அவர் கருத்துப்படிப் பரிமேலழகர் காலம் 13ஆம் நூற்றாண்டாகும். புறநானூற்றுப் பழையவுரையாசிரியர்

அடியார்க்கு நல்லாருக்கு முற்பட்டவர் என்ற உ.வே.சா. வின் மேற்கருத்தினை ஏற்றால், புறநானூற்று உரை யாசிரியரே காலப் பழமையுடையவராகத் தோன்று கின்றார். அப்படிப் பார்க்கும்பொழுது, **பார்ப்பார்த் தப்பிய** எனப் பாடம் கொண்ட முதல் உரையாசிரி யர் எனப் புறநானூற்றுப் பழையவுரையாசிரியரையே கருத வாய்ப்பு ஏற்படுகின்றது. பரிமேலழகர் பார்ப் பார்த் தபுதலும் (பார்ப்பாரைக் கொல்லுதல் பிரம ஹத்தி தோஷம் என்னுமாப்போல வரும் புராணக் கருத்தினை இவண் நினைக) எனப் பாடக்கருத்துக் கொண்டனர் என்பது நினையத்தக்கது. பரிமேலழகர் கொண்ட **பார்ப்பார்த் தபுதலும்** என்பதைப் பின் னைய உரையாசிரியர்களும் ஆய்வாளர்களும் ஏனோ மறந்துவிட்டனர் என்பது அறியத்தக்க உண்மையாகும். இவற்றின்மூலம், பரிமேலழகர் பார்ப்பார்த் தபுதலும் என்று பாடக்கருத்துக் கொண்டவர் (ஏனெனில், பரி மேலழகர் புறநா. பாடலை உள்ளபடியே எடுத்தாளா மல், உரைநடையிலேயே எடுத்தாண்டவர். உ.வே.சா. வும் *உரைநடையிலமைத்தனர் பரிமேலழகர்* என்றே கூறுவதையும் நினைக) என்பதும், புறநானூற்றுப் பழையவுரையாசிரியரே பார்ப்பார்த் தப்பிய என்று பாடம் கொண்டவர் என்பதும் தெளிவாகின்றன.

அடியார்க்கு நல்லார் காலம் 11ஆம் நூற்றாண்டு என்றும், புறநானூற்றுப் பழையவுரையாசிரியர் காலம் 12ஆம் நூற்றாண்டு என்றும், திருக்குறள் உரை யாசிரியராகிய பரிமேலழகரின் காலம் 13ஆம் நூற் றாண்டு என்றும் கூறுவாருண்டு (https://www.wikiwand.com/ta/ உரையாசிரியர்கள்_(காலநிரல்)). முற்கருத்துக்கு மாறான இக்கருத்தினை ஏற்றாலும், பரிமேலழகருக்கு முற்பட்டவர் புறநானூற் றுப் பழையவுரையாசிரியரே ஆவர் என்பது குறிக்கத் தக்கது. [தற்போது கால ஆய்வுக்குள் புகாமையால், முன்னோர் கருத்துக்களின் அடிப்படையில் மேற் கருத்து கூறப்பெற்றுள்ளது. கால ஆய்வின் முடிவுகள் மாற்றம் பெறின், இக்கருத்தும் மாறக்கூடும் என்பதை நினைக].

புறநானூறு மூலமும் உரையும் இரண்டாம் பதிப்பு 1923இல் உ.வே.சா.வால் வெளியிடப்பட்டது. அப் பதிப்பில், முதன்முறையாக உ.வே.சா. புறநானூற்றுப் பாடலடிகளுக்கு அடிக்குறிப்புக்களும் குறிப்புரைகளும் தந்துள்ளார். அதில் முதலடிக்கு *1*. 'குடிகொன் றிறைகொள்ளும் கோமகற்குக் கற்றா, மடிகொன்று பால்கொளலு மாண்பே' நீதிநெறி. 29**" என்றும், முதல் மூன்று அடிகளுக்கு *'1-3*. இவ்வடிகளிற் கூறப்பட்டவற்றை, 'பெரிய அறங்களைச் சிதைத்த லாவது ஆன்முலையறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும் பார்ப்பார்த் தபுதலு முதலிய பாதகங் களைச் செய்தல்'* (குறள். 110*) *என உரைநடை யிலமைத்தனர் பரிமேலழகர்* என்றும், முதன் நான் கடிகளுக்கு *1-4*. 'கொலைகளிற் கொடுமை சான்ற பார்ப்பனக் கொலைவல்வீரக், கொலைக்கருக் கொலைதாய தந்தைக் கொலைக்கவைக் கோட்டு நல்லான், கொலை முதற் பிறவும் நீங்கும்' காஞ்சிப். சருவதீர்த்த. 14** என்றும் உ.வே.சா. (1923: 70, 71*) குறிப்புரைகளைத் தந்துள்ளார். அதே போல முதல் ஏழு அடிகளுக்கு *1-7*. 'எந்நன்றி கொன் றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்நன்றி கொன்ற மகற்கு (குறள். 110); 'சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வ, பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவைமாரை, வதைபுரி குநர்க்கு முண்டோ மாற்றலா மாற்றன் மாயா, உதவிகொன் றார்க்கென் றேனு மொழிக்கலா முபாய முண்டோ' (கம்ப. கிட்கிந்தை. 62*) என்பன இங்கே அறியத்தக்கவை* எனக் குறிப்புரைத்துள்ளார் உ.வே.சா. (1923: 71*). முதற்பதிப்பில் (1894) 34ஆம் பாடல் முழுமைக்கும் ஒரே ஒரு பாடவேறுபாடு மட்டும் சுட்டிய உ.வே.சா. இரண்டாம் பதிப்பில் (1923: 71*) 4:4. முளவென-உளவே, 7:1-2. வறம் பாடிற்றே-அறம்பாடின்றே (இந்த இரு பாடவேறுபாடு களும் திருக்குறள் பதிப்பாசிரியர்கள் பாடமாகக் கொண்டவையே என்பது நினையத்தக்கது), 18:1. படுபறி-பாடுபரி என மொத்தம் மூன்று பாடவேறு பாடுகள் சுட்டியுள்ளார். எனவே, 'பார்ப்பார்த் தப்பிய' எனப் பாடம் கொண்டவர்கள் புறநானூற்றுப் பழைய வுரையாசிரியரும், அதன் பதிப்பாசிரியருமாகிய உ.வே.சா. ஆகியோரே. ஆனால், பரிமேலழகர் அவ் வாறு பாடம் கொண்டவரல்லர். 'பார்ப்பார்த் தபுதலும்' என்பதே பரிமேலழகர் பாடக்கருத்து என்பது நினை யத்தக்கது.

புறநானூற்று 34ஆம் பாடலின் முதல் 7 அடிகளைப் பொருத்தவரையில், உ.வே.சா. இரண்டாம் (1923) பதிப்பில் உள்ளவையே, அவருடைய மூன்றாம் பதிப் பிலும் உள்ளன. எனினும், 34:18:1. படுபறி என் னும் சீரில் அடிக்குறிப்புக் குறியீடு இல்லை என்பது அச்சுப்பிழையாகத் தோன்றுகின்றது.

புறநானூற்று உ.வே.சா. பதிப்பின் ஏழாம் பதிப்பு 1971இல் வெளிவந்தது. அப்பதிப்பில், மூன்றாம் பதிப்பில் அடிக்குறிப்பாக இருந்த பாடவேறுபாடுகள் மூன்றும் பாடலின் நிறைவில் தரப்பட்டுள்ளன. அதே போல, அடிக்குறிப்பாகத் தரப்பட்ட நீதிநெறி விளக்கம் முதலான பாடலடிகள் ஏழாம் பதிப்பில் (1971) (கு-ரை) எனச் சுட்டப்பட்டு உரையில் நிறைவில் இடம் பெற்றுள்ளன. இவை எந்தப் பதிப்பில் இவ்வாறு மாற்றம் பெற்றன என்பது மேலும் ஆராய்தற்குரியது. எனினும், அவை அனைத்தும் இரண்டாம் பதிப்பில் (1923) உள்ளவையே. ஏழாம் பதிப்பின் நூல் விவ ரப் பக்கத்தில் புறநானூற்றுப் பதிப்புக்களின் ஆண்டு கள் சுட்டப்பட்டுள்ளன. அவை வருமாறு: *முதல் பதிப்பு 1894, இரண்டாம் பதிப்பு 1923, மூன்றாம் பதிப்பு 1935, நான்காம் பதிப்பு 1950, ஐந்தாம் பதிப்பு 1956, ஆறாம் பதிப்பு 1963, ஏழாம் பதிப்பு*

*1971.* இதன் மூலம், 1935இல் வந்த மூன்றாம் பதிப்பு வரை உள்ளவையே உ.வே.சா. வாழும் காலத்தில், அவரால் வெளியிடப்பட்டவை. நான்காம் பதிப்பு முதலானவை, அவருக்குப் பின்னர் அவர்தம் கால்வழியினராலும், உ.வே.சா. நூலகத்தாராலும் வெளியிடப்பட்டவை என்பது தெளிவாகின்றது. எனவே, ஏழாம் பதிப்பில் உள்ள மாற்றங்களாகச் சுட்டப்பட்டவை அனைத்தும், அவருக்குப் பின்னர் வந்தோரால் செய்யப்பட்டவை என்பது நினையத்தக்கது.

### ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை பதிப்புப் பாடம்

புறநானூற்றுக்கு முன்னுரை, கண்ணழித்துரை, விளக்கவுரை ஆகிய உரைப்பகுதிகள் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையால் எழுதப்பட்டு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் 1947இலில் முதற் பதிப்பாக வெளியிடப்பட்டன. அதன் முதல் தொகுதியில் முதல் 200 பாட்டுக்களும், அவற்றின் உரைப்பகுதிகளும் உள்ளன. அப்பதிப்பில் மேற்பாட்டின் மூன்றாமடி மட்டும் *குரவர் தப்பிய கொடுமை யோர்க்கும்* என ஔவை துரைசாமிப்பிள்ளையால் (1947: 100*) பாடம் கொள்ளப்பட்டு, அதற்கேற்ப, *தந்தை தாயரைப் பிழைத்த கொடுந்தொழிலை யுடையோர்க்கு* என உரை கூறப்பட்டுள்ளது. விளக்கவுரைக்கண் *கோவதை முதலாயின வாக்காற் சொல்லவும்படாமையின், ஆன்முலையறுத்த வெனவும், மகளிர்க் கருசிதைத்தவெனவும், குரவர்த் தப்பியவெனவும் மறைத்துக் கூறப்பட்டன* (ஔவை துரைசாமிப்பிள்ளை 1947: 101*) எனப் பழையவுரையாசிரியர் கருத்தே எடுத்தோதப்படினும், பார்ப்பார் என்பது மட்டும் குரவர் எனத் திருத்தம் பெற்றுள்ளது. மேலும், விளக்கத்தில், *குரவர்த் தப்பிய என்பது பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கு மெனத் திருத்தப்பட்டிருக்கிறது. இத்திருத்தம் பரிமேலழகர் காலத்தேயே செய்யப்பட்டுள்ளதென்பது திருக்குறளுரையாற் காணப்படு கிறது* என ஔவை துரைசாமிப்பிள்ளை (1947:101*) உரைத்துள்ளார். இதன் மூலம், குரவர்த் தப்பிய என்ற புறநானூற்றுப் பாடம், பரிமேலழகர் காலத்திலேயே பார்ப்பார்த் தப்பிய எனத் திருத்தப்பட்டது என அவர் கூறுவதை அறிய முடிகின்றது.

ஔவை. துரைசாமிப்பிள்ளையின் புறநானூற்று விளக்கவுரை 1952இலும், 1956இலும், 1960இலும் மறுஅச்சாக்கம் பெற்று வந்துள்ளது. அதில் 1956; 1960 இலும் வெளிவந்த மறுஅச்சுக்களில் 1947 ஆண்டுப் பதிப்பில் உள்ளவையே மீண்டும் தரப்பட்டுள்ளன (1956: 95, 97*; 1960: 95, 97*). தமிழ்மண் பதிப்பகம், சாரதா பதிப்பகம், பூம்புகார்ப் பதிப்பகம் முதலான பதிப்பகங்கள் ஔவை. துரைசாமிப்பிள்ளையின் புறநானூற்று விளக்கவுரையை வெளியிட்டுள்ளன. அவற்றுள்ளும் இப்பாடங்களே உள்ளன.

### பிற பதிப்புக்களின் பாடம்

1940இல் சங்க இலக்கியம் என்னும் புலவர் அடிப்படை மூலத் தொகுப்புப் பதிப்பினைச் சைவ சித்தாந்த மகாசமாசம் வெளியிட்டது. அப்பதிப்பில் புறநா. 34ஆம் பாடலின் மூன்றாமடி முதற்சீர், 'பார்ப்பார்த் தப்பிய' என உ.வே.சா. பதிப்பினைப் பின்பற்றியே அமைந்துள்ளது.

1958இல் புறநானூறு மூலத்தை மட்டும் ஆசிரியர் குழுவினரைக் (1958: 24) கொண்டு பதிப்பித்து வெளியிட்ட மர்ரே. எஸ். இராஜம் வெளியீட்டில் 'பார்ப்பார்த் தப்பிய' என்ற பாடமே கொள்ளப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டில் புறநானூறு செய்யுளும் செய்திகளும் என்னும் பெயரிய நூலொன்றை ரா. சீனிவாசன் வெளியிட்டுள்ளார். அதில் ஔவை. துரைசாமிப்பிள்ளை கொண்ட பாடமும் பொருளுமே ரா. சீனிவாசனால் (2000: 63-64) தரப்பட்டுள்ளன.

புறநா. 34ஆம் பாடலின் மூன்றாமடியைக் 'குரவர்த் தப்பிய' என ஔவை. துரைசாமிப்பிள்ளை பாடத்தையே தாமும் கொண்டபோதிலும், உரையில், *அறிவு தந்த ஆசானையே பழித்தும் கொடுமை செய்தவர்க் குங்கூடக் கழுவாய் உண்டு* எனக் குரவர் என்பதற்கு 'ஆசான்'எனப் பொருளுரைக்கின்றார் புலியூர்க்கேசிகன் (2010: 50, 51).

### திருக்குறள் பதிப்புக்களின் பாடம்

பரிமேலழகர் காலத்திலேயே புறநா. 34ஆம் பாட்டின் மூன்றாமடி பார்ப்பார்த் தப்பிய எனத் திருத்தம் பெற்றுவிட்டது என்ற ஔவை துரைசாமிப்பிள்ளை கருத்து மேலும் சிந்தித்தற்குரியது. அதனைக் காண்போம்.

### எல்லீசர் பதிப்பு

1816இல் எழுதப்பட்டு அச்சுக்குக் கொடுக்கப்பட்ட பதிப்பாண்டு அறியப்படாத (எல்லீசர் பதிப்பைக் குறிக்கின்ற பலரும் அதன் பதிப்பாண்டு 1812 என்றவாறு குறித்துள்ளனர். அது பொருத்தமுடைய கருத்தன்று. காண்க விரிவுக்கு: ஆ. மணி 2018: 1-192) எல்லீசரின் (..: 276-277) திருக்குறள் மொழிபெயர்ப்புப் பதிப்பில் "..பெரிய வறங்களைச் சிதைத்தலாவது-ஆன் முலையறுத்தலு மகளீர் கருவைச் சிதைத்தலும் பார்ப்பார்த் தபுதலு முதலிய பாதகங்களைச் செய்தல்" எனப் பரிமேலழகரின் உரை தரப்பட்டுள்ளது. மேலும் எல்லீசர் பார்ப்பார்த் தபுதல் என்பதற்கு "The murder of Brahmans" (..: 277) எனப் பொருளுரைத்துள்ளார். அப்பாடலின் விளக்கத்தில் பன்னூற் பாடலடிகளை எடுத்தாண்டுள்ள எல்லீசர் புறநானூற்றுப் பாடலையும் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். அது வருமாறு:

***ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு***<br>
***மாணிழை மகளீர் கருச்சிதைத் தோர்க்கும்***<br>
***குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்***<br>
***வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவே***

***நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
றறம்பா டின்றே யாயிழை கணவ" (Ellis .. ..: 280)***

இதன்மூலம், எல்லீசர் காலத்தில் புறநா. 34: 3 அடி குரவர்த் தப்பிய என்றே வழங்கியுள்ள உண்மை புலனாகின்றது. மேலும், பரிமேலழகர் உரையில் அப்பாடக்கருத்து பார்ப்பார்த் தபுதலும் என்றே வழங்கியதும் தெரிய வருகின்றது. உ.வே.சா. பிறந்தது 19.02.1855இல். அதற்கு ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்பே புறநா. 34: 3 பாடம் குரவர்த் தப்பிய என்றே வழங்கியது தெளிவாகின்றது. மேலும், உளவே, அறம்பாடின்றே ஆகியன எல்லீசரால் பாடமாகக் கொள்ளப்பட்டதும் குறிக்கத்தக்கது. இவையே, பின்னர் உ.வே.சா. பதிப்பில் பாடவேறுபாடுகளாகக் காட்டப்பட்டுள்ளன என்பது அறியத்தக்கது.

### துறு ஐயர் பதிப்பு

1840இல் துறு ஐயர் (1840: 90*) செய்த ஆங்கில மொழிபெயர்ப்பு, பரிமேலழகர் உரை, இராமாநுச கவிராயர் செய்த புத்துரை ஆகியவற்றுடன் கூடிய பதிப்பில் ***பெரிய வறங்களைச் சிதைத்தலாவது-ஆன் முலையறுத்தலு மகளீர் கருவைச் சிதைத்தலும் பார்ப்பார்த் தபுதலு முதலிய பாதகங்களைச் செய்தல் என எல்லீசர் பதிப்பில் உள்ளவாறே பரிமேலழகர் உரை தரப்பட்டுள்ளது. புத்துரை எழுதிய இராமாநுச கவிராயர் கோவில், அறச்சாலை, பசு, பார்ப்பார், கற்புடை மகளீர், முதலிய பாதுகாவல் அறங்களைக் கெடுத்தவரும் அடங்குதற்கு, எந்நன்றி கொன்றார்க்குமென்றார்*** (துறு ஐயர் 1840: 90*) என்கின்றார். பரிமேலழகர் உரையினும் ஒருபடி மேற்சென்று இராமாநுச கவிராயர் உரைத்திருப்பது எண்ணுதற்குரியது. இப்பதிப்பின் படப்படிப் பதிப்புக்களாகிய ஆ. மணியின் (2018: 152; 2020: 152) பதிப்புக்களிலும் இவ்வுரை இவ்வாறே இடம் பெறுள்ளது.

1847இல் திருத்தணிகை சரவனப் பெருமாளையரின் உரையைப் பதிப்பித்த சோமசுந்தர வுபாத்தியாயர் (1847: 41*) பதிப்பில் *பெரிய அறங்களைச் சிதைத்தலாவது-மகளிர் கருவையழிக்கை முதலாகிய பாதகங்களைச் செய்தல்* எனச் சுருக்கமான உரை தரப்பெற்றுள்ளது. ஆன் முலை அறுத்தலைக் கூறாமல், மகளிர் கருவை அழித்தலை முதலாக்கிய சரவண பெருமாளையர் புறநா. 34ஆம் பாடலையும் சுட்டவில்லை என்பது குறிக்கத்தக்கது. பிற்காலத்தில் வெளிவந்த சரவண பெருமாளையர் உரையின் பிற் பதிப்புக்களிலும் இந்நிலையே காணப்படுவது குறிக்கத்தக்கது.

1850இல் களத்தூர் வேதகிரி முதலியார் செய்த திருக்குறள் உரையைப் பதிப்பித்த முத்து கிருஷ்ண பிள்ளை (1850: 45*) பதிப்பில் *பெரிய அறங்களைச் சிதைத்தலாவது-மகளிர் கருவை யழிக்கை முதலாகிய பாதகங்களைச் செய்தல்* எனச் சரவண பெருமாளையர் உரையில் உள்ளதுபோன்றே சுருக்கமான உரை தரப்பெற்றுள்ளது. ஆன் முலை அறுத்தலைக் கூறாமல், மகளிர் கருவை அழித்தலை முதலாக்கிய இவரும் புறநா. 34ஆம் பாடலையும் சுட்டவில்லை என்பது குறிக்கத்தக்கது. சரவண பெருமாளையர்உரையின்இடையே உள்ள கருத்து என்னும் பகுதி மட்டும் களத்தூர் வேதகிரி முதலியாரால் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இக்குறட்பாவின் பிற உரைப்பகுதிகள் சரவண பெருமாளையர் செய்தவையாகத் தோன்றுகின்றன. உரை முழுமைக்கும் ஒப்பிட்டால் முழு உண்மையையும் அறிய இயலும். காலம் வாய்ப்புழி அதனை எழுதலாம் என நினைக்கின்றேன். இக்குறட்பாவின் உரையைப் பொருத்தவரையில் சரவண பெருமாளையர் உரையின் ஊடாகக் கருத்து என்னும் ஒரு பகுதி மட்டும் களத்தூர் வேதகிரி முதலியாரால் சேர்க்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. இதுபோல ஒருவர் உரையை எடுத்து, அதில் ஒரு சிறு பகுதியை மட்டும் சேர்த்துத் தம் உரையாக்கி வெளியிடுவது எவ்வகை அறமோ? யாம் அறியோம். எனினும், இது எவ்வகையிலும் அறமாகாது என்பதைக் குறிக்க விரும்புகின்றேன். இவ்வகை அறிவுத் திருட்டுக்கள் முற்காலம் முதலே நடைபெற்றிருப்பது வேதனை அளிக்கின்றது. இவ்வகை அறக்கழிவுகளையும் முதன்முதலாக எடுத்துரைக்கும் என் நிலைக்கும் இரங்குகின்றேன். எனினும், ஆய்வறம் கருதி உரைக்கின்றேன்.

1861இல் பரிமேலழகர் உரையை முழுமையாகப் பதிப்பித்த ஆறுமுக நாவலர் (1861: 35) பதிப்பில் *பெரிய வறங்களைச் சிதைத்தலாவது-ஆன் முலை யறுத்தலு மகளீர் கருவைச் சிதைத்தலும் பார்ப்பார்த் தபுதலு முதலிய பாதகங்களைச் செய்தல் எனப் பரிமேலழகரின் உரை எல்லீசர் உரைப்பதிப்பில் உள்ள வாறே தரப்பெற்றுள்ளது. பாதகங்களைச் செய்தல் என்பதன் அடிக்குறிப்பில்*

"புறநானூறு, - *ஆன்முலை யறுத்த வறனிலோர்க்கு, மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்குங், குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும், வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவே, நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன், செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென, றறம்பா டின்றே யாயிழை கணவ* (ஆறுமுக நாவலர் 1861: 34* அடிக்குறிப்பு) என எல்லீசர் பதிப்பில் உள்ளவாறே புறநா. 34ஆம் பாடலடிகள் உள்ளன. மகளீர் என எல்லீசர் பதிப்பில் உள்ள சீர் மட்டும் மகளிர் என நாவலர் பதிப்பில் மாற்றம் பெற்றுள்ளது. எனவே, 1861இலும் புறநா. 34ஆம் பாடலடி குரவர்த் தப்பிய என்றே பாடம் கொண்டுள்ளமை அறியத்தக்கது. 1875இல் வந்த ஆறுமுக நாவலர் (1875: 34*) பதிப்பின் இரண்டாம் பதிப்பிலும் இச்செய்திகள் இவ்வாறே இடம்பெற்றுள்ளன. எல்லீசர் பதிப்பிலும் உள்ள

ISSN 2320-4842

இப்பாடங்கள் உ.வே.சா. பதிப்பில் பாடவேறுபாடு களாகக் காட்டப்பட்டன என்னும் உண்மை முன் னர்க் கூறப்பட்டது. எனினும், எல்லீசர், ஆறுமுக நாவலர் ஆகியோர் கொண்ட குரவர்த் தப்பிய பாடம் மட்டும் உ.வே.சா. பதிப்பில் எவ்வகையினும் இடம்பெறாதது ஏன்? எனத் தெரியவில்லை.

1885இல் பரிமேலழகரின் உரை, அவ்வுரைக்குத் தெளி பொருள் விளக்கப் பதவுரை, ஜான் லாசரஸின் ஆங் கில மொழிபெயர்ப்பு ஆகியவற்றுடன் திருமயிலை முருகேச முதலியார் பரிசோதித்த நூலைப் பதிப் பித்த ஊ. புஷ்பரதச் செட்டியார் (1885: 50*) எல்லீசர் பதிப்பில் உள்ளவாறே பரிமேலழகர் உரை யைத் தந்துள்ளார். எனினும், புறநானூற்றுப் பாட லைச் சுட்டவில்லை.

1873இல் திருக்குறளை உரையுடன் வெளியிட்ட தரங்கம்பாடிப் (1873: 23) பதிப்பிலும், 1886இல் தம்முடைய மொழிபெயர்ப்புடன் திருக்குறளை வெளி யிட்ட ஜி.யூ. போப் (1886:17) நூலிலும், 1889இல் சுகாத்தியர் (1889: 25*) வெளியிட்ட திருக்குறள் உரையிலும் புறநானூற்றுப் பாடல் இடம்பெறவில்லை.

1919இல் திருக்குறள் பரிமேலழகர் உரையைத் தாம் எழுதிய தெளிபொருள் விளக்கம், கருத்துரையுடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைத்து இரண்டாம் பதிப்பாக வெளியிட்ட கோ. வடிவேலு செட்டியார் மற்றும் மங்கலம் ஷண்முக முதலியார் (1919: 116) பதிப்பின் அடிக்குறிப்பில், “ஆன்முலையறுத்தல்- ஆவின் முலையை யறுத்தல். மகளிர் கருவினைச் சிதைத்தல்-பெண்களின் கருப்பத்தை அழித்தல். பார்ப் பார்த் தபுதல்-பிராமணரைக் கொல்லுதல் கோஹத்தி (பசுவதை), சிசுஹத்தி (சிசுவதை), பிரமஹத்தி (பிராமணவதை) யென வாக்காற் சொல்லவும்படாமை பற்றி ஆன்முலையறுத்தல் என்றற் றொடக்கத்தனவாக மறைத்துக் கூறினார். இஃது “ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு, மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும், பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும், வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென, நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன், செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென, வறம்பா டிற்றே யாயிழை கணவ” என்று புறநானூறு (34) கூறுவதாலு மறிதற் பாற் றாம்” என்ற குறிப்பு அவரால் தரப்பட்டுள்ளது. இதில் புறநானூற்றுப் பழையவுரைக் கருத்தும் இடம்பெற்றுள் ளது நினையத்தக்கது.

1924இலில் தி. ஸ்ரீநிவாசராகவாச்சாரியர் பரிசோ தித்துப் பி. இரத்தின நாயகர் & ஸன்ஸ் அவர் களால் (1924 :52*) பதிப்பிக்கப்பட்ட திருக்குறள் மூலமும் பரிமேலழகர் இயற்றிய உரையும் தெளி பொருள் விளக்கப் பதவுரையும் என்னும் பதிப்பில், ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு - மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்குங் - குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்- வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவே - நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன் - செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென - றறம்பா டின்றே யாயிழை கணவ”-புறநானூறு, 34*. கழுவாய்-பிராயசித்தம்” என்ற அடிக்குறிப்புத் தரப் பட்டுள்ளது. இது ஆறுமுக நாவலர் (1861) பதிப்பினை அடியொற்றி அமைந்ததாகும்.

1931இல் திருக்குறள் மூலம்-பரிமேலழகருரை- இத னுடன் மேற்படி உரையைக் கொண்டு இயற்றிய பத வுரை, கருத்துரை, விசேடவுரையுடன் ஆர். மீனாட்சி சுந்தரம் பிள்ளை எழுதிய இலக்கணக் குறிப்புடன் கூடிய பதிப்பை ஏ. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ் வெளியிட்டனர். அப்பதிப்பில் பரிமேலழகர் உரை யின் அடிக்குறிப்பில் புறநானூறு 34 என்ற பாட்டுக் குறிப்பு மட்டும் தரப்பெற்றுள்ளது.

1938இல் திருக்குறளின் பரிமேலழகர் உரையின் தவறுகளைத் திருத்தி விருத்தியுரை செய்த நாகை. சொ. தண்டபாணிப்பிள்ளை (1938: 121*) உரை யில், ”செய்நன்றி கோறலாவது, செய்த நன்றியை மறத்தல். வேறு தீவினைகளாவன, ஆவினைக் கோறல், மகளிர் கருச் சிதைத்தலும், பெரியோரைப் பிழைத்தலும் முதலாயின.

’ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு - மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்குங் - குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்-வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவே - நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன் - செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென - றறம்பா டின்றே யாயிழை கணவ’ என இத்திருக்குறட் கருத்தையும் ஒருபுடைச் சொற்போக்கையும் கொண் டெழுந்த புறநானூற்றுச் செய்யுள் (34*) ஈண்டு நோக்கற்பாலது” என விளக்கவுரை தரப்பெற்றுள் ளது. இவரும் எல்லீசர், ஆறுமுக நாவலர் பாடங் களையே பின்பற்றுகின்றார். மேலும், குரவர் என்ப தற்குப் பெரியோர் எனப் பொருளுரைத்துள்ளார்.

1949இல் (மூன்றாம் பதிப்பாகத்) திருக்குறள் அறத்துப்பாலைப் பரிமேலழகர் உரையுடனும், வை. மு. சடகோபராமாநுஜாசார்யர் குறிப்புரையுடனும் பதிப் பித்து வெளியிட்ட வை.மு. கோபாலக்ருஷ்ணமா சார்யர் (1949: 76*) பதிப்பில் “பெரிய வறங் களைச் சிதைத்தலாவது- ஆன் முலையறுத்தலும், மகளிர் கருவு சிதைத்தலும் பார்ப்பார்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்” எனப் பரிமேல ழகர் உரை தரப்பட்டுள்ளது. ஆனால், வை.மு.கோ. பதிப்புக்கு முன்னர் வந்த அத்தனை பதிப்புக்களிலும் இப்பகுதி, ”பெரிய வறங்களைச் சிதைத்தலாவது- ஆன் முலையறுத்தலு மகளிர் கருவைச் சிதைத்த லும் பார்ப்பார்த் தபுதலு முதலிய பாதகங்களைச் செய்தல்” என்றே உள்ளது. வை.மு.கோ. பதிப்பில் மேற்பகுதி திருத்தம் பெற்றுள்ளது பதிப்பறம் அன்று

ISSN 2320-4842

என்றுமட்டும் நம்மால் கூறத் தோன்றுகின்றது. புறநா. 34 ஆம் பாடலடிகள் உ.வே.சா. (1894) பதிப்பில் உள்ளவாறே காட்டப்பட்டுள்ளது. இப்பதிப்பினை உள் ளடக்கிய மூன்று பால்களும் கொண்ட பதிப்பினை 2009இல் முதற்பதிப்பாகச் சென்னை, உமா பதிப் பகம் திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் ஆராய்ச்சிக் குறிப்புரையுடன் என்னும் பெயரில் வெளியிட்டது. 1949இல் மூன்றாம் பதிப்பாக வெளிவந்த அறத்துப் பால் பதிப்பில் குறிப்புரை எழுதியவர் வை.மு. சடகோபராமாநுஜாசார்யர் என்பது மேற்கூறப்பட்டது. ஆனால் இப்பதிப்பில் (2009 பதிப்பில்) அவர் பெயர் இல்லை. மாறாக, வை.மு. கோபாலகிருஷ்ண மாசாரியர் பெயர் மட்டுமே ஆராய்ச்சிக் குறிப்பினை எழுதியவராகச் சுட்டப்பட்டுள்ளார் என்பது நினையத் தக்கது. அப்பதிப்பில் (வை.மு. கோபாலகிருஷ்ண மாசாரியர் 2009: 132-133) 1949ஆம் ஆண்டுப் பதிப்பில் உள்ளவாறே கருத்துக்கள் இடம்பெற்றுள் ளன.

1949இல் கவிராஜ பண்டிதரின் உரையோடு திருக் குறளைத் தொகுத்து வெளியிட்ட அ. சக்ரவர்த்தி (1949:56) பதிப்பில் "பெரிய தர்மங்களைக் கெடுக் கிறதாவது, தான் பிறரை அபவாதம் பண்ணுகிறதும், பசுவின் முலையறுக்கிறதும், ஸ்திரிகள் கெர்ப்பத்தைக் கெடுக்கிறதும் முதலான பாதகங்களைச் செய்தல்" எனக் கவிராஜ பண்டிதர் பொருள் கூறியுள்ளார். பரிமேலழகர் உரையில் இல்லாத 'தான் பிறரை அபவாதம் பண்ணுகிறதும்' என்பது இவர் உரையில் முதன்மை பெற்றுள்ளது. மேலும், புறநா. பாடல் இவராலும் காட்டப்படவில்லை.

1950இல் தருமபுரம் ஆதீனம் மூலமாகத் திருக்குறள் உரைக்களஞ்சியங்களை வெளியிட்ட ச. தண்டபாணி தேசிகர் (1950: 178) .. .. பாதகங்களைச் செய்தல் என்பதன் அடிக்குறிப்பில், "ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும், மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும், பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க் கும்" என்பது புறநானூறு 34-ம் பாடல். 'குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்' என்பது முன்னைய பாடம் போலும்" என்கின்றார்.

**நிறைவுரை**

புறநா.34ஆம் பாடலின் மூன்றாமடி குறித்து, இதுகா றும் கண்ட கருத்துக்களின் மூலம் நமக்குக் கிடைக் கும் பதிப்புக்களில் காலத்தால் முந்தைய பதிப்பாகிய எல்லீசர் பதிப்பு பரிமேலழகர் உரையை அச்சில் எடுத்துக்காட்டிய முதற்பதிப்பாகும் (எல்லீசர் காலத் தில் திருக்குறள், நாலடியார், திருவள்ளுவமாலை தவிர வேறு எந்தச் சங்கத் தொகையும் அச்சாக வில்லை. எனவே, எல்லீசர் ஓலைச்சுவடிகளைக் கொண்டே பழந்தமிழ் நூல்களைப் படித்திருப்பார் என்பது வரலாற்று உண்மையாகும்). அதில் பெரிய அறங்களைக் கெடுத்தலாவது என்பதன் விளக்க மாகப் பரிமேலழகர் எழுதிய உரைநடைப் பகுதியில் பார்ப்பார்த் தபுதலும் என்ற பாடமே இருப்பது தெளி வாகின்றது. அப்பகுதிக்கு விளக்கம் எழுதிய எல்லீச ரும் பார்ப்பார் என்பதைப் பிராமணர் என்றே மொழி பெயர்த்துள்ளார் என்பதையும் அறிய முடிகின்றது. எனினும், புறநா. 34ஆம் பாடலின் முதல் ஏழு அடிகளையும் மேற்கோள் காட்டிய எல்லீசர் ஆண்டு குரவர்த் தப்பிய என்றே புறநா. பாடலில் பாடம் கொண்டுள்ளார். பார்ப்பார்த் தப்பிய என்பதைப் பாட வேறுபாடாகக்கூடச் சுட்டவில்லை என்பது நினையத் தக்கது. மேலும், பார்ப்பார்த் தபுதலும் அதாவது பிராமணரைக் கொல்லுதலும் என்றே கூறியுள்ளதும் அறியத்தக்கது.

துறு ஐயர் பதிப்பிலும் (1840) பரிமேலழகர் உரை யைப் பொருத்தவரையில் எல்லீசர் பாடமே கொள் ளப்பட்டுள்ளது. எனினும், புறநா. பாடல் சுட்டப் படவில்லை. எல்லீசருக்கு அடுத்தபடியாகப் புறநா னூற்றுப் பாடலை மேற்கோளாகக் காட்டிய பதிப்பு 1861இல் வந்த ஆறுமுக நாவலரின் திருக்குறள் பரிமேலழகருரைப் பதிப்புத்தான். அப்பதிப்பும் எல்லீ சர் பாடங்களையே பின்பற்றுகின்றது. ஆண்டும் குர வர்த் தப்பிய பாடமே உண்டேயன்றிப் பார்ப்பார்த் தப்பியஎன்பது பாடவேறுபாடகக்கூட இல்லை என்பது நினையத்தக்கது. எனவே, 1816இல் எழுதப்பட்ட எல்லீசரின் திருக்குறள் மொழிபெயர்ப்பு முதலாக, 1861இல் வந்த ஆறுமுக நாவலர் பதிப்புவரை ஏறத் தாழ 45 ஆண்டுகளில் புறநா. 34: 3ஆம் அடி குர வர்த் தப்பிய என்றே பதிப்பாசிரியர்களால் ஆளப் பெற்றுள்ளது குறிக்கத்தக்கது. அவ்வடிக்குப் பாட வேறுபாடு ஏதும் அப்பதிப்பாசிரியர்களால் காட்டப் படவில்லை என்பது நினையத்தக்கது. 1875இல் வெளி வந்த நாவலரின் இரண்டாம் பதிப்பிலும் குரவர்த் தப்பிய பாடமே உள்ளது. இப்பதிப்பு நாவலர் வாழுங் காலத்திலேயே வெளிவந்ததாகும். இதன் மூலம் 1816 தொடங்கி 1875வரை ஏறத்தாழ 60 ஆண்டு களாகவே பேராசான்களாக விளங்கிய பதிப்பாசிரி யப் பெருமக்களால் புறநா. 34: 3 பாடலடி குரவர்த் தப்பிய என்றே பெருவழக்காக வழங்கி வந்தமை தெளிவாகின்றது.

எல்லீசர் பதிப்பிலும் உள்ள இப்பாடங்கள் (உளவே, அறம்பாடின்றே ஆகியன) உ.வே.சா. (1894, 1923, 1935) பதிப்பில் பாடவேறுபாடுகளாகக் காட்டப் பட்டுள்ளன. எனினும், எல்லீசர், ஆறுமுக நாவலர் ஆகியோர் கொண்ட குரவர்த் தப்பிய என்ற பாடம் மட்டும் உ.வே.சா. பதிப்பில் எவ்வகையினும் இடம் பெறாதது ஏன்? எனத் தெரியவில்லை.

உ.வே.சா. வின் புறநானூற்றுப் பதிப்பு 1894இலில் முதன்முறையாக அச்சிடப்பட்டது. அதற்கு முன்னர்

வரை கிடைத்த பதிப்புக்களின் பாடங்கள் அனைத்தும் குரவர்த் தப்பிய என்றே இருந்த உண்மை இதுகாறும் விளக்கப்பட்டது. கிடைத்த தரவுகளின் அடிப்படையில் பார்க்கும்பொழுது, பரிமேலழகர் உரையில் பார்ப்பார்த் தபுதலும் என்ற தொடர் இருந்தபோதிலும், புறநா. 34ஆம் பாடலில் அப் பாடம் இல்லை. உ.வே.சா. பதிப்பில் (1894) தான் அப்பாடம் முதன்முறையாகப் பார்ப்பார்த் தப்பிய என்ற பாடம் இடம்பெறுகின்றது என்பது தெளிவா கின்றது. மேலும், குரவர் தப்பிய என்பதைப் பாட வேறுபாடாக உ.வே.சா. குறிக்கவில்லை என்பதும் புலனாகின்றது. எனவே, ஔவை துரைசாமிப் பிள்ளை கருதுவதுபோலக் குரவர்த் தப்பிய எனப் பாடம் கொள்வதே முன்னோர் பதிப்புக்களின்படிப் பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது.

சரவண பெருமாளையர் உரையில் கருத்து என்னும் ஒரு பகுதியைச் சேர்த்து, அதனைத் தம் உரை யாக்கிய களத்தூர் வேதகிரி முதலியாரின் செயல் ஏற்கத்தக்கதல்ல. அறிவுத் திருட்டுக்கள் 1850களி லேயே இருந்தன எனக் கூறுமளவிற்கு இது அமைந் திருப்பது வேதனையளிக்கிறது.

திருக்குறள் அறத்துப்பாலுக்குக் குறிப்புரை எழுதிய வை.மு.சடகோபராமாநுஜாசார்யர் பெயரை விட்டு விட்டு நூற்றலைப்புப் பக்கத்தில் வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியார் மட்டுமே ஆராய்ச்சிக் குறிப் பினை எழுதியவராக 2009 வந்த உமா பதிப்பக வெளியீட்டில் சுட்டப்பட்டிருப்பதும் பொருத்தமுடைய செயலன்று.

**துணைநூல்கள்**


அரவிந்தன் மு.வை. (2008 இரண்டாம் பதிப்பு#). உரையாசிரியர்கள். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

ஆசிரியர் குழு (பதி.ஆ.). 1958 (முதல் பதிப்பு). புறநானூறு. சென்னை: எஸ். இராஜம்.

இரங்கசாமி முதலியார் & ஸன்ஸ். ஏ. (பதி.ஆ.). 1931. திருக்குறள் மூலம்- பரிமேலழகருரை-இதனுடன் மேற்படி உரை யைக் கொண்டு இயற்றிய பதவுரை, கருத்துரை, விசேடவுரை யுடன் ஆர். மீனாட்சி சுந்தரம் பிள்ளை எழுதிய இலக்கணக் குறிப்புடன். சென்னை: பூமகள் விலாச அச்சுக்கூடம்.

இரத்தின நாயகர் & ஸன்ஸ். பி. (பதி.ஆ.). 1924. திருக் குறள் மூலமும் பரிமேலழகர் இயற்றிய உரையும் தெளிபொருள் விளக்கப் பதவுரையும். சென்னை: திருமகள் விலாச அச்சியந் திரசாலை.

ஔவை நடராசன் & இரா. குமரவேலன் (பதி.ஆ.). 2009. உரைவேந்தர் தமிழ்த்தொகை-21. புறநானூறு-1. ஔவை துரை சாமி (உரைஆ.). சென்னை: இனியமுது பதிப்பகம்.

கோபாலக்ருஷ்ணமாசார்யர். வை.மு. (பதி.ஆ.). 1949 (மூன் றாம் பதிப்பு). திருக்குறள் அறத்துப்பால் மூலமும் பரிமேலழ கருரையும் வை.மு. சடகோபராமாநுஜாசார்யர் இயற்றிய குறிப் புரையுடன். சென்னை: வை.மு. கோபால க்ருஷ்ணமாசார்யர்.

கோபாலகிருஷ்ண மாசாரியார். வை.மு. (கு.உரைஆ.). 2009 (முதல் பதிப்பு). திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியர் ஆராய்ச்சிக் குறிப்புரையு டன். சென்னை: உமா பதிப்பகம்.

சக்கரவர்த்தி.அ. (தொகு.ஆ.). 1949 (முன்னுரைக்குறிப்பின் வழி). திருக்குறள். கவிராஜ பண்டிதர் (உரைஆ.). சென்னை: சாது அச்சுக்கூடம்.

சாமிநாதையர். உ.வே. (பதி.ஆ.). 1894 (முதல் பதிப்பு). புறநானூறு மூலமும் உரையும். சென்னை: வெ.நா. ஜூபிலி அச்சுக்கூடம்.

சாமிநாதையர். உ.வே. (பதி.ஆ.). 1923 (துந்துபி, பங்குனி - இரண்டாம் பதிப்பு). புறநானூறு மூலமும் உரையும். சென்னை: கமர்ஷியல் அச்சுக்கூடம்.

சாமிநாதையர். உ.வே. (பதி.ஆ.). 1935 (யுவ, மார்கழி - மூன்றாம் பதிப்பு). புறநானூறு மூலமும் உரையும். சென்னை: லா ஜர்னல் அச்சுக்கூடம்.

சாமிநாதையர். உ.வே. (பதி.ஆ.). 1971 (ஏழாம் பதிப்பு). புறநானூறு மூலமும் பழையஉரையும். சென்னை: டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம்.

சீனிவாசன். ரா. (உரைஆ.). 2000 (முதல் பதிப்பு). புறநா னூறு செய்யுளும் செய்திகளும். சென்னை: அணியகம் பதிப் பகம்.

தண்டபாணி தேசிகர். ச. (தொகு.ஆ.). 1950 (முதல் பதிப்பு). திருக்குறள்-உரைவளம்-அறத்துப்பால். தருமபுர ஆதீனம்: ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்.

தண்டபாணிப்பிள்ளை. நாகை. சொ. (உரை.ஆ.). 1938. திருக்குறள்அறத்துப்பால் தண்டபாணி விருத்தியுரை (நூலட்டை கிடைக்கவில்லை. பதிப்புரைக் குறிப்பின்வழி). சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

துரைசாமிப்பிள்ளை. ஔவை. சு. (உரைஆ.). 1947 (முதல் பதிப்பு). புறநானூறு 1-200 பாட்டுக்கள். சென்னை: திருநெல் வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

துரைசாமிப்பிள்ளை. ஔவை. சு. (உரைஆ.). 1956 (இரண் டாம் மறுஅச்சு). புறநானூறு 1 -200 பாட்டுக்கள். சென்னை: திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

துரைசாமிப்பிள்ளை. ஔவை. சு. (உரைஆ.). 1960 (மூன் றாம் மறுஅச்சு). புறநானூறு 1-200 பாட்டுக்கள். சென்னை: திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

புலியூர்க்கேசிகன் (உரைஆ.). 2010 (முதல் பதிப்பு). புறநா னூறு மூலமும் உரையும். சென்னை: சாரதா பதிப்பகம்.

மணி. ஆ. (பதி.ஆ.). 2018 (முதல் பதிப்பு). திருக்குறள்: பரிமேலழகரின் இலக்கணவுரையும் இராமாநுச கவிராயரின் புத்துரையும்துறு இங்கிலிஸ் மொழிபெயர்ப்பும் (முதல் இருபத்து நான்குஅதிகாரங்கள்மட்டும்).புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.

மணி. ஆ. (பதி.ஆ.). 2020 (முதல் பதிப்பு). திருக்குறள் துறு பதிப்பு தொகுதி-1. புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.

வடிவேலு செட்டியார். கோ. & மங்கலம் ஷண்முக முதலி யார் (பதி.ஆ.). 1919 (இரண்டாம் பதிப்பு). திருக்குறள் மூல மும் பரிமேலழகருரையும். இவ்வுரைக்கியையுமாறு கோ. வடி வேலு செட்டியார் இயற்றிய தெளிபொருள் விளக்கமும், கருத் துரையும், குறிப்புரையும் ஆங்கில மொழிபெயர்ப்புடன். சென்னை: சச்சிதானந்த அச்சியந்திரசாலை.


**குறிப்பு**

இக்கட்டுரையை எழுதுமாறு பணித்த எம் பேராசிரி யர் நெறியாளர் முனைவர் இ.கி. இராமசாமி ஐயா அவர்களுக்கு என் நன்றி மலர்கள்.

* இக்குறியீடு அவ்வெண் அப்பதிப்பில் தமிழெண்

ISSN 2320-4842

வடிவில் தரப்பட்டுள்ள நிலையைக் குறிக்கும்.

# மு.வை. அரவிந்தனின் நூல்விவரப் பக்கத்தில் இரண்டாம் பதிப்பு 2008 என ஆண்டு குறிக்கப் பட்டபோதிலும், நூலின் உள்ளே மு.வை. அரவிந்தன் (2008: 34,38) எழுதிய *மூன்றாம் பதிப்பின் முகவுரையில் எனக்கு மனநிறைவு ஏற்படும் வகையில் மூன்றாம் பதிப்பு செப்பம் அடைந்துள்ளது, … 'உரையாசிரியர்கள் நூலின் முன்னைய இரண்டு பதிப்புகளைப் போலவே, மூன்றாம் பதிப்பையும் தமிழ் கூறும் நல்லுலகம் வரவேற்று என்னை வாழ்த்தும் என நம்புகிறேன்* என்றெல்லாம் வரும் கருத்துக்களும், ச. மெய்யப்பன் (மு.வை. அரவிந்தன் 2008: 39-40) எழுதிய 'பதிப்பகத்தாரின் பாராட்டுரை'யில் வரும் .. *இந்நூல் இரண்டாம் பதிப்பைப் பெற்றது என்பது மட்டுமன்றி விரைவில் விற்று முடிந்தது.*

*மிக விரிவான திட்டத்துடன் இப்பொழுது மூன்றாம் பதிப்பு வெளிவருகிறது என்பது பெருமை தரும் செய்தியாகும்* என வரும் தொடர்களும் 2008 இரண்டாம் பதிப்பு எனக் குறிக்கப்பட்டுள்ள பதிப்புக்கு முன்னரே, மூன்றாம் பதிப்பு வெளிவந்துவிட்ட உண்மையை நமக்கு உணர்த்துகின்றன. மேலும், இரண்டாம் பதிப்பாக வரும் நூலில், அதன் மூன்றாம் பதிப்புக்கு எழுதப்பட்ட முகவுரைகள் இடம்பெற இயலாது என்பது காலம் குறித்த உண்மையாதலால், 2008 இரண்டாம் பதிப்பு எனக் குறிக்கப்பட்ட பதிப்பு, மூன்றாம் பதிப்போ அதற்குப் பின்னைய பதிப்போ எதுவெனத் தற்போது கூற இயலவில்லை. வாய்ப்பு நேருழி, உரைப்போம்.

## Life

What is our life? A play of passion,
Our mirth the music of division,
Our mother's wombs the tiring-houses be,
Where we are dressed for this short comedy.
Heaven the judicious sharp spectator is,
That sits and marks still who doth act amiss.
Our graves that hide us from the setting sun
Are like drawn curtains when the play is done.
Thus march we, playing, to our latest rest,
Only we die in earnest, that's no jest.

- Sir Walter Raleigh

**Do not let making a living prevent you from making a life.**

**- John Wooden**

**Life is ours to be spent, not to be saved.**

**- D. H. Lawrence**

**Everything negative – pressure, challenges – is all an opportunity for me to rise.**

**— Kobe Bryant**

**Your work is going to fill a large part of your life, and the only way to be truly satisfied is to do what you believe is great work. And the only way to do great work is to love what you do. If you haven't found it yet, keep looking. Don't settle. As with all matters of the heart, you'll know when you find it.**

**— Steve Jobs**

**Life is like a coin. You can spend it any way you wish, but you only spend it once.**

**— Lillian Dickson**

**Only a life lived for others is a life worthwhile.**

**— Albert Einstein**

ISSN 2320-4842



# தொல்காப்பியப் புறத்திணையியல் உணர்த்தும் உளவியல்

**பா. மேகலா**

**முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) கும்பகோணம் (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)**

**ஆய்வு நெறியாளர்: முனைவர் கோ. ஜெயஸ்ரீ**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம் 612 001**

**ஆய்வுச்சுருக்கம்**

போரையும் வீரத்தையும் பறைசாற்றும் தொல்காப்பியப் புறத்திணையியலில் உளவியல் ரீதியான உண்மைகள் காணக் கிடைக்கின்றன. அவற்றை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது. தொல்காப்பியர், தமக்கு முன் வாழ்ந்த சான்றோர் மொழி போற்றி இலக்கணம் கூறுவதுபோலவே ஐயனாரிதனாரும் பன்னிரு படலத் தைப் பின்னடியாகக் கொண்டே தம் புறப்பொருள் விளக்கத்தை இயற்றினார் என்பதை இந்நூலின் சிறப்புப் பாயிரத்தால் தெள்ளிதின் உணரலாம். தொல்காப்பியம் மொழி இலக்கணம் கூற வந்தது மட்டுமன்று ஆள் வோரும் ஆளப்படுவோருமாகிய சமுதாயத்தின் பழக்கவழக்கங்களையும் கூறுகிறது. காலம்காலமாகக் கருத்து களைத் தாங்கி அழியாத உடல் பெற்ற அறிகருவிகளாய் நமக்கு இன்று உதவுகின்ற கவிதைகளின் கோப் பையும் நீதியையும் எடுத்துக்காட்டுவது, கவிதை பருவம் எய்திய பின் பூணுகின்ற அணி வகைகளையும் ஒழுக வேண்டிய மரபு வகைகளையும் அறிவிக்கிறது. எந்த மொழியிலும் மொழியிலக்கணத்தையும் பார்க்கலாம். சமுதாய இலக்கணத்தை அறியத் துணைசெய்வது தொல்காப்பியம் ஒன்றே. பல சமுதாயத்தின் எண்ணங்கள் ஒன்றோடு ஒன்று மோதி ஒளியை இழப்பதால் தனிமனித உரிமை, தனிமனித செருக்கு இல்லையாகின்றன. பேரறிவு விளக்கம் பெறுகின்றது. தன்னல வாழ்வு மடிகின்றது. கூட்டு நல வாழ்வு கிளைகின்றது. இவற்றைத் தாங்கி எழுவனவே இலக்கண, இலக்கியங்களாகும். மேலும் முப்பாலும் பணியிலும் இறவாமல் அமர்க்களத்து விழுந்தோரே துறக்கம் எய்துலர் என என்னும் வழக்கம் மறவரிடையே நிலைபெற்றிருந்தது போர்வீரர்கள் தமக்குப் போரில் வெற்றி உண்டாக வேண்டுமென்று கொற்றவைக்குத் தம்மையே பலி கொடுப்பது உண்டு. இது உயிர்ப் பலி எனப்படும். உயிரை இழக்காமல் குருதியை மட்டும் தம் உடம்பில் ஒரு பகுதியை வெட்டிக் கொள்வ தன்மூலம் கொடுத்தலும் உண்டு. மேலும் போரிலே விழுப்புண் பட்ட மறவர், அவ்விழுப்புண் ஆறி வாழும் வாழ்க்கையும் நிலையாமையுடையதுதானே. இவ்வாழ்கையால் பயன் என்ன என்று கருதி நிலைத்த புகழை அடைய வேண்டிப் புண்ணைக் கிழித்துக்கொண்டு இறத்தலும் உண்டு. புண்ணில் வேலைப் பாய்ச்சிக் கிழித்தல் பெரு வீரமாதலின் இது மரக்காஞ்சி எனப் பெயர் பெற்றது. போர், புகழ், வீரம், கொடை, படை மாட்சி, நட்புக் காதல் இவற்றை உரைக்கும் புறத்திணையியலில் மனித உள்ளத்தின் உளவியல் கூறுகளும் சொல்லப்பட்ட டுள்ளன. அவற்றை ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

தமிழில் இன்று கிடைக்கின்ற முதல் நூல், முதன்மையான நூல், எழுத்து, சொல், பொருள் என்ற முப்பொருள் கூறும் நூல், உலகப் பொது நூல், உலகத் தோற்றம், உயிர்களின் வகைப்பாடு, அவ் உயிர்களைப் பற்றிய பகுப்பாய்வு, அவ் உயிர்களின் இளமை, முதுமைப் பெயர்கள் போன்றவற்றைக் கூறும் நூல், உலகப் பொருள் களை முதல், கரு, உரி என்று முப்பிரிவுகளாக பிரித்து விளக்கம் தரும் நூல் தொல்காப்பியம். மொழி இலக் கணம் மட்டுமன்று, வாழ்வின் இலக்கணத்தையும் வகுத்துக் கூறும் நூல். வாழ்க்கைக்குத் தேவையான பண்பு கள், தேவையற்ற தீக்குணங்கள் போன்றவற்றை யெல்லாம் தெளிவாகப் பேசும் நூல் அது. அது தோன்றிய காலத்தில் இதுபோன்ற ஒரு நூல் இந்திய மொழிகளிலோ உலக மொழிகளிலோ தோன்றவில்லை என்பது உண்மை. இதன்கண் அமைந்துள்ள புறத்திணையியல் பகரும் உளவியல் கூறுகளை ஆய்வோம்.

அக இலக்கணம், புற இலக்கணம் எனத் தொல்காப்பியப் பொருள் இலக்கணம் இருவகைப்படுகின்றது. இவ் விரண்டுக்கும் தனித்த இலக்கண மரபுகள் தொல்காப்பியரால் காட்டப்பெற்றுள்ளன. அக இலக்கண மரபுகளை அப்படியே தாங்கிச் சங்க இலக்கிய அகப்பாடல்கள் அமைந்துள்ளன. புற இலக்கண மரபுகளை ஏற்றுப் புற இலக்கியங்கள் படைக்கப் பெற்றுள்ளன. சங்கம் மருவிய காலத்தில் சிற்சில மாறுபாடுகள் இவ்விலக்கண மரபு களில் தோன்றினாலும், அப்பகுப்பு சார்ந்த அக, புற இலக்கியங்கள் தொல்காப்பிய மரபுகளைப் பின்பற் றியவை என்பதில் ஐயமில்லை.

**புறம் -சொற்பொருள் விளக்கம்**

யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாகிய அகத்திற்கு மறுதலையானது புறம். ஒருவன்ஒருத்தி அகப்பட்ட பாலுணர்வு இன்பம் பற்றி யதுஅகம், உணர்வுக்கு அப்பாற்பட்ட இன்பம் பற்றி யதே புறம். *முற்படக் கிளந்த எழுதிணை* என அகத் திணை தொடங்கி அவ்வகத்தினை ஏழிற்கும் புறம் என வெட்சி முதல் பாடாண்வரை ஏழு திணைகளை எண்ணுவார் தொல்காப்பியர். அகப்புறத் திணைக ளை ஏழேலாகப் பாகுபடுத்திய முதல்வர் தொல்காப் பியர். கைக்கிளைப் பெருந்தினைகளைப் புறத்திணை யில் எண்ணிய தம் காலப்போக்கினை மாற்றி, அகத் தினை ஐந்தனோடு ஏழாக்கிக் கொண்டு புறத்திணை செய்தவர் தொல்காப்பியர்.

**உளவியலும் புறப்பொருளும்**

நாம் ஒவ்வொருவருமே கடந்த காலத்தில் குழந்தை களாகவே இருந்தோம். எனவே நாம் ஒரு தெளி வற்ற மனோநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கி றோம். பவுதிக உலகில் அல்லாமல் உணர்வின் அடிப் படையில் நமது ஐம்புலன்களும் செயல்படுகின்றன. அவை புற உலகில் காணும் சின்னச் சின்ன தகவல் களையும் கவர்ச்சிகரமான மனப்பதிவுகளையும் தரு கின்றன. அவற்றையே நாம் உள்வாங்கிக் கொண்டு பல வகைகளில் பொருள்படுத்தி வாழ்கிறோம். நமது கண்களுக்குப் புலப்படாதவை மட்டுமே நாம் பார்க்க வேண்டும் என்பதில்லை. மாறாக நாம் புரிந்துகொண்ட விஷயங்களை நமது மனக்கண்ணால் பார்க்க இய லாது. நமது உள் மனதின் ஆற்றல் புற உலகின் தூண்டு தலுக்கு இலக்காகி மாறுபாட்டால் விடுதலை நமக்குத் தருகிறது. இந்தப் புரிதலின் அனுபவம்தான் எதார்த்த மான உண்மையை உருவாக்கக்கூடிய பொறுப்பை வகுக்கின்றன என்பதை உணரலாம்.

தமிழர்களின் வளமான வாழ்க்கை, செழிப்பான சீர் மையை அவர்களின் பண்பாட்டின் மூலம் அறிய லாம். காதலும் வீரமுமே தமிழர் தம் தலையாய பண் பாடு. கலித்தொகையில்,

***பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுவதும் (கலி. 13)***

என்றும் திருக்குறளில்

***பண்புடையார் பட்டுண்டு உலகம் அது***
***இன்றேல் மண்புக்கு மாய்வது மண் (குறள் 996)***

என்றும் பண்பாடு குறித்துப் பேசியுள்ளனர். உளவிய லில் கண்ணும், அன்றாட வாழ்வின் எதார்த்தத்தின் கண்ணும் புறப்பொருளை ஆய்ந்தறிந்து வாழ்தல் நலம் பயக்கும்.

**உணர்வுப்பூர்வ உளவியல்**

நாணயத்தின் இரு பக்கம் போல் வாழ்விலும் அகம், புறம் என மனிதர்க்கு இரு பக்கமுண்டு. இகழ்வார் முன் ஏறுபோல் பீடுநடை நடக்க அகவாழ்வு சிறப் பாக அமைதல் வேண்டும் புறமும் அகமும் பிரிக்க இயலாது என உணர வேண்டும்.

புறத்திணை என்பது பொது வாழ்க்கை. இந்தப் பொது வாழ்க்கைப் பாங்கைக் கூறுவது புறத்திணை யியல். அகத்திணையை ஏழு பிரிவுகளில் தொகுத் துக்கொண்ட தொல்காப்பியம் புறத்திணையையும் ஏழு பிரிவுகளாகக் கொள்கிறது. அஃது அகத்திணை யையும் புறத்திணையையும் ஒப்பிட்டுக்காட்டுகிறது. அகத்திணைகள்குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என்பவற்றை புறத் திணைகளான வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய ஏழு திணைகளை அகத்திற்குப் புறமாக வைத்தார். அதனுள் வெட்சித் திணை 14 வகையும், 21 துறைகள் கொண்டதாக வும் தொகுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**வெட்சி இலக்கணம், துறைகள்**

ஒரு நாட்டின் வீரர் தன் அரசன் ஆணைப்படி சென்று பகை நாட்டினரின் பசுக்கூட்டங்களைக் கவர்ந்து வந்து காத்தல் இத்திணையாகும். இஃது ஒரு வித அச்சம் கலந்த வீரம் என்றே பார்க்கப் படுகிறது. தன் நாட்டிற்காக அயலார் நாட்டின் ஆநிரைகளைக் கவர்ந்து வர வீரர்கள் முற்படுகின் றனர். இஃது அவர் நாட்டிற்கான நலம் கருதிய பண்பாட்டு உளவியலாகக் கருதலாகிறது. இதனைச் சமுதாய உளவியல் (Community Psychology) எனலாம்.

சமுதாய உளவியலார் சமுதாயத்தில் பல வேலை களையும் செய்கின்றனர். அவர்கள் உளவியல் கொள்கைகளையும், கருத்துக்களையும் நடைமுறைப் படுத்தி மக்களின் சிக்கல்களைத் தீர்த்து அவர்களை அவர்களது வேலைக்கும் குழுக்களோடு சேர்ந்து வாழ்வதற்கும் தகுதிப்படுத்துகிறார்கள். அதன்படி பிறரது பொருளைக் கவர முற்பட்டுப் போருக்கான அறிவியலைப் புலப்படுத்துவது புறமார்ந்த பண்பு.

**ஈகை மாண்பு**

அயல்நாட்டாரின் ஆறிரைகளைக் கவர எழும் படை யின் பேரரவம், படைகள் தமது ஊரைக் கடக் கும்போது ஊரிடத்து நற்சொல், விரிச்சி கேட்பர். விரிச்சி கேட்கும் வழக்கம் அக்காலத்தாரிடையே இருந்து வந்துள்ளது. பின்னர்ப் பக்கத்திலுள்ளோர் அறியாதவாறு செல்வர். பகை வரை ஒற்றறிவர். ஒற்றறிந்த பின் பகைவேந்தனை சூழ்ந்து தாக்குவர். போர் முற்றியபின் பகைவர் ஊரை அழித்துப் பசுக்கூட்டத்தைக் கவர்வர். தம் சுற்றத்தா ரிடத்துச் செல்வர். தம் ஊரின்கண் ஆநிரைகளைக் கொண்டுவந்து வீரர்கள் அப்பசுக்களை தம்முள் பகிர்ந்துகொள்வர். தாம்பெற்ற பசுக்களைப் பிறருக்கும் கொடையளித்து மகிழ்வர்.

***வெட்சி தானே குறிஞ்சியது புறனே (தொல்.பொருள். 1002)***

மேலும், புலவர்கள் கரந்தை என்னும் திணையை தனித்ததாய் வெட்சிக்கு அடுத்துக் கூறுவர். ஆனால் தொல்காப்பியர் கரந்தையை வெட்சியினுள் அடக்கி விடுகிறார். கரந்தை ஆநிரைகளை மீட்டுக்கொள்வது ஆதலால் தொல்காப்பியர் இவ்வாறு அடக்கியுள் ளார். ஒன்றுடன் ஒன்று (அ) அடுத்தடுத்து நிகழும் நிகழ்வுகள். ஆதலால் தொல்காப்பியர் தனித்தனியா கக் கூறாது ஒன்றாக்கி உரைத்துள்ளார் எனலாம். மேலும் கவர வரும்போது தடுத்தல், மீட்டல் நிகழும் மனிதனின் மனம் கவர நினைத்தழும், தடுத்து, மீட்டு வாழவும் முயலும் இயல்புடைத்து.

**கொற்றவை நிலை**

கொற்றம் என்பது வெற்றி. வெற்றி தந்தவரைப் போற்றுதல் கொற்றவை நிலை. வெற்றி தெய்வமாகக் கொற்றவையை வழிபடுதலும் குறிஞ்சி திணையின் புறம் என்று தொல்காப்பியம் கூறுகிறது. கொற்றம் சிறத்தல் என்பது ஆட்சிச் சிறப்பு எனலாம் வெற்றி பெற்ற நாட்டில் (தோற்றமக்கள்) வென்ற மன்னனின் ஆட்சி ஏற்கும் வண்ணம் அமைய வேண்டும் என்பதை உணர்த்தும் விதமாக உரைக்கப்படுகிறது.

**பழந்தமிழர் கொற்றவை வழிபாடு**

பழந்தமிழர் தாய்த்தெய்வ வழிபாட்டில் மிக இன்றி யமையாத இடம் கொற்றவை வழிபாட்டிற்கு உண்டு. பழந்தமிழர் வழிபட்ட பல்வேறு பெண் தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் அகப்புற இலக்கியங்களில் ஆங் காங்கே சிதறிக் கிடக்கின்றன. அத்தகு குறிப்பு களைத் திரட்டி ஒருங்கு வைத்து ஆய்கையில் சங்க இலக்கியங்களில் இடம்பெறும் பெண் தெய்வங்கள் கன்னாத் தெய்வங்கள், தாய்த் தெய்வங்கள் என இருவேறு நிலைகளில் குறிப்பிடப்பட்டாலும் அவை தாய்த் தெய்வங்களே. பி.எல்.சாமி கூற்று இக்கருத் துக்குத் துணை நிற்பதாகும். ***தாய்த் தெய்வத்தைத் தாயாகவும் கன்னியாகவும் உருவகப்படுத்திக் கூறுவது மிகப் பழங்காலத்திலிருந்தே மரபாக உள்ளது. அவளை எல்லோரையும் பெற்ற தாயாகத் கருதுவதும் அழியாக் கன்னியாகக் கருதுவதும் சுமேரியா, எகிப்து, அசிரியா, இந்தியா ஆகிய நாடுகளின் பழைய நாகரிகங்களில் காணப்படுகிறது. (பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு, ப.34.)*** ஆக சங்க இலக் கியங்கள் குறிப்பிடும்,

***கடல்கெழு செல்வியும் (அகம் : 370)***

***கானமர் செல்வியும் (அகம் : 345)***

தாய்த் தெய்வங்களே. தாய்த் தெய்வங்கள் காட்டை இருப்பிடமாகக் கொண்டவள் என்ற பொருளிலேயே கையாளப்பட்டுள்ளன. மேலும், வீடுகளில் பெண்கள் தினசரி தெய்வ வழிபாடு மேற்கொள்வர். இவ்வழிபாடு அவர்களின் மனதையும் வாழ்வையும் செம்மைப்படுத் தும்என்றஉளவியல் அவர்களிடம் இன்றும் உண்டு.

**வஞ்சித்திணை-மனிதனின் மன ஆசைகள்**

தன் நாட்டை விரிவாக்கும் நோக்கோடு வேந்தன் போர் தொடுக்கும் செயல்களைத் தொல்காப்பியம் வஞ்சித்திணை என்கிறது. இது அகத்திணையில் ஒன் றான முல்லைத்திணையின் புறமாகும்.

***வஞ்சி தானே முல்லையது புறனே (தொல். பொருள். 1007)***

அடங்காத மண்ணாசையினாலோ அல்லது தன்னை மதியாத பகையரசனின் செருக்கை அடக்கவோ ஒரு மன்னன் மற்றொருவன் மேல் போர் தொடுப்பது வஞ்சித்திணை ஆகும். போர் தொடுத்துச் செல்பவர் வஞ்சிப் பூவை சூடிச் சென்றதால் இத்திணைக்கு அப்பெயர் வந்தது. வஞ்சி என்பது ஒரு கொடிவகை.

**உள்ளார்ந்த உளவியல்**

அகத்தில் நுழைந்து கேள்வி கேட்கும்போதுதான் இயல் பாகவே அது ஆன்மாவின் ஞானத் தேடலாகிறது. மனிதனின் எண்ணச் சுழற்சிகளும் ஆன்மாவின் ஞானத்திற்காக நம்மை இட்டுச் செல்ல வாழ்க்கை யைத் தொடர வைக்கின்றன. 'மனம்' என்ற ஒன்று இருக்கும் வரை நமது தேடல்களும், தேவைகளும் தொடர்ந்துகொண்டேஇருக்கும். ஏனெனில் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் மனம் சம்பந்தப்பட்டுள்ளது.

***உளவியல் ரீதியான அறிவியலோடு சொல்வதானால், ஒன்றை விரும்பி அதற்காக உழைப்பதைத் தவிர பிறிதொன்று உண்மையான உழைப்பாக இருக்க முடி யாது. இது தன்னியல்பிலேயே செயல்படுகின்ற ஒரு மனப்போக்கு (மனோதத்துவ இயல், ப. 11)*** என்கிறார் கவிஞர் லோட்டஸ் எடிசன். மண்ணாசை பொன் ஆசை ஏன் ஏற்படுகிறது எனில் மனிதனின் துயரத் திற்கும், மனப்பாதிப்புக்கும் காரணம் என்னவெனில், ***இயல்பாக வாழ முடியாமல் போன எதிர்காலக் கற்பனை ஆசை சார்ந்த இயலாமை தான் (மனோதத்துவ இயல், ப. 12).*** எனவேதான் ஏமாற்றுத்தனம் அவ்வளவு வெற்றிகரமாக உலகத்தில் உலவிக்கொண்டிருக்கிறது. வாழ்க்கையில் எதுவும் முழுமையடையாமல் எச்சமாக இருக்கும்போது மனதுக்கு சுமையும், கலக்கமும், துன்பப் போராட்டமும்தான் மிஞ்சியிருக்கும்.

**மனமாற்றம் தேவை**

மனம் ஒரு முடிந்த பொருளல்ல. அது ஒரு தொடர் நீரோட்டம் என்று நமது முன்னோர்கள் அனுபவம் வாயிலாகக் கூறியுள்ளனர். அந்த மனம் மாறிக் கொண் டேயிருக்கும். மனதில் பிளவுகளும், உடைசல்களும் ஏற்படத்தான் செய்யும். மனதுக்குள் ஏதேதோ வருவ தும், போவதுமாகத்தான் இருக்கும். ஆனால் அதே மனதை இறுக்கமாகப் பற்றிப் பிடிக்காமல் இலேசாக் கிக் கொள்ளுங்கள் என்று மகான் புத்தர் கூறியுள் ளார். எனவே நமது மனோதத்துவத்தை மாற்றியாக வேண்டும். நமக்கு விருப்பமான முறையில் நமது நடவடிக்கையை மாற்ற நமது மனப்போக்கினை மாற் றியாக வேண்டும். போர் எனில் ஏற்படும் வலியை

ஏற்கும் மனமும் வேண்டும்.

**உழிஞை-போரின் கண்ணுள்ள உளவியல்**

பகைவர் நாட்டின் மீது படையோடு சென்று மதிலை வளைத்துப் போரிடுவது உழிஞைத் திணையாகும். இவ் வாறு போரிடும் வீரர்கள் ஊழிஞைக் கொடியாலான மாலையைச் சூடிக்கொண்டு போரிடுவர். பகைவன் ஒழிந்த அரணத்தைக் கைப்பற்ற எண்ணிய மன்னன் அம்மதிலை வளைப்பான். இவ்வாறு வளைக்குங்கால் குடை, வாள் ஆகியவற்றில் ஒன்றைப் புறவீடு விடு தலும் மதிலின் புறத்தே சென்று தாக்குதலும், தோற் படை பெருக்கம் பேசுதலும், காவற்காட்டைக் கடத் தலும், கிடங்கில் போரிடுதலும், மதில் மீது ஏணி சார்த்திப் போரிடுதலும் நடைபெறும் பின்னர் மதி லின் உள்ளே குதித்து அகத்தோரை வென்று அரணம் கைப்பற்றப்படும்.

மதிலை அழித்துக் கழுதை ஏர்கொண்டு உழுது காவடி விதைத்தலும் (வரகு, எள், கொள்ளுமுதலியன விதைத் தல்), வாளைக் கழுவுதலும், முடி சூடிக் கொள்வ தும் நடைபெறும்.

அகத்தோன் நிறையளிக்க அதனைப் பெற்று மதிலை அழிக்காமல் திரும்புவதும் உண்டு. ஒரு மதிலை அழித்தவுடன் மற்ற மதிலகத்துள்ளோரும் தத்தம் முரண் அவிதலும் உண்டு. இதுவே உழிஞைத் திணை.

***உழிஞை தானே மருதத்துப் புறனே (தொல்பொருள். 1010)***

**தும்பை-வீரம் தோய்ந்த மனநிலை**

தும்பை எனும் புறத்திணை, நெய்தல் என்னும் அகத் திணைக்குப் புறனாகும். இதில், வலிய அரசனை எதிர்த்துஅவன் வீரத்தைஅழிக்கும் சிறப்பெனத் தும்பை யின் இயல்பு பற்றிப் பேசப்படுகின்றது.

***தும்பை தானே நெய்தலது புறனே (தொல். பொருள். 1015).*** இதன் இலக்கணமாவது,

***மைந்து பொருளாக வந்த வேந்தனைச்***
***சென்று தலையழிக்கும் சிறப்பிற்றென்ப. (தொல். பொருள்.1016)*** என்பது தொல்காப்பியமாகும்.

இத்திணைக்குப் பன்னிரண்டு துறைகள் உள்ளன. காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை ஆகிய முப்படைகளின் நிலை, வேற்போரில் முதன்மை பெற்று நின்ற மன்னனைப் பகைவர் சூழ்ந்து கொண்டபோது, மன்னன் படைவீரன் ஒருவன் பகைவர்மீது வேல் களை வீசியெறிந்த தார்நிலை, இரு பக்கத்தாரும் தம்முள் பொருதி (போர்புரிந்து) இறந்துபடல், சித றுண்டு படையிலுள்ள ஒருவன் தனித்து வந்து எதிர்த்த பெருமை, படைக்கருவிகள் தீர்ந்தபொழுது கைப்போர் புரிந்து வெற்றி பெறுதல், பகைவரை எதிர்கொண்டு வர யானைகளைக் கொன்று போரிடும் பெருமை, வென்ற அரசனுடைய வீரர்கள் கூடி அவன் புகழ் பாடி ஆடும் ஆட்டம், இருபெரு வேந்தரும் அவர் படைவீரர்களும் அழிந்த தொகைநிலை, போரில் தன் தலைவன் வஞ்சத்தால் கொல்லப்பட்டான் என நினைந்து கடும் போர் புரிந்து புகழ் பெற்ற நிலை, அறம் நோக்காது வாள்கொண்டு பலரைக் கொன்றொழித்த வீரம் ஆகியவை தும்பைத்திணை.

**லியோ டால்ஸ்டாய்**

பிறருக்காக உழைக்க வேண்டிய நடைமுறைக்குப் பொருத்தமான ஒரு செயல்தான் மிகச்சிறந்த வெகு மதிகளை வழங்கக் கூடியவையாகும். முற்றிலும் சுய நலமில்லாமல் நன்மையான நெறிமுறைகளுக்காக நம்மை அர்ப்பணம் செய்தவன் மூலமாகவே வாழ் வியலை நிறைவு செய்த ஒருவராக உலகத்தில் உரு வாக முடிகிறது. இத்தகு வீரர்களாகத் தும்பை வீரர் கள் திகழ்ந்தனர் என்பது மிகையன்று.

***நாங்கள் மக்களை விரும்புவது அவர்கள் எங்களுக்கு என்ன செய்வார்கள் என்பதை எதிர்ப்பார்த்து அல்ல; அவர்களுக்கு எங்களால் என்ன செய்ய முடியும் என்று நினைப்பதால் தான் (மனோதத்துவ இயல் ப.22)*** இது மாபெரும் எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் கூற்று. மன்னனும் வென்ற நாட்டையும் மக்களையும் தனது மக்களாகக் கருதி நலம் புரிவான்.

**வாகை-வெற்றி வாகை சூடிய மனோ நிலை**

வாகை என்னும் புறத்திணை பாலை என்னும் அகத் திணையின் புறனாகும். வலியும் வருத்தமும் இன்றி இயல்பாகிய ஒழுக்கத்தானே, தம்முடைய கூறுபாடு களை இருவகைப்பட்ட மிகுதிப்படுத்தல் என்பர்.

***வாகை தானே பாலையது புறனே (தொல். பொருள். 1019)***

**விளக்கேற்றுதல்-மனநிம்மதி**

கற்புடைய பெண்டிர் மாலை வேளையில் தமது இல் லங்களில் விளக்கேற்றி வணங்குவது மரபாகும். மேலும் போருக்குச் சென்றுள்ள அரசர்கள், படை வீரர்கள் இவர்கள் வீட்டுப் பெண்களும் அன்றாடம் தெய்வ வழிபாடு செய்வது வழக்கம். இதனை,

***கயலே ருட்சண் கணங்குழை மகளிர்***
***கைபுனை யாக நெய் பெய்து மாட்டிய***
***சுடர்துய ரெடுப்பும் புன்கண் மாலை(குறுந். ப. 401)***
***மங்கையர் நெய்யுமிழ் சுரையர்***
***நெடுந்திரிக் கொள்இக்***
***கையமை விளக்கம் நந்து தொறும் மாட்ட16 (48-49 அடிகள்)*** என்ற முல்லைப்பாட்டு அடிகளும் உணர்த் துகின்றன.

**உளம் கொள்ளும் பெயர்கள்**

போரில் ஈடுபடுபவர்களை போர் வீரர்கள், மறவர் கள் என்று அழைப்பர் இவர்கள் சான்றோன் என்ற சொல்லாலும் சங்க இலக்கியத்துள் குறிக்கப்பட்டுள் ளனர். இச்செய்தி

ISSN 2320-4842

*தேர்தர வந்த சான்றோர் எல்லாம் (புறம். 63)* என வரும் பாடலடிகளால் அறியமுடிகிறது. இதனையே பதிற்றுப்பத்து, *நோய்புரித் தடக்கைச் சான்றோர் (பதிற். 14)* எனக் கூறியுள்ளது உற்று நோக்கத்தக்கது. புறப் பாடல்களின்மூலம் இளைஞருக்குச் சிறுவயது முதலே சினவுனர்ச்சியும் மறப்பண்பும் இருந்தமையை அறிய முடிகிறது. போரிலே வெற்றிபெறும் வீரருக்குப் பரிசும் நிலமும் தருவது பற்றிய சிந்தனையைப் புறப்பாடல் கள் குறிப்பிடுகின்றன.

## வெற்றி பெறும் நிலைகள்

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு திறனாகிய அந்தணர் பக்கமும் ஓதலும், வேட்டலும், ஈதல், படை வழங்குதல், குடி களைப் பாதுகாத்தல், என்ற ஐவகை மரபின் அரசர் பக்கமும், வணிகர் வேளாளர்க்கு ஓதல், வேட்டல், ஈதல்,உழவு, வணிகம், நிறையோம்பல் என்ற ஆறும், குற்றமற்ற செயலையுடைய மழை, பனி, வெயில், என்ற மூவகைக்காலத்தினையும் பொறுத்த அறிவன் பக்கமும்,எட்டுவகை வழக்கத்தினையுடைய துறவோர் பக்கமும், பாகுபாட்டினை அறிந்த வீரர் பக்கமும், வாளானும் தோளானும் பொருது வெற்றி பெறலன்றி, மேற்கூறியவற்றால் வெற்றி பெறும் நிலையுடையதா கும். இதனை,

*அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்*
*ஐவகை மரபின் அரசர் பக்கமும்*
*இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்*
*மறுவில் செய்தி மூவகைக் காலமும்*
*நெறியின் ஆற்றிய அறிவின் தேயமும் (தொல் பொருள். 1021)* எனும் நூற்பா தெளிவுறுத்துகிறது.

நம்மில் பலர் மாற்று வழியை மறுபரிசீலனை செய் திட உடனே முன்வர மறுக்கின்றனர். காரணம், வழக் கமான பழக்கத்தில் வாழ்ந்து பழக்கப்பட்ட மனம் வாழ்வியலின்அடுத்த கட்டத்தில் கால் வைக்க அஞ்சு கிறது. ஆனால் மாற்று வழி இல்லாமல் வாழ்க்கை செம்மை அடைவதில்லை. மனமோ தெளிவு பெறுவ தில்லை. ஆனால் அனுபவங்கள் தந்த பாடங்களால் மாற்று வழிக்கு நகர்வது உன்னத புரிதலாகும்.

## நடைமுறை ஆற்றல்

முன்னைய காலங்களில், போர்புரிந்து வீரதீரச் செயல் களைச் செய்து, நாட்டைக் கைப்பற்றித் தம் திறனைப் பலவாறாக வெளிக்காட்டினர். பெண்களும் இதற்குச் சளைத்தவர்கள் அல்ல. ஆயினும் இன்று நம்மிடம் இருக்கும் ஆற்றல்தான் உலகிலுள்ள அனைத்து ஆற் றல்களிலும் முதன்மையானது. எனவேதான் கற்காலம் முதல் இக்காலம்வரை அனைத்து மனிதத் தேவை களையும் மனிதனே தன் ஆற்றலால் கண்டுபிடித் துள்ளான்.

*நம்மைச் சுற்றியுள்ள இந்த பௌதிக உலகத்திலிருந்து நம்மை நோக்கி வரும் பலவிதமான செய்திகளை, நிகழ்வுகளை நம்மால் தடுத்து நிறுத்தவோ, கேள்வி கேட்கவோ நம்மால் முடியும். ஏன் அதற்கு எதிரான ஒரு நிலைமையைக் கூடக் காண முடியும். நாம் எப்படி இருக்கக்கூடாது என்று இந்த உலகத்தைப் பற்றி நினைக் கிறமோ அதற்கு மாறாக எப்படி அது இருக்க வேண்டு மென்று நினைக்கிறமோ அதற்கு ஏற்றவாறு நமது மனம் தால் ஒரு கண்ணோட்டத்தை உருவாக்கிக் கொள்ள முடியும் (மனோதத்துவ இயல் பக். 19, 20)* என மனோதத்துவம் கூறுகிறது.

## காஞ்சியும் நிலையாமையும்

காஞ்சித் திணை என்னும் புறத்திணை, பெருந் திணை என்னும் அகத்தினைக்குப் புறனாக அமை யும். நிலையில்லாத உலகத்தைப் பொருந்திய நெறியை யுடையது என்றும், அதில் 'இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை' ஆகிய மூன்றையும் எடுத்துக் காட்டுவர் தொல்காப்பியர்.

*காஞ்சி தானே பெருந்திணைப் புறனே*
*பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்*
*நில்லா உலகம் புல்லிய நெறித்தே (தொல்.பொருள். 1024)* எனும் நூற்பா விளக்கி நிற்கும்.

## காஞ்சி சொல்லும் உளவியல்

காஞ்சியின் துறைகளுள், எமனைப் பற்றிச் சொல்லப் பட்ட பெருங்காஞ்சியும், கற்றோர் மற்றவர்க்குக் கூறிய முதுகாஞ்சியும், நற்குணம் பொருந்திய பகுதியை நோக்கித் தன் மறப் பண்பினாலே புண்ணைக் கிழித் துக்கொண்டு இறந்துபடும் மறக்காஞ்சியும், போர்க்களத் தில் புண்பட்ட பாதுகாப்பற்ற மறவனைப் பேய்கள் காக்கின்ற பேய்க்காஞ்சியும் கூறப்பட்டுள்ளது.

இன்னான் இறந்தானென்று உலகத்தார் இரங்கும் மன்னைக் காஞ்சி, இன்னது பிழைத்தால் இக்கேடு வருமென்று கூறிய வஞ்சினைக் காஞ்சி, இன்பமூட் டும் நகை அணிந்த மனைவி புண்பட்ட கணவனைப் பேய்கள் தீண்டாது காத்த தொடாக் காஞ்சி, கணவன் உயிரைப் பறித்த வேலினால் தன் உயிரையும் போக் கிய வஞ்சிக் காஞ்சி, பெண் கொடுக்க மறுத்ததனால் பகைவனாய் பெண் கொள்ள வந்த அரசனுக்கு முது குடி வணிகரும் வேளாளரும் தம் பெண்ணைக் கொடுக்க அஞ்சிய மகட்பாற் காஞ்சி, தன் கணவன் இறந்த விடத்துஅவன்தலையோடு தன் முகத்தையும் சேர்த்து இறந்த நிலை ஆகிய துறைகள் கூறப்பட்டுள்ளன. மேலும் சில துறைகளும் சொல்லப்பட்டுள்ளன.

*முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன்*
*தலையோடு முடிந்த நிலையொடு தொகைஇ (தொல். பொருள்.1025)*
என்ற இந்நூற்பா வரிகள் புலப்படுத்துகின்றன. எவை எவை நிலை இல்லாதவை என உணர்த்தும் பங்கு: அதன்மூலம் வாழ்வியல் முறையும் அறப்படுத்தல் தன்மையும் இதன்வழி உணர்த்தப்பெறுகின்றன.

## உளவியல் அணுகுமுறை

போரின் முடிவு அழிவுதான் என உணர்த்தும் போர் புரிவர் பொதுவாக நாம் நமக்கு எது முக்கியமாகத் தோன்றுகிறதோ, எது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறதோ அதையே நாம் நமது இலக்காக மதித்து நம்பிக்கையுடன் செயல்படுவதில் மிகுந்த ஆர்வம் உடையவராக இருக்கிறோம்.

உண்மையாகவே உளவியல் ரீதியான அறிவியலோடு செல்வதானால் ஒன்றை விரும்பி அதற்காக உழைப் பதைத் தவிரப் பிறிதொன்று உண்மையான உழைப் பாக இருக்க முடியாது. இது தன்னியல்பிலேயே செயல்படுகின்ற ஒரு மனப்போக்கு. ஒவ்வொரு மன நிலையைப் பொறுத்து நமது மகிழ்ச்சியின் இலக்கு தேடப்படுகிறது.

நாம் நமது பொறுப்புணர்வின் வளர்ச்சியை விடுத்து நம்மில் மகிழ்ச்சியை எதிர்பார்ப்பதால் மன விரக்தி யைத்தான் சம்பாதிக்க முடியும். வாழ்க்கையில் கால ஒழுங்கு, உண்மைச்செயல், பொறுப்புணர்வு, துல்லியத் தன்மை ஆகிய இவைகளை நாம் இழந்து செயல் படும்போது நிச்சயமாக மகிழ்ச்சி நம்மை வந்தடை யாது. மாறாக மனோரீதியான பாதிப்புகளே உருவா கும்.

***கண்ணீரும் சிரிப்பும் உடைய நமது வாழ்க்கையில் கூட கரித்துண்டு வைரமாவதைப் போல், மனதுக்கு மிக நெருக்கமான ஒன்றை இழக்கும்போது, அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தில்தான் நமது மனம் புதுமலர்ச்சி யில் ஒளிருகிறது.*** (மனோதத்துவ இயல் ப.24)

ஒரு உயிரின் மரணத்திலிருந்து தான் இன்னொரு உயிரின் பிறப்பு ஏற்படுகிறது. என்பது இயற்கையி லேயே விஞ்ஞான ரீதியாக உள்ளது. அப்படியா னால், நமது வாழ்வியல் என்பதும் இழந்து பெறும் தொடர்கதை தானே. நமது ஆழ்மனதில் இதைப் பதிவுசெய்ய வேண்டும். அப்போதுதான் நமது அழி யாத் தன்மைக்கு நமது மனோ நிலையைத் தயார்ப் படுத்த முடியும்.

### சிக்மண்ட் பிராய்டின் மனம்

***மனிதனின் மன இயல்புகளை, அவனில் மறைந்துள்ள மர்மக் குணங்களை, வாழ்கையில் அது அவனை ஆட்டி வைக்கும் தன்மைகளை ஒரு சமுதாயத்தையே அது மாற்றி அமைக்கும் போக்குகளை மன விகாரங்களை மனநோய்களை மனம் சம்மந்தப்பட்ட விபரீதச் செயல் களை எல்லாம் ஆராய்ந்தறிந்து அவற்றை பலருக்கு வெளிப்படுத்துபவர் சிக்மண்ட் பிராய்டு (சிக்மண்ட் பிராய் டின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள், பக். 6,10)*** மனநோய் காரணமாக ஒரு மனிதனிடம் இரண்டு வகைத் தாக்குதல் எண்ணம் எழும். அது பிறரைத் தாகும் மனோபாவம், மற்றொன்று தன்னைத்தானே தாக்கிக் கொள்ளும் மிருககுணம் என்பவை. தனி மனிதனாயிருப்பினும் நாட்டுப்பற்று இருப்பின் அவன் தன நாட்டையே பெரிதாகக் கருதுவான். மனிதனானவன் ஒரு குழுவோடு குடும்பத்தாருடன் தன் நாட்டின் மேல் பற்றுடன் அன்பு, கருணை, வீரத்துடன் இருந்தால் அவனால் தேவையற்ற எண்ணங்களை உள்ளே கொண்டு செல்ல இயலாது என்பது உளவியலாளர்களின் கருத்தாகும்.

### பாடாண்திணை

பாடாண் என்னும் புறத்திணை கைக்கிளை என்னும் அகத்தினைக்குப் புறனாகும். இது கடவுள் வாழ்த்து, வாழ்த்தியல் மங்கலம், செவியறிவுறுத்தல், ஆற்றுப் படை, பரிசில்துறை, கைக்கிளை, வசை ஆகிய எட்டு வகைகளைக் கொண்டனவாம்.

***பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே***
***நாடுங்காலை நாலிரண்டு உடைத்தே (தொல். பொருள். 1026)***

### மனமகிழ்வின் போக்கு

பாடாண்திணையில் பேசப்படும் துறைகளுள், பலவற் றில் உளவியல் செய்திகள் கூறப்பட்டுள்ளன. கொடுப் போரைப் புகழ்தல், கொடாதோரை இகழ்தல், வெற்றி யால் குணத்தால் உயர் நிலையடைந்தோரைப் புகழும் வாழ்த்து, வருத்தம் தீர வாயில் காத்து நிற்போருக்கு உரைக்கும் வாயில்நிலை, அரசன் துயில்வது பற்றிய கண்படைநிலை, கபிலநிறப் பசுவின் கொடையினைக் கூறுதல், விளக்கு எரியும் திறத்திற்கேற்ப வேலின் வெற்றியைக் கூறுதல், நன்மையின் பொருட்டுத் தீங் கற்ற சொற்களால் உண்மையைக் கூறுதல், நன்னெறி அறிவுறுத்தலான செவியறிவுறூஉ, அரசனைப் பாராட் டும்புறநிலைவாழ்த்து, ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை, பெண்பாற் கூற்றுக் கைக்கிளை ஆகியனவாம்.

***நமது மனோநிலையின் அம்சங்கள் அனைத்துமே நமது மரபணுவில் பதிவாகி விடுவதால் தனக்கும், பிறருக்கும் நன்மை தரும் எண்ணங்களை மனதுக்குள் அசைபோட வேண்டியுள்ளது. (மனோதத்துவ இயல், ப. 25).***

### மனித மனம்

நாம் பிறந்தது முதல் இன்று வரை எதையெல்லாம் நினைத்தோமோ, எதையெல்லாம் செய்தோமோ, எதை யெல்லாம் அனுபவித்தோமோ அவை எல்லாம் நமது உயிர்த்துகளில் பதிவாகிக் கருமையத்தில் அலை வடி வில் உள என்பது விஞ்ஞான ஆன்மீக உண்மை.

இது போன்று பாதிக்கப்பட்டவை எல்லாம் சூழ்நிலை, தேவை, சந்தர்ப்பங்களுக்கு ஏற்றாற்போல் மீண்டும் அதே எண்ண அலைகளாகப் பிரதிபலித்துக் கொண் டேயிருக்கும். ஆனால் புதிய புதிய எண்ணங்களும் மனதில் உருவாகும். இதைத்தான் மேல் அடுக்குப் பதிவு என்கின்றார்கள். எனவே மனம் என்பது ஓர் உடல் சார்ந்த உறுப்பாக இல்லாமல், ***உயிர்த்துகளின் உயிரலை அழுத்தமாகவும், வினைப் பதிவுகளாகவும் எண்ண அலைகளாகச் செயல் டுகிறது (மனோதத்துவ இயல், ப. 32)*** இந்த மனதில் நாம் எண்ணுவதையும், எண்ணியதைச் செயல்படுத்துவதையும் பொறுத்தே நமது வாழ்வும் தாழ்வும் வரையறுக்கப்படும் என்ற

ISSN 2320-4842

அடிப்படைத்தத்துவத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதைத் தொடர்ந்து நமது வாழ்வுக்கும் தாழ்வுக்கும் பிற மனிதரையோ, பிற உயிரினத்தையோ பிற சடப் பொருட்களையோ வேறு எதையும் காரணம் காட்டினால் இதே மன நிலை நமது சந்ததிகளைப் பாதிக்கும். ஆனால் அதனை உணராது பழிவாங்குதல்-வஞ்சினம் புரிதல் தன்மையில் போர் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டே இருந்தது. நாட்டின் வளம், முன்னேற்றம் நிகழப் போரில்லாத நற்சூழலே காரணம் எனலாம்.

**தொகுப்புரை**

உலக வாழ்வில் இன்பம் என்பது எல்லோருக்கும் பொது உடைமையாகத் திகழ்கின்றது. இலக்கண, இலக்கியம் அனைத்தும் காலத்திற்கு ஏற்ற வகையில் அன்றே அக, புற வாழ்வைப் பற்றிக் கூறி வந்துள் ளன. இன்றும் தொல்காப்பியம் போன்றதொரு அரிதான, மகத்தான நூலைக் காணமுடியவில்லை. இக்கட்டுரையில் கண்ட புற உலக வாழ்வின் உளவியல் கூறுகள் நம் வாழ்வில் நடந்தேறுபவையேயாம்.

**முடிவுரை**

போர், வீரம், கொடை, இரக்கம், நேர்மை கொண்ட அரசாட்சி இவற்றை மட்டுமே தொல்காப்பியர் புறத்திணையியலில் கூறவில்லை. மேலும் விரிவாக மனித மனதைப் பற்றியும் ஆய்ந்துள்ளார். மனிதனின் உள் மனச் செயல்பாட்டையும், அவனது திறனையும், உள் ளார்ந்த பண்பையும் உளவியல் நோக்கில் எவ்வாறு அணுகினாலும் அதற்கு விடையும் தந்துள்ளார் தொல்காப்பியர். இக்கட்டுரையில் கண்ட உளவியல் நியதிகளை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வாழலாம்.

*கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்*
*பெருமையின் பீடுடையது இல் (குறள், 1021)*

குடிப்பெருமைக்குரிய கடமையைச் செய்வதற்குச் சோர்வடையமாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமை போல மேம்பாடானது வேறொன்றும் இல்லை.

**பயன்பட்ட நூல்கள்**


ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, எட்டாம் பதிப்பு 2006.

கவிஞர் லோட்டஸ் எடிசன், மனோதத்துவ இயல், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2015.

நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை, திருக்குறள் தெளிவுரை, தென்றல் நிலையம், சிதம்பரம், 8ம பதிப்பு, 2006.

பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், சென்னை, முதல் பதிப்பு, 1986.

அகநானூறு, பொ.வே.சோமசுந்தரனார் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதல்பதிப்பு, 2006.

குறுந்தொகை, பொ.வே.சோமசுந்தரனார் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதல் பதிப்பு, 2007.

முல்லைப்பாட்டு, பொ.வே சோமசுந்தரனார் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதல்பதிப்பு, 2010.

புறநானூறு, ச.வே சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2021.

பதிற்றுப்பத்து, ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2021.

சிக்மண்ட் : பிராய்டின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள், புலவர் என்.வி.கலைமணி, சென்னை, முதற்பதிப்பு, 2001.


**Everybody has to be somebody to somebody to be anybody.**

**—Malcolm S. Forbes**

**It’s a whole lot more satisfying to reach for the stars, even if you end up landing only on the moon.**

**—Kermit the Frog**

**Living is the art of getting used to what we didn’t expect.**

**—Eleanor C. Wood**

**The way I see it, if you want the rainbow, you gotta put up with the rain.**

**—Dolly Parton**

ISSN 2320-4842



# வில்லிபாரதத்தில் கண்ணனுக்குக் கர்ணன் செய்த வள்ளன்மை

**வெ. பைரவன்**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை 600 117
ஆய்வு நெறியாளர்: **முனைவர் எ. பச்சையப்பன்**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை 600 117

**ஆய்வுச் சுருக்கம்**

வரமாகக் கிடைத்த மனித வாழ்வினைச் சாபமாக ஆக்கிக்கொள்ளாமல் சரியாக வாழ வழிகாட்டுபவை இலக்கியங்கள். அவற்றுள் இறவா வரம் பெற்றவை இதிகாசங்கள். மனித மனங்களின் குறியீடாகவும் மகத்தான சோதனைகளை வெல்வதற்கு முன்னுதாரணமாகவும் விளங்கும் பல்வேறு வகைப்பட்ட பாத்திரங்கள் இவற்றுள் ததும்பி வழிகின்றன. பூமிப்பாரம் தீர்க்கப் புறப்பட்ட திருமால் கண்ணனாய் அவதரித்து வந்த காரணத்தால் வளர்ந்த கதை மகாபாரதம். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட போரையும் பூசலையும் சொல்வதாக அல்லாமல் மனிதர்களின் உள்ளங்களில் எழும் தர்ம, அதர்மச் சிந்தனைகளுக்கிடையிலான போராட்டங்களை இணைத்துச் சிந்தித்துப் பரிசீலிக்கச்செய்யும் இதிகாசம். எத்தனையோ பாத்திரங்கள் இதில் இருந்தாலும் மக்களின் மனதை ஈர்த்து வசப்படுத்தும் ஈரமனம் கொண்ட பாத்திரம் கர்ணன் மட்டும்தான். அது வாழ்வால் வஞ்சிக்கப்பட்ட பாத்திரம். ஆயினும் தன் வள்ளல் தன்மையால் வாழ்வாங்கு வாழ்ந்த பாத்திரம். செஞ்சோற்றுக் கடன் தீர்க்கச்சேராத இடம் சேர்ந்திருந்தாலும், இல்லையென்று வந்தோர்க்கு இல்லையென்று சொல்லாமல் ஈந்து புரந்த இவ்விலக்கியப் பாத்திரத்தைக் கண்ணனுக்கு நேராகக் காட்சிப்படுத்துகின்றார் வில்லிபுத்தூரார். அவ்வகையில் போர்க்களத்தில் கண்ணனுக்குக் கர்ணன் செய்த வள்ளல் தன்மையை ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

**முன்னுரை**

சங்கடத்தை விளைவிக்கும் உலகப் பொருட்கள் மீதான பற்றை அறுத்தெறிய மறைமுகமாக உதவுகிறது கொடை. இப்படி வேதம் சொல்லும் கொடையின் பெருமையைப் பாமரருக்கும் எடுத்துச் சொல்லக் கர்ணனைப் பயன்படுத்தியது இதிகாசம். இன்றும் யாராவது பெரியதாகத் தானம் செய்வதனைக் கண்டால் நாம் உடனே கொடைவள்ளல் கர்ணன் என்போம். திளைக்கும் வினைக்கடல் தீர்வுறும் தோணி அறம் என்பார் திருமூலர். உயிரின் படர்க்கைநிலையே மனம் என்பர் சான்றோர். உடலின்வழி நற்செயல்களைச் செய்து முழுமை நிலையை அடையலாம் என்பது ஒருநிலை. மற்றொரு நிலையாவது மனதை முதன்மையாகக் கொண்டு அதையே முதற்கருவியாக்கித் தவம் மேற்கொண்டு முழுமை அடைதலாகும். உலகோர்க்கெல்லாம் மிகச் சிறந்த முன்னுதாரணமாகத் திகழும் வகையிலான செயலை மேற்கொண்ட கர்ணனின் கொடைச் செயலை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**போர்க்களத்தில் கர்ணன்**

போர்க்களத்தில் அர்ச்சுனனின் அம்புகள் பட்டுத் துளைத்த வழியெங்கும் குருதி பெருக வீழ்ந்து கிடக்கின்றான் கர்ணன். ஊசலாடுகிறது உயிர், உடலை விட்டு உயிர் பிரியாமல் தடுத்து நிற்கிறது அவன் செய்த தர்மம். கர்ணன் இதுநாள்வரை செய்த தான தர்மத்தின் பலனே, அவன் உயிரைப் பிரியவிடாமல் காக்கின்றது என்று கண்ணன் உணர்ந்துகொண்டான். இந்நிலையில் கண்ணன் முதிய அந்தண வடிவமெடுத்துக் கர்ணன் முன் நிற்கின்றான் கையேந்தி. 'தரத்தகு பொருள் நீ நவிலுதி' என்கின்றான் கர்ணன். 'நின் புண்ணியம் அனைத்தும் உதவுக' என்று இரக்கின்றான் கண்ணன். அது கேட்டு உளமகிழ்ந்த கர்ணனோ,

*ஆவியோ நிலையில் கலங்கியது யாக்கை*
*அகத்ததோ பிறத்ததோ அறியேன்*
*பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்*
*பக்குவம் தன்னில்வந் தில்லையால்*
*ஓவிழாது யான்செய் புண்ணியம் அனைத்தும்*
*உதவினேன் கொள்கநீ உனக்குப்*
*பூவில்வாழ்அயனும் நிகரிலன் என்றால்*
*புண்ணியம் இதனினும் பெரிதோ* (வில்லிபாரதம், 5:331) என்று கொடுக்கின்றான். நீரைத் தாரை வார்த்துக்

ISSN 2320-4842

கொடுக்கப் போர்க்களத்தில் வழியில்லை, ஆதலால் தன் இதயத்தில் தைத்த அன்பின்வழி வழிந்த குருதி யையே நீராய் வார்த்துக் கொடுக்கின்றான் கர்ணன். தனக்கு மிஞ்சியதைத் தருவது அல்ல தர்மம்; தன்னை யும் மிஞ்சித் தருவதுதான் தர்மம் என்பதன் குறியீடு போல அமைகின்றது இக்கொடை. இது கைக்கொடை என்றாலும் இதயத்தின் வழிவந்த கருணைக் கொடை.

கர்ணன் எத்தனையோ புண்ணியங்கள் செய்தவன்தான் எனினும், அழுக்காறு எனும் ஒரு பாவியை அகத் திருத்திய துரியோதனப் பாவி அளித்த சோற்றைப் புசித்து வளர்ந்த காரணத்தால் பாவி ஆகிப்போனவன். அவன் செய்த புண்ணியங்களிலும் சில பாவச் சேர்க் கைகள் இருந்திருக்கக்கூடும். ஆதலால் தன்னைப் 'பாவியேன்' என்கின்றான்போலும். ஆனால் அவன் இப்போது செய்த புண்ணியம் இருக்கின்றதே, இது பாவத்தைப் போக்குகின்றபுண்ணியம் மட்டுமல்ல, புண் ணியம் சேர்க்கின்ற புண்ணியம். அதனால்தான் புண்ணி யம் அனைத்தும் கேட்ட கண்ணனுக்குத் தான் கொடுத்த புண்ணியத்தை 'ஓவிலாது யான் செய்புண்ணியம் அனைத்தும் உதவினேன்' என்கின்றான் கர்ணன்.

இந்தச் சொல்லாடலில் ஒரு நுண்ணிய விளக்கத்தை முன்வைக்கின்றார் வில்லிபுத்தூரார். இதுவரை செய்த புண்ணியம் அனைத்தும் கொடுத்த பிறகு, இந்தக் கொடையின் காரணமாக வந்திருக்கும் புண்ணியம் எஞ்சியிருக்கும் அல்லவா? அதையும் சேர்த்துக் கொடு என்கிறார் கண்ணன். ஆக இப்போது தந்தது 'செய் கின்ற புண்ணியம்' இனி செய்ய இருக்கின்ற புண் ணியம் இருக்கின்றதே அதுதான் 'ஓய்விலாது செய் புண்ணியம்'. ஓய்வுக்குக்கூட இடமின்றிச் செய்யும் உழைப்பின் பலனாய் வருகிற, வளர்கிற அனைத்தை யும் சேர்த்துக் கொடுக்க நினைக்கிறது கர்ணனின் கொடையுள்ளம். இதுவரை செய்த பாவப் புண்ணி யங்களின் அடிப்படையில் வரப்போகின்ற பிறவிகள் இருக்கின்றனவே, இந்தப் பிறவிகளில் பாவம் செய்வ தற்கு நேரமோ, இடமோ வாய்க்காத வண்ணம் ஓய் வில்லாது செய்யவேண்டியது புண்ணியம் மட்டும்தான். அதையும் முன்கூட்டியே தந்துவிடுகிற நோக்கில் இந்த நல்லுள்ளம் துடிக்கிறது; கொடுக்கிறது. வாழ்க்கைக் கணக்கை நேர் செய்துகொள்ளும் நேர்த்தி இதில் ஒளிந்திருக்கக் காணலாம்.

### வள்ளலுக்கு வள்ளல் செய்த வள்ளன்மை

கர்ணன் இரப்போர்க்கு இல்லை என்னாது கொடுக் கும் பண்புடையவன். போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கும் நிலையில் அவனது உயிரோடு ஒன்றிய பொருளை மட்டுமே பெறுதல்இயலும். அதற்கு ஏற்றவாறு கண்ணன் தவக்கோலம்பூண்டு, வறியவனாகத் தன்னை அறிமுகம் செய்து கொள்கிறான். எனவே உலகில் வறுமையால் வாடியவர்க்குக் கர்ணன் அவன் வேண்டிய பொரு ளைத் தருவான் என்பதைக் குறிப்பிட்டுத் தான் விரும்பும் பொருளை அளிக்குமாறு வேண்டுகிறான். தவத்தானுக்குத் தேவையானது இவ்வுலகப் பொருள் அன்று அவனுக்கு மறு உலகத்திற்குத் தேவையான புண்ணியம் வேண்டும். அதுவே செல்லும் தேயத் திற்கு உறுதுணையாவது. எனவேதான் புனைந்த வேடத் துக்குப் பொருத்தமாக வேண்டுகிறான்.

கண்ணன் புண்ணியமாகவும் பாவமாகவும் உள்ளவன். யாருடைய புண்ணியமோ, பாவமோ அவனைச் சென்று சார்வது இல்லை. எனினும் தானும் கர்ணனி டம் இரந்து நிற்பதில் மகிழ்ச்சி பெறுகிறான். அது கேட்டுக் கர்ணன் மகிழ்கின்றான். வீழும் நிலையில் நிற்கும் அவனிடம் ஈய இயலாத பொருளை வேண்டி யிருந்தால் அவன் உள்ளம் உடைந்திருக்கும்; ஆனால் அப்போது அவன் தருவதற்கு இயன்ற பொருளையே தவத்தான்வேண்டியதால் அவன் மகிழ்ச்சியுறுகிறான்.

கர்ணன் தன் பகைவர்க்கு மேகத்தில் தோன்றும் பேரிடியை ஒத்தவன். தன் முன்னே வணங்கி நின்ற கண்ணனுக்குத் தன் புண்ணியப் பயனை எல்லாம் அம்பின் வழியே வெளியே வழிகின்ற செந்நீரால் தாரை வார்த்துக் கொடுக்கிறான். பரம்பொருளேயாயி னும் 'ஈ' என இரந்து நின்றமையால் கண்ணன் கை தாழ்ந்தும், 'கொள்' எனக் கொடுத்தமையால் கர்ணன் கை உயர்ந்தும் நிற்க, கண்ணன் கர்ணனின் புண்ணிய பயன் அனைத்தையும் ஏற்கின்றான்.

கண்ணன் கர்ணனின் உயரிய பண்பை எல்லாம் வெளிப்படுத்தக் கருதுகின்றான். கர்ணனிடம் அவன் விரும்பிய வரங்களை வேண்டுமாறு கூறுகிறான். கர்ணன் அப்பிறவியிலேயே 'கொடைக்குக் கர்ணன்' என்ற பெயரைப் பெற்றவன்.

***மல்லல்அந் தொடையல் நிருபனை முனிவன்***
***மகிழ்ந்துநீ வேண்டிய வரங்கள்***
***சொல்லுக உனக்குத் தருதும்என்று உரைப்பச்***
***சூரன்மா மதலையும் சொல்வான்***
***அல்லல்வெவ் வினையால் இன்னம்உற் பவம்உண்***
***டாயினு மேலெழு பிறப்பும்***
***இல்லையென்று இரப்போர்க்கு இல்லைஎன்று உரையா***
***இதயம்நீ அளித்தருள் என்றான்*** **(வில்லிபாரதம், 5:333)** என்று யாருக்கும் இல்லை என்று எண்ணாத நன் மனத்தை வேண்டுகின்றான் கர்ணன்.

***இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்***
***குலனுடையான் கண்ணே உள*** **(குறள், 223)** என்று திருவள்ளுவர் நற்குடிப் பிறந்தவனின் இலக்கணத் தைக் காட்டுகின்றார். அவ்வாறே வாழ விரும்பிய கர்ணன் நற்குடிப் பிறப்பினன் என்பது உறுதிப்படுத் தப்படுகிறது. பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்த லும், உறங்குவதும் விழிப்பதும் போன்றதே என்பதை உணர்ந்த கர்ணன் தனக்கென எதையும் வேண்டாது பிறருக்குக் கொடுக்கும் உயரிய வரம் வேண்டியதும் கண்ணன் உள்ளத்தில் மிகு மகிழ்ச்சியுற்றவனாய்த் தன் இருகரங்களால் அவனைப் பற்றிக் கண்மலர் சொரி நீரால் மஞ்சனமாற்றி நிற்கிறான். இது கண்ணன் கர்ண னிடம் கொண்ட எல்லையற்ற அன்பையும், கருணை

யையும் காட்டி,

***அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கண்நீர்பூசல்தரும்*** **(குறள், 71)** என்றவள்ளுவர் வாய்மொழியை உறுதிப்படுத்தி நிற்கின்றது எனலாம். கர்ணன் வேண் டியவாறே எப்பிறப் பெடுக்கினும் அவன் வேண்டு கோளின்படியே ஈயும் பண்பையும் அதற்கு வேண் டிய செல்வத்தையும் பெறும் வரத்தையும் கொடுத்து எடுத்தற்குரிய பிறவிகளை எடுத்துப் பின் பரம பதத்தை அடையும் வரத்தையும் கொடுக்கின்றான் கண்ணன்.

கண்ணன் ஆதியும், நடுவும், முடிவும் இல்லாதவன். தன் உள்ளம் மகிழச்செய்த கண்ணனைக் காணுமாறு 'ஆதிமூலமே' என்றழைத்த கசேந்திரன்முன் காட்சி தந்த வடிவிலே தோன்றுகின்றான். அங்குக் கசேந்திரன் அழைத்தமையால் வந்தான்; இங்குக் கர்ணன் அழைத் தமையால் தானாகவே முன்வந்து காட்சியளிக்கின் றான். இது கர்ணன் இடத்தில் கண்ணன் கொண்ட எல்லையற்ற கருணையைக் காட்டுகின்றது. அக்காட்சி யைக் கண்டு களிக்கக் கர்ணன் தான் அர்ச்சுனன் அம்பால் உயிர் துறக்கப் போவதை ஒரு பேறாகக் கருதியவன் என்பதை வெளிப்படுத்துகிறான். அத்து டன் அமலன் நாராயணனைக் கண்குளிரக் காணப் பெற்றமையால் தன் உள்ளம் மகிழ்கின்றான். உலகில் இன்பம் வேண்டாது உயர் பெருந்தவங்களை இற்று வோர் பெறுதற்குரிய பிறவாப் பெரும் பேற்றையும் கர்ணன் அடைகிறான். ஆனால் அவற்றைப் பெற்ற மைக்குக் கண்ணனே காரணம் என்பதை ஒருதலை யாக ஒப்புக்கொள்கின்றான் கர்ணன்.

மேலும் இவ்வுலகில் பிறந்த உயிர்கள் தம் செய் வினைப்பயனால் மேலுலகை அடைந்து அங்கே இப் பெறற்கரியக் காட்சியை அடைவதுதான் வழக்கம். ஆனால், கர்ணனோ இவ்வுலகிலேயே அப்பெரும் பேற்றைப் பெறுகின்றான். தன் உயிரனையத் தோழன் துரியோதனுக்காகத் தன் தம்பியரொடு மலைத்து செஞ்சோற்றுக் கடன் கழித்தமையைக் கருதி மகிழ் கின்றான்.இந்திரனுக்குக் கவச குண்டலங்களை அளித் தமைக்குப் பெருமை கொள்கின்றான்.

கங்கையில் மூழ்கியவர் தம் பாவங்களை நீக்கியவர் ஆவார். கர்ணனோ கங்கை பிறந்த கண்ணனின் கால் களை வணங்கி அவன் கண்ணீரிலேயே குளிக்கின் றான். உலக உயிர்களைக் குளிர்விக்கும் மதியவன் தோன்றிய மனம் கண்ணனின் மனம். அம்மனத்தினுள் மகிழ்ச்சியை ஏற்படுத்தி அதனால் பெறற்கரிய பெரும் பேறு பெறுகின்றான் கர்ணன். ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாதவன் இறைவன். ஆனால் அவன் தன்அடியார்களுக்காக எந்த உருவத்தையும் எடுக்கும் இயல்பினன். கர்ணனுக்காகவே தம் உண்மை உருப் பெற்று வந்த கண்ணனின் அழகிய திருத்துளாப மாலை யையும், மார்பையையும், தோளையும் தன்னோடு பொருந்துமாறு தழுவப் பெற்றவன் கர்ணன். ஆற்றல் மிக்க அர்ச்சுனனின் கணையால் வீழ்ந்த பிறகும், அறிவு அறாது கண்ணனின் திருநாமங்களைத் திருத் தமாகச் சொல்லும் பேறு பெற்றவன்எனும் பொருளை உள்ளடக்கி,

***வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்***
***மதிபெற்ற திருவுள்ளத்தால் மதிக்கப் பெற்றேன்***
***தேன்பெற்ற துழாய்அலங்கல் கபள மார்பும்***
***திருப்புயமும் தைவந்து தீண்டப் பெற்றேன்***
***ஊன்பெற்ற பகழியினால் அழிந்து வீழ்ந்தும்***
***உணர்வுடன்நின் திருநாமம் உரைக்கப் பெற்றேன்***
***யான்பெற்ற பெருந்தவப்பேறு என்னை யன்றி***
***இருநிலத்தில் பிறந்தோரில் யார்பெற் றாரே***

**(வில்லிபாரதம், 5:340)** என்று கூறுகின்றான். எனவே இப்பேருலகில் தன் னிலும் பேறு பெற்றவர் எவரும் இலர் என்பதை எண்ணிக் கர்ணன் மன நிறைவு பெறுகின்றான்.

## முடிவுரை

உண்மை, வலிமை, உறவு, புகழ், உறுதி, ஒழுக்கம், ஒளி, வன்மை இவற்றில் சிறப்புடையவர் கர்ணன். கர்ணன் சிறந்த வள்ளன்மையுடையவனாக இருந்தும் நன்மை தீமைகளுக்கிடையே நிகழும் போராட்டங் களால் நல்லோரும் பாதிக்கப்படுவதுண்டு என்பதற் குக் கர்ணனே சான்றாகின்றான். கர்ணனுக்குத் தன் திறமையால் அளவற்ற நம்பிக்கை இருந்தது. கர்ண னிடத்துக்குக் கண்ணன் எல்லையற்ற மதிப்பு கொண்டு இருந்தான். கண்ணனின் கடவுள் தன்மையை உணர்ந்த கர்ணன் அவன்பால் பணிவுடனும் பக்தியுடனும் உரை யாடினான். கண்ணனால் கர்ணன் தன் பிறப்பு உணர்ந்தபோதிலும் துரியோதனனிடம் கொண்ட நன்றி உணர்வினால் அவனைப் பிரிய முடியாது சங்கடப் பட்டான். தன் உயிருக்கு ஊறுவரினும் சொல் தவ றாதவன் கர்ணன். தன் உயிர் பிரியும் தருவாயிலும் தன்னிடம் இரந்தவர்களுக்கு இல்லை என்னாது கொடுக் கும் விருப்பமிகு வள்ளல் கர்ணன். எல்லோருக்கும் உதவுவதே இறைவனின் செயல். அவன் செய்ய வேண் டிய இவ்வறத்தைப் புரிகிறவன் எவரும் இறைவ னுக்கு உதவுகிறவன்தாம். எனவே அரிதாய்க் கிடைக் கும் மனிதப் பிறவி நமக்குக் கொடுக்கும் வாய்ப்பு புண்ணியம் செய்யத்தான், பாவம் புரிவதற்கு அல்ல, அதையும் மீறிச் சந்தர்ப்பச் சூழ்நிலையால் பாவம் புரிய நேர்ந்தாலும் அதனை ஈடுசெய்யப் புண்ணியம் செய்தல் இதயம் உடைய மனிதர்களுக்கு உரியதாக அமைகிறது. செய்ந்நன்றி அறிதலும் கொடைப் பண்பை மேற்கொள்ளுதலும் மானுட வாழ்வை எக்காலத்தும் மேம்படுத்தும் என்பது இக்கட்டுரையின்வழி உறுதியா கிறது.

## துணைநூற்பட்டியல்

வில்லிபாரதம் மூலமும் தெளிவுரையும், ஐந்தாம் பாகம், 2013, பூம்புகார் பதிப்பகம், சென்னை.

திருக்குறள் பரிமேலழகர் உரை, 2014, திருமகள் நிலையம், சென்னை.

ISSN 2320-4842

# The Role of African American Women of Colorin Culture and Society

**R. SURESH**
**Ph.D Research Scholar, PG and Research Department of English**
**Marudupandiyar College of Arts and Science (Affiliated to Bharathidasan University), Thanjavur**
&
**Dr. V. GOVINDARAJAN**
**Assistant Professor & Research Advisor, PG and Research Department of English**
**Marudupandiyar College of Arts and Science (Affiliated to Bharathidasan University), Thanjavur**

**Abstract**

African-American women have been In appropriately and unduly, stereotyped in various contrasting images as slaves post-slavery, wet nurses, super women, domestic helpers, mammies, matriarchs, jezebels, hoochies, welfare recipients, and hot bodies which discloses their repression in the United States of America. They have been show caused by both black men and white women in different ways quite contrary to their being in America. This article examines the position of African American women. This study aim sat studying how postcolonial African-American female writers developed many strategies to subvert the social order in order to undermine the patriarchy that oppressed and oppresses women.

***Keywords:*** *African American Women, Colorin Culture and Society*

African American women have protested against the "sexism of black literary history" and "racism of feminist literary history" (Showalter 214) with equal gusto to emerge as strong, emergent women. They have been show caused by both black men and white women in different ways quite contrary to their being in America. They have been facing Sexism, Racism and Classism right form their arrival in America.

African-American women have been in appropriately and unduly, stereo type din various contrasting images as slaves post-slavery, wet nurses, super women, domestic helpers, mammies, matriarchs, jezebels, hoochies, welfare recipients, and hot bodies.

Which discloses their repression in the United States of America? As long as there is racist ideology nurtured by people the repressive images of black women's are sure going to be put forth, by racist white sand sexist blacks. As pointed out by Patricia Hills Collins. "Challenging these controlling images has long been a core theme in Black feminist thought" (Black Feminist 69). Toni Morrison, Alice Walker, Gloria Naylor, Gayl Jones, Paule Marshall, Sonia Sanchez, Toni Cade Bambara, to name a few writers, have put forth the condition of black women through their works. They have talked about them yriadfacets of black women quite contrary to the stereotyped images of black women as shown by popular culture, media and literary works as there is a need to see the true personality of many black women hidden behind the veilsofracism, sexism, classis and systemic oppression of different sorts. Alice Walker has written seven novels till date that show case the being of African Americans and the marginalized lot, of many a coloured people in America and the world, true to life. Through her literary corpus, Walker concentrates on the lives of many a black woman with equanimity, passion, empathy and concern. Walker at the same time does not show case women who are African American stereotypes but rather depicts real to life African American women along with their trials and tribulations, and the need for their betterment along with the African community, owing to their in dispensable contribution to America.

As a writer of grit and substance opening the where about of black peoples' lives Walker has said "I am pre occupied the spiritual survival, the survival whole of my people, But beyond that, I am committed to exploring the oppression, the insanities, the loyalties, and the triumphs of black women. Forme, black women's are the fascinating creations in the world" (Walker, In Search 250). She has stood by what she has stated through her literary corpus. Walker through her work shown many black women in their totality. Walker vouches that black women need to develop Womanist consciousness to over come the tripartite forces of oppression. Walker coined the term Woman is min her 1984 collection of essays titled In Search of Our Mothers' Gardens: Womanist Prose. The term Woman is mused by Walker hasits origin digenous black culture and the black folks expression "You are acting Womanish," i.e. like a woman. Universally human beings are divided into two categories, men and women, the former area scribed some normal masculine attributes such as "Active, Dominating, Adventurous, Rational, and Creative" and the latter some feminine attributes like "Passive, Acquiescent, Timid, Emotional and Conventional". In addition, according to Welterin Carby, the male center of woman, that is true Woman hood, is based generally on male interpretation (those by a husband, brother, or father) and could be attained through four cardinal virtues including piety, purity, submissiveness and domesticity. As cultural huge money is illustrated by men so the society assigns pri-

macy and value to males, up holding mas culine traits rather than female ones. They elevate maleness to superior and normal stance while they define femaleness as inferior and abnormal.

Men define themselves relatively through comparing and contrasting themselves with the other sex, women. Men compensated for are latively fragile sense of mas culinity by ensuring that, in the real world power stays In the hands of gender differences, by seeking to intensify them, through keeping the boundaries between what is supposed feminine and what is supposed masculine "Clear and Distinct". In line with this argument, Chodorow in Eisenstein, pointed out that in families, it is generally the father, more than the mother, who "sex type" children and expects gender appropriate behavior from them. Therefore, woman is not an essence, as Ruthven out lines in Feminist Literary Studies: An Introduction, "but a construct in the domain of patriarchal culture, a dispersed subject, historically variable, socially feminized as a site on which masculine meanings got spoken and his desires enacted" Unfixed and incoherent, gender refers to something other than biology and essentialism since every society encourages distinct behaviors, approved as male and female.

Taken in light of June Jordan's essay, in which her students chose the obstinate and opaque value of Black English as a form of shared thought and solidarity against dominant and politically expedient modes, we might see that Hurston's refusal to make too concretea "meaning" or conclusion out of the end lessre telling of Black folklore - told between slices of ginger cake and the labor - performance of toe parties - speaks back to what was happening with Janie in the court room. The tales are iterations of each other, actualized for particular moments. Although one can take them more generally as evidence of the persistence of Black life made available through a kind of code telling, that code does not break down in a one-to-one correspondence with informational meaning or discrete sensoy data. Where Standard English comports itself to positive Stempiricism's evidentiary demands, in Hurston's Minorem Piricism, composed in Black English in Black women's style, neither quantification nor data fication accounts for experience. The tales do not "end" In order to be interpreted for a closed meaning, nor do they com port themselves to the burd enofhermeneutic "evidence" Instead they prolife rate in their own composition, decomposition, and recomposition, making use of the material they can loose enough to construct in new ways.

**References**

Abramson, J. (2000). We, the jury: The jury system and the ideal of democracy. Cambridge, MA: Boston University Press.

Ahad, B.S. (2010). Freud upside down: African American literature and psychoanalytic culture. Chicago, IL: University of Illinois Press.

Alaimo, S., & Hekman, S. (2008). Introduction: Emerging Models of Materiality in Feminist Theory.In S. Alaimoand S. Heckman (Eds.), Material Feminisms (pp.1-19).

Bloomington, IN: Indiana University Press.

Bradley, R. (July 2013). Assata: These that grew from concrete. The Feminist Wire. Retrieved from http://thefeministwire.com/2013/07/assatathe-rose-that-grew-from concrete.

Brewer, H. (2007). By birth or consent: Children, law, and the Anglo-sax on revolution in authority. Chapel Hill, NC: University of North Carolina Press.

Brooks, D. (2006). Bodies in dissent: Spectacular performance so frace and freedom: 1850-1910. Durham, NC: Duke University Press.

Brooks, D. (2010). "Sister, can you line it out?": Zora Neale Hurston and the sound of angular Black woman hood. Amerika studien / American Studies: A Quarterly, 55(4).617627.

**Life is ten percent what happens to you and ninety percent how you respond to it.**

**— Charles Swindoll**

**You have brains in your head. You have feet in your shoes. You can steer yourself any direction you choose.**

**— Dr. Seuss**

**Life is about making an impact, not making an income.**

**— Kevin Kruse**

**The future belongs to those who believe in the beauty of their dreams.**

**— Eleanor Roosevelt**

**Do not go where the path may lead, go instead where there is no path and leave a trail.**

**— Ralph Waldo Emerson**

ISSN 2320-4842



# இந்திய இலக்கியங்களின் தகவல் தொடர்பு: தந்தி விடுதூது

**முனைவர் அ.கோமதி ஜெயம்**
விரிவுரையாளர், தமிழ்நாடு இசைக் கல்லூரி
மலுமிச்சம்பட்டி, கோயம்புத்தூர் 641 050

**ஆய்வுச் சுருக்கம்**

தகவல்-தொடர்பு என்பதில் தகவல் என்பது பிறர் அறிவதற்காக வெளிப்படுத்தப்படும் ஒரு செய்தியாகும். தொடர்பு என்பது இரு துருவங்களை இணைப்பதாகும். அதாவது ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளப் பயன்படுத்தப்படும் அமைப்பு ஆகும். இக்கட்டுரை, 'தூது' என்னும் இந்திய இலக்கியங்கள் பற்றிச் சுருக்கமாகவும் ஏகாட்டூர் சிவசண்முகம் பிள்ளை இயற்றிய தந்திவிடு தூது பற்றி விரிவாகவும் ஆராய்கிறது.

**முன்னுரை**

*விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பன் வடுமாற்றம்*
*வாய்சோர வன் கணவன்* ***(குறள், 689)*** என வள்ளுவர் பொருட்பாலில் தூது என்ற அதிகாரத்தில் அரசனுக்குரிய தன்மைகள் பற்றிப் பேசும்பொழுது தூது செல்பவனுக்குரிய தன்மை, தகுதி பற்றி விவரித்துள்ளார். இராமயணத்தில் அனுமன், அங்கதன் ஆகியோர் இராமன் விடுத்த செய்தியோடு இராவணனிடம் தூதாகச் சென்றனர். மகாபாரத்தில் சஞ்சயன் தூது, கிருஷ்ணன் தூது மிகவும் பிரபலமானவை. வீரபாகுத்தேவர் தூது கந்தபுராணத்தில் குறிப்பிடத்தக்கது. அதியமானுக்காகத் தொண்டைமானிடம் போரை நிறுத்துவதற்கு ஔவையார் தூது சென்றுள்ளார்.
தொல்காப்பியம் எனும் இலக்கண நூலில் உயர்திணைத் தூது பற்றிப் பின்வரும் பாடலில் விளக்கியுள்ளார்.

*தோழி தாயே பார்ப்பன் பாங்கள்*
*பாணன் பாடினி இளையர் விருந்தினர்*
*கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்*
*யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப* ***(தொல். பொருள். கற்பியல், 52)***

**ஆய்வின் நோக்கம்**

அஃறிணைப் பொருள்கள் சொல்லும் திறமற்றதாயினும் அதனை விளித்துத் தலைவன் தலைவி தன் மன மயக்கத்தால் தூது விடும் இலக்கிய மரபுப் பற்றி ஞாயிறு, திங்கள் அறிவே நாணே **(தொல் 201)** என்னும் தொல்காப்பியம் மூலம் அறிய முடிகிறது. நளவெண்பாவில் அன்னம், மயில், கிளி, மேகம், பூவை, பாங்கி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு ஆகியவை தூது விடுவதற்குரியவை என்று புகழேந்திப் புலவர் இலக்கணம் வகுத்துள்ளார்.

அஃறிணைப் பொருட்களால் உண்மையில் தூது போக முடியாது இவை கவிஞரின் கற்பனைத் திறனால் தலைவன்- தலைவி காதல் மயக்கத்தைக் கூறுவதாகும். ஆனால் தந்தி விடுதூது ஆசிரியர் உண்மையிலே தூதுக்கு பயன்படக்கூடிய மின்சாரத் தந்திக் கருவியைத் தூது விட்டிருப்பது பெரும் வியப்பாகும். இந்த மின்சாரத் தந்தி தற்போது மக்களிடையே பயன்பாட்டில் உள்ள தகவல் தொடர்புகளுக்கெல்லாம் முன்னோடியாக இருந்தது என்பதையும் கதையில் காணப்படும், நாட்டிய, நாடகம், இசை இவை பற்றி ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுப் பகுப்பு முறை**

இந்த ஆய்வில் நூல் ஆசிரியர் சிவ சண்முகம் பிள்ளையின் வரலாறு மற்றும் தந்திவிடு தூதின் கதையம்சம் பற்றியும் கதையில் உள்ள கருத்து மற்றும் அதில் உள்ள இசை, நாட்டியம், நாடகக் கலைஞர்களின் நிலை பற்றியும், தந்தி என்ற கருவியின் தோற்றம், பெருமை, தற்போது அதன் பயன்கள் பற்றியும், கடந்த கால, நிகழ்கால, எதிர்காலப் பயன்களை இக்கட்டுரை விளக்குகிறது.

**ஆய்வு நூல் பற்றிய குறிப்பு**

**நூலாசிரியர்**

தந்தி விடு தூது இயற்றியவர் ஏகாட்டூர் சிவ சண் முகம் பிள்ளை ஆவர். இவர் திருமூலராதீனம் ஈசானிய தேசிகர் மரபில் வந்த அருனானந்தர் என்ப வரின் மாணாக்கர் ஆவார். இந்நூலுக்கு அஷ்டவ தானம் பூவை கல்யாண சுந்தரனார் சாற்றுக் கவி இயற்றியுள்ளார். மயிலாப்பூர் இராமலிங்க முதலியா ரின் கீழ்கண்ட சிறப்புப் பாயிரம் வாயிலாகப் ***பல்நாடகம், தமிழில் கீர்த்தனை ஓரடிப் பதங்கள் சொற்றோன்*** என்று சிறப்பித்துள்ளார். இதன் மூலம் ஆசிரியர் வேறு பல நூல்கள் எழுதியுள்ளதும், இசை, நாடகம், நாட்டியம் ஆகியவற்றில் மிகுந்த பரிச்சயம் உடையவர் என்றும் தெரிகிறது. தந்திவிடு தூது 1870ஆம் ஆண்டிற்குப் பின்பு இயற்றப்பட்டதாக இருக்கலாம் என்று இதன் அச்சுப்பதிவு 1900ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது.

| வ. எண் | நூல்கள் | ஆசிரியர் & பதிப்பகம்ம் | காலம் |
|---|---|---|---|
| 1. | திருக்குறள் | நாமக்கல் கவிஞர் உரை<br>சாரதா பதிப்பகம் | 2002 |
| 2. | பலப்பட்டடை சொக்கநாத புலவர் இயற்றிய அழகர் கிள்ளைவிடு தூது | செ.இராதகிருட்டினர்<br>முல்லை பதிப்பகம் | 1999 |
| 3. | நள தமயந்தி கதை | ரிஷபானந்தர்<br>அனுராகம் பதிப்பகம் | 1991 |
| 4. | சமுதாய இலக்கியம் | ரகுநாதன்<br>தொ.மு.சி | 1964 |

**நூல் அமைப்பு**

1400 அடிகளால் கலிவெண்பாவினால் இயற்றப் பட்டுள்ளது. பாட்டுடைத் தலைவர்களாக நகரத்தார் என்னும் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் அமைகின் றனர்.

**கதையமைப்பு**

திருப்போரூரைச் சேர்ந்த கதாநாயகன் காங்கேயன் 16 செயல்களை ஒரே சமயத்தில் செய்யும் அவதானி யாகப் பெரும் புகழும், செல்வமும் பரிசில்களும் பெற்றுச் சிறந்த செல்வந்தராக விளங்குகிறார். மண மாகிச் சென்னையில் வாழ்ந்துவரும் அவர் ஒரு நாள் நாடக ஒத்திகை நடக்கும் சிந்தாரிப்பேட்டை யில் உள்ள வீட்டிற்குள் நுழைகிறார் நாடக ஒத்திகை முடிந்ததும் அந்த நாடகத்தின் கதை, நடிகர்கள் பற்றி மிகவும் சிறப்பாக விமர்சனம் செய்கிறார். காங்கேய னின் திறமையான விமர்சனத்தால் மகிழ்ந்த நாடகக் குழுவினர் இவரைத் தனது, நாடக ஆசிரியராக நிய மிக்கின்றனர். கதாநாயகன் காங்கேயன் பல புதிய நாடகங்களை எழுதி ஆண்கள், பெண்கள் வேட மிட்டு நடிக்க வேண்டாம் என்று கூறித் திருவாரூர் மோகன சிகாமணி என்ற அழகியைத் தேர்ந்தெடுத்து அவருக்குச் சங்கீத நாடக கலையில் தக்க பயிற்சி யளித்து நடிகையாக்குகிறார். நடிகைக்கும் நாடக ஆசிரி யருக்கும் பெரும் புகழ், பணம், செல்வாக்கு கிடைக் கிறது. எனினும் விதிவசத்தால் கதாநாயகன் நடிகை யின்மேல் மோகம் கொண்டு மனைவியைப் பிரிந்து நடிகையோடு குடும்பம் நடத்துகிறார். இவர்களின் நடவடிக்கைகளால், தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு நாடகக் கம்பெனியை மூடிக் கடனாளி ஆகிறார். நடிகை மோகனசிகாமணி இனிமேல் உங்கள் மனைவி யோடு வாழுங்கள் என்று ஆலோசனை சொல்லிப் பிரிந்துவிடுகிறார். சொத்துக்களை இழந்து ஏழையான அவர் மனைவியின் முகத்தில் விழிக்க கூசிப் பழனி முருகப்பெருமானிடம் தனது நிலையைக் கூறித் தனக் குதவுமாறு வேண்டுகிறார். முருகப்பெருமான் தன வணிகர்களான நகரத்தாரின் செல்வ வளத்தைக் கூறி அவர்களிடம் சென்று உதவி பெறுமாறு உபதேசிக் கிறார்.அதன்படி நகரத்தார்களை பாட்டுடைத் தலைவ னாக்கிப் புகழ்ந்து பாடி ஏராளமான பணம் பெற்று கடன் தொல்லைகளிலிருந்து விடுபட்டு மீண்டும் பணக் காரராகி விடுகிறார். காங்கேயன் தனது மனைவிக்கு தந்தியைத் தூதாக அனுப்புவதாக ஆசிரியர் சிவ சண் முகம் பிள்ளை பாடியிருக்கின்றார். தமிழ் இலக்கியங் கள் கூறும் பத்துத் தூதுப் பொருட்களையும் தகுந்த காரணங்கள் கூறி,

***அன்னத்தை ஏவினால் ஆங்கதுவும் மானதத்தை***
***உன்னி வின்னோடி ஒலிக்குமே***
***வண்ண மயில் தன்னை விடின் மேகம் தன்னைக் கண்டு***
***அகவுமே அன்றி மன்னிய வேல் காணின்***
***வசமாமே உன்னதமாம்***
***நல்ல பசுங்கிளியை நாடாவிடில் சொன்னதையே***
***சொல்லும் அல்லாமல் மற்றொன்றும் சொல்லாதே***

என்ற பாடல் மூலம் நிராகரித்து இலக்கண வரம்பை மீறி மரபு வழுவிய முறையில் புதிய பொருளை கவிப் பொருளாக்கி மரபு தழுவிய முறையில் மின் சாரத் தந்தியை தூது விடுகிறார். நம் கண்ணுக்குத் தெரியாத ஓர் அபூர்வ சக்தியின் மூலம் இயங்கக் கூடிய விஞ்ஞான சாதனமான மின்சாரத் தந்தியின் சிறப்புப் பற்றி வாயார மனமாரப் புகழ்ந்து பழைய தமிழ் மரபுவழி நின்றே கீழ்க்கண்ட பாடலின் மூலம்

***விந்தையெல்லாம் பெற்ற அமெரிக்காவில்***
***பென்லேப்ரீஸ் மோர்ஸ் எனும் பேர்***
***உற்ற கலா நிழலினை உத்தியால் நற்றவத்தால்***
***ஆயிரத்து எண்ணுற்று முப்பத்தைந்தாம் ஆங்கில ஆண்டில்***
***சேய் என வந்து உற்பவித்தே செல்வனே***

என 100 அடிகளில் தந்தியின் பெருமையை வாழ்த் திப் பாராட்டுகின்றனர். மேலும்,

*தொடர்ச்சி: பக். 47*

ISSN 2320-4842



# OPINION OF STUDENT-TEACHERS TOWARDS VALUE EDUCATION IN COLLEGES OF EDUCATION

**Dr. R. Selvendiran**
Assistant Professor, Seventh Day Adventist Reform Movement (SRM)
College of Education (B.Ed & M.Ed), Chinnakallupalli, Vaniyambadi 635 751.

**ABSTRACT**

**The present study intended to find out the level of Opinion of Student-Teachers towards Value Education in Colleges of Education. This study belongs to Normative Survey Method. The size of the sample in the study was 200 student-Teachers who were selected through Random Sampling Technique. The investigator himself developed the tool, 'Opinion of Student-Teachers towards Value Education'. The Statistical techniques used in this study were Mean, Standard deviation and 't' test to analyse the data. The major findings of the study were i) The level of Opinion towards Value Education among the Student-Teachers is above average. ii) Male and Female Student-Teachers are having similar level of Opinion towards Value Education. iii) Rural and Urban Student-Teachers are having similar level of Opinion towards Value Education. iv) Government Student-Teachers are having significantly higher level of Opinion towards Value Education than the Private Student-Teachers.**

## INTRODUCTION

'Value' comes from the Latin word 'valere', which means to be of worth, to be strong. Values are those standards or codes of conduct, which are conditioned by one's cultural tenants, guided by conscience, according to which one is supposed to conduct himself and shape his life pattern by integrating his beliefs, ideas and attitudes with a view to realize the cherished ideals and aims or life. Values are standards, rules, criteria, attitudes, guidelines, desirable ideas/beliefs and important things, which play a crucial role in shaping the life of individuals. Values give direction and firmness to life. They identify a person, giving him a name, a face and a character. Hence they bring joy, satisfaction and peace to life.

Values are essential for the whole persons, recognizing that the individual is comprised of physical, intellectual, emotional and spiritual dimensions. Value is the relation between a person and an environmental situation, which evoke an appreciative response in their individual. The other complimentary function of value is, it should also contribute to the welfare of the larger social unit such as family, the community and the nation of which the individual is member. Value system contains a). A set of beliefs about nature of man b). Rules laying down what ought and what ought not to be done and c). Motives that incline us to choose the right and wrong course.

According to **Milton Rockeach**, "a value is an enduring belief – a specific mode of conduct or end state of existence that is personally or socially preferable". I conceive that the great part of the miseries of mankind is brought upon them by false estimates they have made of the value of things. ---**Benjamin Franklin**

## RESEARCH STUDIES

The investigator has reviewed few studies related to the topic under investigation.

**Arun Maity (2020)** found out the information about how teachers can inculcate these values in children and contribute in nation building. Finally, it emphasizes on teachers role in all spheres of society. Values are essential for a sound character and personality. The teacher plays a very important role in the society and they are considered as nation builders, personality developers, guides, etc. But in the modern era, there are number of factors which are responsible for degradation of the status of teachers, for their poor performance and for the decline in the teaching values.

**Dr. Showkeen Bilal Ahmed Gul (2017)** reported that the sustainable human development as well as for the social growth, there is a need of value based education, spiritual education, ethical education, as well as need based education.

**Handan DEVECI (2015)** concluded that offering value education to students through distance learning system may significantly contribute to social life as it facilitates social order and raising effective citizens.

## NEED FOR THE STUDY

A number of people do not share deep concern over the so-called deterioration of values. In the past, people were

living in a protected and self-contained society. The fall in values in modern times is attributable to overemphasis on wealth, power and consumerism. The older generations have lost their sense of morality. Therefore the younger generation completely ignores the traditional values or even any ideal value system. The application of scientific and technological knowledge to the comforts of man has reduced him to a mechanical being, resulting in degeneration of the value system. Today, young people need help and guidance in the development of their values and value system more than ever before. The soul has not been given half of the care as much as is needed for its vital development. The development of the mind alone, without or with very little Moral and Spiritual development, has worked against human progress towards Love, Sympathy and Brotherhood. Where man's emotions and impulses are not refined, love and sympathy are not awakened. When fear of God has no place in man's heart, his knowledge and especially the knowledge of science becomes dangerous for the safety of humanity.

The child is essentially a behaving organism and that the teacher's ultimate concern is to cultivate not wealth of muscles; nor fullness of knowledge; nor refinement of feeling but strength and purity of character. It is necessary requirement for the Teachers to know and adopt moral values and also to inculcate the values among the children to develop healthy and good characteristics. They should develop the ability to think logically, to plan wisely, to distinguish right from wrong, good from evil, beauty from ugliness, truth from falsehood and godliness from ungodliness. Therefore the Investigator intended to the carry out research entitled "**Opinion of Student-Teachers towards Value Education in Colleges of Education**"

## OBJECTIVES OF THE STUDY

The objectives of the study are

i) To find out the level of Opinion of Student – Teachers towards Value Education in Colleges of Education.

ii) To find out the Mean score on Opinion of Student-Teachers towards Value Education with respect to the demographic variables such as Gender, Locality and Type of Management.

## HYPOTHESES OF THE STUDY

The hypotheses of the study are

i) The level of Opinion of Student – Teachers towards Value Education in Colleges of Education is high.

ii) There is no significant difference on the Mean scores on the level of Opinion of Student-Teachers towards Value Education with respect to the demographic variables such as Gender, Locality and Type of Management.

## METHODOLOGY OF THE STUDY

The present research study belongs to the Normative Survey method.

### i) Selection and Size of the Sample

The investigator had selected 200 Student-Teachers as sample by Random Sampling Technique from Vellore District.

### ii) Tool Development

The investigator developed the tool for collecting data on the level of Opinion of Student – Teachers towards Value Education. The preliminary draft consist of 48 items were given to the Student-Teachers to review them on the suitability of the related content. Then the draft consists of 40 items with 4 point rating scale were confirmed to the final draft of the study. They are Strongly Agree, Agree, Disagree and Strongly Disagree which were scored as 4, 3, 2, 1 for positive questions and 1, 2, 3, 4 for negative questions. The value of correlation co-efficient was 0.84 found through test and re – test method was found to be highly reliable.

### iii) Data Analysis

The investigator followed Mean, Standard deviation and 't' test for the analysis of the data. The results were presented in the following tables.

### Hypothesis – 1

The level of Opinion of Student – Teachers towards Value Education in Colleges of Education is high.

**TABLE – 1**

**MEAN AND THE STANDARD DEVIATION SCORES ON THE LEVEL OF OPINION OF STUDENT–TEACHERS TOWARDS VALUE EDUCATION IN COLLEGES OF EDUCATION IN TOTAL**

| S. No. | Variables | | N | Mean | SD |
|---|---|---|---|---|---|
| 01. | Total | | 200 | 64.53 | 8.02 |
| 02. | Gender | Male | 62 | 65.41 | 7.55 |
| | | Female | 138 | 64.13 | 8.24 |
| 03. | Locality | Rural | 130 | 66.87 | 7.16 |
| | | Urban | 70 | 60.17 | 7.78 |
| 04. | Type of Management | Govt. | 124 | 68.24 | 5.78 |
| | | Private | 76 | 58.47 | 7.50 |

From the Table 1 the obtained Maximum and Minimum Mean and SD values of the Opinion towards Value Education Scores are 68.24 and 58.47 and 8.24 and 5.78. It also reveals that Mean and SD of the Opinion towards Value Education Score of the total sample were 64.53 and 8.02. It shows that the level of Opinion towards Value Education among the Student-Teachers is above average. So the framed hypothesis is found to be rejected.

**Hypothesis – 2**

There is no significant difference on the Mean scores on the level of Opinion of Student – Teachers towards Value Education with respect to their Gender.

**TABLE – 2**

**'t' VALUES IN THE MEAN SCORES ON THE LEVEL OF OPINION OF STUDENT–TEACHERS TOWARDS VALUE EDUCATION WITH RESPECT TO THEIR GENDER**

| S. No | Gender | N | Mean | Std. Deviation | 't' value |
|---|---|---|---|---|---|
| 1 | Male | 62 | 65.41 | 7.55 | 0.76** |
| 2 | Female | 138 | 64.13 | 8.24 | |

** Not Significant at 0.05 level

It is seen from the above Table 2 that the 't' value, 0.76 is not significant at 0.05 level. It is understood from the result that there is no significant difference in the level of Opinion towards Value Education among the Male and Female Student-Teachers with respect to their Gender. Male and Female Student-Teachers are having similar level of Opinion towards Value Education. Hence the framed null hypothesis is found to be accepted.

**Hypothesis – 3**

There is no significant difference on the Mean scores on the level of Opinion of Student – Teachers towards Value Education with respect to their Locality

**TABLE – 3**

**'t' VALUES IN THE MEAN SCORES ON THE LEVEL OF OPINION OF STUDENT–TEACHERS TOWARDS VALUE EDUCATION WITH RESPECT TO THEIR LOCALITY**

| S. No | Locality | N | Mean | Std. Deviation | 't' value |
|---|---|---|---|---|---|
| 1 | Rural | 130 | 64.83 | 7.69 | 0.55** |
| 2 | Urban | 70 | 63.79 | 8.87 | |

** Not Significant at 0.05 level

It is seen from the above Table 3 that the 't' value, 0.55 is not significant at 0.05 level. It is understood from the result that there is no significant difference in the level of Opinion towards Value Education among the Rural and Urban Student-Teachers with respect to their Locality. Rural and Urban Student-Teachers are having similar level of Opinion towards Value Education. Hence the framed null hypothesis is found to be accepted.

**Hypothesis – 4**

There is no significant difference on the Mean scores on the level of Opinion of Student–Teachers towards Value Education with respect to their Type of Management.

**TABLE – 4**

**'t' VALUES IN THE MEAN SCORES ON THE LEVEL OF OPINION OF STUDENT–TEACHERS TOWARDS VALUE EDUCATION WITH RESPECT TO THEIR TYPE OF MANAGEMENT**

| S. No | Type of Management | N | Mean | Std. Deviation | 't' value |
|---|---|---|---|---|---|
| 1 | Government | 124 | 68.24 | 5.78 | 6.86* |
| 2 | Private | 76 | 58.47 | 7.51 | |

** Not Significant at 0.05 level

Table 4 reveals that the 't' value, 6.86 is significant at 0.05 level. It is understood from the result that there is a significant difference in the level of Opinion towards Value Education among the Student-Teachers with respect to their Type of Management. Government Student-Teachers are having significantly higher level of Opinion towards Value Education than the Private Student-Teachers. Hence the framed null hypothesis is found to be rejected.

## FINDINGS OF THE STUDY

The findings of the present study are presented below,

i. The level of Opinion towards Value Education among the Student-Teachers is above average.

ii. Both Male and Female Student-Teachers are having similar level of Opinion towards Value Education.

iii. Both Rural and Urban Student-Teachers are having similar level of Opinion towards Value Education.

iv. Government Student-Teachers are having significantly higher level of Opinion towards Value Education than the Private Student-Teachers.

## DISCUSSION AND CONCLUSION

பல்லவர்கள் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய பக்தி இலக்கியங்கள், தமிழின் பெருமையினைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளன. முதல் ஏழு திருமுறைகளைப் பாடிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் இறையருளைப் பெற்று, இறையோடு கலந்தவர்கள் ஆவர். இம்மூவரும் இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும் பாவித்துப் பாடிய பாடல்கள் சங்க அகத்திணை மரபையொட்டிப் பாடப்பெற்றவையாகும். இவ்வாறு பக்திச் சுவையோடு, காதல் சுவை யையும் இணைத்துப் பாடிய பாடல்கள், மூவர் முதலிகள் இறைமீது கொண்ட அதீத அன்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. இது குறித்த செய்திகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**கருவிச்சொற்கள் (Keywords):** அகப்பொருள் மரபு, அறத்தொடு நிற்றல், உறுபெயர் கேட்டல், காமத்து மிகுதிறம், கனவொடு மயங்கல், தூது விடுத்தல், மூவர் முதலிகள்.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

**முன்னுரை**

பக்தி இலக்கியம் பெருமளவில் தோன்றியது பல்லவர் காலத்தில் ஆகும். உலகில் வேறு எம்மொழியிலும் இல்லாத அளவிற்குத் தமிழில் பக்தி இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இக்காலத்தில் எழுந்த பக்தி இலக்கி யங்களை இரு வகைகளாகப் பாகுபடுத்தலாம். ஒன்று தனித்தனிப் பதிகங்களால் பக்தி அனுபவங்களை வெளிப்படுத்துதல், மற்றொன்று பிரபந்தங்களாக வெளிப்படுத்துதல் ஆகும். தனித்தனிப் பதிகங்களுள் சில அகத்துறைகள் தழுவி அமைந்துள்ளன. பெரும்பாலானவை முன்னிலைப் பரவலாகக் கடவுள் வாழ்த்தாக உள்ளன. பிரபந்தங்களுள் பெரும்பாலானவை அகத்திணை இலக்கணங்களுக்கு ஏற்ப அமைந்துள்ளன. பதிகங்களிலும், பிரபந்தங்களிலும் *அன்பின் ஐந்திணை* தழுவி வந்தவை சிலவாகும். பல பாடல்கள் கைக் கிளை, பெருந்திணை சார்ந்து பக்திப் பேரன்பை உணர்த்துகின்றன. மூவர் முதலிகளின் தேவாரப் பாடல் களில் இடம்பெற்றுள்ள அகத்திணைக் கூறுகள் பற்றிய செய்திகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

**அகப்பொருள் மரபு**

சங்கப் பாடல்களில் முதன்மை பெற்ற அகப்பொருட்கூறுகள் பக்தி இலக்கியங்களிலும் எடுத்தாளப்பட்டுள் ளன என்பதை நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடல்கள்வழி அறியமுடிகின்றது. இறைவனோடு ஒன்றிணைந் துபோன அடியார்கள், அவனை அடையத் தம்மை தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் கருதி, அகப்பொருள் மரபிற்கேற்பப் பாடல்கள் பாடினர். இவ்வாறு கடவுள்மீது மானிடர் காதல் கொள்வதற்கும் தொல்காப்பியர் களவியலில் (நூ.28 இளம்.),

***காமப்பகுதி கடவுளும் வரையார்***
***ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்*** என்று இலக்கணம் வகுத்துக் காட்டியுள்ளார்.

இறைவனை நாயகன், நாயகியாகப் பாவித்துக் காணும் முறை இறைவழிபாட்டின் மரபாகவும், சிறப்பாகவும் கருதப்படுகிறது. சமயக் குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகி யோர் இறைவனைத் தங்கள் நாயகனாகக் கருதி வழிபட்டதைத் திருமுறைகளில் காணமுடிகின்றன.

**திருஞானசம்பந்தர் பாடல்களில் அகப்பொருள் மரபு**

திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பதிகங்களில் அகப்பொருள் மரபைக் கூறும் பதிகங்களாகப் பதினைந்

தும், ஒரு தனிப்பாடலும் உள்ளன. முதல் திருப் பதிகத்திலேயே திருஞானசம்பந்தர் தம்மைத் தலைவி யாகவும், இறைவனைத் தலைவனாகவும் எண்ணிப் பாடுகிறார்.

தலைவனும், தலைவியும் முதன்முதலாகச் சந்திக்கும் கூட்டத்தை *இயற்கைப் புணர்ச்சி* என்பர் தொல்காப் பியர். இப்புணர்ச்சி தெய்வத்தால் நடைபெறும் என்று அகநூல்கள் குறிப்பிடுகின்றன.

***தெய்வந் தன்னின் எய்தவும் கிழத்தியின்***
***எய்தவும் படூஉம் இயற்கைப் புணர்ச்சி*** என நாற்கவி ராச நம்பியின் அகப்பொருள் நூற்பா (32) எடுத் துரைக்கிறது.

தன் காதலை அறிந்துகொண்டு வினவிய தோழி யிடம் சொல்வதாக ஞானசம்பந்தரின் *தோடுடைய செவியன்* என்னும் முதல் பதிகம் திருப்பிரமபுரத்தில் அமைந்துள்ளது.

***நீர்பரந்த நிமிர்புன்சடை மேலோர்நிலா வெண்மதி சூடி***
***ஏர்பரந்த இனவெள்வளை சோரஎன் உள்ளங்கவர் கள்வன்***
***(I:1:3:1-2)*** என்றும்,
***இறைகலந்த இனவெள்வளைச் சோரஎன் உள்ளங்கவர்***
***கள்வன் (I:1:6:2)*** என்றும் கூறுகின்றார் ஞானசம்பந்தர்.

தலைவியின் கைகளில் அணிந்துள்ள வளையல்கள் வெண்சங்கு வளையல்கள், இறைவனின் தலையில் உள்ள இளம்பிறை வெண்மைத் தன்மையுடையது. ஆனால் ஒளிநிறைந்த வெண்ணிலா அவனிடம் இருக் கும்போது, என் சங்குவளையல்களைக் கொள்ளுதல் வினோதமாகும் என்று தலைவி கூறுகிறாள். இது தலைவியின் பொருள் தன்னிடமுள்ள பொருளைவிடத் தரத்தில் குறைந்ததாக இருப்பினும், அவளது பொரு ளையே அழகானது என்று எண்ணும் தலைவனின் அன்பை வெளிப்படுத்துகின்றது.

தலைவன் எப்படிப்பட்டவன் என்று தோழி வினவ, அதற்குத் தலைவி, தனது நலத்தினைக் கவர்ந்தவ னைப் பற்றிப் பின்வருமாறு பதிலுரைக்கிறாள்.

*தோடுடைய செவியன்விடை*
*யேறியோர் தூவெண் மதிசூடிக்*
*காடுடைய சுடலைப்பொடிபூசி என்*
***உள்ளங்கவர் கள்வன் (I:1:1:1-2)*** என்றும்,

***விண்ணார் திங்கள் விளங்கு நுதலினார்***
***எண்ணார் வந்தென் எழில்கொண்டார் (I:56:3:1-2)***
என்றும் கூறுகிறாள். இறைவனாகிய தலைவன், என் அழகையும், பெண்மையையும், நலத்தையும் கவர்ந்து கொண்டான் என்று விவரிக்கிறாள் தலைவி.

## தூது விடுத்தல்

தூது விடுத்தல் சங்க இலக்கிய மரபாகும். தூது இரு வகைப்படும். ஒன்று அகத்தூது, மற்றொன்று புறத் தூது. அகத்தூது காதல் கொண்ட தலைவனும் தலைவி யும் உயர்திணை, அஃறிணைப் பொருட்களைத் தலைவி யின் காதல் உணர்வைச் சொல்லி தூது விடுத்தல் ஆகும். இம்மரபு மூவர் தேவாரங்களிலும் காணப் படுகின்றது. இதனைத் தொல்காப்பியர்,

***நோயும் இன்பமும் இருவகை நிலையிற்***
***காமங் கண்ணிய மரபிடை தெரிய*** என்றும்,
***உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்***
***மறுத்துரைப் பதுபோல் நெஞ்சோடு புணர்த்தும்***
***சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்*** என்றும்
(பொருளியல், நூ.2:4-6) விரித்துரைக்கிறார்.

சம்பந்தர் *வண்டரங்கப் புனற் கமலம்* எனத் தொடங் கும் திருத்தோணிபுரம் பதிகம் (60), *பைங்கோட்டு மலர்ப்புன்னை* என்று தொடங்கும் திருச்செங்காட் டங்குடி பதிகம் (321) ஆகிய இரண்டையும் அகப் பொருள் பதிகங்களாகப் பாடியுள்ளார். அவர் வண்டு, குருகு, கோழி, நாரை, புறா, அன்னம், அன்றில், குயில், பூவை, கிளி போன்றவைகளைத் தோணி புரத்து இறைவனிடம் தூது விடுத்துள்ளார். சங்க நூல் களும் தூதுக்குரிய பொருட்களாக எகினம், மயில், கிள்ளை, மேகம், பூவை, குயில், தென்றல், நெஞ்சம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றன.

## வண்டைத் தூது விடுத்தல்

பிரிவுத் துன்பத்தால் ஆற்றாமை கொண்டு வருந்தும் தலைவி, தன் நிலையைத் தலைவனுக்கு உணர்த்த எண்ணுகிறாள். அதனால் வண்டைத் தூதாக அனுப் பக் கருதி, அதனை வேண்டுகிறாள்.

***வண்டரங்கப் புனற்கமல மதுமாந்தி பெடையினோடும்***
***ஒண்டரங்க விசைபாடு மளியரசே யொளிமதியத்***
***துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்***
***பண்டரங்கர்க் கென்னிலைமை பரிந்தொருகாற் பகராயே.***
***(I:1:60:3-4)***
வளமான பொய்கையில் செந்தேன் நிறைந்த செந்தா மரை மலர்கள் மலர்ந்துள்ளன. அம்மலர்களிலுள்ள மதுவை உண்டு மகிழ்ச்சியுடன் அரச வண்டு, பெண் வண்டுடன் கூடிக் குலவுகின்றது. அந்த அரச வண்டை நோக்கி, தான் ஏவும் தொழிலுக்கு உடந்தையாக இருக்க *அளி அரசே* என அழைக்கின்றாள் தலைவி. அளி வண்டு, அன்பு, அருள், இரக்கம், தலையளி எனப் பொருள் கொள்ளப்படும்.

## நாரையைத் தூது விடுத்தல்

சிவந்த கால்களையுடைய நாரையே தலைவி தோள் மெலிந்து, பசலை என்னும் குழவியைப் பெற்றெடுத் தாள் என்று தலைவனிடம் சென்று கூறுவாயாக என்று கூறுகிறாள் தலைவி. அவ்வாறு சென்று நீ கூறினால், உடனே வந்து தலையணி செய்வார் என்று உடனே தூது செல்ல வேண்டிய நிலையை யும் விளக்குகிறாள்.

***காண்டகைய செங்காலொண் கழிநாராய் காரிலாள்***
***பூண்டகைய முலைமெழிந்து பொன் பயந்தா ளென்று***
***சேண்டகைய மணிமாடத் திருத்தேணி புரத்துறையம் வளர்***

***ஆண்டகையாற் கின்றேசென் றடியறிய வுணர்த்தாயே (I:60:4)*** என்று இப்பாடலில் நாரையைத் தூது விடுக்கும் தலைவி, நாரையைப் பார்த்து, நீ சென்றால் பிறர் கண்ணில் படாமல் மணிமாடங்களில் தங்கி, என் நிலையை இரகசியமாகக் கூறலாம் என்றும் மற்றொரு பாடலில் குறிப்பிடுகிறாள். இவ்வாறே, குருகு, அன்றில், அன்னம், குயில், பூவை, வாரணம், கிளி ஆகியவற்றையும் தூது அனுப்பும் திருஞானசம்பந்தரின் பாடல்கள் இனிமையுடையதாக அகப்பொருள் மரபிற்கேற்ப அமைந்துள்ளன.

**அறத்தொடு நிற்றல்**

அறத்தொடு நிற்றல் என்பது தலைவன் தலைவி இருவருக்கும் இடையே உள்ள களவு ஒழுக்கத்தைத் தலைவி தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தைக்கும், தமையனுக்கும் அறிவிப்பதாகும்.

சோழநாட்டு காவிரி வடகரைத்தலம், திருக்கானூர் திருப்பதிகம், *வானார் சோதி* என்று தொடங்கும் பதிகம், தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றலை உணர்த்தும் வகையில் பாடப்பெற்றுள்ளது. தாருகா வனத்தில் அழகரிடத்தில் மனத்தைப் பறிகொடுத்தப் பெண் தோழிகளிடம் கூறுகின்றாள்.

***இறைவனார் வந்தெனில் புகுந்தென் எழில்நலமும் கொண்டார் (I:73:3:3)*** எனவும்,
***எளிவந்தார்போல் ஐயமென்றென் இல்லே புகுந்துள்ளத் தெளிவும் நாணுங் கொண்ட கள்வர் (I:73:6:2-3)*** எனவும்,
***ஆ மோர்கள்வர் வெள்ளர்போல் உள்வெந்நோய் செய்தார் (I:73:9:2)*** எனவும் இவ்வாறு தலைவன் தம் நலத்தைக் கொண்டு, நோய் கொடுத்ததைத் தாருகா வனத்துப் பெண் தோழிகளிடம் கூறி அறத்தொடு நிற்கின்றாள்.

இவ்வாறு திருஞானசம்பந்தர் பாடல்களில் அகத்திணை மரபினை ஒட்டாப் பாடல்களை அறியலாம். திருஞானசம்பந்தரின் இறை ஒன்றிய உணர்வைஇவை வெளிப்படுத்துவதையும் உணரமுடிகிறது.

**திருநாவுக்கரசரின் பாடல்களில் அகப்பொருள் மரபு**

திருநாவுக்கரசரின் பதிகங்களில் ஒன்பது பதிகங்கள் முழுமையாக அகப்பொருள் பதிகங்களாக உள்ளன. ஏனைய பாடற்பகுதிகளாக ஒன்பது பதிகங்கள் உள.

தலைவியின் காதல் நிலை கண்டு இரங்கிக் கூறும் தாய் அல்லது தோழியின் கூற்று, தலைவியின் கூற்று ஆகிய இரு துறைகளில் திருநாவுக்கரசரின் அகப் பொருள் பாடல்கள் அமைந்துள்ளன. இப்பாடல்கள் எல்லாம் காதல் உணர்வை, கடவுள் உணர்வாக மாற்றுகின்ற தன்மையுடன் அமைந்துள்ளன.

**தூது விடுத்தல்**

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரைப் போலவே 4ஆம் திருமுறையில் அஃறிணைப் பொருள்களைத் தூதாக விடுக்கிறார். தலைவி கூற்றாக வரும் *திருப்பழனம்* பதிகத்தில் இறைவனிடம் தம் உணர்வுகளைக் கூறும்படி ஒரு தலைவி குயில்கள், கண்டகங்கள்(நீர் முள்ளி), முண்டகங்கள் (கடல் முள்ளி), குருகு, தென்றல், நாரை, பூவை, புள்ளிமான், அன்னம் போன்றவற்றை நோக்கித் தூது விடுத் தலைப் பின்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

***சொல்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே***
***..........................................................***
***பொன்மாலை மார்பன் என்புதுநலம் உண்டிகழ் வானோ (IV:12:1-4)*** என்ற அடிகளிலும்,
***இணையார மார்பனென் னெழினலமுண் டிகழ்வானோ (IV:12:7:4)*** என்ற அடியிலும், தலைவி தன் எழில் உள்ளம் பற்றித் தூது விடுவதாகச் சிவபெருமானிடம் நாவுக்கரசர் பேசுகிறார். இவற்றிற்குப் பொருத்தமாக,
***உண்டற் குரிய வல்லாப் பொருளை***
***உண்டன போலக் கூறலும் மரபே*** என்னும் தொல்காப்பியப் பொருளியல் நூற்பா (18) எடுத்துரைக்கிறது.
***பூவைகா மழலைகாள் போகாத பொழுதுளதே (IV: 12:8:4)***
***மனைக்காஞ்சி இளங்குருகே மறந்தாயோ... (IV:12:3:1)***
***நினைக்கின்ற நினைப்பெல்லாம் உரையாயோ நிகழ்வண்டே (IV:12:3:3)***
என்று பூவை, குருகு, வண்டு முதலியவற்றைத் தலைவி விளித்துத் தூது விடுக்கின்றாள். பூவை என்பதற்குப் பெண், கிளி, குயில், பூவைப்பறவை என்பன பொருந்தும்.

**உறுபெயர் கேட்டல்**

தலைவனுடைய பெரும்புகழ் கேட்டுத் தலைவி மகிழும் நிலையில் நிகழ்கின்ற மெய்ப்பாட்டை,

***... ... உறுபெயர் கேட்டல் (நூ.22:10 இளம்.)*** என்று தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் குறிப்பிடுவர். இம்மெய்ப்பாட்டைத் திருநாவுக்கரசர் தம் திருவாரூர் திருப்பதிகத்தில் பாடியுள்ளார். தலைவனின் அழகில் மயங்கிய தலைவி, அவனுடைய ஊர், பெயர் கேட்டுத் தன்னையே ஒப்படைத்ததாக,

***அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்***
***அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை***
***தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்***
***தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே (VI:25:7:3-4)*** என்ற பாடல் குறிப்பிடுகிறது. உயிர் ஆனது ஈசன்பால் கலந்து மேவி நிற்கும் தனது அன்பினை, அகத்துறையின் வாயிலாக ஓதுவதாகும்.

**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**

கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயத்தல் பெருந்திணைப் பாற்படும். இதற்கு இலக்கணம் கூறும் தொல்காப்பியர் (அகத். நூ.54:2 இளம்.),

***தேறுதலொ ழிந்த காமத்து மிகுதிறம்***

என்பர். இத்துறையைத் திருநாவுக்கரசர் தம் 9 ஆம் பதிகமான *திருஆமாத்தூர்* பதிகத்தில் பயன்படுத்தி யுள்ளார்.

ஆமாத்தூர் இறைவன் பிச்சைக்கு வர, பிச்சையிடச் சென்ற பெண், அவரை எதிர்ப்பட்டு வேட்கை கொள் கிறாள். அவன் தன்னை வரையாது நீங்குதல் கண்டு, கவலையுற்ற நிலையில் பலரோடும் முறையிட்டு, அவனைக் கூட்டுவிக்குமாறு வேண்டுகிறாள். இதனை,

***அண்ணலார் போகின்றார் வந்து காணீர்***
***அழகியரே ஆமாத்தூர்ஐய னாரே (VI:9:1:4)*** என்ற பாடல்வழி நாவுக்கரசர் வெளிப்படுத்துகிறார்.

### கனவொடு மயங்கல்

திருவொற்றியூர் பெருமான் மேல் காதல் கொண்ட தலைவி கூற்றாக இப்பதிகம் உள்ளது. இப்பதிகம் தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாட்டியலில் உள்ள, *கனவொடு மயங்கல்* (நூ.22:6) என்ற துறையைச் சார்ந்து அமைந்துள்ளது.

***கண்டேன்நான் கனவகத்திற் கண்டேன் என்தன்***
***கடும்பிணியுஞ் சுடுத்தொழிலுங் கைவிட்டவே (VI:45: 1:4)***

ஒற்றியூர் இறைவனைக் கனவில் கண்டதால் என் காதல் நோய் என்னை விட்டு நீங்கியது என்கிறார் சுந்தரர். திருவள்ளுவரும் (1217),

***நனவினால் நல்காக் கொடியார் கனவினால்***
***என்னெம்மைப் பீழிப் பது***
என்பது கனவு நனவு மயங்குதல் என்கிறார்.

### துன்பத்தில் புலம்பல்

காவிரித் தென்கரைத் தலங்களில் 44ஆவது திருத் தலம் ஆகும். இத்தலத்தின் வலம்புரநாதப் பெருமான் திருவீதியில் வந்தபோது அவரைக் கண்டு, காதல் கொண்டு, அவரைப் பின்தொடர்ந்து சென்றும், அவரை அணுக இயலாது வருந்தும் பெண் ஒருத்தியின் கூற் றாக இப்பதிகம் அமைந்துள்ளது. இதனைத் தொல் காப்பியம் மெய்ப்பாட்டியல் (நூ.22:1),

***துன்பத்தில் புலம்பல்*** என்று கூறுகிறது.

***மலைமகளுங் கங்கையுந் தாமு மெல்லாம்***
***வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே (VI:58:2:4)*** எனச் சுந்தரர் பாடுகிறார். அஃதாவது, பல கலைகளைப் பயின்ற மறையவர் எல்லோரும் காணுமாறு, பூத கனங்கள் புடைசூழ மலைமகளையும், கங்கையையும் தம்மோடு அழைத்துச் சென்றவர் எம்மை நோக்கா மலே போய்விட்டார் என்று மிகுந்தத் துன்பத்துடன் தலைவி புலம்புகிறாள். மேலும், கழிப்பாலைப் பெரு மான்மேல் காதல் கொண்டு பிதற்றும் பெண் ஒருத் தியை ஆற்றுவிக்கக் கருதும் செவிலியின் கூற்றாகப் பாடும் பதிகம் *காதல் கைம்மிகல்* என்னும் மெய்ப் பாட்டு (நூ.23:4) இலக்கண மரபோடும், திருவதிகை வீரட்டத்து இறைவனைக் காணாமல் என் கண்துயில் கொள்ளுமோ என்னும் பாடல் *கண்துயில் மறுத்தல்* எனும் மெய்ப்பாட்டு (நூ.22:5) இலக்கண மரபோ டும், திருப்புகலூர் பதிகத்தில் செவிலி கூற்றாக அமைந்துள்ள பாடல் *அலர் நாணல்* என்னும் (மெய்ப்.நூ.16:2) மரபோடும் பாடியுள்ளார் திருநாவுக் கரசர். தன்னைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் நினைத்துப் பாடும் பாடல்கள், பக்தி யின் மிகு உணர்வை வெளிப்படுத்துவதாக அமைந் துள்ளன.

### சுந்தரர் பாடல்களில் அகப்பொருள் மரபு

சுந்தரர் பதிகங்களில் அகப்பொருளை விளக்கும் பதி கங்களாக மூன்று உள்ளன. இறைவனாகிய தலை வனே என் உள்ளம் கவர்ந்த கள்வன் என்று,

***என்ன தெழிலும் நிறையும் கவர்வான்***
***புன்னை மலரும் புறவில் திகழும்***
***தன்னை முன்னம் நினைக்கத் தருவான்***
***உன்னப் பாடுவான் ஒற்றி யூரே (VII:91:4)***

இப்பாடலில் கூறுகின்றார். அவன் என் அழகையும், நிறையையும் கவர்ந்தவன். அவன் இருக்குமிடம் பூவுலகச் சிவலோகம் என விளங்கும் ஒற்றியூரென்று உரைக்கின்றான். மேலும், ***பந்தும் கிளியும் பயிலும் பாவை சிந்தை கவர்வார் ... ... (VII:9:2:1-2)*** என்றும் அகப்பொருள் மரபில் பாடுகிறார் சுந்தரர்.

### தூது விடுத்தல்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போலவே சுந்தர ரும் அஃறிணைப் பொருட்களான அன்னம், கிளி, குயில், குருகு, கொண்டல், சக்கரவாகப் பறவை, சேவல், பூவை, வண்டு ஆகியவற்றைத் தூது விடுக் கும் பாடல்களைத் திருவாரூர் பதிகத்தில் பாடியுள் ளார்.

திருவாரூரில் குடிகொண்ட வன்மீகநாதர் இறைவ னிடத்தில் காதல் கொண்ட பெண்ணொருத்தி, அக் காதல் மிகுதியால் பறவைகளையும், வண்டுகளையும் நோக்கிப் பாடுவதாகச் சுந்தரர் பாடுகிறார்.

***பறக்குமெங் கிள்ளைகாள் பாடும்எம் பூவைகாள்***
***அறக்கணென் னத்தகும் அடிகள் ஆரூரரை***
***மறக்ககில் லாமையும் வளைகள் நில்லாமையும்***
***உறக்கமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே (VII:37:2)***
என்று தன் எதிரில் பறக்கும் கிளிகளிடம் தூது சொல் லிப் பாடுகிறாள். ஆரூரரை மறக்க இயலாததையும், கைவளையல்கள் நில்லாமல் கழன்று விழுவதையும் கண்களிரண்டும் உறங்காததையும் என் பொருட்டு இறைவர்க்கு உரைக்குமாறு வேண்டுகிறாள் தலைவி. அவை ஏதும் சொல்லாமல் போகின்றன. இதனால் வெறுத்துப்போன தலைவி, அடுத்து வெண்ணாரை களை அழைத்து,

***கூடும்அன் னப்பெடை காள்குயில் வண்டுகாள்***
***ஆடும்அம் பொற்கழல் அடிகள்ஆ ரூரரைப்***
***பாடுமா றும்பணிந்து ஏத்துமா றுங்கூடி***

ISSN 2320-4842

***ஊடுமா றும்மிவை உணர்த்தவல் லீர்களே (VII:37:10)*** என உரைக்கிறாள். இவ்வாறு ஒவ்வொரு பொருளை யும் அழைத்துத் தம் காதலைத் தூது அனுப்புவ தாகச் சுந்தரர் பாடுகிறார்.

**அறத்தொடு நிற்றல்**

சம்பந்தர், நாவுக்கரசரைப்போலவே, சுந்தரரும் பிச்சை யேற்கவந்த பெருமானைக் கண்டு, மையல் கொண்டு மகளிர் வினவிய கூற்றாகச் சோழ நாட்டில் உள்ள *திருப்பைஞ்ஞீலிப்* பதிகத்தில் பாடியுள்ளார்.

இப்பதிகத்தில் இறைவன் பிட்சாடனர் கோபம் உடையராய் பிச்சையேற்கச் சென்றபொழுது, அவரது அழகினால் கவரப்பட்ட பெண்கள் அவரைத் தீட்டு வதற்கு அஞ்சுவதாகவும், அவ்வாறு அஞ்சுவதற்குக் காரணமானவை, பிறர்க்குத் தீங்கு செய்யும் குறிப் பினவாவது, அவை இறைவனின் பெருமையையே குறிப்பதால், அவ்வச்சமும் காதல் மிகுதிக்கே காரண மாயின. இதனைப்,

***பலிக்கு நீர்வரும் போது நும்கையிற்***
***பாம்பு வேண்டா பிரானிரே (VII:36:2:2)*** என நயத்தோடு பாடுகிறார் சுந்தரர்.

இறைவனைத் தோழராக நினைத்து வாழ்ந்த சுந்தர ரின் பாடல்களில், அகப்பொருள் மரபில் அமைந்த காதல் பாடல்கள் படித்து இன்புறும்படி அமைந்துள.

**முடிவுரை**

மேற்கண்ட செய்திகள் வாயிலாக, சங்க இலக்கியங் களில் காணப்பெறும் அகப்பொருள் மரபாகிய இயற் கைப் புணர்ச்சி, தூது விடுத்தல், அறத்தொடு நிற் றல், உறுபெயர் கேட்டல் போன்ற மெய்ப்பாடுகளை யும், மூவர் முதலிகளின் தேவாரப் பதிகங்களில் காணப்படுவதை அறியமுடிகிறது.

**துணைநூற் பட்டியல்**


இளம்பூரணர் (உ.ஆ.). *தொல்காப்பியம் பொருளதிகாரம் (இரண்டாம் பகுதி).* சென்னை: கழக வெளியீடு, 9ஆம் பதிப்பு, 1968.

கோவிந்தராச முதலியார், கா.ர. (உ.ஆ.). *அகப்பொருள் விளக்கம்.* சென்னை: கழக வெளியீடு, 10ஆம் பதிப்பு, 1997.

*சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் (7 ஆம் திருமுறை).* தருமபுரம்: தருமபுர ஆதீன வெளியீடு, 1959.

*திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் (1, 2, 3 திருமுறைகள்).* தருமபுரம்: தருமபுர ஆதீன வெளியீடு, 1955.

*திருநாவுக்கரசர் நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் (3, 4, 5 திருமுறைகள்),* தருமபுரம்: தருமபுர ஆதீன வெளியீடு, 1963.

வரதராசன், மு. (உ.ஆ.). *திருக்குறள்.* சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1970.


*[77ஆம் பக்கத் தொடர்ச்சி]*

றாகவும் திகழ்வதை இப்பாடல்களின்வழி அறிய முடிகின்றது.

***மன்ற எருமை மலர் தலைக் காரான்***
***இன் தீம் பாற்பயம் கொண்மார், கன்று விட்டு,***
***ஊர்க் குறுமாக்கள் மேற்கொண்டு கழியும்***
***பெரும் புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து,***

***தழையும் தாரும் தந்தனன், இவன் என,***
***இழை அணி ஆயமொடு தகு நாண் தடைஇ,***
***தைஇத் திங்கள் தண் கயம் படியும்***
***பெருந் தோட் குறுமகள் அல்லது,மருந்து பிறிது இல்லை,***
***யான் உற்ற நோய்க்கே (நற். 80)***

விடியற்காலையில் கட்டப்படாமல் காரான் எருமை மன்றத்தில் நிற்கும். ஊர் இளைஞர்கள் அதன் பாலைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புவர். கன்றை அவிழ்த்து விடுவர். கன்று உண்ணும்போது தாய் எருமை பால் சுரக்கும். அதனைக் கறந்து எடுத்துப் பயன்படுத்திக் கொள்வர். தழையும் தாரும் கொடுத்தேன். வாங்க மறுக்கிறாள். ஆனால் நாணத்தோடு செல்கிறாள். அணிகலன் அணிந்த விளையாட்டுத் தோழிமாரோடு செல்கிறாள். தை மாதத்தில் நீராடச் செல்கிறாள். விடியற்காலத்தில் குளிர்ந்த குளத்து நீரில் நீராடச் செல்கிறாள். இவளைத் தவிர என் காம நோய்க்கு மருந்து வேறு எதுவுமே இல்லை என்று தலைவன் தோழி கேட்பத் தன் நெஞ்சிற்கு உரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவன் விடியற்காலைப் பொழுதில் தலைவியைச் சந்திக்க வருகிறான். அவ்வாறு அவன் வரும்பொழுது தழையினையும் சூடுகின்ற மாலை யினையும் தலைவிக்குத் தந்தான். அவற்றை அணிந் துகொண்டு தோழிகளோடு மகிழ்ச்சியாகத் தலைவி சென்றாள். இவ்வாறு தன் மீது அன்பு கொண்ட தலைவன் தன்னை மணம் முடிக்க வேண்டும் என்று தைமாதத்தில் குளிர்ந்த நீரில் நீராடிக் கொண்டிருக் கும் இந்த இளமையான பெண்ணே என் துன்பத் தைப் போக்க முடியும் அதற்கான மருந்தும் அவளே என்று தலைவன் குறிப்பிடுகின்றான்.

இவ்வாறு சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள தழை யாடை பற்றிய குறிப்புகள் பெரும்பான்மை தலை வனை மையமிட்டே பதிவுசெய்யப்பட்டுள்ளது. களவுக் காலத்தில் தலைவன் தலைவிக்கு வழங்கும் உயர்ந்த பரிசாகத் தழை இருந்துள்ளது. தன் பகுதியில் உள்ள கிடைத்தற்கரிய தழையைத் தலைவிக்குக் கையுறையாக வழங்குவதைத் தலைவன் பெருமைக்குரிய செய லாக எண்ணியமையை இப்பாடல்கள் உணர்த்து கின்றன. தலைவன் வழங்கும் இக்கையுறையைப் பெற்றுக்கொள்வதைத் தலைவனுக்கு அளிக்கும் அங்கீ காரமாக, தன் அன்பின் அடையாளமாகத் தலைவி வெளிப்படுத்தினாள் என்பதை சங்கப்பாடல்கள் உறுதி செய்கின்றன. தழையாடை சங்க காலத்தில் பெற் றிருந்த முக்கியத்துவத்தினை இக்கருத்துகள் உறுதி செய்கின்றன.

ISSN 2320-4842



# திருக்குறளில் அறிவியல் செய்திகள்

**க. கண்ணகி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
(Ref.No.003464/Ph.D.K8/Tamil/FT/September 2019/Confirm/Dt:29.01.2022)
**முனைவர் ம. பூபதி**
தமிழ் உதவிப் பேராசிரியர் – ஆய்வு நெறியாளர்,
மருதுபாண்டியர் கல்லூரி (இணைவு: பாரதிதாசன் பல்கலைக்கழகம்)
தஞ்சாவூர் 613 002

**ஆய்வுச்சுருக்கம்**

திருக்குறள், உலகமே போற்றும் தன்னேரில்லாத் தனிப்பெருநூல். அதற்குப் பொதுமறை, பொய்யாமொழி முதலாக ஒன்பது பெயர்கள் உள்ளன. மனித வாழ்க்கையின் அறிவியல் முதல் ஆன்மீகம் வரை அனைத்து வகை உண்மைகளை விளக்கும் பேரிலக்கியம் அது. மனித வாழ்வில் முக்கிய அங்கங்களாகிய அறம் அல்லது தர்மம், பொருள், இன்பம் ஆகியவற்றைப் பற்றி விளக்கும் தமிழ் நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற நூல் அது. அன்றியும், அறிவியல் சார்ந்த செய்திகளைக் குறியீடுகளாகக் குறளில் குறிப்பிடுகிறது. வானவியல் பற்றிய செய்தியும் மருத்துவம், வேளாண்மை, வேற்றுக்கிரகங்கள், கடல்வாழ் உயிரினங்கள், விலங்குகள் பற்றிய செய்திகளையும் அறிவியலோடு இணைத்து ஒரு விஞ்ஞானியைப் போன்று வள்ளுவர் குறளில் குறிப்பிடுகின்றார். இதைப்பற்றி அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருவிச்சொற்கள் Keywords: உழவுத்தொழில், மருத்துவச் செய்தி, வானியல் செய்தி, வேற்றுக்கோள் அறிவு.

Note: This article is strictly following the guidelines given in the MLA Handbook for Writers of Research Papers, 7th Edn., 2009.

**முன்னுரை**

உலகப் பொதுமறையான திருக்குறளில் அறச்செய்திகள் மட்டுமன்றி அறிவியல் செய்திகளும் பல காணக் கிடக்கின்றன. ஒரு மனித சமுதாயத்தின் அறிவியல் வளர்ச்சிக்குத் தேவையானவற்றைப் பழந்தமிழ்ப் புலவர்கள் தமது இலக்கியத்தில் பாடியுள்ளனர். அறிவு வளர்ச்சியும் நாகரிக மாற்றங்களும் அடைந்துள்ள மனித சமுதாயம் திடீரெனத் தோன்றிய ஒன்றல்ல. அதற்கென்று ஒரு பரிணாம வளர்ச்சி உண்டு. அந்தப் பரிணாம வளர்ச்சிப் போக்கிலேயே மனித சமூகம், விஞ்ஞானம், அரசியல், வணிகம், வானியல், மருத்துவம், பொருளாதாரம், தொழில்நுட்பம், சமூகவியல், இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளில் உயர்ந்து நிற்கும்.

*பறவையைக் கண்டா விமானம் படைத்தான்* என்று புதுக்கவிஞன் பாடியிருப்பதுபோல ஒன்றிலிருந்து ஒன்று உருவாகியிருக்கிறது. அல்லது ஒன்று மற்றொன்று உருவாகக் காரணமாக இருந்திருக்கிறது. சான்றாக அரசியலை எடுத்துக்கொண்டால் இன்றைய திறம்பட்ட அரசியல் முறைக்கும் நிர்வாகத்திறனுக்கும் சோழர் காலம் வித்திட்டிருக்கிறது. மருத்துவத்தை எடுத்துக்கொண்டால் அதன் விந்தைக்குக் 'குளோனிங்' முறைக்கு மகாபாரதத்தில் மூலம் இருந்திருக்கிறது. இப்படி வணிகம், பொருளாதாரம் போன்ற துறைகளும் இதற்கு விதி விலக்கல்ல.

**வானியல் செய்தி**

சுருங்கக்கூறின் இயக்கம் என்பதையே கோள் எனக் குறிப்பிடுவர். இவை *கோளில் பொறி* (9) என்பதை இயக்கமில்லாப் புலன்கள் என்று கூறும் வள்ளுவரின் கூற்றில் *பொறி* என்பதற்குப் புலன்கள் என்பதும் பெறப்படுகிறது. இங்ஙனம் வள்ளுவரின் சிந்தனையில் இயங்கவல்ல ஒன்று உண்டு என்பதும் அதுவே கோள் என்பதும் அவரது கருத்தாக வெளிப்பட்டு நிற்கிறது.

*பெருகிய வான்மீன் வானிற்*
*பெருந்தூம மெரிந்த வில்லுக்*
*கருதுமிவ் வெல்லாம் பேசிற்*
*கரந்துறை கோள்க ளாமே.*

கோள்களைப் பற்றிச் சூடாமணி நிகண்டு கூறுகிறது. சூரிய மண்டலத்தைக் கோள்கள் சுற்றிவருகிறது என்கிற விஞ்ஞானிகளின் கூற்று இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கது.

ISSN 2320-4842

### மருத்துவச் செய்தி

மருத்துவ அறிவு புரையோடி நிற்கிறது. அதாவது ஒருவன் இருவகைப் பற்றுமற்ற பொழுதே அப்பற்று அறுதி அவன் பிறப்பை அறுக்கும். அவை ஆறாத பொழுது அவற்றால் பிறந்து இறந்து வருகிற நிலை யாமை காணப்படும் என்கிறார். இவ்விருவகைப் பற்றில் ஒன்று அகப்பற்று. அகப்பற்றாவது, காதல் கூர்தல். காதல் என்கின்ற பொழுது அங்கே காமத் திற்கு இடமுண்டு. மேலும் பற்றற விடுதல் என்ப தற்கு இருவகை உடம்பினையும் உவர்த்துப் பற்றற விடுதல் என்று பொருள் கூறுகிறார் பரிமேலழகர். அங்ஙனம் பற்றற விடாதபொழுது இருவகை உடம் பும் இணைதலாலே கருவுருவாக வாய்ப்பு இருக்கி றது. பற்றற என்பதற்கு (தொப்புள் கொடியாகிய சேயொட்டுத்திசு அழிந்து போதல்) என்றும் அங்ங னம் அல்லாத பொழுது உடலுறவால் பிறப்பு (கரு-உயிர்) உருவாக வாய்ப்புள்ளது என்கிற மருத்துவ உண்மையை அன்றைய கால வழக்கிற்கு ஏற்றவாறு உரைத்துள்ளமை எண்ணத்தக்கது.

### வேற்றுக்கோள் (கிரகம்) அறிவு

வள்ளுவன் குறட்பாவில் 'இறை வணக்கத்தில்' இந் திரனைக் குறிக்குமிடத்து *அகல்விசும்புளார் கோமான்* (25) என்றும், பொதுவாக தெய்வங்களின் உறை விடத்தைக் குறிக்குமிடத்து *வானுறையும் தெய்வம்* (50) என்றும், *வானத் தவர்க்கு* (86) என்றும் கூறு கின்ற வள்ளுவரின் குறள்களுக்குள் வேற்றுக் கிரகத் தைப் பற்றிய அறிவு இலைமறை காயாகக் கிடக் கின்றன. இந்நிலவுலகமல்லாத வேறொரு உலகம் உண்டு என்பதையே வள்ளுவர் இவ்வாறாகக் குறிப் பிட்டுள்ளார். சந்திரனில் குடியேறலாமா, செவ்வா யில் நீர் இருக்கிறதா? என்றெல்லாம் ஆராயும் அறிவுத் தேடலுக்கு அன்றே வள்ளுவர் அடித்தளம் அமைத்துத் தந்துள்ளார் என்பதை அறியமுடிகிறது.

### உலகம் பற்றிய கருத்தாக்கம்

பல நூறு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு சூரிய மண்டலத்திலிருந்து பிரிந்து விழுந்த ஒரு சிறு பகுதி காலப்போக்கில் குளிர்ந்து நிலமாக மாறியதாகவும், அங்ஙனம் குளிர்ந்து இறுகிப் போன பாறைகளின் அழுத்தங்களால் கடல் பகுதிகள் தோன்றியதாகவும் ஆராய்ச்சியாளர் கூறுவர். இங்ஙனம் 460 கோடி ஆண்டு களுக்குமுன் தோன்றியதாகச் சொல்லப்படுகிற பூமி யின் பரப்பளவைத் துல்லியமாகக் கணிக்க இயலா விடினும் அதன் அளவு பரந்துபட்ட ஒன்று என் கின்ற கருத்து உண்மையே. இவ்வுண்மை பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட வள்ளுவரின் குறளுக்குள் பொதிந்துள்ளது.

உலகத்தை வள்ளுவர் *மாநிலம்* (68) என்றே குறிப்பிடு கிறார். இதற்குப் பரிமேலழகர் *உலக உயிர்களுக்கு* என்று உரை கூறுகிறார். காலத்தால் செய்த உதவியின் அளவைக் கூறுமிடத்து *ஞாலத்தின் மானப் பெரிது* (102) என்கிறார். இங்ஙனம் பஞ்சபூதங்களால் ஆக் கப்பட்ட இவ்வுலகம் பரந்துபட்ட விசாலமான ஒன்று என்கிற கருத்து குறளுக்குள் பளிச்சிட்டு நிற்கிறது.

### மழைப்பொழிவு செய்திகள்

***சூரியனின் வெப்பம் காரணமாகத் தண்ணீர் நீராவியாக மாறுகிறது. அதன் விளைவாகக் காற்றில் சூடு ஏற்படு கிறது. சூடாக்கப்பட்ட காற்று நீராவியைச் சுமந்துகொண்டு வானத்திலே செல்கிறது. அங்கு காற்றுக் காற்று குளிர்ச்சி அடைகிறது. நீராவி மழையாக மாறுகிறது*** என்ற கருத் தின்வழி மழைநீர் எவ்வாறு உருவாகி, பூமியை வந் தடைகிறது என்ற வானியல் அறிவை அறிந்துகொள்ள முடிகிறது. சில நூற்றாண்டுக்கு முன்பு தோன்றிய இவ்வறிவியல் அறிவை உலகிற்கு வழங்கியவர்கள் பழந்தமிழர்கள் என்பதைக் கார்நாற்பது,

***பறைக்குரல் ஏறொடு பௌவம் பருகி (17:2)***
***கடல்நீர் முகந்த கமஞ்சூல் எழிலி (33:1)***
***விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருகிப் (34:1)***

என்று கூறுகிறது. கடல்நீர் ஆவியாகி மேகமாக மாறி மழையாகப் பெய்கிறது என்பது விஞ்ஞானம். இத்தகைய விஞ்ஞான உண்மையைப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே வள்ளுவர் (குறள்.17),

***நெடுங்கடலும் தண்ணீர்மை குன்றும். தடிந்தெழிலி***
***தானல்கா தாகி விடின்*** எனக் கூறிச் சென்றுள்ளார். அதாவது கடலில் முகந்த நீரை முகில் மோதி மழை யாக வழங்காது என்றால், பெரிய கடலும் நீர் வற்றிப் போகும் என்பதை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் குறித்துச் சென்றிருப்பது வியப்புக்குரியதாகும்.

சங்கத் தமிழர்கள் நீரியல் அறிவுச்சிந்தனையை மிகச் சிறப்பாகப் பெற்றிருந்தனர். மனித வாழ்வியலுக்கு மிக முக்கிய தேவையான ஒன்றாக நீர் அமைந்திருப்பதனை அறிந்ததன்வழி அதனைத் திறம்பட மேலாண்மை செய் வதற்கும் அந்நீரைத் தேக்கிவைத்துத் தேவைப்படும் காலங்களில் பயன்படுத்துவதற்குமான அறிவு கைவரப் பெற்றிருந்தனர். இதுபோன்று சங்க மக்கள் வாழ்வில் கடலியல் வாழ்வு மிக முக்கியமான இடத்தினைப் பெற்றிருந்துள்ளது. நாம் வாழும் உலகம் கடலால் சூழப்பட்டது. கடலும் கடல் சார்ந்த வாழ்வும் நெய்தல் நிலமாகக் கருதப்பட்டு, கடலியல் செல்வங்களைக் கொண்டு வாழும் வாழ்க்கை முறை சங்கத் தமிழர் களிடத்தில் பெருவழக்காக இருந்துள்ளது. இதன் பொருட்டு, பூமிப்பரப்பில் பெருமளவினதாக அமைந் திருக்கும் கடலைப் பற்றி சங்கப் புலவர்கள் மிகச் சிறப்பாக அறிந்துவைத்திருப்பதோடு அதன் தன்மை களையும், சிறப்புகளையும், பெருமைகளையும் உணர்ந் திருந்து பாடல் புனைவில் கடலுக்கும் கடல்சார் வாழ் வியலுக்கும் மிகச் சிறப்பான இடத்தினைத் தந்துள் ளனர். நீர் உயிரினங்களின் வாழ்வியலில் இரண் டறக் கலந்து நிற்பது. உயிரின வாழ்க்கையின் வளர்ச்

சிக்கும், மானிடப் பயன்பாட்டிற்கும் பயன்தரும் நீர், உயிரினங்களின் உடல் வளர்ச்சிக்கும் உணவுத் தேவைக்கும் அத்தியாவசியமான ஒன்றாக அமை கின்றது. அது உணவுத் தேவையை நிறைவு செய் வதற்கு மூல காரணியாக அமையும் திறத்தினைக் கருதியே *வான் சிறப்பு* அதிகாரத்தினுள் (குறள்.20)

***நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்***
***வானின்று அமையாது ஒழுக்கு*** என்றும் பொய்யா மொழிப் புலவர் குறித்தார்.

உண்பவர்களுக்கு சிறந்த உணவாகவும் உணவை உற் பத்தி செய்வதற்குரிய முதன்மையான மூலப்பொரு ளாகவும் உணவாகக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதற்குரிய முதன்மைப் பொருளாக அமைகின்ற காரணத்தால்தான்,

***துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு***
***துப்பாய தூஉம் மழை (குறள்.12)*** என்கிறார் அவர்.

**வேளாண்மைத் துறையில் அறிவியல் செய்திகள்**

பிற துறைபோல் வேளாண் துறையிலும் அறிவியல் காலூன்றி வியத்தகு மாற்றங்கள் நிகழ்ந்திருக்கிறது. அறிவியல் தொழில் நுட்பம் விவசாயத் துறையில் உழைப்பாளியின் பங்கைப் பாதியாகக் குறைத்துவிட் டது. மேலும் உரம், பூச்சிக்கொல்லி மருந்து, இயந் திரங்கள் போன்றன அறிவியல் தொழில்நுட்பத்தால் வேளாண்மைக்குக் கிடைத்திருக்கின்றன. மண் பரிசோ தனை நிலையங்களும் விவசாயத்துறைக்கு அறிவி யல் வழிகாட்டுதலைச் செய்கிறது.

இந்நுட்பத்தை உணர்ந்த வள்ளுவர் *முயற்சியில் சிறந்தது உழவு* எனக் கொண்டு தனி அதிகாரம் (உழவு) பாடியுள்ளார்.

***ஏரினும் நன்றால் எருவிடுதல்; கட்டபின்***
***நீரினும் நன்றதன் காப்பு (குறள்.1038)*** என நீர்ப் பாய்ச்சுதலையும் பூச்சி, புழு போன்றவைகளால் ஏற் படும் நோய்களிலிருந்து காக்க வேண்டும் என்பதை யும் உழவர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.

**நீர் மாசு படுதல்**

தேங்கியுள்ள நீர் எப்போதும் நோயே உண்டாக்கும் தன்மையுடையது.

***நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரரும்***
***இன்னாவாம் இன்னா செயின் (குறள்.881)*** என்ற குறளில் இன்பம் தரும் நிழலும், நீரும் நோய் செய்வனவாக இருந்தால் தீயனவே ஆகும் என்கி றார்.

**நீரில் வாழ்வன**

நீரில் திமிங்கலம், பலவகை மீன்கள், சங்கு, சோழி, பவளம் போன்றவை வாழ்கின்றன. இவைகளைப் பற்றிய படிப்புகள் பல துறைகளாக உள்ளன.

**மீன்**

நீரில் வாழும் விலங்குகளில் வள்ளுவர் எடுத்துக் கொண்ட விலங்குகள், மீன், முதலை மற்றும் ஆமை. இம்மூன்று விலங்குகளின் மூலமும் சில கருத்துக்களை மக்களுக்கு தெளிவாக்குகிறார். தூண் டிலில் இருக்கும் சிறிய புழுவை விரும்பித் தனது உயிரையே இழுக்கும் மீனின் செயலை எடுத்துக் காட்டி, சூதாட்டத்தில் வரும் சிறு இலாபத்தை எண் ணித் தொடர்ந்து அதில் ஈடுபட்டுத் தம் பொருள் முழுவதையும் இழப்போர்க்கு எச்சரிக்கை செய்கிறார். வெற்றியே கிடைக்குமென்றாலும் சூதாட்டத்தை விரும் பக் கூடாது என்பதை மீனின் வாயிலாக நமக்கு உணர்த்துகிறார். இந்த ஒரு நிகழ்வை வள்ளுவர் ஒரு குறளில் வளமாகப் பயன்படுத்தியுள்ளார். *மீன்* என்ற சொல்லை ஒரே ஒரு இடத்தில் பயன்படுத்தியுள்ளார். என்றாலும் இதுவும் ஒரு அறிவியல் செய்தியாகவே அமைகிறது.

***வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்***
***தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று (குறள்.931)***

**முதலை**

நீரில் வாழும் விலங்கினங்களுக்கு நீரில் இருக்கும் போது வலிமை அதிகம். இதை நன்குணர்ந்த வள் ளுவர் அறிவியல் செய்தியாகக் கூறுகிறார்.

***நெடும்புனலுள் வெல்லும் முதலை அரும்புனலின்***
***நீங்கின் அதனைப் பிற. (குறள்.495)*** என்கிறார். நீரில் இருக்கும்போது முதலைக்கு வலிமை அதிகம். அப் பொழுது மிகப்பெரிய யானையைக் கூட எளிதில் இழுத்துச்சென்றுவிடும். ஆதலின் ஒரு செயல் செய் யக் காலம் பார்ப்பதுபோல் இடத்தையும் அறிந்தே செய்யவேண்டும் என்பதை முதலையை வைத்தே அறிவு புகட்டுகிறார்.

**புழு**

புழு ஒரு முதுகெலும்பில்லாத விலங்கு. அது உற்று உணரும் ஓரறிவு உயிர் என்பார் தொல்காப்பியர். புழுக்கள் கதிரவனின் வெப்பம் தாங்காது இறந்து விடும். சூரியனிடமிருந்து தப்பித்து உயிர்வாழ ஈர முள்ள இடங்களிலும், பசுமையான இலை தழைகளி லும் அதிகமாகக் காணப்படும். பொதுவாக, புழுக் கள் பயிர்களுக்கு நன்மையை விளைவிக்கும். புழு வைப் போன்ற எலும்பில்லாத உயிர்களை வெயில் எரிக்க அவை நீர்த்தன்மையை இழப்பதால் அழியும் என்பதை வள்ளுவர் அறிவியல் செய்தியாக (குறள். 77),

***என்பி லதனை வெயில்போலக் காயுமே***
***அன்பி லதனை அறம்*** என்று உணர்த்துகிறார்.

**நெருப்பு**

மண்ணிலிருந்து எடுக்கப்படும் பொன் முழுத் தூய் மையானது அல்ல! அதில் கலந்துள்ள வேண்டாப்

பொருள்களை அகற்றினால்தான் தூய்மையான தங் கம் கிட்டும். அதற்குப் பயன்படுவது நெருப்பு. நெருப் பின் தன்மை சுடுவது. தங்கத்தை நெருப்பால் சுட அல்லது உருக்க உருக்கத் தேவையில்லாப் பொருள் கள் அகற்றப்படுகின்றன. கழிவுகள் நீங்கியதும் தங்கம் ஒளிவிடுகிறது. இதனை,

***சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்***
***சுடச்சுட நோற்கிற் பவர்க்கு*** என்ற குறள் (267) காட்டுகிறது. இவ்வாறு பொன்னைச் சுட்டு அணிக லன்கள் செய்து தருவதை அறிவியல் செய்தியாக உணர்த்தப்படுகிறது.

*காதல் சிறப்புரைத்தல்* அதிகாரத்தின் முதல் குறட்பா, அறிவியல் ஆய்வாளர்களின் ஆய்வு முடிவை ஒத் துள்ளது என்பது வியப்புக்குரிய உண்மையாகும்.

***பாலொடு தேன்கலந்து அற்றே பனிமொழி***
***வால்எயிறு ஊறிய நீர். (குறள்.1121)***

இம்மென்மொழியாளின் வாயில் ஊறிய நீர், பாலுந் தேனுங் கலந்த சுவை போலும் என்றெழுதுகிறார் ஆ.வே. இராமசாமி (ப.229). காதல் வயப்பட்டோர் உணர்வின்வழி, அவர்தம் வாயில் சுரக்கும் உமிழ்நீர் இனிமை உடையதாய் இருக்கும். அவர்கள் கொள் ளும் தண்ணீரும் சுவை மிகுந்து தோன்றும்; தண்ணீ ருக்கென்று சுவை ஏதும் இல்லை என்பது அறிவியல் செய்தியாக உணர்த்துகிறார் வள்ளுவர்.

### முடிவுரை

திருவள்ளுவர் ஓர் அறிவியல் அறிஞர் என்பதைக் குறள் வாயிலாக அறியலாம். இவருடைய குறள் களில் உழவுத்தொழில், வானவியல், மருத்துவம், விலங்கியல், தாவரவியல் போன்ற துறைகளைச் சார்ந்த செய்திகளை நுணுக்கமாக விளக்குவதோடு மனித வாழ்வோடு பொருத்தியும் காட்டப்படுகின்றன என்பது உண்மை.

### துணைநூற் பட்டியல்


இராமசாமி, ஆ.வே. *திருக்குறள் எளிய தெளிவுரையும் பொன்மொழியும்.* திருச்சிராப்பள்ளி: வல்வில் அச்சகம், 2012.

கருவூர் கண்ணன். *வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்.* திருச்சி: தமிழ்ப் பாசறை, 1992.

*கலைக்கதிர்.* அறிவியல் இதழ், ஜூன் 2007.

கஸ்தூரிராசா, இரா. *திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்.* சென்னை: ஞாயிறு வெளியீடு, 2001.

திருவேங்கடசாமி, கே.ஆர். *வள்ளுவத்தில் நீர் வளமும் வாழ்வியலும்.* சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2006.

பரிமேலழகர் (உ.ஆ.). *திருக்குறளின் மூலமும் உரைக்குறிப்பும்.* சென்னை: கழக வெளியீடு. 15 ஆம் பதிப்பு, 1990.

வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உ.ஆ.). *கார் நாற்பது களவழி நாற்பது.* சென்னை: சாரதா பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு, 2015.


### *96ஆம் பக்கத் தொடர்ச்சி*

களைப்போலப் பிற பாடல்களில் இடம்பெற்றுள்ள அசைச்சொற்களையும் ஆய்விற்கு உட்படுத்தலாம். இலக்கணப் பனுவலான தொல்காப்பிய அசைச் சொற்கள் பிற்காலச் சங்கத் தமிழ் நூலான குறுந் தொகையில் இடம்பெறும்போது விளித்தல், வாழ்த்து தல், வருந்துதல் எனப் பல்வேறு உணர்வு நிலை களைச் சுட்டுகிறது. இத்தகு உணர்வு நிலைகள் தலைவியின் மன உணர்வுகளைப் பிரதிபலிப்ப தாகவும் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### சான்றெண் விளக்கம்

1. நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் சொல்லதிகாரம், ப. 181
2. சங்கரநமச்சிவாயர் உரை, நன்னூல், நூ. 419
3. நச்சினார்க்கினியர் உரை,தொல்காப்பியம் சொல்லதிகாரம், ப. 193
4. தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்பு, தொல்காப்பியம்-நன்னூல் -சொல்லதிகாரம், ப. 318
5. ச.வே.சு, இலக்கணத்தொகை,சொல்லதிகாரம், ப. 311
6. கு.வெ..பாலசுப்ரமணியன், தொல்காப்பியம் மூலமும் உரையும், நூ. 280
7. உ.வே.சா, குறுந்தொகை மூலமும் உரையும், பா.எண் 02
8. மேலது, பா.எண் 42
9. மேலது, பா.எண் 19
10. மேலது, பா.எண் 30
11. மேலது, பா.எண் 14
12. மேலது, பா.எண் 307
13. மேலது, பா.எண் 83
14. மேலது, பா.எண் 398
15. மேலது, பா.எண் 158

### துணைநூற் பட்டியல்


1. நச்சினார்க்கினியர் உரை (1962), தொல்காப்பியம்-சொல்ல திகாரம், கழகம், சென்னை.

2. உ.வே.சா. (2020) குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே.சா. நூல் நிலையம், சென்னை.

3. கு.வெ.பாலசுப்பிரமணியன் (2019), தொல்காப்பியம் மூல மும் உரையும், நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை.

4. க. வெள்ளைவாரணர் (2010), தொல்காப்பியம் நன்னூலும் சொல்லதிகாரம், கழகம், சென்னை.


**Tell me and I forget.**
**Teach me and I remember.**
**Involve me and I learn.**
**- Benjamin Franklin**

**It is during our darkest moments that we must focus to see the light. - Aristotle**

ISSN 2320-4842



# தொல்காப்பிய அசைச் சொற்களும் குறுந்தொகை அசைச் சொற்களும்– ஓர் ஒப்பீட்டுப் பார்வை

**முனைவர் தி. சுமதி**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தொலைநிலைக் கல்வி மற்றும் இணையவழிக் கல்வி மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி**

**ஆய்வுக் கட்டுரைச் சுருக்கம்**

தொல்காப்பியம் தமிழரின் வாழ்வியல் சிறப்புகளையும் இலக்கண மரபுகளையும் எடுத்துரைக்கும் நூலாகும். பிற்காலத் தமிழ் நூல்களில் காணப்படும் இலக்கணக் கூறுகளைத் தொல்காப்பியரின் இலக்கண வரையறை களோடும் சான்றுகளோடும் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் இலக்கண மரபின் தொடர்ச்சியை அறிந்துகொள்ள லாம். சங்க இலக்கிய நூலான குறுந்தொகை தமிழரின் வாழ்வியலை எடுத்தியம்பும் இலக்கியப் பனுவலாகும். தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள அசைநிலைச் சொற்கள் எங்ஙனம் குறுந்தொகையில் பயின்றுவருகிறது என் பதை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. குறுந்தொகையில் அசைச் சொற்கள் இடம்பெறுமிடங்கள் எங்ஙனம் பல்வேறு மனித உணர்வு நிலைகளைச் சுட்டி நிற்கிறது என்பதை இக்கட்டுரை சான்றுகளுடன் நிறுவுகிறது.

**முன்னுரை**

பழந்தமிழ் மரபிலக்கண நூல்களில் முழுமையாகக் கிடைத்துள்ள முதல் நூல் தொல்காப்பியமாகும். தமிழரின் வாழ்வியல் சிறப்புகளோடு இலக்கண மரபுகளையும் சுட்டிக் காட்டும் நூலாக அது திகழ்கிறது. இறையனார் அகப்பொருளிலிருந்து அறுவகை இலக்கணம்வரையிலான பிற்கால் இலக்கண நூல்களில் காணப்படும் இலக் கண மரபுகள் பெரும்பாலும் தொல்காப்பியத்திலிருந்து பெறப்பட்டவையாகும். தொல்காப்பிய இடையியலில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்கள் நன்னூல், நேமிநாதம், தொன்னூல் விளக்கம் ஆகிய நூல்களிலும் இடை யியல் எனும் பகுதியில் இடம்பெற்றுள்ளது ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

இடைச்சொல் பற்றிக் கூற வந்த தொல்காப்பியர், *இடைச் சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே*[1] என வலி யுறுத்துகிறார். இந்நூற்பா உரையில் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் பெயர்ச்சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும் இடையில் நிற்பதால் இடைச்சொல் எனும் பெயர் பெற்றது என்கிறார்கள். ஆனால் தெய்வச் சிலையாரோ பெயரும் வினையும் இடமாக நின்று பொருள் உணர்த்துவதால் இடைச்சொல்லாயிற்று என்கிறார். இடைசொற்கள் அசைசொற்கள் எனவும் அறியப்படுகிறது.

இடைச்சொற்கள் தனித்தியங்கும் ஆற்றலற்றவை எனத் தொல்காப்பியர் கூறியதையே கூறும் நன்னூலார்,

***------------ தனித்தியலன்றி***
***பெயரினும் வினையினும் பின்னும் ஓரிடத்து***
***ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச் சொல்லாகும்***[2] என்று குறிப்பிடுகிறார்.

புணர்ச்சியில் நிலைமொழி வருமொழிகளுக்கிடையே வரும் சாரியைகள் பாலுணர்த்தும் உருபுகள், வினைச் சொற்களில் காலம் காட்டும் உருபுகள், வேற்றுமையுருபுகள், அசைநிலைச்சொற்கள், இசைநிறைக்க வருபவை, உவம உருபுகள் முதலியனவும் ஏ, ஓ, உம், மன், கொள், என, என்று, மற்று என்பன போலத் தத்தமக்குச் சில பொருள்களை உடையவையும் ஆகியவை இடைச்சொற்களாகும். தெரிநிலை, ஐயம், முற்று, எண், சிறப்பு, எதிர்மறை, எச்சம், விழைவு, ஒழியிசை, கழிவு, ஆக்கம், இசை நிலை, அசைநிலை, சுட்டு, வினா, ஒப்பு, திணை, பால், காலம், இடம், தன்வினை, பிறவினை, செயப்பாட்டுவினை முதலியவற்றைக் காட்டும் விகுதிகளாக நிற்றல் இடைச்சொற்களாகும். தொல்காப்பியம் அசைச்சொற்களை, முன்னிலை அசைச்சொல், அசைநிலைக்கிளவி, பிரிவில் அசைநிலை என வகைப்படுத்துகிறது.

**முன்னிலை அசைச்சொல்**

அசைச்சொற்கள் சில முன்னிலை இடத்தில் வரும். மியா, இக, மோ, மதி, இகும், சின் என்னும் ஆறும் முன்னிலை இடத்து வரும்.

> ***மியா யிக மோமதி இகும்சின் என்னும்***
> ***ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்***[3]

கேண்மியா, கேண்மோ, கேண்மதி எனும் இவை 'கேள்' எனும் பொருளில் வரும். இவை பழைய வழக்குச்

ISSN 2320-4842

சொற்களாகும். தற்பொழுது வழக்கொழிருந்தாலும் மேற் காணும் அசைச்சொற்கள் இலக்கியப் படைப்புகளில் மட்டும் காணமுடிகிறது.

**அசைநிலைக்கிளவி**

பிற பொருளுணர்த்தாமல் செய்யுளில் சீருக்கு உறுப் பாக மட்டுமல்லாமல் ஓசை நிரப்புவதற்கு வரும் சொல் லுறுப்பாகவும் வரும்.

*யா கா*
***பிற பிறக்கு ஆரோ போ மாதென வரூஉம்***
***ஆயேழ் சொல்லும் அசைநிலைக்கிளவி*** [4]

'ஆங்கக் குயிலும் மயிலுங்காட்டி' எனச் சீராக அசைத்து அடி நிரப்பியும், 'அது மற்றவலங் கொள் ளது நொதுமற்கலுழும்', 'உரைமதி வாழியோ வலவ' என்பவை சீருக்கு உறுப்பாய் அசைந்து வந்தன. 'பழமுதிர் சோலை மலைகிழவோனே' ஏகாரம் ஈற் றசையால் சீர் நிறைந்து நின்றது.

**பிரிவில் அசைநிலை**

பிரிவில் அசைநிலையானது தனித்து நின்று அசை நிலையாகாது; இரட்டித்து நிற்கும். நச்சினார்க்கினியர் பிரிநிலை அசைநிலையைத் ***தாம் சார்ந்த சொற் களின் பொருள்களைப் பிரிதல் இன்றி உணர்த்தும் அசைநிலையாம்*** [5] என்கிறார்.

***ஆக ஆகல் எனபது என்பது என்னும்***
***ஆவயின் மூன்றும் பிரிவில் அசைநிலை*** [6]

ஒருவன் வேறொருவனைப் பார்த்து 'யான் இது செய் தேன்', 'அவன் இது செய்தான்',' நீ இது செய்தாய்' என்று கூறும் அவன் 'ஆக ஆக', 'ஆகல் ஆகல்' எனப் பதில் கூறுவது உலகியல் இயற்கை. இப்பதில்கள் அவன் கூறுவதற்கு விருப்பமில்லாமல் வரும் சொற் களாகும். அதேபோன்று 'என்பது என்பது' ஒருவன் கூறிய கூற்று நன்கு என்றோ, தீது என்றோ கூறும் போது நிகழும் குறிப்பினை இடம், பொருள், ஏவல் அறிந்து உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

தொல்காப்பிய இலக்கணக் கூறுகளுள் ஒன்றான 'அசைச் சொற்கள்' சங்க இலக்கியப் பனுவல்களில் ஒன்றான 'நல்ல' எனும் அடைமொழியோடு குறிக் கப்படும் குறுந்தொகையிலும் பயின்றுவருகிறது.

குறுந்தொகையில் ஏறத்தாழ 107 பாடல்களில் அசைச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியத்தில் வகைப்படுத்தப்பட்டவாறே குறுந்தொகையிலும் அசைச் சொற்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**முன்னிலை அசைச்சொல்**

மியா, இக, மோ, மதி, இகும், சின் என்பவை குறுந்தொகையில் பயின்று வந்துள்ளன.

மியா- கேண்மியா

காமம் செப்பாது கண்டது மொழி**மோ** [7] எனும் குறுந் தொகைப் பாடலடியில் இடம்பெற்றுள்ள 'மோ' அசைச் சொல்லாகும். 'மொழிமோ' என்பது 'நீ கூறுவாயாக' என்ற பொருளை உணர்த்துகிறது.

தொடர்பும் தேயு**மோ**நின் வாயினானே [8]

இப்பாடலடியில் 'மோ' என்பது 'தேயுமோ' என்று ஓசையை நிறைவுசெய்கின்றது. மேலும், 'அழியுமோ' என்னும் ஓசையையும் கொண்டுள்ளது குறிப்பிடத்தக் கது.

இனை**மதி** வாழியர் நெஞ்சே மனை மரத்து [9]

'மதி' எனும் சொல் இப்பாடலடியில் அசைச்சொல்லாக வந்துள்ளது. மேலும், 'இனைமதி' என்பது 'வருந்து வாயாக' என்னும் பொருளினையும், 'வாழிய' எனும் சொல் அசைச்சொல்லாகவும் வந்துள்ளது.

கேட்டி**சின்** வாழி தோழி அல்கல் [10]

'சின்' என்பது முன்னிலை அசைச்சொல்லாகவும், 'கேட்டிசின்' என்பது 'கேட்பாயாக' என்னும் பொருள் உணர்த்தும் வகையிலும் அமைந்துள்ளன. மேலும், 'வாழி' என்பதும் அசைச்சொல்லாக வந்துள்ளது.

வார்ந்து இலங்கு வைஎயிற்றுச் **சின்**மொழி [11]

*சின்மொழி* என்பது சிலவாகிய சொற்களையும் உடை யது என்ற பொருளை உணர்த்துகிறது.

**அசைநிலைக்கிளவி**

'யா' என்பது அசைநிலைக்கிளவியாகும்.

நிலையுயர் **யா**அந் தொலையக்குத்தி [12]

'யா' எனும் அசைச்சொல் இக்குறுந்தொகைப் பாடல் அடியில் இடம்பெற்றுள்ளது. *யாஅந் தொலையக்குத்தி* என்பது யாமரம் அழியும்படி கொம்பால் குத்தி எனும் பொருளை உணர்த்துகின்றது.

**பிரிவில் அசைநிலை**

'ஆக' என்பது பிரிவிலை அசைச்சொல்லாகும்.

அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் **ஆக** [13]

இப்பாடலடியில் வரும் 'ஆக' என்பது பெறுதற்கரிய அமிழ்தமே உண்ணும் உணவாக உள்ளது என்னும் பொருளினை இப்பாடல் உணர்த்துகிறது.

கைப்புனை யாக நெய்யது மாட்டிய [14]

*கைப்புனையாக* என்பதன் பொருள் *தம் கையே கருவி யாக* என்பதாகும்.

இவை மட்டுமன்றி, ஆங்கு, கொல், ஏ, அரிதே, நுதலே, மன், வாழிய, தெய்ய, அந்தில், அம்ம எனும் அசைச் சொற்களும் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியம் குறிப்பிடும் அசைநிலை வகை கள் குறுந்தொகையிலும் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைக் காக எடுத்தாளப்பட்டுள்ள குறுந்தொகைப் பாடல்

*தொடர்ச்சி: பக். 94*

# கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் உறுப்பினர் | ரூ. 4000/– | US | $ 175 |
| புரவலர் | ரூ. 6000/– | US | $ 250 |
| பெரும்புரவலர் | ரூ. 10,000/– | US | $ 500 |
| மீப்பெரும் புரவலர் | ரூ. 20,000 | US | $ 1000 |
| நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 15,000/– | US | $ 700 |

## விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 15,000/– |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 10,000/– |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 3, 000/– |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 1, 500/– |

## கட்டணம் செலுத்த:

**NEFT/ DD in favour of ARIMAA NOKKU payable at Chennai**
**HDFC Bank (IFSC Code: HDFC0000795}**
**Perungudi Branch, Chennai 600 096**
**Current Account No. 50200006240790**

அரிமா நோக்கு
அன்பகம், # 1, 15ஆவது குறுக்குத் தெரு
குறிஞ்சி நகர், பெருங்குடி, சென்னை 600 096
ARIMAA NOKKU, Anbaham, # 1, 15th Cross Street
Kurinji Nagar, Perungudi, Chennai 600 096
வலைத்தளம்: www. arimaanokku.com
மின்அஞ்சல்: nokku2007@gmail.com செல்: 91-9444932320

Regd. R. Dist. No. 717/2007 RNI No. 17520/2007

# குஜராத்தியக் குறுங்கவிதைகள்

## நட்சத்திர வீழ்ச்சி

நட்சத்திரங்கள்
ஒருபோதும் வான்வெளியிலிருந்து
விழுந்து
விடுவதில்லை
இடத்தை வேண்டுமானால்
மாற்றிக்கொள்ளுமே தவிர
விழாமல் கெட்டியாய் வானைப்
பிடித்துக்கொள்ளும்.

– ஜமான்குந்தாரியா (1951–)

## கல்வி

ஓர்
ஆணிக்குக் கல்விதரப்பட்டது
பட்டம்பெற்றபோது
அது திருகாணியாக
மாறியிருந்தது

– ஜிஸ்னுதாக்சினி (பசிபிக்) (1965–)

## நடுக்கம்

நீர்மேல்
ஒரு கவிதை எழுதியபோது
காற்றின் விரல்களில்
அது படபடத்தது

– பண்ணாநாயக் (1933–)

## படமும் சிற்பமும்

பார்த்தே இராத ஒருவரைப்
படமாக வரைவதா!
காற்றிலிருந்து நான்
யாரைச் செதுக்கி எடுப்பேன்?

– பிரியகாந்த் மனியர் ( 1976–)

## ஒரு படம்

தன்னந்தனியான
பாதை
அங்கு யாருடையபேச்சும்
இல்லை
யாரோ ஒருவர் கல்லறை..
அழகான மரம்ஒன்று
வளைந்து வினாவுகிறது
"யாரைப்பற்றியசெய்தியோ?"

– பிரபோத்ஜோசி(1971–)

## மரம்

பூக்களும் இலைகளும்
உதிர்ந்து போகும் நாளுக்காகக்
காத்திருக்கும்
மரம்நான்
மேலே உள்ள சுமைகளெல்லாம்
போனபின்
வானம்
எல்லாம் இழந்த என் கிளைகளை
மூடிக்கொள்ளட்டும்

– சுரேஷ் தலால் (1932–)

ஏற்றுமதி

இறக்குமதி

